மறவர் சரித்திரம்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41
14059

ஆசிரியர்கள்.

V. S. குழந்தைவேலுச்சாமி அவர்கள்,

தலைமைத் தமிழாசிரியர், காரனேஷனுயர்தரப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்.

A. V. ஆசீர்வாத உடையார்த் தேவர் அவர்கள்,

நிலக்கிழார், தேவர்குளம்.

வெளியிட்டோர்.

V. S. தியாகராஜ பாண்டியன் அவர்கள்,

தேவர்குளம்.

[முதற் பதிப்பு.]

ஸ்ரீ கான வித்யா பிரஸ்,

ஸ்ரீவைகுண்டம்.

1938.

பதிவு செய்தது.] [விலை ரூ. 1—8—0

மறவர் சரித்திரம்.

ஆசிரியர்கள்.

V. S. குழந்தைவேலுச்சாமி அவர்கள்,

தலைமைத் தமிழாசிரியர், காரனேஷனுயர்தரப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்.

V. S. ஆசீர்வாத உடையார்த் தேவர் அவர்கள்,

நிலக்கிழார், தேவர்குளம்.

வெளியிட்டோர்.

V. S. தியாகராஜபாண்டியன் அவர்கள்,

தேவர்குளம்.

[முதற்பதிப்பு.]

ஸ்ரீ கான வித்யா பிரஸ்,

ஸ்ரீவைகுண்டம்.

1938.

பதிவு செய்தது.] [விலை ரூ. 1—8—0

ஸ்ரீ கான வித்யா பிரஸ்,
ஸ்ரீவைகுண்டம்.

முன்னுரை.

இந்நூலில் காணப்படும் செய்திகள் அனைத்தும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வல்லுநர்களால் ஆராய்ந்தெழுதியிருந்த உண்மைச் சரித்திரங்களிலிருந்து இதன் போக்குக் கியையப் பொறுக்கி எடுத்தவைகளே அல்லாமல், எனது சொந்த அனுபவத்தைக்கொண்டு இம்மறவர் குல மக்களிடம் உள்ள குணம் குற்றங்களை விவரிக்கும் துறையில் முயன்றேனல்லேன். ஒரு வகுப்பினை உயர்த்திப் புனைந்துரைப்பான் கருதி, அடுத்தவகுப்பாரைத் தாழ்த்தி உரைக்கும் குறுகிய கருத்துடையார்க்கு இதுவோர் அறிவுறுத்தும் கருவியும் ஆம். (இது ஒரு வகுப்பாரைப் பற்றிய நூலாயிருப்பினும், பெரிதும் தமிழ் அறிவுடையாரும், அடுத்த வகுப்பினரும் படித்தறியத்தகுந்த அரும் பெரும் செய்திகள் நிரம்பியது)

தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் மறவரைக் குறித்து இன்றுவரை எவராலும் வெளிவராத பழம் சாசனங்களும், போதிய சான்றுகளும் இதனிடை ஆங்காங்கு ஆராய்ச்சியாளர் கருத்துக்கு முரண்பாடின்றிப் பொருந்தி நிற்றலைக் காணலாம்.

எவரிடத்தும் உயர்வு தாழ்வு பாராட்டாது, முக மலர்ச்சியுடன் இன்சொல்லே வழங்குவதிலும், அவரவர்களோடு ஒத்தநிலைமையில் தன்னை நிறுத்தி அவருக்கேற்ப அளவளாவும் வரிசை நோக்கிலும், பிறர்வருந்தச் சகியாத உண்மைப் பற்றிலும், அறிவாற்றல் முதலிய நற்குணங்

களாலும் உயர்ந்த பெருந்தகையாளராகிய சப்ரிஜிஸ்த்ரார் செல்வநாயகத் தேவரவர்கள் இம் மறவர்குல வரலாற்றை ஓர் முடிவுகண்டு எழுதுவதற்குரிய எந்தவிதத் தகுதியும் அற்ற என்னை ஸ்ரீவைகுண்டம் காரநேஷன் உயர்தரப் பள்ளித் தமிழாசிரியனென்ற ஹோதாவிலும், என்பால் அவர்கட்குள்ள அன்பின் மிகுதியாலும் என்னையே தக்கோனாகக்கொண்டு இதனை எழுதுமாறு பன்முறையும் தூண்டுதல் செய்து வந்தார்கள்; யானும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இத்துறையில் முயன்றவன் ஆவேன். இதனை எழுதுவதற்காகவேண்டிய ஆதரவுகளைப் பல இடங்களிலும் இருந்து அவர்களே சேகரித்துக் கொடுத்ததும் அல்லாமல் ஆங்கிலத்திலுள்ள சரிதைப் பகுதிகளைத்தமிழில் மொழி பெயர்த்துங் கொடுத்தார்கள். அம்மொழி பெயர்ப்பைப்பெரும்பாலும் அதன் முழுவடிவத்துடனேயே இடை இடையே ஒழுங்குபடுத்திவைத்து ஏனையவற்றை என்னால் முடிந்தவரை தொகுத்துச் செப்பனிட்டு ஒப்பு நோக்கி முறையே பிரித்து எழுதியிருக்கின்றேன். இன்னும் ஆராய்ந்து கண்டுபிடிக்கவேண்டியவை எண்ணிறந்தனவாயிருக்கலாம்; அவற்றைக் கண்டுபிடித்தற்குரிய வன்மை வாய்ந்த அறிஞர் பலரும் என்பால் அன்புகூர்ந்து எனக்குத் தெரிவிப்பரேல், அடுத்த பதிப்பில் அவற்றைப் பின்னும் சேர்த்துச் செவ்வைபடுத்தி வெளியிடுங் கடப்பாடுடையனாவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

வீ. ச. குழந்தைவேலுச்சாமி,
ஆசான், வீரிநகர்.

மதிப்புரை

'மறவர் சரித்திரம்' என்னும் நூலின் பகுதிகளைக் கையெழுத்துப் பிரதியிலேயே படிப்பதற்கு ஆசிரியர், V. S. குழந்தைவேலுச்சாமி அவர்களும் திரு. ஆசீர்வாத உடையாத்தேவர் அவர்களும் என்னை அன்புடன் அனுமதித்தார்கள். தமிழ் நாட்டிலேயுள்ள மக்கட் பகுதியினரில் பெரும்பாலோர், தொன்று தொட்டுவந்த தமது பழக்கவழக்கங்களைக் கைவிட்டு வருகின்ற இந்நாளில், ஒவ்வொருபகுதியின் தனிப்பண்பு மறையுமுன், அதைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சி செய்வது மிகுந்த பயனுடையதாகும். தமிழ் நாட்டு வீரமறவர்களைப்பற்றி, இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அந்த ஆராய்ச்சியின் முடிபுகளை இந்நூல் வழியே வெளியிட முன்வந்ததற்கு ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன். தமிழ்ப்பழங்குடி மக்களுள் ஒருபகுதியே மறவர்குடி என்பதும், மறவர்என்ற பெயர்க் காரணமும், கர்ண பரம்பரையாக வந்துள்ள செய்திகளையும், தமிழ் நூல்களில் உள்ள குறிப்புக்களையும்ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆனால் மதுரை நாயக்க அரசருக்கும், மறவருக்குமிருந்த தொடர்பு, பாளையக்காரர் காலத்திலே மறவர்நிலை—இவற்றைப்பற்றிய வரலாறு தேச சரித்திர ஆராய்ச்சி முறையிலே தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. நூலின் வைப்புமுறையும், தெளிந்த

தமிழ்நடையும் அறிஞரின் பாராட்டுக்குரியன; ஆசிரியர்களுடைய முடிபுகள் சிந்தனைக்கும், முயற்சி தமிழ் மக்களின் நன்றிக்கும் உரியனவாகும் என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லது.

அ. சீனிவாசராகவன், M. A. தலைவன்,
ஆங்கில ஆசிரியன், ம. தி. தா. ஹிந்து
காலேஜ் ஆனரரி ஆங்கில ரீடர்,
சென்னை, பல்கலைக்கழகம்.

திருநெல்வேலி
12—6—38.

முகவுரை.

"பேசவந்த தூதா! செல்
அரித்த ஓலை செல்லுமோ?
பெருவரங்கள் அருள் அரங்கர்
பின்னை கேள்வர் தாளிலே,
பாசம் வைத்த மறவர் பெண்ணை
நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள்
பதி புகுந்து பாரடா!
வாசலுக்கிடும் படர்
கவித்து வந்த கவிகையே
மகுட கோடி நிரை யளக்க
வைத்தகாலும் நாழியும்
வீசு சாமரம் குடில்,
தொடுத்த கற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட
வில்லும் வாளும் வேலுமே"

என்னும் பாட்டு ஒரு மறவர்குல மகனது வாழ்க்கையை வீரத் தமிழ்கொண்டு புனைந்து ஒரு சித்திரமாக விளங்குகின்றது. அரச பரம்பரையில் வந்த ஒரு இளவரசனுக்கு, ஒரு மறவர் குலமகளைப் பெண் பேசி வருகின்றார்கள் சில தூதுவர்கள். அவர்களுக்கு மறவர் தலைவன் கூறும் பதில்தான் மேலே எடுத்துக்காட்டிய பாட்டு. "மணம் பேசவந்த தூதனே! எங்கள் குலக் கொடியை முன்னமே நேசம் வைத்து வந்த பெரிய பெரிய பட்டதாரிகளான மன்னர்கள் பட்டபாடு உனக்குத்தெரியுமா?

தெரிய வேண்டுமானால் எங்கள் ஊர் புகுந்து பாரடா! எங்கள் வாசலிலே சுரைக் கொடி படர்வதற்குத் தட்டிகளாக நாங்கள் உபயோகிப்பவை அம்மன்னர்கள் ஆடம்பரமாகக் கவித்துவந்த வெண்கொற்றக் குடைகளே! நாங்கள் இன்று தினையளக்க வைத்திருக்கும் மரக்காலும் நாழியும் அம்மன்னர் தலையில அணிந்துவந்த இரத்தின கிரீடங்கள் தான்! நாங்கள் வசிக்கின்ற குடிசைகளை மூடும் கற்றைகள் அவர்கள் அலங்காரமாக வீசிவந்த வெண்சாமரங்கள் தான்! இம்மட்டோ இன்று எங்கள் வீடுகளைச் சுற்றி நாங்கள் வேலியிடுவதற்கு உபயோகப் படுத்திக்கொண்டிருப்பவை, அம்மன்னர்கள் எங்களுக்குத் தோற்றுப் போர்க்களத்திலே போட்டுவிட்டு ஓடிப் போன வில்லும், வாளும் வேலுமேயாம்! இப்படிப் பட்ட இடத்தில் நீ மணம் பேசிக்கொண்டு வந்திருக்கும் செல்லரித்த ஓலை செல்லும் என்று எண்ணுகின்றாயா? என்பதுதான் மறவர் தலைவன் கூறும் பதில்." இப் பாட்டு, பண்டைத் தமிழகத்தில் உள்ள மறவர் மக்களின் வீரவாழ்க்கையை அழகாகச் சித்தரிக்கின்றது. இத் தகைய மறவர்கள் இன்று எந்நிலையில் இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்கு நாம் வெகுதூரம் போக வேண்டாம்.

"மண் வெட்டிக் கூலி தின்ன லாச்சே—எங்கள்
வாள் வலியும் வில் வலியும் போச்சே"

என்று நம் தமிழ்க்கவி பாரதியார் பாடியுள்ள பாட்டே போதியதாகும். இப்படிப்பட்ட காலத்தில் நமது நண்பர் திரு. ஆசீர்வாத உடையார்த் தேவர் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் காரனேஷன் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. குழந்தைவேலுச்சாமி அவர்களின் துணைகொண்டு

இம்மறவர் சரித்திரம் எழுத முன்வந்தது மிகவும் போற்றத்தக்கது. இப்புத்தகத்தைக் கையெழுத்துப் பிரதியாயிருக்கும் போதே நான் பார்க்கும்படி நேரிட்டது. நண்பர்கள் இருவரும் பெருமுயற்சிசெய்து, பலநூல்களையும், ஆதாரங்களையும் ஆராய்ந்து இந்நூலை வெளியிட்டுள்ளார்கள் என்று கண்டேன். இந்நூலுக்கு முதிர்ந்த பருவமும் நிறைந்த அறிவும் உடைய ஒரு தமிழ்ப் பெரியாரிடம் முகவுரை எழுதிப்பெற வேண்டியதிருக்க, ஆண்டாலும், அறிவாலும் ஆற்றலாலும் ஒருசிறிதும் பொருத்தமில்லாத என்னை நண்பர்கள் முகவுரை எழுதும்படி பணித்தது அவர்கள் என்பால்கொண்ட அன்புடைமையையே காட்டுகின்றது. மறவர்குல மக்களின் ஒருபகுதியினரான 'ஈசங்கு நாட்டு மறவர்' குலமாகிய தொண்டைமான் குலத்தில் பிறந்து வளர்ந்த தொன்றே நான் இம்முகவுரை எழுதுவதற்குக் கொண்டாடும் உரிமையாகும்.

(2) "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையால்"

என்பது நம் திருவள்ளுவ தேவர் குறள், உலகில் மக்கள் பாராட்டுகின்றபடி பிறப்புரிமையால் குலத்தின் நலத்தைக் கற்பிப்பது ஒரு சிறிதும் பொருந்தம் இன்று என்பதை எடுத்துக்காட்டும். இந்நிலவுலகில் மக்கள் ஒழுக்கமுறையாலும், பழக்க வழக்கங்களினாலும், செய்தொழிலாலும் ஒருவரில் ஒருவர் வேறுபட்டு நின்றனர். ஒரே வகைத் தொழிலும் உடைய ஒரு கூட்டத்தார், ஒரு குலத்தினர் ஒரு இனத்தினர் என்று கூறப்படுகின்றனர். தமிழ்நாட்டில் வீரமுடைய மக்களாய்வில்லும், வாளும் தாங்கி

அரசர் படைத் துணைவராய் இருந்து வந்தவர்களையே களமர், மறவர் என்று பழைய நூல்கள் கூறக்கேட்கின்றோம். மறம் (வீரம்) நிறைந்த மக்களே மறவர் எனப்பட்டனர். 'மறவர்' என்ற பெயர்க் காரணத்தை நன்கு ஆராய்ச்சி செய்து, மறவர் என்றால் வீரர் என்று ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ள முறை கற்றோர் உள்ளத்தைக் கவர்வதாகும். இந்திய நாட்டின் பழஞ்சரித்திரம் இன்னும் ஆராய்ச்சியாளருக்கு ஒரு விடுகதையாகவே இருந்து வருகின்றது. கர்ணபரம்பரைக் கதைகளையும் புராணக் குப்பைகளையும் கிளறித் தமிழக மக்களின் சரிதத்தை எழுதப்புகுவது மலை கல்லி எலி பிடிக்கும் காரியமாகவே முடியும் என்பதை அறிஞர் அறிவர். அப்படியிருக்க நம் நண்பர்கள் பழந்தமிழ் இலக்கிய நூல்களையும் மெக்கன்சி, டெய்லர், ஆர். எம். பிஷப் கால்டுவெல், நெல்சன் முதலிய மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் எழுதி வெளியிட்டிருக்கும் ஆராய்ச்சி நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும் துருவித்துருவி ஆராய்ந்து இம்மறவர் சரித்திரத்தை எழுதியிருப்பதொன்றே அவர்கள் எடுத்துக் கொண்ட பணி எத்தகையது என்பதைக் காட்டும். மறவர்கள், தமிழகத்தின் பழங்குடி மக்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. மறவர்கள் வாழ்ந்த இடங்களாகிய மறவர் சீமையைப்பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளெல்லாம் பலருக்குப் புதிதாகவே தோன்றும். நாயக்கர் அரசாட்சியில் மறவர் தென்னாட்டு மன்னர்களாய் அடைந்த பெருமை இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இத்துடன் இம்மறவர் ஜாதிப் பிரிவுகள், கிளைகள் இவைகளைப்பற்றிய விரிவான விளக்கங்களும் இந்நூலில்

நிறைந்திருக்கின்றன. இம்மறவர் குலமாணிக்கங்களாய் விளங்கும்,சேதுபதிஅரசர், ஊற்றுமலை ஹிருதயாலய மருதப்பத் தேவர், சேற்றூர் ஜமீன்தார் முதலியவர்களைப்பற்றி எழுதியுள்ள விவரங்கள், மறவர் மக்களையே யன்றி மற்றும் தமிழ் மாணவர்கள் எல்லோரையும் மகிழ்விக்கும் தன்மையன.

(3) இந்நூலில் கூறப்பட்டுள்ளவைகளை யெல்லாம் முடிந்த முடிபுகள் என்று தமிழகச் சரித்திரத்தின் ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று நான் கூறவில்லை. தமிழ் மக்களின் சரித்திரத்தை ஆராயப் புகும் மாணவர்களுக்கு இந்நூல் ஒரு துணையாயிருக்கலாம். இதில் சொல்லியுள்ள முடிபுகளை விவாதித்தோ அன்றி வேறு ஆதாரம்கொண்டு நன்கு ஆராய்ந்தோ முடிவுக்கு வருவதுதான் ஆராய்ச்சியாளர் கடமையாகும். இந்த வீரசமூகத்தினர் தங்கள் குலப்பெருமையை இது வரை அறியாமலிருந்து இன்று இந்நூலை அடைவதொன்றே, நம்நண்பர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பலனளிப்பதாகும். மறவர்குல மக்கள் மட்டும் அல்ல தமிழ்நாட்டு ஆராய்ச்சி மாணவர்கள் எல்லோருமே இந்நூலாசிரியர்களுக்கு இதனால் கடமைப்பட்டவர்களாகிறார்கள்.

(4) இனிஇந்நூலை ஆக்கிய நண்பரிருவரும் இம்மறவர் குல முன்னேற்றத்தில் பெரிதும் ஈடுபட்டவர்கள் என்பது இவர்கள் இந்நூலின் கடைசியில் "சமூகச் சீர்திருத்தம்" என்னும் அதிகாரத்தின்கீழ் எழுதியுள்ள சாதனங்களால் விளக்க முறும்.காவல், களவு,சிறுதெய்வவழிபாடு, பிறர்

காரியங்களில் தலையிட்டுச் சண்டையிடுதல் முதலியவை களால் இம்மறவர் குலமக்களுக்கு ஏற்படுகின்ற தீங்கு களை யெல்லாம் விரிவாக எடுத்துரைத்து இம்மக்கள் இனி மேல் ஒழுகவேண்டிய நன்னெறிகளை யெல்லாம் பன்னிப் பன்னி உரைப்பது நயமுடையதாகவும், ஒப்பத்தகுந்த தாகவும் அமைந்துள்ளது. இன்று இம்மக்களில் பெரும் பகுதியினர் குற்றவகுப்பினராக கருதப்படுவது அம்மற வர் குலத்திற்கே ஒரு பெரிய இழுக்காகும். இந்தக் குறையை நீக்கி இம்மக்களை நல்வழிப்படுத்துவதற்குப் பல சங்கங்கள் தோன்றவேண்டும். இளைஞர்கள் அத்தகைய சங்கங்களில் பெரும்பங்கெடுத்துக்கொண்டு உழைக்க வேண்டும். மறவர்குல மக்கள் கல்வியறிவாலும் ஒழுக் கத்தாலும் உயர் நிலையடைய வேண்டும் என்பதே என்பேரவா. அத்தகைய சேவைக்கு இந்நூல் ஒரு பெருந்துணையாய் உதவும் என்பதே என் நம்பிக்கை. நம் நண்பர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி முற்றிலும் பயன்பெற எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

நாங்குநேரி,
4—6—38.

T. M. பாஸ்கரத் தொண்டைமான், B. A
சப்மாஜிஸ்டிரேட்.

பொருள் அடக்கம்.

முன்னுரை

முகவுரை

1. மறவர் — பெயர்க்காரணம் ... 1
2. மறவர் — பழங்குடி மக்கள் ... 7
3. மறவர் சீமை ... 13
4. மறவர் சரித்திர ஆராய்ச்சி ... 16
5. தென்னாட்டுப் பாளையக்காரர்களினாரம்பம் ... 27
6. நாயக்கர் அரசாட்சி—மறவர் சீமையை ஒழுங்குபடுத்தல் ... 35
7. நாயக்கமார் அரசாட்சி—மறவர்தொடர்ச்சி ... 44
8. விஜயரங்கசொக்கநாதநாயக்கர்—மறவர் ... 53
9. பாளையக்காரர்கள்—தொடர்ச்சி ... 58
10. திருவாங்கூர்ச் சரித்திரம் ... 62
11. காவல் ... 64
12. முகமதியர்—ஆங்கிலேயர்—மறவர் ... 71
13. ஷை தொடர் ... 91
14. ஷை தொடர் ... 104
15. வடகரை ஆதிக்கத்தலைமைச்சர் ... 117
16. மறவர் குலமுறையும், பழக்க ஒழுக்கங்களும் ... 125
17. மறவர் சாதிவருணனம் ... 139
18. மறவர்குல மாணிக்கங்கள் ... 152
19. சமூகச் சீர்திருத்தம் ... 163
20. கையெழுத்துப் பிரதிகள்
21. பிழையும் பிழைதிருத்தமும்

மறவர் சரித்திரம்.

அத்தியாயம் 1.

மறவர் - பெயர்க் காரணம்.

பழம்பெருமை வாய்ந்த நம் தமிழ் நாட்டிலே தேவர், தலைவர், சேர்வைகாரர், கரையாளர், ராயர் வம்சம் முதலிய பட்டங்களையுடையவர்களாய் வாழுகின்ற மக்கள் 'மறவர்' என்று இன்றும் அழைக்கப்படுகின்றார்கள். மறவர் குலமக்கள் இன்று பலவிடங்களில் பரவியிருந்தபோதிலும், அவர்கள் தமிழ் நாட்டின் பழங்குடி மக்கள் என்பதை மறுப்பவர் ஒருவருமிலர். ஆனால் இக்குல மக்களுக்கு 'மறவர்' என்ற பெயர் இயற்பெயரா? அல்லது காரணப்பெயரா? என்ற கேள்விக்குச் சரியான விடை இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. மறவர் என்ற பெயர்க் காரணத்தை உள்ளபடி ஒழுங்காக வரையறுத்துக் கூறத்தக்க ஆதாரவுகள் இல்லை என்றே சொல்லிவிடலாம். 'பழங்காலே மேவாதே, புதுக்காலே வெட்டாதே' என்ற கொள்கையுடைய நம்மக்களிடையே குலச்சரித்திரம் என்று ஒன்று இதுவரை இல்லை. பலபேர்களுடைய குலச்சரிதங்களும் ஓரே அச்சில வார்த்தெடுத்தாற்போல் ஒருபடித் தாகத் தானே இருந்துவருகின்றன. எவர் குலத்தைக் குறித்தே

னும் சில சரிதைப் பகுதி முதலியன வெளிவந்திருக்குமாயின், அவை கர்ன பரம்பரையில் வந்ததாயிருக்கின்றதே யொழிய, ஆராய்ச்சியாளர் தம் ஆராய்ச்சியின் பயனாய், அறுதியிட்டுக் கூறிய முடிவுகளாக இல்லை.

மேல் நாட்டார் எண்ணிறந்த பொருளைச் செலவிட்டுச் சேகரித்த ஏட்டுப் பிரதிகளும், சாதி சமய வரலாறுகளை மூடிக்கிடக்கும் அந்தகாரத்தைப் போக்கினபாடில்லை. புராதன சிலாசாஸன ஆராய்ச்சியாளர்களும், புராணீகர்களும் தென்னிந்திய ஜாதி வரலாற்றை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்ததாகவுமில்லை. ஆகவே மறவர் குலமக்கள் சரித்திரத்தை விரிவாக ஆராயப் புகுவதும், அவர்களுடைய பழம் பெருமையை நிலைநாட்டுவதும், அவர்களது குண நலங்களைத் துருவிப் பார்ப்பதும் எமது ஆராய்ச்சியின் நோக்கமல்ல. முதிய குடிகளைப் புதிய கட்டளைக் கருவிகளால் அளந்து பார்ப்பதும் இயலாத காரியமேயன்றோ? பண்டைத் தமிழ் நாட்டில் காணப்பட்ட வகுப்பினரில் இவர்கள் எந்த நிலையினர், ஏனையோர் பழக்க வழக்கங்களும் இவர் வழக்கங்களும் எத்தகையன என்பதை அறிந்துகொள்ள இந்த ஆராய்ச்சி உதவுமானால், அதுவே யாம் எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடியதாகும் என்று கருதுவோம்.

கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மூன்று வகுப்பினரும் ஒரே யினத்தவரென்றும், இவர்களெல்லாரும் இந்திர குலத்தினரென்றும் பலர் சொல்லியும், எழுதியும் வந்திருக்கின்றனர். பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியும் கௌதமர் பத்தினியுமாகிய அகலிகையைத் தேவேந்திரன் வஞ்சித்துப் புணர்ந்த காலத்து மூன்று மக்கள் பிறந்தனர்

என்றும், முனிவர் கங்கைக்குச் சென்றவர் பொழுது புலராமை கண்டு மனைக்குத் திரும்பிய காலத்தில், மறைந்தோடி ஒளிந்தவன் கள்ளனென்றும், மரத்திலேறி மறைந்தவன் மறவனென்றும், அகங்காரத்துடன் நின்றவன் (அகமுடையான்) அகம்படியன் என்றும் பெயர் பெற்றார் என்பதாக ஒரு கதை கட்டப்பட்டுள்ளது. இத்தகைய கதைக்கு, புராணங்களில்கூட ஒருவிதமான ஆதாரவும் இல்லை. 'மலடிமகன் முயற்கொம்பேறி சந்திரமண்டலத்தில் பாய்ந்துவிட்டான்' என்று சொல்லும் கதையில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ அவ்வளவு உண்மைதான் இந்தக் கள்ளர், மறவர், அகம்படியர் கதையிலும் உண்டு. இக்கதை கட்டினவன் 'மரம்' என்பதற்கும், 'மறம்' என்பதற்கும் உள்ள வேற்றுமைகூட அறியக் கூடாதவனாயிருந்திருப்பது ஒன்றே அவன்றன் அறிவுடைமையை விளக்கப் போதியதாகும். நமது புராணங்களில் கூறப்படுகின்றபடி, உலகத்தின் படைப்பையும், சூரிய சந்திர வம்சங்களின் தோற்றத்தையும், வசிட்டர் முதலிய முனிவர்களின் பிறப்பையும் நோக்குங்கால் அவையாவும் நாம் இந்த 20-ம் நூற்றாண்டில் ஒப்புக்கொள்ளத்தக்கவைகளாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. இந்த "அத்தைப்பாட்டி" கதைகளெல்லாம் சரித்திர இயல்புக்குச் சிறிதும் பொருத்தமற்றதென்பதே அறிஞர் கருதது. அகலிகை வரலாறு கூறும் இராமாயணம் முதலிய நூல்களில் மறவர் முதலியோரின் பிறப்புக்கூறப்பட்டிருக்குமானால் அது சரித்திரமாக ஒப்புக்கொள்ளப்படா விட்டாலும் ஒருவாறு மதிப்புக்குரியதாகவாவது இருக்கும். அதுவன்றி யாரோ சிலர் சொல்லும் கட்டுக்கதைகளெல்லாம் சரித்திர ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் என்று கொள்ள ஒரு சிறிதும் இடமில்லை. இனி, சேதுபதி மன்

னன் தன் படையோடு இராமனுக்குத் துணைவனாய்ச் சென்று இலங்கையரசனை வென்றபொழுது, அந்நன்றியைக்குறித்து இராமன் யான் தங்களை என்றும் மறவேன் எனச்சொன்னதாயும் அது நாளடைவில் உலக வழக்கத்தில் மறவன் என வழங்கப்பட்டு வந்ததாகவும் சொல்லுவார் ஒரு சாரார். இக்கூற்றும் ஆராய்ச்சிக்கு ஒரு சிறிதும் பொருத்தமில்லை என்று கூறுவதைவிட வேறு விரிவாகச் சொல்லவேண்டுவதில்லை.

ஆதியில் வடநாட்டு ஆரியர் தமிழ் நாட்டுக்குக் குடியேறிவந்து தமிழ் நாட்டு வேந்தரை யணுகிப் பலவித உபாயங்களால் அவரைத் தமது வசப்படுத்தி 'திராவிடர்,' என்னும்ஒரே இனத்தவராகிய தமிழ்நாட்டு மக்களுக்குள்ளே பலபல சாதிப்பிரிவினைகளையும், சமயப்பிரிவினைகளையும் உண்டாக்கி ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு பெயர் ஏற்படுத்திவைத்தனர் என்பதே சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவதாகும். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வருண பேதங்கள் ஆரியர் தமிழ் நாட்டில் புகுந்த பின்னரே ஏற்படலாயின. ஆகவே, வடக்கேயிருந்து வந்த ஆரியர் என்னும் ஆற்று வெள்ளம் தனித் தமிழ் நாட்டிலுள்ள தமிழரென்னும் பெரிய நீர்த்தேக்கத்தினுள்ளே புகுந்து கரைகளை யுடைத்துத்தமிழரை வருண பேதத்தில் ஆழ்த்தி விட்டதாக அறிகிறோம்.

பழைய தமிழ்ச் சங்க நாளிலே இப்பொழுது வழங்குவன போன்ற பல பட்டப்பெயர்கள் மக்களுக்கு வழங்கி வந்ததாகக் காணவில்லை, "பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையால்" என்பதுதான் தமிழ்த்தாயின் தவப்புதல்வனான வள்ளுவர் கண்ட உண்மை. பிறப்பினால் உயர்வு தாழ்வு கிடையா

தென்றும், ஒவ்வொருவர் செய்துவந்த தொழில் காரண மாகவே ஒவ்வொரு வகுப்பினர்க்கும் பெயர் ஏற்பட்ட தென்றும் பின்னர் அந்தந்த வகுப்பினரின் வழிவந்த வர்கட்கெல்லாம், அப்பழம் பெயரே நிலைத்து நின்ற தென்பதும் நாம் அறிந்த உண்மையாகும். பண்டைக்காலத் தில் தமிழரசரால் வழங்கப்பட்டு வந்த நாயக்கர், முதலி யார் என்ற படைத்தலைவர்க்குரிய பட்டப் பெயர்களும், எட்டி, காவிதி, ஏனாதி என்ற சிறப்புப் பெயர்களும் பிற் காலத்தில் ஒவ்வொரு பெருங்கூட்டத்தினரையே குறித்து நின்றனவாகச் சாசன ஆராய்ச்சியாளரும் சங்க நூல் ஆராய்ச்சியாளரும் கூறியிருக்கின்றார்கள். ஐயர் என்பது முனிவர் அல்லது பெரியோருக்கே சிறப்பாய் வழங்கிவந் ததுமல்லாமல், கண்ணப்பர், நந்தனார் முதலிய வேறு குலத்துப் பெரியார்களையும் சிறப்புப்பற்றி ஐயர் என ஆன்றோர் வழங்கிவந்திருந்த பெயர்; நாளடைவில் ஒரு வகைச் சாதியினரையே சுட்டி நிற்கின்றது. இன்னும் பிற்காலத்திலுண்டாகிய குருக்கள், ஓதுவார், புலவர் முதலிய பெயர்களும் இப்பொழுது குலப்பெயராகவே வழங்கிவருதலும், அவர்களில் பலர் இப்பெயர்களின் அமைப்புக்குச் சிறிதும் பொருத்தமில்லாதிருத்தலும் யாம் மேலே சொல்லியுள்ள கொள்கையை வலியுறுத்து வதாகும்.

இதுவரையும் கூறிவந்த காரணங்களைப் போலவே அக்காலத்தில் போர்முனையில் நின்று போர் புரிதலில் சிறந்து வீரர்களாயிருந்தவர்களுக்கு மறவர் என்ற பெயர் வழங்கிவந்து, 'வலிமைவாய்ந்தவர்' என்னும் பொருள் பற்றி மறவர் குலப்பெயர் அமைந்துள்ளது. என்பது பழைய ஆதாரங்கட்கும் யூக அனுபவங்கட்டும் ஒத்ததாக

வேயிருக்கின்றது. பழந்தமிழ் வீரர் வழிவந்தவர்களே, தற்காலத்தில் தமிழகத்தில் காணப்படுகின்ற 'மறவர்' என்பதற்கு ஒரே ஒரு சான்று மட்டும் கூற விரும்புகின்றோம். போர்க்களத்தில் வீழ்ந்த வீரரை அவர் வீழ்ந்த இடங்களிலேயே தமது வெற்றிக்கடையாளமாக கல் நடுதல் முற்கால வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. நமது தென்னாட்டு மறவர்களும் தாங்கள் வசித்துவருமிடங்களில் அந்நடுகல்லை வீரத்தெய்வமாகப் பாவித்து வழிபட்டு வருவதை நாம் இன்றும் காண்கின்றோம் வீரரை வழிபடுதல் வீரர் குல மக்கள் செயலேயாம். வீர மக்களான மறவரைப்புகழாத தமிழ் நூல்கள் இல்லையென்றே கூறலாம். வீரம், மறம், முரண், சினம், தறுகண்மை என்ற சொல்லுக்கிணங்க புறப்பொருளில் 'மாறுமறவன் மறம்' எனவும், "தோம்செய் மறவர்தொழில்" எனவும், "முதுகுடிமறவர் முன்னுறச் சூழ" எனவும், "வஞ்சினமறவர்" எனவும், கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் சீவகசிந்தாமணியில் "வீறின்மையின் விலங்கா மெனமதவேழமும் எறியான், எறண்டவர் நிகராயினும் பிறர் மிச்சிலென்றெறியான், மாறன்மையின் மறம் வாடுமென்றிளையாரையும் எறியான். ஆறன்மையின் முதியாரையும் எறியானயில் உழவன்" எனவும் கூறியிருத்தல் கவனித்தற்குரியது. தொடுதோலணிந்த காலினராய், வாளோடு செருகிய இடுப்புக்கச்சையராய், கூர்மைபொருந்திய அம்புகளைப் பூட்டிய வில்லினராய்ப் போர்முனையில் நின்று "இன்னொரன்வேண்டா மென்னேடெதிர்சீறி, முன்னர் வருக" எனப் பகைவருடைய சேனையை நோக்கித் தமது போராண்மையைப் பற்றிச் சொல்லும் வீரம் செறிந்தவராகவும், அக்காலத்தில் தமிழ்ப் பேரரசரால் வழங்கிய அறப்புறங்காவல் நாடுகாவல் முதலிய தொழில் துறை

யிலும் பின்வாங்காத ஊக்கம் படைத்தவராகவும், போர் கிடைத்தால் தமது உயிரை ஒரு பொருளாக மதியாமல் அப்போரின் மேற்செல்லும் வீரம்வாய்ந்தவர்களாகவும் விளங்கிய இவர்களைப் புறநானூற்றில் 'போரெனிற்புகலும் புனைகழல் மறவர்' எனவும், "புட்பகைக்-கேவானாகலிற் சாவேம் யாமென—நீங்காமறவர் வீங்கு தோள்புடைப்ப" எனவும், கூறப்பட்டிருக்கின்றன. இப்பொழுதுள்ள நம்மறவர் குலமக்களிடம் இவ்வீரம் இன்றும்மண்டிக்கிடக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. இன்னோரன்ன சான்றுகளால் "வீரர்கள்" என்ற பொருளிலேயே இவர்கட்கு மறவர் என்னும் குலப்பெயர் காரண இடுகுறிப்பெயராக வழங்கப்பட்டு வருகின்றது என்று துணியலாம்.

அத்தியாயம் 2.

மறவர்—பழங்குடி மக்கள்.

வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவிற்கு வந்த ஆரியர்களுள் முதன்மைவாய்ந்தவர் அகத்திய முனிவர். தமிழ் மொழியைப் பிறப்பித்தவர் அகத்திய முனிவர் எனக் கூறுவார் ஒரு சிலர். "தமிழெனு மளப்பருஞ்சலதி தந்தவன்" எனக்கம்பரும் "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" என வில்லிப்புத்தூரார் மகன் வரந்தருவாரும் சொல்லியிருப்பன மேற்கூறுவோர் கூற்றை ஆதரிப்பன போலத் தோன்றலாம். அகத்தியனார் தென்னாடு வருவதற்கு முன்னரே தமிழ்மொழி இந்நாட்டில் தழைத்துப் பரவியிருந்ததென்பதும், அவர் அம்மொழியைச் சிவபெருமானிடத்தும், முருகக்கடவுளிடத்தும்

கற்றனரென்பதும் அடியிற்காட்டப்பட்ட சான்றுகளால் உணரலாம்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத் தருளியதற் கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்,
கடல்வரைப்பினி தன்பெருமையாவரே கணித்தறிவார்."

(காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலம்.)

"ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்து தும்
போத மெஞ்ஞான நலம் பெறற் பொருட்டே"

(சேனாவரையர்.)

"தழற்புரை நிறக்கடவுள் தந்த தமிழ்தந்தான்" (கம்பர்)

"இலக்கியமின் றி யிலக்கண மின்றே
எள்ளின்றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின்றெண்ணெ யெடுப்பதுபோல
இலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்"

(அகத்தியம்.)

ஆகவே, முனிவர் தென்னாடு வந்து 12000 சூத்திரங் களடங்கிய அகத்தியம் என்னும் விரிந்த இலக்கண நூல் ஒன்று இயற்றுதற்கு முன்னரே தமிழ் வளர்ந்தோங்கி யிருந்ததென்பது பெறப்படுகின்றது. தமிழ் மொழியின் தொன்மையும், அதன் மேன்மையும் விரிக்கிற்பெருகும். அத்தகைய ஒரு அரிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நம்மவர் பாக்கியமே பாக்கியம், பெற்ற அன்னை

யினும் அன்பிற்குரிய அருமைத் தாய்மொழியாம் தமிழைப் போற்றாதவன் தமிழன் ஆகான் என்று சொல்ல வேண்டுவதில்லை.

தமிழ்நாடு முதலில் தமிழரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது. அவ்வரசர்களும் நூற்றுக்கணக்கான வள்ளல்களும், தங்களது பாதுகாப்புக்காகச் சிறந்த வீரர்களான சேனைத்தலைவர்களை வைத்து அவருக்கு வேண்டும் வசதிகளை யளித்துப் பேரன்போடும் ஆதரித்து வந்தார்கள். அவர்களாலாதரிக்கப்பெற்ற வீரமக்களே தற்காலத்தில் ஓர் குலமக்களாக விளங்கிவருகின்றார்கள். இவர்கள் வீரர்களாகமட்டும் அமையாமல் அரசருள்படு கருமத்தலைவராகவும், அறப்புறக்காவலராகவும், நாடு காவலராகவும் இருந்து வந்திருக்கின்றார்கள் என்பதை நமது சங்க இலக்கியங்களே கூறுகின்றன.

"ஒன்னாதார் படைகெழுமித்,
தன்னாண்மை எடுத்துரைத்தன்று"
(புறம்-நெடுமொழி வஞ்சி)

"களங்கெழுமிய படையிரிய—உளங்கழிந்த
வேல்பறித்தோச்சின்று" (புறம். நூழிலாட்டு)

"விழுப்புண்படாதநாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன்னாளை யெடுத்து"

"என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின்றவர்" [2-ம் குறள்]

என்பன எடுத்துக்காட்டாம். இனி, நொச்சி மறவர், உழிஞை மறவர், தும்பை மறவர், வாகை மறவர் என

இவர்களின் குடிப்பெயருடன் கூடும் பூக்களும் பண்டைக்காலந்து வழக்கத்தில் இருந்து வந்திருப்பதாலும்

" இட்டுத்தலை யென்னும் எயினரல்லது,
சுட்டுத்தலை போகாத் தொல்குடிமறவர் "

எனச் சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி முதலியவற்றில் கூறப்படுதலாலும், இவர்கள் சேர சோழ பாண்டியர்களைப்போலவே பண்டைத் தமிழ் நாட்டில் வாழையடி வாழையாய் வந்தவோர் பெருங்கூட்டத்தினர் என்று துணியலாம். இவர், தமக்கு இயல்பாயிருந்துவரும் வீரத்தாலும், வில்வாள் முதலிய படைத்தொழில் வன்மையாலும் சிறந்து தமிழ் நாட்டு மூவேந்தரையும் தமது அரிய போர்த்தொழில்களால் மகிழ்வித்து, அவ்வேந்தரால் முடியும், கோலும், மாலையும், தரப்பெற்றுக் குறுநிலமன்னராகவும் விளங்கிவந்தார் எனவும், இவர்களில் சேரனுலாதரிக்கப்பட்டு வந்தோர் சேரன் மறவர் எனவும், பாண்டியனுலாதரிக்கப்பட்டு வந்தோர் பாண்டியன் மறவர் எனவும், சோழனுல் ஆதரிக்கப்பட்டு வந்தோர் சோழன் மறவர் எனவும் அழைக்கப்பட்டார்கள். இது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர்களுள் ஒருவராகிய திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் ஆராய்ச்சி செய்து கூறிய உண்மை. இனி இம்மறவர் குடிப்பிறந்தோர்க்குத், தேவர் என்ற சிறந்த தொருபட்டம் பிரதானமாக வழக்கத்திலிருந்து வருகின்றது. குலோத்துங்க சோழதேவன், திரிபுவன தேவன், ராஜேந்திர சோழ தேவன், என்று சோழர் சாசனங்களில் வழங்கி வந்திருக்கும் பட்டப்பெயரே இம்மறவர் குடிக்கும் வழங்கப்பட்டு வருகின்றது என்று கூறுதல் மிகவும் பொருத்தமுடையது. இதிலிருந்து இவர் ஆதியில் சோழ நாட்டிலிருந்து பாண்டி

நாடு முதலிய பற்பல இடங்கட்கு குடியேறினரெனத் தெரிகின்றது

பழந்தமிழ் நாட்டிலே மறக்குடி மக்களில் ஆடவரே யன்றிப் பெண்பாலாரும் வீரத்தாய்மார்களாகவும், பல அரிய செயல்களை நிகழ்த்துதற்குரிய மன எழுச்சியும் ஆற்றலும் வாய்ந்தவர்களாகவும் இருந்து வந்தனரென் பதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நரம்பு எழுந்து தோல் வற்றிய முதியாள் ஒருத்தியின் புதல்வன் ஒருவன் போர்க்கோலந்தாங்கி அமர்க்களம் சென்றனம்; சென்றவன் போரினிடத்துப் புறமுதுகு காட்டி இறந்து வீழ்ந்தான் என்று பலர் வந்து அவ ளிடம் சொல்ல, அதனைக்கேட்ட அன்னை தனது முது மைப் பருவத்தைச் சிறிதும் கருதாமல், வாள் தாங்கி, 'இவர் சொல்வது உண்மையாயிருக்குமானல் அவனுக்குப் பாலூட்டிய எனதுமார்பை இவ்வாளால் அறுத்தெறி வேன்'' என்று வஞ்சினங்கூறிப் போர்க்களம் சென்று மைந்தனைத்தேடி, அங்கே குவிந்து கிடந்த பிணங்களைப் பெயர்த்துப் பெயர்த்துப் பார்த்தாளாம், அங்கே தனது ஒரு மகனாகிய திருமகன் மார்பில் அம்பு தாங்கி இறந்து கிடந்தலைப் பார்த்து அவ்வன்னை அவனை ஈன்ற பொழு தினும் பெரிது உவந்தனளாம். இவளல்லவோ மறவர் குல வீரத்தாய்!

இதே கருத்தைத் தழுவிய புறநானூற்றடிகள் போற்றத்தக்கனவேயாம்.

“நரம் பெழுந்துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியாள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற

மண்டமர்க் குடைந்தன னாயினுண்ட வென்
முலையறுத் திடுவென்யானெனச் சினைஇக்
கொண்டவாளொடு படு பிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே"

இன்னுமொரு பெண்மணி தன் கொழுநன் போர்க்களத்தில் முதல்நாள் மறப்போர் செய்து இன்னுயிர் துறந்ததை அறிந்த பின்னும் மறுநாள் எதிரிகள் வெற்றி முரசறைதல் கேட்டு அப்பெண்மகள் தன் ஒரு மகனை அப்பொழுதே அழைத்துத் தலை மயிர் சீவிப் போருடை புனைந்து வேலைக்கையில்கொடுத்து போர்க்களம் போய் வருக! நன்று மகிழ்ச்சியோடு வழி அனுப்பினளாம்; இம் மறவர் மகளது வீரம் கொழுநன் பிரிவையும் மறக்கச் செய்தது என்று பழந்தமிழ் நூலான புறநானூறு கூறுகின்றது.

" நெருநலுற்றசெருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கியாண்டுப் பட்டனனே,
இன்றும், செருப்பறைகேட்டு, விருப்புற்றுமயங்கி
வேல்கைக்கொடுத்து வெளிது விரித்துடீஇ இப்
பாறுமயிர்க்குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்லதில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

இவ்வாறே சங்கநூல்களெல்லாம் மறவர் குலமக்களின் வீரத்தையும் தீரத்தையும் போற்றிப்புகழ்கின்றன. பழந்தமிழ் நூல்களில், விரித்துரைக்கப்படும் இம்மக்கள் பாரம்பரையிலே மிகப்பழமை வாய்ந்தவர்கள் என்பது விளக்கமுறும்

அத்தியாயம் 3.

மறவர் சீமை

மறவர்கள் இப்பொழுது பல இடங்களிலும் இருந்து வந்தபோதிலும், முற்காலத்தில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் தெற்கே கன்னியாகுமரி முனை முதல் இராமநாதபுரம் ஜமீன் வடக்கு எல்லைவரை யும் கிழக்கரையில் வசித்துவந்திருக்கின்றார்கள். (அதாவது கிழுவை) ஆதியில் பாண்டியர் தலைமைக்குள்ளாகிய இப்பூமி, சோழர், பாண்டியரை வென்று பாண்டியநாட்டின் பெரும் பகுதியைத் தமது நாடாக்கிக்கொண்ட காலந் தொடங்கிச் செம்பியன் நாடாகியது. அந்நாள் தொட்டு இந்நாட்டு மறவர், செம்பிநாட்டு மறவர் என்று பெயர் பெற்று வரலாயினர். இனி, இச்சீமை மற்றச்சீமையிலும் பெருமையுடையதாக விளங்கியது எனத்தெரிகின்றது. முற்காலத்தில் இராமன் இலங்கைக்குப்போய் இராவண வதம் செய்வதன்பொருட்டு, அணைகட்டியபோது இம்மறக் குடிமக்களும் ஈடுபட்டிருத்தல்வேண்டும். இதற்குச் சேது நாடு என்ற பெயர் வந்ததே இதனை வலியுறுத்தும்.

"பத்தரெல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தரகோசமங்கையூர்" திருவாதவூரடிகள்

ஞானம் பெற்ற திருப்பெருந்துறை, சேதுநாட்டரச ருடைய அரண் என்னும் நாட்டரசன் கோட்டை, முதுகுளத்தூர், கயிஞர்கோவில், மணவாளமாமுனிவர் வளர்ந்த சிக்கல் கடாரம், திருக்கோஷ்டியூர், சிவகங்கை, திருப்புல்லாணி, திருப்பூவணம், ஒக்கூர், திருப்புத்தூர், மானு

மதுரை, அபிராமம், கமுதி, தமிழில் செவ்வைச் சூடிவார் பாகவதம் என்னும் நூலைப் பாடிய புலவர் பெருமானது வேம்பத்தூர், திருவாலவாயுடையார் திருவிளையாடல் செய்தருளிய மாதவப்பட்டரின் வீர சோழனூர், திருச் செந்திற்பிள்ளைத் தமிழும், சிவசிந்தாமணிச் சுருக்கமும் பாடிய பகழிக்கூத்தரின் சன்னசிக்கிராமம், அரிச்சந்திர புராண விருத்தம் பாடிய ஆசுகவிராயரின் வீரையூர், தண்டலையார் சதகம், தொண்டைமண்டல சதக முதலிய நூல்களைத் தமிழுலகுக்களித்தபடிக்காசுப்புலவரும், ஔரங்கசீப் முதலிய அரசர் மெச்சும்படி வாழ்ந்து வந்த வள்ளல் சீதக்காதியும், நபிகளின் சரிதமாகிய சீறாப் புராணத்தை ஐயாயிரம் பாடலால் பாடியருளிய உமறுப் புலவர் என்னும் தமிழ் நாவலரும் ஆகிய இம் மூவரும் பிறந்த கீழக்கரை என்னும் ஊரும், இவைபோல்வன வாகிய இன்னும் பல புண்ணிய நகரங்களும் இச்சேது நாட்டில் உள்ளன. இந்த நாட்டிலுள்ள பூமிகள் ஆங் காங்கு ஏற்றத்தாழ்வும், அடர்ந்த செடிகொடிகளின் பசுமையும், பழந்தரும் மரங்களான, மா, பலா, விளாம், முதலியனவைகளின், செறிவும், தென்னை, கமுகு, கன்னல் ஓங்கிவளரப்பெற்ற வயற்காடுகளின் பரப்பும், இருபுற மும் கரைபுரண்டோடும்படியான வெள்ளப்பெருக்கமைந்த நீர்ப்பாய்ச்சலின் செழிப்பும், மனித சமூகத்து நல்வாழ்வுக் கேற்ற பற்பல உணவுப் பொருள்களைத் தரும் காடு களும், காடுகளைச்சார்ந்த நன்னிலங்களின் இயற்கை வளங்களும், கண்கொள்ளாக்காட்சி யளிப்பனவாம்.

இனி, பல ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான பக்த ஜனங்கள் வந்து வணங்கித் தங்களது பாபத்தைப்

போக்கிக் கொள்வதற்கு உரிய சிவாலயமாகிய இராமேசுவரமும் இச்சீமையிலுள்ளதே. இராமன் இலங்கையரசனை வென்று திரும்பிய காலத்தில் சமுத்திர ஸ்நானம் செய்து ஈசுவர வடிவமாக ஒரு லிங்கம் தயாரித்து, அந்த லிங்கத்தைப் பூசித்த இடமே இன்று இராமேஸ்வரம் என்று வழங்குகின்றது என்ற விபரத்தை அந்த ஸ்தல புராணத்தின் வாயிலாகவே தெரியலாம். இந்தக் கோயிலுக்குள்ளே சென்று பார்த்தால் சில சில இடங்களில் அமைந்திருக்கும் கல்வெட்டுக்களில் 'கீழக்கரை மறவர்' எனக்காணப்படுகின்றன. இதனைச்சோதித்தற் பொருட்டு வந்த ஆங்கிலேயப் பிரபு 'பெர்கூஸன்' (Ferguson) இந்த மாதிரியில் பிரம்மாண்டமான கட்டிடம் இப்புவியில் தாம் எங்கும் கண்டதில்லை என்று ஆச்சரியப்பட்டுச் சொல்லியிருக்கின்றார். மற்றும் திருப்புல்லாணி என்ற கிராமம் இராமநாதபுரத்துக்கு அப்பால் ஏழாவது மைலில் சமுத்திரக்கரை யருகிலுள்ளது. இந்த இடத்திற்குத் தர்ப்ப சயனம் என்று கூறுவதுண்டாம்; இந்த இடத்தில் தான் இராமன் தருப்பைப்புல்லில் சயனித்திருந்து சமுத்திரத்தைத் தாண்டி இலங்கை போவதற்கு வருண பகவானை நோக்கி வணக்கம் செய்த தாகக் கூறப்படுகின்றது. ஆனால் அந்த ஸ்தல புராணத்தில் புல்லை என்ற முனிவர் ஒருவர் பெருந்தவசு செய்ய, மகா விஷ்ணு இவர் தவசில் ஈடுபட்டுப்பெரும் மகிழ்ச்சியடைந்து தாமரை மலரில் நின்று முனிவருக்குக் காட்சி கொடுத்தாரெனக் காணக்கிடைக்கின்றோம். இதுவரை கூறிய வாலாற்றால் இம்மறவர் சீமை மிகவும் பழமைவாய்ந்த தெனவும், அநேக புண்ய ஸ்தலங்களை யுடையதெனவும், நீர் வளம் நிலவளம் செறிந்த தெனவும், தெய்வத்தன்மை வாய்ந்த தெனவும், மாறுப்பயன்தரும் மாண்புடைக் கீழ்

கரை முத்துச் சலாபம் கொளித்தற்குரியவோர் பெருந் துறை முகமாயிருந்த தெனவும் ஒருவாறு தெரிகின்றோம்.

அத்தியாயம் 4.

மறவர் சரித்திர ஆராய்ச்சி.

மறவர் பழந்தமிழ் நாட்டில் வழங்கிய ஐவகை நிலங் களில் பாலை நிலத்திலுள்ளவர். வனதுர்க்கையை வழிபடு தெய்வமாகக்கொண்டவர். எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் என்னும் பாலைநில மக்களுள் ஒருபகுதியினர். புறா, பருந்து, கழுகு முதலிய பறவைகளும், செந்நாய் முதலிய மிருகங்களும் வசித்தற்குரிய கற்பாங்கான குறும்புகளில் இல்லம் அமைத்துக் குடியிருந்தவர். குழிந் விலாத கிணற்று நீரையுடையவர். குரா, மரா முதலிய பூக்களையும் உழிஞ்சில், பாலை, ஓமை, இருப்பை முதலிய மரங்களையும் அணிந்து இளைப்பாற்றிக்கொள்பவர். தாங்கள் சஞ்சரிக்கும் கானற் படர்ந்த சுரத்தின் வழிப்போக் கர்களிடமிருந்து பறிமுதல்செய்தபொருளையும், செழித்த நகரங்களிற்சென்று கொள்ளையடித்த பொருளையுமே உண வாக்கி உண்பவர். பகைப்புலத்துக்குரிய (துடி) உடுக்கும், பாலைப்பண்ணுக்குரிய யாழுங்கைக்கொண்டு உலாவு வோர். பகற் காலங்களில் சூறைபாடுதலை முதன்மை வாய்ந்த தொழிலாகப் பாராட்டி. தொடுதோல் அணிந்த காலையுடையராய், கோபமும் மூர்க்கமும் வாய்ந்தவராய்;

முருக்கமைந்த மீசைகள் மானின் திருக்கமைந்த கொம்பு களை யொத்திருக்கும் தோற்றத்தினராய், வலிமைபொருந் திய வில் நாணிலிருந்து எழும்பும் டங்கார ஓசையினராய், கம்பீரத்தை யுண்டாக்கும் இரட்டை முரசுகளின் பேரொ லியை முழக்குபவராய், கச்சையும் வாளுங்கட்டிச் செருகிய இடுப்பினராய், கூர்மை பொருந்திய அம்பைக் கோத்து ஏறிடுங் குறியிலேயே கருத்துவைத்துத் திரியுங் கை வில் லினராய், புலிபோலும் பார்வையையுடையராய், அஞ்சாத துணிவுடைமை அமையப்பெற்றவராய், பகைவர் மார்பில் தங்கள் அம்புபட்டுப் பதைப்பதைக் காணுதலில் மிக்க வேட்கையுடையவராய் ஒவ்வொரு இடங்களிலும் பரந்து நிற்பர். அங்ஙனம் நிற்கும் நிலை அளவு கடந்த சேனை களையுடைய அரசர்களையும் புறமுதுகிட்டோடும்படி செய்யுமென்றும், மறவர்களைக் குறித்துப் பழநூலோர் கூறியிருத்தலிலிருந்தும், முற்றத் துறந்த முனிவர்களின் மனமும், விலைமாதர்களின் மனமும்போல ஈரப்பசை யின்றித் தரைமுழுதும் நெருப்புத்தகடு அடுக்கினுலொத்த கொடிய இயற்கை வெப்பம் பொருந்திய கற்கறடுகளை யுடையது பாலைப் பூமி என்று சொல்வதிலிருந்தும், 'குற்றந்தையுடைய மறவர்களின் மூட்டு வாயமைந்த அம்புகள் மலைகளடர்ந்த போதற்கரிய காட் டிடத்து அரியவழியில் போவார்மேலே அழுந்துகையி னுலே, உடலஞ்சுருங்கி உள்ளுண்டாகிய நீர்வற்றுகையி னுலே, உலர்ச்சியாலே வாடுகின்ற நாவிற்கு மரையாமரலைத் தின்னும்படியாக மாரிவறக்கையினுலே தண்ணீர்பெறுத மனத்தடுமாற்றத்தையுடைய வருத்தத்தை அவருடைய கண்ணீர் வீழ்ந்து அந்நாவினை நனைத்துப் போக்குங் கடு

மையையுடையது' என்று கூறுவதிலிருந்தும்; இவர் எத்தகைய குணத்தவர் என்பதும், வசிக்கும் நாடு எத்தகைய தன்மையுடைய தென்பதும் நன்கு விளங்கும். இனி, மறவரின் பூர்வீக சரித்திரத்தைப்பற்றி ஆராயப்புகுவோமாளுல், இவர் எக்காலத்தவர், ஆதியில் எந்த வகுப்பைச் சார்ந்தவர் என்பது குறித்துத் தெரிந்து கொள்ளவேண்டுவது இன்றியமையாதது.'

'மறவர் ஜாதி வருணனை' என்ற கையெழுத்துப் பிரதியிற் கண்டவற்றை 'வில்லியம் டெய்லர்' என்பவர் ஆராய்ந்து தமது அபிப்பிராயத்தைக் கீழ்வருமாறு வெளியிட்டிருக்கிருர். ஆதியில் மறவர்கள் தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய மாகாணங்களில் வசித்து வந்தார்கள். பற்பல காலங்களில் சில இடங்களில் பரவியும், சில இடங்களில் குறைந்தும் வாழ்ந்து வந்திருக்கிருர்கள். சரிவரச் சொல்லுமிடத்து அவர்களின் தலைமை நகரமென்னும் இராமநாதபுரமாகிய ராஜதானிக்கு வடக்கே சிறிது தூரத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரிவரையும் குடியிருந்து வருகின்ருர்கள். அவர்கள் மிகவும் பழமையான குடியிற் பிறந்து வளர்ந்த ஒப்பற்ற ஜாதியாராவர். வடக்கே இருந்த இந்துக்கள் தென் தீபகற்பத்தில் குடியேறுதற்கு முன்னும் அந்நாட்டிலேயே வசித்துவந்த ஒரு வலிமிகுந்த ஜாதியாரின் பாரம்பரையைச் சார்ந்தவர் என்று நினைப்பதற்குத்தக்க ஏதுக்கள் காணப்படுகின்றன. ஆனல் அவ்வேதுக்களை ஆராய்ந்து நோக்குங்கால் அவைகள் பிராமணர்களாலேயோ, அல்லது அவர்கள் கொள்கையைப் பின்பற்றியவர்களாலேயோ எழுதப்பட்

டிருக்கின்றமையால், அவற்றைக்கொண்டு உண்மை தெரிந்து கொள்ளத்தக்க ஆதாரங்களாகத் தோன்ற வில்லை தோன்றாமற் போயினும், அவைகளில் இருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியவை என்னவென்றால்,

தென் தீபகற்பத்தை இந்துஸ்தானில் உள்ள வர்கள் முதன்முதலாகச்சென்று பார்த்தபொழுது, அந் நாடு அநாகரீகமும், அடங்காக் குணமும் நிறைந்த வன வாசிகளும், மலைவாசிகளும், வேடர்களுமாகிய முரட்டுக் கூட்டங்கள் அடர்ந்திருப்பதற்குரிய நிலைக்களமாகக் காணப்பட்டது. சரித்திரத்திலும், புராண இதிகாச முதலிய காப்பியங்களிலுங் கூறப்படுங் கூற்றுக்கள் வெளிப்படையின்றி மறைந்துகிடந்தபோதிலும், இராமன் தென்னாட்டைப் படையெடுத்ததிலிருந்து சரித்திரத்தின் முதல் தொடர்ச்சி ஒருவாறு விளக்கமாகின்றது. இராமா யணத்தின்படி தென் தீபகற்பத்தின் முழுப்பகுதியும் தண்டகாரண்யமெனக் கூறப்பட்டிருககிறது. அவ்வாரண் யத்தில் வசித்துவந்த முரட்டு ஜாதியாரை ராக்ஷதர் களெனவும், அசுரர்களெனவும், வானரங்களெனவும் குறிப் பிடப்பட்டிருக்கின்றன. இந்த புராணங்களை மிகுந்த ஆசையுடன் படித்துத் தெரிந்து கொண்டதிலிருந்தும் அப்புராணங்களில் இந்தப்பெயர்கள் அடிக்கடி உபயோகப் படுத்தப்பட்டிருப்பதிலிருந்தும் கவிரூபத்தில், அசுரர் களாகவும், ராட்சதர்களாகவும் கூறப்பட்டிருப்பவர்களே, வடநாடிருந்து தென்னாட்டிற்குப் படை எடுத்துவந்த ஆரியரை எதிர்த்த தமிழ்நாட்டு மக்கள். அவரே ராட்சதர் களென்றும், அசுரர்களென்றும் அழைக்கப்பட்டார் என்று சொல்லலாம்.

தென்னாட்டின் பூர்வீகக் குடிகளை வால்மீகர் வானரர் என்றது, நடை யுடை பாவனையில் ஆரியரினின்றும் தென்னாட்டார் சிறிதுவேறுபட்டுத் தோன்றிய காரணத்தால் அங்ஙனங்கூறியிருக்கின்றார் என்று நினைபதற்கிடமுண்டு. இவர்கள் வனங்களில் வாசஞ்செய்துவந்தபடியால், (வான—நான், வனத்து மனிதன்) வானரனென வழங்கப்பட்டுப் புதிதாய்வந்த ஆரியர்களால், வானரங்கள் — குரங்குகள் என்றழைக்கப்பட்டார்கள். இப்பொழுதுங் கள்ளர், மறவர் முகவடிவங்கள் ஆரிய வம்மிசத்தாரின் முகவடிவங்களை எவ்வகையானும் ஒவ்வாதிருத்தலை நாம் நிதர்சனமாகக் காணலாம். இராமன், இராவணாதிகளை வென்று திரும்பிய மார்க்கத்தில் முன்னால் தீபகற்பமாயிருந்து இப்போது தீவாக அமைந்திருக்கின்ற இராமேஸ்வரத்தில் இராமனால் பூசிக்கப்பட்ட சிவலிங்கமாகிய விக்ரகத்தையும், கோவிலையும் பாதுகாக்கும் பொருட்டு, நாட்டின் குடிகளில் சிலரைக் காவலர்களாக நியமித்ததாகத் தெரிகின்றது. 'சேதுபதி' என்பதன் பொருள் — தீபகற்பத்தின் கர்த்தா என்பதே. 'மக்கென்ஸி' என்பவர் சேர்த்த கையெழுத்துப் பிரதிகளில் ஒன்றாகிய தெலுங்கு கையெழுத்துபிரதியில்—— சக்கிரவர்த்திகளாலும், வல்லபம் பொருந்திய மன்னர்களாலும், இராமநாதபுரத்துப் பகுதியிலுள்ள குடிகளில் எழுபேர் கடற்கரைக் காவலர்களாக நியமிக்கப்பட்டிருந்தாரெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'இராமேஸ்வரம் சென்று இறைவனை வழிபடக் கருதிய யாத்திரை வாசிகள் செல்லுதற்குரிய மார்க்கம் மறவர் சீமையாகிய ராமநாதபுரத்தின் நடுமத்தியிற் சென்றுகொண்டிருப்பதால், அந்தப் பாதைகளில் சூறையாடுந் தொழிலை

புடைய இந்த ஜாதியார் இராமேஸ்வரம் செல்லும் யாத்ரீகர்கட்கு அளவுகடந்த தீங்கிழைத்து வந்தனர். அத்தீங்கு நேராமலிருப்பதற்காக யாத்ரீகர் அதே நாட்டின் தலைவர்களை உதவியாகக் கூட்டிக்கொண்டு பிரயாணஞ் செய்து வந்தார். இது சம்பந்தமாகத்தான் இச்சரித்திரத்தின் தொடர்ச்சியைக் காண்கின்றோம். ஆனால் இத்தொடர்ச்சிகூட கி. பி. 1500 ஆக இருக்கவேண்டுமே அல்லது, அதற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததன்று.

இனி, திருநெல்வேலி கெஜட்டியரில், ஆதியில் தென்னிந்தியாவில் நாகர் என்ற ஒரு குரூர ஜாதியினர் இருந்தனரென்றும், அவர்களில் இம்மறவர் ஒரு பிரிவினரென்றும், 'மக்கென்ஸி' கையெழுத்துப் பிரதிகளிலொன்றாகிய பாண்டிய மண்டல ராஜாக்கள் என்ற பிரதி ஒன்றில் ஆதியில் இராமனால் இராமேஸ்வரம் கோவிலைக் காப்பதற்காகக் குடியேற்றப்பட்ட ஒரு சாதியினரென்றும், பின்னால் குடியேறினவர்கள் இவர்களை அடக்கியாள நேர்ந்தமையால், நெடுங்காலம் பாண்டிய ராஜாக்களின் குடிகளாக வாழ்ந்து வந்தனர் என்றும், வரவர இவர்கள் ஏராளமாய்ப் பெருகித்தங்களை யாண்டுவந்த அரசர்கட்கு நேர்விரோதமாகக் கிளம்பித் தங்களினத்தைச் சேர்ந்த சேதுபதிகள், அல்லது, ஜலசந்திகளின் கர்த்தாக்கள் என்று அழைக்கப்பட்ட அரசர்களின்கீழ் ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டு பதினொரு தலைமுறைகளாக மதுரையுள்ளடங்கிய நாட்டின் சுவாதீன அரசராய் இருந்து ஆண்டுவந்தனரென்றும், பாண்டிய மன்னர்கள் அவர்கட்குக் கப்பஞ் செலுத்திவரும்படியாயும், தங்களுடைய அரசர் மூவரின் ஆளுகைக்

காலம்வரை பாண்டிய மன்னர் அரசுமுழுதாய் இவர்களின் ஆளுகைக்குள் அடங்கியிருந்ததாயும், பின்னால் காவிரி நதிக்குத் தெற்கே அழகாபுரிக் குறும்பர் என்னும் ஜாதியாரின் அரசரால் துரத்தப்பட்டு அதினின்று நீங்கின தாயும், கடைசியாக விசையநகராயர்களால் இவர்களது நாடுகளாகிய தஞ்சை, மதுரை, முதலிய ஜில்லாக்களும் கைப்பற்றப்பட்டனவென்றும்சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆதாரமாகச் சோழதேசப் பூர்வீக சரித்திரத்தில் கண்ட 'மக்கென்ஸி' கையெழுத்துப் பிரதியைக்காண்க. (மெக்கென்ஸியின் கையெழுத்துப் பிரதியிற்கண்ட முழு வடிவம்) காலகண்ட சோழன் வல்லத்திலிருக்கிற சிவாலயங்களைக் கட்டினான். இந்தக்காலகண்டசோழனைத்தொட்டு வல்லத்து தலபுராணத்திலே விஸ்தாரமாய் சொல்லியிருக்கிறது. ஆனால், வல்லத்துக்கோட்டையை வடுக நாய்க்கமார்கள் கட்டினார்கள். எப்படி என்றால், மறவர் பாண்டியன் வங்கிஷத்து வெள்ளாளரைக் குத்திப்போட்டு அவர் 14 பட்டம் அறுநூற்றெட்டு வருஷம் ஆண்ட பிறகு, வடுக நாய்க்கமார் மறவரைத் துரத்திப் போட்டு மதுரை, திருச்சிராபள்ளி, தஞ்சாவூரெல்லாம், ஒருமட்டாய் ஆண்டு வருகிறபோது தஞ்சாவூர் நாயக்கமார்கள் தாமே தஞ்சாவூர்க் கோட்டையையும் வல்லத்துக்கோட்டையையும் கட்டினார்கள். அக்காலத்திலே மறவர்க்கு வல்லமையில்லாததினால் முன்னைப் பாண்டியனுக்கு அடங்கிய குடியாயிருந்தால்போலே வடுகநாயக்கமார்க்கும் அடங்கிஇருந்து ஊழியஞ்செய்துகொண்டு வல்லம் முதலிய இடங்களிலே குடியிருந்தார்கள். பிற்பாடு வடக்கேயிருந்து 12000 வயிராவிகள் கூடிவந்து திருச்சிராப்பள்ளியிலடைபட்டிருந்த

சடைக்கத்தேவன் என்கிற சேதுபதியை விடுதலையாக்கிச் சிரங்கத்திலே பட்டங்கட்டி இராமநாதபுரத்திலேகொண்டு போய்வைத்த பிறகு தஞ்சாவூர் ராஜ்யத்தில் குடியேறியிருந்த மறவரும் தெற்கேபோய் ராமநாதபுரச் சீர்மை, மதுரைச் சீர்மையிலுள்ளவரும் தங்களினத்தோடு கூடப்போய்ச் சேர்ந்து குடியிருக்கிறார்கள். ஆனபடியினாலே இக்காலத்திலே தஞ்சாவூர்ச் சீர்மையெங்கும், கள்ளர், பள்ளிகள், படையாச்சிகள், உடையார் கூட்டங்களே மிகுத்திருக்குதே யல்லாமல் மறவர்களை அத்தனை காணோம்,

'மிஸ்டர் வின்சென்ட்ஸ்மித்' தாம் எழுதிய இந்துதேச சரிதையில் சேர சோழ பாண்டியர் அரசாட்சி இருந்து வருங்காலத்திலும், சற்றேறந்தாழ 120 தலைவர்கட்கு மேற்பட்ட தொகையினர் தேசத்தின் சில பகுதிகளைத் தங்களின் சுவாதீன அரசாங்கவுரிமையுடன் ஆண்டதாயும் அவர்கட்குள்ளே நிகழுஞ் சண்டைகளில் பூர்வீகக் குடியான மறவர் முதலிய ஜாதியாரின் ஆதரிப்பைக்கொண்டு கடும்போர் புரிந்ததாயும், அம்மறவர் பாரசீக வம்மிசத்தைச் சேர்ந்த பல்லவ ஜாதியாரில் ஒரு பிரிவினரெனவும், தைரியம், அடங்காமை, சூரத்தன்மை,சூறையாடுதல் போரைவிரும்பும் பழக்கங்கள் முதலிய குணங்களில் பல்லவர் எப்படித் தோற்றப்படுகின்றனரோ; அப்படியே மறவருடைய குணங்குறிகளும் ஒத்திருத்தலால் இவர்களும் அப்பல்லவ ஜாதியாரின் பிரிவினரென்றே சொல்லலாமெனவும் கூறுகின்றார்.

மகாவன்சோ என்னும் சிங்களச் சரிதையில், எழு தலைவர்கள் (தமிழர்கள்) இலங்கைமேல் மூன்று முறை

படை எடுத்தனரென்றும், அவர்கள் சேர சோழ பாண்டியர் அல்லரென்றும், இலங்கைக்கு எதிர்க்கரையாகிய இந்தியாவிலுள்ள கடற்கரையில் வசித்தவர்களாலேயே இப்படை எடுப்பு நிகழ்ந்திருக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இலங்கைக்கு எதிர்க்கரை இராமநாதபுரஞ்சீமையே அல்லாமல் வேறில்லை. இக்கரையிலுள்ள ஜாதியார் மறவரே;ஆதலின் இவர்கள்தான் இலங்கைமேல் மூன்றுமுறை படையெடுத்திருத்தல்வேண்டும். கி.பி. 11 அன்றேல்,12-ம் நூற்றாண்டில்சேதுபதியாளுகை உண்டாயிருத்தல்வேண்டுமெனத் தெரிகின்றது. தென்னிந்திய வர்த்தமானங்களிலிருந்து கி.பி.1059-ம்வருஷத்தில் சோழ மன்னனாகிய இராஜராஜ சோழன் என்பவன் இலங்கையைப் படையெடுத்தபொழுது, முன்னர்ப் பாண்டியருடைய ஆளுகையை அடக்குவதற்காகத் தனக்கு உதவியாயிருந்தவர்களையும், நம்பிக்கை வாய்ந்தவர்களையும் பார்த்துப் பொறுக்கி எடுத்துத் தனது நாட்டைக் காக்கும்படி இங்கே வைத்துவிட்டு அவன் இலங்கைச் செல்லுகையை மேற்கொண்டுவெற்றிபெற்றுத்திரும்பினனெத்தெரியவருகின்றது. அதுகாலை சோழனுக்கு உதவியாக இருந்தவரும் இம்மறவரே. சோழனுக்குரிய செம்பியன் என்ற பரியாயப் பெயரையே இம்மறவர்க்கும், இவர் வசித்த நாட்டிற்கும் சூட்டப்பட்டதென்றும் தெளிவாகக் கூறப்பட்டிருத்தலால், இச்செம்பிய நாட்டுத் தலைவரே சேதுபதியாவர். சிங்களவர் சரிதை யென்ற மகாவன்சோ வர்த்தமானத்தில் இலங்கையரசனை பராக்ரமபாகுவின் தளகர்த்தர் லங்காபுரர் என்பவர் பாண்டிய ராஜ்யத்தைப் பிடித்து இராமேஸ்வரத்தில் கோவில் ஒன்று அமைத்து

இந்தச் சேதுபதியின் வம்சத்தை ஸ்தாபித்தாரெனவும் சொல்லப்படுகிறது. இவர்கள் வீரர்களாயிருந்தமையால் அக்காலத்தில் தென்னாட்டு அரசர்களான சேர சோழ பாண்டியர்களிடத்தில் படைவீரராயும், படைத்தலைவரா யும் விளங்கினர். அங்ஙனம் படைத் தலைவர் முதலாய மெய்காப்பாளர்களாக அவரிடத்துத் தொன்றுதொட்டு இருந்துவந்த காரணங்கொண்டு இம்மறவரை, சேரன் மறவர், சோழன் மறவர், பாண்டியன் மறவர் எனவும் சொல்வதுண்டு. திருமங்கை மன்னன் என்னும் மறவர் குல அரசனும்,ஆதியில் சோழநாட்டு மன்னர் பெருந்தகை யின் ஆருயிர்த் தோழனாகவே சிலகாலம் வசித்துப் பின் னர் ஆழ்வார் பன்னிருவருள் ஓர் ஆழ்வாராக வைணவ சமயத்தில் ஈடுபட்டு, பரகாலன், கலிகன்றி என்னும் புனை பெயர்களோடு திகழ்ந்து அநேக தமிழ் பிரபந்தம் செய்து திருமாலின் பணிவிடைகட்கு முதன்மை வாய்ந்த உரிமையாளராயினரென்பதை மறவர் குலமாணிக்கமென் னுந் தலைப்பின்கீழ் விளக்கமாகக் கூறியிருக்கின்றோம்.

'இபன்பாதுதா', என்பவர் டில்லி சக்கரவர்த்தியின் மகமதிய வேலைக்காரர். இவர் தமது சக்கரவர்த்தியின் பிர தான அலுவல் ஒன்றை முன்னிட்டு, சைனாக்கப்பலில் கொல்லத்துக்குப் போகும் மார்க்கத்தில் 1348, 1349-ல், மலையாளத்தைச்சுற்றிப் பார்த்தாராம், அது சமயம் மலை யாள தேசம், பாண்டி தேசம், சோழதேசம், ஆகிய இம் மூன்றும் மகமதிய அரசர்களாலாளப்பட்டு வந்தனவாம். அதன் பிறகு டில்லிச் சக்ரவர்த்தியால் நியமிக்கப்பட்ட காபூர் 1311 ஆம் வருஷத்தில் படை எடுத்ததிலிருந்து 20

அல்லது, 30-வருஷங்களாக ஆளப்பட்டு வந்தனவாம். பின்னால், கவர்னர் ஜெலால் உட்டீன் என்பவரால் கலகம் ஏற்பட்டுச் சிலகாலம் அவருடைய சுவாதீனத்திற்குள்ளே யிருந்தனவாம். நாளடைவில் முகம்மதிய அரசாட்சி இளைத்து விட்டதினால் உள் நாட்டுக் கலகங்களும் அள வுக்கு மிஞ்சி அடிக்கடி நடந்துகொண்டிருந்தனவாம். இந்த நிலையிலே இருக்கையில் அநேகமாய் சுல்தானுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து கொண்டுவந்தவர்கள் இராமநாதபுரம் சீமையிலுள்ள மறவர்களென்றும், மே லும், சுல்தானிருந்த பிரதான இடம்இராமநாதபுரமாகத் தான் இருக்கவேண்டுமென்றும், இராமநாதபுரம் சீமையி லுள்ள மறவர்கள் எப்பொழுதும் யுத்தஞ்செய்வதில் பெரும் ஆர்வமும், ஊக்கமும் கொண்டு மகம்மதிய அரச ரின் கீழ் அடங்கி நடப்பதில் வெறுப்புடையவராக வாழ்ந்து வந்தனரென்றும் கண்டறிந்த இபன்பாதுதாவே கொடுத்த விவரங்களிலிருந்து கிடைத்த நிகழ்ச்சியோடு தமது அபிப்பிராயத்தையுஞ் சேர்த்து பிஷப் கால்டுவெல் எழுதுகின்றார்.

சேதுபதிகள் கி. பி. 1414, 1489, 1500, 1540 ஆகிய இவ்வருஷங்களில் பெருங்கொடைகள் வழங்கிவந் தார்களெனத்தெரிகின்றது. சொந்தத்தில் நாணயங்களும் போட்டு வந்திருக்கின்றார்கள். அவைகள் இரண்டு பிரிவு களாகக் காணப்படுகின்றன. முதல் பிரிவு அநேகமாக இலங்காபுரத்தார் காலத்தில் அடிக்கப்பட்டதாகவும் 'ரைஷ் டேவிட்ஸ்' என்பவர் எழுதிய சாஸனத்தின் வாயிலாய்த் தெரிகின்றது. இனி, கிபி. 1414, 1415-ல் உடையான்

சேதுபதி என்பவர் இருந்தாரென்றும் அவராலேயே இராமேஸ்வரம் உட் கோவிலில் தெய்வ பீடங்கள் அமைக்கப்பட்டன வென்றும்' இராமேஸ்வரத்துக் கோவிலுக்குத் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து நான்கு கிராமங்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன வென்றும் டாக்டர் பர்கஸ் என்பவர் தெளிவு படுத்திக் கூறுகின்றார், சின்ன உடையான் சேதுபதி என்பவர் கி. பி. 1489, 1490 ல் இருந்ததாகவும், அவர் இராமேஸ்வரம் கோவிலுக்குச்சேர் மானஞ் செய்ததாகவும் தெரிகின்றது. 1500, 1501 ஆம் வருஷத்தில் திருமலை சேதுபதியால் 2-ஆம் பிரகாரத்தின் ஓர் பாகம் கட்டப்பட்டதென்றும், அவர்க்கு ரகுநாத திருமலை என்னும் குமாரன் ஒருவர் கி. பி. 1539, 1540 ல் உயிருடன் இருந்தார் எனவும் புலனாகின்றது.

இத்துடன் மதுரையை யாண்ட பாண்டிய மன்னரின் அரசாட்சி முடிவுறுகின்றது.

அத்தியாயம் 5.

தென்னாட்டுப் பாளையக்காரர்களின் ஆரம்பம்.

மதுரையில் பாண்டிய வம்சத்தின் அரசாட்சி முடிவான பின் விஸ்வநாத நாயக்கர் என்பவர் விஜயநகரத்து ராயரால் மதுரையின் கவர்னராகத் தேர்ந்து எடுக்கப்

பட்டார். இவர் காலந் தொடங்கி மதுரைக் கர்த்தாக்களின் அரசாட்சி ஆரம்பமாகின்றது. இவர் காலத்தில் நாட்டை யடக்கி ஒழுங்குக்குக்கொண்டுவந்தார். பாளையக்காரர்கள் 72 பேர்களும் இவர் காலத்திலேயே நியமிக்கப்பட்டிருந் தார் களெனத் தெரிகின்றது. அந்த நியமனத்தில் மறவர் பாளையப்பட்டு (18)-ம் கலந்திருந்தன. இனி, இப் பாளையக் காரரைப்பற்றியே சரித்திரத்தின் மிகுதி யான பாகங்களில் அடிக்கடி கூறப்படுவதால் அவர்கள் யாரென்றும் அவர்களின் ஆரம்பநிலை எத்தன்மையது என்றும் நாம்தெரிந்துகொண்டு மேலே செல்வதுதான் பொருத்தமாகும்.

ஆதிகாலத்தில் தென்பாகங்களிலுள்ள ஜில்லாக்கள் விஸ்வநாத நாயக்கரின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டபோது தாம் ஏற்படுத்திய ராஜ பரம்பரையை நிலைநிறுத்தவேண் டிய காரியத்திலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தார். தமது அரசாட்சி நாலாவகையிலும் சிறந்து விளங்க வேண்டுமென்பது அவருடைய அந்தரங்கப் பூர்வமான அபிப்பிராயம். ஆனால் அது இலேசாய் நடைபெறுவ தாகத் தோன்றவில்லை. தன்னை நம்பித் தன்னுடன்வந்த தன் ஜாதியாரான ஒருகூட்டத்தார் அவரோடிருந்தார்கள். அவர்கள் செய்நன்றி அறிவோடு அவர்கட்கு இட்டவேலை யைக் குறைவின்றி நிறைவேற்றியதுடன் அனைவரும் தமக்குரிய சன்மானத்தை நாயக்கரிடமிருந்து பெறுவதில் மிகுந்த ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். இவர் கட்குக் கொடுக்கவேண்டிய சன்மானங்களை உரிய காலா காலங்களில் கொடாதுபோனால் பெருத்த கலகமும் குழப்

பமும் செய்து நாலாவிதத்தாலும் அரசாட்சிக்குக் கெடுதி விளைவிப்பார்கள். இதுவல்லாமலும், தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வசித்துவந்த தமிழ்ப் பரம்பரைத் தலைவர்கள் இருந்துவந்தார்கள். அவர்களும் ஏராளமான பிரதேசங்களையும் தேகவன்மையையும் உடையவர்களாயிருந்தார்கள். விஸ்வநாத நாயக்கருக்கு இவர்களுடைய ஆதரவு இருக்கவேண்டுவது மிகவும் அவசியமாக இருந்தது. அந்த ஆதரவைத் தமிழ்த் தலைவர்களிடமிருந்து எதிர் பார்ப்பதானல் அது மிகவும் சங்கடமாயிருந்தது. அவர்கள் அரசனில்லா ஆட்சியிலிருந்து தங்களுக்கு வேண்டிய நன்மைகளைத் தங்கள் தங்கள் மனம்போல ஏகபோகமாக அனுபவித்து வந்தவர்களானதினலே நாயக்கரைச் சூழ்ந்து வாழும் கூட்டத்தினராகிய தெலுங்கு தேசவாசிகள் முதலியோரின் செய்கை முதலியன தமிழ்த் தலைவர்கட்குச் சிறிதும் பிடிப்பதில்லை. ஆதலால், அவர்கள் நாயக்கருடைய அரசாட்சிக்குட்பட்டு ஒழுங்காக நடந்துவருதலை எதிர்பார்ப்பதென்றால் அது பெரும்பாலும் கடினமான காரியமாகவே இருந்தது. மேலும் அயல்நாட்டுக்காரர் அதிபதிக்குக் காவலராக நின்று அவர் கொடுக்கும் பரிசுகளையும் உயர்ந்த உத்தியோகங்களையும் அவர்களே அடைவார்களென்ற எண்ணம் அவர்கள் மனத்தில் பொறாமையையும் பகையையும் விளைவித்தது. இன்னும் பாண்டியர் கூட்டத்தில் சிலர் வறுமைப்பட்டுக் கலக்கமுற்றிருந்தனர். இவர்கட்கோ நாட்டில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டுக்கொண்டிருந்தால்தான் தாங்கள் கருதிய பயனையடையலாம்; சமாதானமான நிலையிலிருக்குமானல் நன்மை அடைவதற்கு ஏதுவில்லை. ஆதலின் குழப்பம்

உண்டாவதற்குரிய பிரயத்தனம் எத்தனையுண்டோ அத்தனையும் செய்துகொண்டிருப்பார்கள். கடைசியாகத் தெலுங்குதேசத்துப் பலவான்களும் கன்னடதேசத்துப் பலவான்களும் கொஞ்சமும் அமைதியில்லாதவர்களாக இருந்தார்கள். இவர்களின் முன்னோர் உரிமையிலிருந்துவந்த தேசத்தின் வடக்குப் பாகங்களையும் மேற்பாகங்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள். இவர்கள் யாருக்கும் கப்பம் செலுத்திவந்ததாகத் தெரியவில்லை. மேலும் இவர்களுக்குப்பலமான அரசாட்சியைக்கண்டால் கொஞ்சமும் பிடிக்கிறதேயில்லை. ஆகவே, இத்தகைய செய்கைப்பாடமைந்த பிளவுபட்ட கூட்டத்தினர் மனவேற்றுமைகளைக் களைந்து அவர்களை ஒற்றுமைப் படுத்தி அன்பும் சமாதானமும் உடையவர்களாக இருந்து வாழும்படி செய்யவேண்டுவது விஸ்வநாத நாயக்கரின் முதன்மையான வேலையாக வந்து சேர்ந்தது. இதற்கு முடிவாக ஒரு வழியைக் கண்டுபிடித்தார். ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த பலமுள்ளவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பணக்காரராக்கி அவர் அவர்களின் தகுதிக்குரிய நன்மதிப்பும் தந்து அவர்களோடல்லாமல், அவர்களின் சந்ததிகளுடைய உறவையும் தமக்கும் தமது சந்ததிகட்கும் தொடர்பு படுத்திக்கொள்ளவேண்டியதென்பதே நாயக்கரின் முக்கியமான நோக்கம். இந்த நினைப்பு அந்தச் சந்தர்ப்பத்துக்கு நல்லதாகத்தோன்றினும் பின்னால் அளவிறந்த இடைஞ்சலை யுண்டாக்கி நாயக்கரின் அரச பரம்பரையை அடியோடுவேரை அறுப்பதற்குரிய காரணமாயிருந்தது. மதுரைக் கோட்டையில் 72 கொத்தளங்களிருந்தன. அவையவ்வொவ்வொ ஒவ்வொவான

றுக்கும் ஒவ்வொரு தலைவர் நியமிக்கப்பட்டார் அத்தலைவர் தலைமுறைதத்துவமாக எந்த நேரத்திலும் அந்தக் கொத்தளங்களைக் காக்கவேண்டியதே, அவர் பொறுப்பு. வருஷாந்திர வரியாக அதிபதி ஏற்படுத்திய கப்பத்தையும் அட்டியின்றிக் கட்டிவரவேண்டும், இவையல்லாமலும் தலைவர்கள் அதிபதிக்குத் துணைப்படையாக அனுப்புவதற்காக ஓர்படையையும்தயாராகவைத்திருந்து அவருக்கு வேண்டும்போது உதவிபுரிந்து வருதல் வேண்டும்; தேசத்தில் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட பாகத்தில் அதிபதிக்காகச் சமாதானத்தை நிலைநிறுத்தி வரவும் வேண்டும்; இத்தகைய அலுவல்களைச் செய்வதாக ஒப்புக்கொண்ட பிறகு தான் குறிப்பிட்ட சில கிராமங்கள் சேர்ந்த நிலத்தை இனுமாக அத் தலைவர் பெற்றுக் கொண்டார். பெற்றுக்கொண்ட நிலங்கள் அவரவர்களின் தகுதிக்குத் தக்கபடியாகவும், விஸ்வநாத நாயக்கர் அரிய நாயக முதலியார் ஆகிய இருவரின் மனத்தாராளப்போக்கின்படியும் பிரித்துக்கொடுக்கப் பட்டிருந்தன. பாளையக்காரர் என்ற பட்டமும் ஒவ்வொருவருக்கும் விலையுயர்ந்த வெகுமதிகளும் அதிகாரங்களும் ஆடம்பரத்துடன் கொடுக்கப்பட்டிருந்தன. பாளையக்காரர்களின் பூர்வீகம் இந்த நிலையிலிருந்தது.

மதுரையிலும் திருநெல்வேலியிலுமுள்ள பாளையக்காரர்கள் அனைவரும் நாயக்கமார்களில் ஒருவரால் தான் நியமிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லமுடியாது. பாளையக்காரர்கள் பற்பல அரசர்களால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அதை முதலில் ஆரம்பித்தவர்

விஸ்வநாத நாயக்கராயிருக்கலா மென்பதும், சேதுபதி பாண்டிய மன்னர்களால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டு மென்பதும் 'பிஷப் கால்டுவலின்' அபிப்பிராயம்.

இனி பாலிகார் என்ற பட்டம் விஜயநகர ராஜாக்களால் பக்கத்துப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட தெலுங்குக் குடியேற்ற நாடுகளிலுள்ள தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று ஜெனரல் வில்க்ஸ் (General Wilkes) சொல்லுகிறார். நாட்டின் பழமையான குடிகளை அடக்கியாள இவ்விதப் பட்டம் அளித்ததாகவும் கூறப்படுகிறது. இதற்குத் தமிழில் பாளையக்காரர் என்று பெயர். அதற்கு நேரானபொருள் ஓர் (Camp) கூட்டத்தையுடையவர்; அல்லது, இரண்டாவது பொருள் ராணுவச் சேவை சம்பந்தமாக நிலத்தின் பாகத்தை (Barony) வைத்திருப்பவர் என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் வழங்கும் பாலிக்காரர் (Polygar) என்பது தமிழில் வழங்கும் பாளையக்காரர் என்பதிலிருந்து பிரிக்கப் பட்டதல்ல. தெலுங்கில் வழங்கும் 'பாலிகாடு' அல்லது, கன்னடத்தில் வழங்கும் பாலிகார என்பதிலிருந்து எடுக்கப்பட்டிருத்தல்வேண்டும். இதே மாதிரி ஆங்கிலத்தில் பாலம் (Pollam) பாளையக்காரர் பூமி என்று உபயோகப் படும் வார்த்தை தமிழில் வழங்கும் பாளையம் என்பதிலிருந்து எடுக்கப்படவில்லை. தெலுங்கு 'பாலமு' (Pollemu) என்பதிலிருந்து எடுக்கப்பட்டது. விஜயநகரம் பாலிக்கார் 33 கிராமங்களுக்கு மேற்பட்ட பகுதிகளைத் தமது அதிகாரத்தில் உபயோகப்படுத்தி வந்தனர். ஆனால் தமிழ்நாட்டில் வசித்த தலைவர்களுக்குமட்டும்

பாளிக்கார் என்பதில்லை. பாளிக்கார் முதன் முதலில் கன்னட தேசத்தில் உடையார் (சொந்தக்காரர்) என்று பெயரிடப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தப் பட்டத்திற்குத் தமிழில் உடையார் என்று சொல்லப் படும். தமிழ்த் தேசத்தில் வசிப்போராகிய ஜமீன்தார் களால் இவ்வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்படுகிற தென்பதை 'ஆதிகால அரசர்பட்டம்' என்ற தலையங்க மிட்ட கல்வெட்டுச் சாஸனமொன்றில் நிதர்சனமாகக் காணலாம். மதுரை அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட பாளிக்காரர்களைக்கொண்டு தேசத்தை ஆள்வதென்றால் அது அத்தனை பொருத்தமாக வந்துசேருமென்பதற் குரிய வழிஇல்லை. ஏனென்றால் பிரிட்டிஷ் அதிகாரத்துக் குள் 1801 ல் உட்படும்வரையிலும் மேல் அதிகாரியிடம் பாளையக்காரர் சண்டைபோடாத சமயங்களில் எல்லாம் இவர்களே தங்களுக்குள் ஏதாவது சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். இத்துடன் போகாமல் இவர்களி டமிருந்து பகுதி அல்லது, நிலவரி வசூலிப்பதென்றாலும் கூடமேல்அதிகாரிகட்குப் பெரும் சிரமமாக இருந்தது. பட்டாளத்தைக்கொண்டு சண்டைபோட்டு நிர்ப்பந்தஞ் செய்து வாங்கினால் அல்லது, நேர்முகமாக வரிவசூல் ஆவதில்லை. மேலும் வசூல் செய்யும் காலங்களில் அதனால் மிகுந்த பொருட் செலவும் அரசர்க்குக் கௌரவக் குறை வும் இடைவிடாது நேர்ந்துகொண்டிருந்தன.

மிஸ்டர்ஸ்டுவர்ட் என்பவர் தம்முடைய திருநெல் வேலி மானுவலில் (Manual) மதுரை அரசர்களால் ஏற் படுத்தப்பட்ட பாளையக்காரரின் சரித்திரத்தைச் சொல்

வியபிறகு அந்த ஏற்பாட்டின் கெடுதிகளைப் பற்றிக் கீழ் வருமாறு கூறுகின்றார். இந்தக் குற்றம் ஐரோப்பா தேசத்தில் மத்திய நூற்றாண்டுகளில் (Middle ages)உள்ள பிரபுக்கள் (Feudal Barons) நிலைக்கட்டும் இதேமாதிரி பொருந்தும். அவர்கள் காலத்தில் அவர்கட்கு மிகவும் அனுகூலமாயிருந்தது. அயல்நாட்டுப் பகைவரிடமிருந்து பாதுகாப்பும் உள் நாட்டு ஆமைதியும் ஒருவாறு அடையப்பெற்றன.(அடிக்கடி ஒழுங்கில்லா அரசாட்சியும் துன்புறுத்தலும் இருந்தபோதிலும்) பாளையக்காரரைப்பற்றி ஒருவராயினும் நல்லபிப்பிராயமான வார்த்தை சொல்ல மாட்டார் என்பதைக் காட்டவே மிஸ்டர் ஸ்டூவர்ட் என்பவரின் அபிப்பிராயத்தை இங்கே குறிப்பிடவேண்டியதாயிற்று. அவரவர்களின் கெட்ட செய்கையைப்பற்றிக் கூறாமல் ஓர் சரித்திர நிகழ்ச்சியை இதற்கு ஒப்பிட்டு விளக்குகிறார். எனது அபிப்பிராயம் என்னவென்றால் பாளையக்காரர்களின் கெட்ட செய்கைகள் ஐரோப்பாவில் மத்திய நூற்றாண்டுகளில் உள்ள பிரபுக்களை விட ஒழுங்காகவும் மும்முரமாகவும் இருந்து வந்தன என்பதே. ஐரோப்பாவிலாவது தென்னிந்தியாவிலாவது அன்னியன் என்று (Foreigner) மிகவும் ஜாக்கிரதையாகக் காக்கும்படி செய்தவர்கள் அயல் நாட்டாராயிருந்தாலும் தேசத்தின் நியாயமான அரசர்கள் தான். ஸ்காட்லந்து (Scottish Highlands) ஹைலண்டஸ் Rhine) ரைன் இந்நாடுகளிலுள்ள பரிசிக்காரர்கள் திருநெல்வேலிப் பாளையக்காரர்போல சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு அடங்கும் வரையும் உள்நாட்டு அமைதியும் செழிப்பும் கொஞ்சமாயினும் ஏற்படவே இல்லை.

அத்தியாயம் 6.

நாயக்கமார் அரசாட்சி.

மறவர் சீமையை ஒழுங்குபடுத்தல்.

விசுவநாதநாயக்கர்காலத்திற்குப்பின் முத்துக்கிருஷ்ணநாயக்கர் காலம்வரை மறவரைப்பற்றிய நிகழ்ச்சிகள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. முத்துக்கிருஷ்ணப்பநாயக்கர் காலத்திலிருந்துதான் மறவரின் சரித்திரம் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது. முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் அரசாட்சியில் நடந்த விசேட சம்பவம் ஏதுவென்றால், சேதுபதிகளின் கீழ் மறவர் சீமையை ஒழுங்குக்குக் கொண்டுவந்ததுதான். பாண்டியர்கள் மதுரையை ஆண்டபொழுது சேதுபதிகள் அப்பாண்டியரின்கீழ் சிற்றரசர்களாயிருந்திருக்கவேண்டும். ஆனால் மிஸ்டர் நெல்சன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் 'இராமநாதபுரம்சீமை' மதுரைக் கவர்னர்களால் நியமனஞ் செய்யப்பட்ட கமிஷனர்களின் ஆளுகையிலிருந்த தென்றுகூறுவார். இனி, அது குறித்து மிஸ்டர் ரெங்காச்சாரியாரின் அபிப்பிராயம் என்னவென்றால், கமிஷனர்களைவைத்து ஆண்ட முறை மதுரைக் கர்த்தாக்களின் வம்சத்தை ஸ்தாபித்தவரான விசுவநாத நாயக்கர் முதல் முதலில் கையாண்டுவந்த முறையாக இருக்கவேண்டுமெனவும் அது 1600-ம் வருஷம்வரை சரியாய் நடந்துவந்ததெனவும் கூறுகின்றார். இந்தக்கால வரையறைக்குப்

பிறகுதான் இராமநாதபுரம் சீமைசீர்குலைந்து' குழப்பம் நிறைந்திருந்ததாம். புகழமைந்த வீரர்களாகிய விஸ்வநாத நாயக்கர், ஆரியநாத முதலியார் இருவரும் 'மறவர் சீமையைக்' கவனியாமலிருந்ததாகவும் தெரியவில்லை யென்று சொல்கின்றார். கடைசியாகக் கமிஷனரைவைத்து ஆண்டமுறை சித்திபெறவில்லை யென்று மிஸ்டர் நெல்சனே மீண்டும் கூறியிருத்தலால், 'மறவர் சீமையை ஒழுங்கு செய்து சேதுபதிகளை நியமித்தவர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர்தான் என்பது வெளிப்படை. ஆதியில் நாயக்கமார்கள் கரையை அடுத்த பூமியை அயல் நாட்டாருக்கு யாதொரு தடையில்லாமல் வந்து வியாபாரஞ்செய்துபோகும்படியான சுதந்தரத்தைக் கொடுத்துவிட்டார்கள். பின்னால் தங்கள் நாட்டில் அன்னியர்க்குச்சுதந்திரம் ஏற்படுவதால் அநேககாரியங்கட்குக் கெடுதி என்பதை யுணர்ந்து நாள்வழியாகத் தடுக்கமுயன்றார்கள். இதற்கிடையில் போர்த்துக்கேசிய ராஜனுடைய குடிகள் சிலர் வந்து சிவில், கிரிமினல் விசாரிப்பு முதலிய அதிகாரத் தோரணைகளைக் கடல் பிரதேசங்களில் எங்குங் கையாண்டு வரிகள், சுங்கங்கள் முத்துச் சலாபத்தில் வருகின்ற பெருவாரியான வருமானங்கள் யாவும் எடுத்துக்கொண்டார்கள். ஆகவே வியாபாரத்திற்காகவும், மதம்பரவுதற்காகவும் வந்துபோம்படியான சுதந்திரத்தை அன்னியர்க்கு வழங்கிய காரணமாகப் பொருள் நஷ்டமும் கெடுதியும் சேர்ந்துகொண்டிருந்தன. ஆனதினால் அவரை எதிர்ப்பதின்பொருட்டு முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் மறவர் சீமையில் ஒருபலமான இராஜாங்கத்தை ஸ்தாபித்துச் சேதுபதிகட்கு அந்த அதிகாரத்தையும்

வழங்கினர். மறவர் சீமை எங்கும் அளவுகடந்த சந்தடியும், குழப்பமும் நேர்ந்து கொண்டிருந்தன. தக்கபாது காப்புக் கிடையாது. ஆனதினால், இராமேஸ்வரம் செல்கின்ற கோடிக்கணக்கான யாத்திரீகர்கட்குப் பாதைகளில் அபாயம் நேரிடுவதாயிருந்தது. இங்ஙனம் நிகழ்ந்த சம்பவத்தை மெக்கன்ஸி கையெழுத்துப் பிரதிகளில் 1605-ம் வருஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனால் மேலேசொன்னவருஷம் சரியாயிருக்கலாமென்று நாம் நம்பிக்கைவைப்பதற்கு இடமிருக்கிறது.

இனி மக்கன்ஸி கையெழுத்துப் பிரதிகளில்கண்டவற்றின் சுருக்கம் வருமாறு, ஆதியில் உடையான் சேதுபதிக்குச் சீமையும் துரைத்தனமும் உண்டுபண்ணிக் கொடுத்த விபரமாவது: இராமநாதபுரம் சீமைமுழுதும் தன்னரசு நாடாகி ஊர்கள்தோறும் கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. அரண்மனைக்குக் கொடுக்கவேண்டிய மேல்வாரமுதலிய வெகுமதியுங் கொடுபடாமல் எங்கே பார்த்தாலும் காடுகள் வளர்த்துக்கொண்டு சீமை முழுதும் கொள்ளையும், இராமேஸ்வரத்துக்குப் போகும் பிரயாணிகட்குப் பெருத்த இடைஞ்சலும் இருந்துகொண்டிருந்தன. அப்பொழுது மதுரைக் கர்த்தராகிய முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கருடைய குருக்களொருவர் ராமேஸ்வரத்துக்குப்போனர். அதுசமயம் போகலூரிலிருந்து உடையான் சேதுபதி குருக்களுக்குத் துணையாக ராமேஸ்வரம் வரைக்கும் போய் மீண்டும் அவர்கூடவே இடைவழிகளில் சச்சரவின்றிப் பாது காவலராக வந்தார். அப்போது குருக்கள் சேதுபதியுடன் இன்னலின்றி மதுரை

வந்து மிகவும் சந்தோஷத்துடன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரிடத்தில் சேதுபதியைக் குறித்துப் பெரிதும் பாராட்டி எடுத்துச் சொல்லி நாயக்கருடைய பேட்டி கிடைக்கும்படி செய்வித்து, சேதுமார்க்கத்திற்கு இவர் தீரம் வாய்ந்தவர் என்பதாகத் தமது நல்லபிப்பிராயத்தைத் தெரிவித்துச் சேதுபதிக்குத் தக்க சன்மானங்களும் வாங்கிக் கொடுத்து அவரை யனுப்பிவைத்ததன் பிறகு உடையான் சேதுபதி போகலூரில் வந்து சிறிது கையாட்களோடு கோட்டைபோட்டுத் தன்னரசு நாடாயிருந்த எல்லாப் பகுதிகளையும் தமக்குள்ளே உரிமைப்படுத்தி அந்தப் பகுதிகளில் வசூலாகும் தொகை முழுவதையும் அப்போதைக்கப்போது முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரிடம் கொண்டுவந்து சேர்த்தார். அதிலிருந்து நாயக்கர் மிகவும் சந்தோஷமடைந்து சேதுபதியைப்பார்த்து இன்னும் எத்தனை யாட்கள் உதவிக்கு வேண்டியிருக்குமோ அத்தனை யாட்கள் வைத்துக் கொள்ளலாமெனவும், நமது அரண்மனைக்குச் செலுத்தவேண்டிய பணங்களைச் செலுத்தாத சீமையெல்லாம் நீரேயடக்கி ஆளும்சுதந்திர முடையவராவீர்! என்று மனமகிழ்ச்சியுடன் கட்டளைப் பட்டையமுங் கொடுத்து அனுப்பிவைத்தார். அதன்படியே வந்து உதவிக்குவேண்டிய ஆட்களை வைத்துக்கொண்டு சீமை யெல்லாங் கட்டிச் சுவாதீனப்படுத்திக்கொண்டு கையாண்டு வருகையில் அதிலுள்ள பணங்களை யெல்லாம் ஒழுங்காக வசூலித்துத் தமது கையாட்கள் முதலியோரின் சிப்பந்திச் செலவுகட்குரிய தொகை போக மீதித் தொகையை நாயக்கருக்குக் கொடுத்தனுப்பிவந்தார். அப்போது நாயக்கர் மிகவுஞ் சந்தோஷப்பட்டுச் சேதுபதியை

வரவழைத்து 'உடையான்' சேதுபதி என்ற பெயருங் கொடுத்து யானை, குதிரை முதலிய படைகளும், வஸ்திரா பரணங்களும் வழங்கிச் சிறிது விருதுகளுங்கொடுத்து அந்தச் சீமையை அவருக்குப் பட்டாபிஷேகமுஞ் சூட்டி அனுப்பிவைத்தார். அதன் பிறகு இராமநாதபுரத்திலேயே உடையான் சேதுபதி சிறந்த கோட்டைபோட்டு இராஜ்ய பரிபாலனத் தலைவராக இருந்து வந்தார். ஆகவே முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் சடைக்கத்தேவர் என்ற உடையான் சேதுபதியைக் கொண்டு மறவர் சீமையை உயர்ந்த முறையில் சீர்திருத்தத்திற்குக் கொண்டுவருவதற்கு வழியுண்டா என்பதை நன்றாய்ப் பரிசோதனை செய்து பார்த்துத் தெளிந்ததன் பிறகே இத்திட்டத்தை முடிவுபண்ணி வைத்தார் எனத்தெரிகின்றது. இராமநாதபுரம், போகலூர் முதலிய இடங்களை அரண்களாக்கி இராமேஸ்வரம் போகும் பாதையில் யாதொருவிதமான இடையூறுகளும் நடவாதவண்ணம் யாத்ரீகர்கட்காகப் பாதுகாப்பு நியமித்தார். சுற்றியுள்ள நாட்டில் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்த தலைவர்களை அடக்கினர். ஸ்திரமானராஜ்யபாரத்தைக் காளையார்கோவில், பட்டமங்கல முதலிய இடங்களிலும் நியமித்தார். இந்த உடையான் சேதுபதி என்பவர் 1607-ல் 5 கிராமங்களும், 1608-ல் 8 கிராமங்களும் தேவாலயங்கட்கு மானியமாய்க் கொடுத்திருக்கிறரென 1608-ம் வருஷத்திய ஒரு செப்புப்பட்டைய மூலமாகத் தெரிகின்றது. காடுகளை வெட்டி வெளியாக்கி விவசாயத்தை விருத்திசெய்து தேசத்தில் சமாதானத்தை நிலைநாட்டி இவ்விதமாகத் தேசத்தைச் செவ்வியமுறையில் ஆண்டு வந்தனர். இவருடைய அரசாட்சி 1623-ம் வருஷம்

வரையும் இருந்ததாகத் தெரிகிறது. (மக்கன்ஸிகை எழுத்துப் பிரதி) அதன்பிறகு, ருத்ரோத்காரிஹு மாசி மாதம் 21-ந் தெய்தி அதாவது 1624 மார்ச்சு தொடக்கத்தில் அவர் சாசனப்படி கூத்தன் சேதுபதி பட்டத்துக்கு வந்தார். அவர் 1635-ம் வருடம்வரையும் ஆண்டதாகத் தெரிகின்றது. அவர் மகன் 2-ம் சடைக்கத் தேவர் என்ற தளவாய் சேதுபதி பட்டத்துக்குவந்தார். அவர் 2 வருஷம் யாதொரு குழப்பமில்லாமல் ஆண்டுவந்தனர் அங்ஙனம் ஆண்டுவரும்போதே கூத்தன் சேதுபதியின் காமக்கிழத்தியின் மகன் தம்பி என்ற பெத்தண நாயக்கர் என்பவர் மதுரைக்குப்போய் திருமலை நாயக்கரிடத்தில் தமக்குத்தான் வாரிஸ்முறையில் சேதுபதிப்பட்டம் கிடைக்கவேண்டியது என்று சொன்னதால் அதில் நம்பிக்கைவைத்து நாயக்கர் அவரிடம் அரசளிப்பதாக வாக்குரிமை கொடுத்து உதவிக்குச் சேனைகளும் அனுப்பினர். தளவாய் சேதுபதி போர்புரிந்தாவது தமது அரசுரிமையைக் காப்பாற்றுவதற்கு நினைத்திருந்தார். அவருடைய கையாட்களும் அதற்கு ஆக வேண்டும் ஒத்தாசைகளைச் செய்வதாய் வாக்களித்திருந்தனர். சண்டை நடக்கும்பொழுது நாயக்கர் சேனைக்கு, ராமப்பையன் தளகர்த்தனாகவும், ரெங்கண நாயக்கர் 2-வது தளகர்த்தனாகவும் நியமிக்கப்பட்டார்கள். மதுரையிலிருந்து நாயக்கரால் அனுப்பப்பட்ட சேனை சில இடங்களில் தோல்வி அடைந்தபோதிலும் கடைசியாக மறவர் சீமையைப் பிடித்துவிட்டார்கள். தளவாய் சேதுபதி ராமேஸ்வரத்துக்கு ஓடிப்போனார் ராமேஸ்வரம் வரையும் அவரைத்தொடர்ந்து பிடித்துத் திருச்சிராபள்ளிச்

சிறைச்சாலையில் கைதியாக்கி அடைத்துவைத்தார். நாயக்கருக்குப் போர்த்துக் கேசியர், உதவியாக நின்று சேதுபதியை அடக்கித்தந்தனர். சேதுபதியைப் பிடிக்கும் பொருட்டு உதவிசெய்த போர்த்து கேசியருக்கு நாயக்கர் என்றும் நன்றி அறிதலையுடையவராயிருந்தார். இந்தப் போர் நாயக்கருக்கு அனுகூலமாக முடிந்தபோதிலும் மறவன் சீமையின் சேதுபதி இன்னார் என்பதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவில்லை. சீமையிலுள்ள ஜனங்களுக்குக் காமக்கிழத்தியின் மகனாகிய ஒருவர் மேலான சேதுபதிப் பட்டத்திற்குவர மனம் பிடிக்கவேயில்லை. இதற்கு இடையில் தளவாய் சேதுபதியின் வழித்தோன்றல்களாகிய ரகுநாதத்தேவர், நாராயணத்தேவர் முதலியோர் தம்பி என்றவரை எதிர்த்தார்கள். தேசமெங்கும் அடிக்கடி குழப்பம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. மறுபடியும் நாயக்கருக்குத் தொந்தரவு நேர்ந்துகொண்டிருந்ததால் இதனை ஆதியிலேயே யோஜனையில்லாமல் செய்துவிட்டோம் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, தொன்று தொட்டு மறவர் சீமையை யடக்கியாண்டுவந்த சேதுபதியே இந்த மறவர்களை ஆளத்தகுந்தவர் என்று நன்றாய்த் தெரிந்துகொண்டார். ஆனதினால் 'தம்பியை' ஆற்றல் இல்லாதவரெனக் கருதி விலக்கிவிட்டுத் தளவாய் சேதுபதியையே மறுபடியும் மறவர் சீமைக்கு நியமித்தார். சிறிது காலத்திற்குள் நாட்டிலிருந்த கொந்தளிப்பு அடங்கி அமைதி ஏற்பட்டது. அதன் பிறகு தளவாய் சேதுபதி என்றும் போல நாயக்கருக்கு வேண்டியவராயிருந்து அநேக தர்மஸ்தாபனங்களைச் செய்து நாட்டை ஒழுங்குபடுத்தி ஆண்டு வந்தனர்.

கடைசியாகக் சேதுபதி ஸ்தானத்திற்கு உரிமை பாராட்டி வந்த எல்லாரையுக் திருப்தி செய்யத் திருமலே நாயக்கர் மறவர் சீமையை மூன்றுபாகமாகப் பிரித்து ரெகுநாதத் தேவர் 1. அவர் சகோதரன் தானக்கத் தேவர் 2. தம்பி என்பவர் 3. ஆகிய மூவரையும் ஆளும் படி கட்டளையிட்டார். பின்னல், இவர்களில் 2 ஆவதின ராகிய தானக்கத்தேவரும் தம்பியும் விரைவில் இறந்தனர். முதல்வராகிய ரெகுநாதத் தேவரே மறவர் சீமை முழுதை யும் ஓராங்காணியாய் அரசுசெலுத்தி வந்தனர். வரவரச் சிறிது காலத்துக்கு முன் நடந்த சம்பவங்களால் நேர்ந்த துன்பங்கள் முழுதுமாறி, தேசத்தில் நன்மை விளேவிக்கத் தக்கதும், ஒற்றுமை நிலவத்தக்கதுமான முறையில் எங் கும் அமைதிபரவியது. ரெகுநாத சேதுபதி திருமலே நாயக்கருக்குச் சிறந்த உண்மையாளராயும், விசுவாச முடையவராகவும் விளங்கி அநேக தடவைகளில் மெச் சத்தகுந்த உதவிகளும் செய்துவந்தார். படையெடுத்து வந்த மகம்மதியரைத் துரத்தித் திருநெல்வேலியில் எட் டையாபுரம் பாளேயக்காரர் தலைமையின்கீழ் நடந்த பாளே யக்காரர்கள் கலகத்தையும் அடக்கித் தந்தார். இந்த உதவிக்காக நாயக்கர் அவருக்கு மன்னூர்கோவிலைவிட்டுக் கொடுத்தார். நவராத்திரித் திருநாள் தலைநகரில் நடந்து வருவதுபோல இராமநாதபுரத்திலும் நடக்கும்படி அனு மதி கொடுத்தார். இராமேஸ்வராதிபதி என்ற பட்டமும் வழங்கிச் சேதுபதியாகிய ரெகுநாதத் தேவர்மீது கௌரவ மான எண்ணமும் வைத்திருந்தார். ஒரு சமயத்தில் மைசூரார் மதுரையைப் படையெடுத்தபோது திருமலே நாயக்கர் ரெகுநாத சேதுபதிக்குச் சொல்லியனுப்பியபடி

அவர் அப்பொழுதே பலத்த சேனைகளுடன் சென்று மதுரையை மோசத்தினின்றும் காப்பாற்றினர். ரெகுநாத சேதுபதி 25000 மறவர் சேனையைக்கொண்டுவந்து திருமலை நாயக்கரின் 35000 சேனையோடு கலந்து ஒன்று சேர்ந்து திருமலை நாயக்கரின் தலைமையின்கீழ் தலைமை நகரத்துக்குத் தீங்கு நேராமல் காத்து மைசூராரைப் புறமுதுகிட்டோடும்படி துரத்திவிட்டார். அதனால், அவருக்கு நாயக்கர் 'திருமலை சேதுபதி' என்ற பட்டமும் வழங்கியுள்ளார்.

இனி, க்ரானிகிள்ஸ் கூறுவது கீழ்வருமாறு காண்க. தளவாய் சேதுபதிக்குப் பிள்ளையில்லாததினாலே அவருக்குப் பின்பு அவர் மருமகனை ரெகுநாதத் தேவரைப் பட்டங்கட்டிவைத்து ஆபத்து நேர்ந்த காலங்களில் அந்தரங்கப்பூர்வமான அன்போடுவந்து உதவிசெய்த காரணங்கொண்டு ரெகுநாத சேதுபதிக்கு நாயக்கர் மேற்குறிப்பிட்ட பட்டமும் பதவியும் வழங்கினதல்லாமல், தாம் ஏறுகின்ற சிங்கமுகப் பல்லக்கையும் கொடுத்து வழக்கம்போல் செலுத்திவந்த கடமையை இனிமேல் செலுத்த வேண்டாமென்று தாராளமான உத்திரவும் செய்து இராமநாதபுரத்துக்கு அனுப்பிவைத்தார் என்பது. இச்சண்டையின் முழுவிவரத்தையும் குறித்து 1659-ல் பிரோன்சா சாமியார் திருச்சி நிக்கல் சாமியாருக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாய் அறநந்தத்தில் காண்க.

அத்தியாயம் 7.

நாயக்கமார் அரசாட்சி - மறவர்.

(தொடர்ச்சி)

இதன்பிறகு நாயக்கர் பாரம்பரையில் சொக்கநாத நாயக்கர் என்பவருடைய ஆதிக்கம் வந்து சேர்ந்தது. சொக்கநாத நாயக்கர் சிம்மாசனமேறிய கொஞ்சநாட்களுக்குள்ளே முகம்மதியர் அவருடைய நாட்டைப் படையெடுத்தார்கள். அந்தச் சமயம் மறவர் நாட்டின் அரசராகிய ரெகுநாத சேதுபதியென்ற திருமலை சேதுபதி தமக்கு உதவிக்காக வாராதிருந்தால் கோபங்கொண்டு சொக்கநாத நாயக்கர் சேதுபதியைத் தண்டிக்கும் நோக்கத்தோடு மறவர் நாட்டிலுள்ள கோட்டைகளாகிய திருப்பத்தூர், மானா மதுரை, புதுக்கோட்டை முதலியவிடங்களைப் பிடித்தார். பிறகு மறவர் நாட்டின் வனங்களில் புகுந்து காளையார் கோவில் கோட்டையையும் கைப்பற்றினார். இவ்வளவு கோட்டைகளையும் நாயக்கர் பிடித்துக்கொண்டபோதிலும் சேதுபதி மனந்தளராமல் தமது நாட்டிலுள்ள வனத்துக்குள் சென்று தந்திரமாய்ப் பதுங்கி எதிரியின் தளர்ச்சியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். நாயக்கர் இவ்விதமான எதிரியோடு பலமுறை சண்டைசெய்து சலித்துப் போனபடியாலும், மதுரைக்கு தாம் செல்லவேண்டிய அவசியமிருந்ததாலும் இச்சண்டையை ஒரு முடிவுக்குக்கொண்டுவரத் தம் சேனைத் தளகர்த்தர்களுக்குக் கட்டளை கொடுத்துவிட்டு மதுரை சென்று

விட்டார். நாட்டின் நிலைதெரியாத நாயக்கர் சேனைகளை, நாட்டின் நுட்பங்களை நன்கறிந்த சேதுபதியின் சேனைகள் அநேக இடங்களில் முறியடித்து வெற்றிபெற்றன. ஆகவே நாயக்கர் தாம் முன்பிடித்த கோட்டைகளைமட்டும் வைத்துக்கொண்டு அதன்பிறகு சேதுபதியோடு யுத்தம் செய்வதை நிறுத்திக்கொண்டார். இந்த விவரம் பிரான்சா சாமியார் கங்குபட்டிபால்ஒலிவியா சாமியாருக்கு 1665-ம் வருஷத்தில் எழுதிய கடிதத்திலிருந்து தெரியவருகிறது. திருமலை சேதுபதியின் மரணகாலம் வரை நாயக்கருக்கும் சேதுபதிக்கும் சமாதானம் ஏற்படவில்லை. திருமலை சேதுபதி இறந்தபிறகு அவருடைய மருமகன் ராஜசூர்யத் தேவர் சேதுபதியானார். இவர் சொக்கநாத நாயக்கருக்கு விரோதமாகத் தஞ்சாவூர்ச்செங்கமலதாஸுக்குஉதவிசெய்ததாகவும் நாயக்கரின் தளவாய் வெங்கட கிருஷ்ணப்பையன் இவரைப்பிடித்துச் சிறையிலடைத்து அங்கேகொன்றதாகவும் தெரிகிறது. இவருக்குப்பின் நேர்வாரிசு இல்லாததால் மறவர்களால் ரகுநாதத் தேவர் சேதுபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே கிழவன் சேதுபதி என்பவர். இவர் எந்தக் காரியங்களையும் பிறரை எதிர் பாராமல் செய்யும் துணிபுவாய்ந்தவர்.

இவர்காலத்தில் அநேக முக்கியமான சம்பவங்கள் நடந்தன. இவர் பட்டத்திற்கு வந்தவுடன், இவர் பட்டத்திற்கு வர உதவிசெய்த இரண்டு முக்கியமான தலைவர்களைத் தனக்குப் பிற்காலத்தில் கெடுதி நேரிடும் என்ற காரணத்தால் அவர்களைத் தூக்கிலிடும்படி உத்தரவு செய்தார். அப்பொழுது மதுரை அரசாகிய

சொக்கநாத நாயக்கர் ராஜ்யபாரத்தைத் தன் தம்பி முத்தாலகத்திரி நாயக்கர் வசம் ஒப்புவித்துவிட்டுத் தன் வாழ் நாட்களைப் பாரதம் முதலிய வேதாந்த நூல்கள் படிப்பதில் கழித்து வந்தார். முத்தாலகத்திரி நாயக்கர் தன் வசம் ஒப்புவித்த ராஜ்யபாரத்தைத் தான் அன்புடன் வளர்த்த ரஸ்டம் கான் என்னும் மகமதியரைத் தளகர்த்தராக்கி, அவர் வசம் சேனைகள் சகிதம் ஒப்புவித்தார். ரஸ்டம்கான், நாயக்க அரசர்களை அகற்றித் தானே அரசராக நினைத்துச் சதிசெய்தார். அவர் முத்தாலகத்திரி நாயக்கரை அவர் மனைவி மக்களோடும், மற்ற உடைமைகளோடும் நாட்டைவிட்டுப் போய்விடவேண்டுமென்று சொல்ல, உண்மையறிந்த நாயக்கர் நாகபட்டினம் போய்விட்டார். சொக்கநாத நாயக்கரும் அவர் மனைவி மக்களும் அரண்மனைக்குள்ளேயே கைதிகளாக வைக்கப்பட்டனர். ராஜ்யம் முழுதும் ரஸ்டம் கான் கைவசமாயிற்று.

அப்பொழுது சொக்கநாத நாயக்கர் அந்தரங்கமாகக் கிழவன் சேதுபதிக்குச் செய்தி சொல்லியனுப்ப, கிழவன் சேதுபதி அடங்காக் கோபங்கொண்டு இருபதினாயிரம் சேனைகளோடு சென்று ரஸ்டம் கானோடு கடும் போர்செய்து வெற்றிபெற்று அங்கிருந்த மகமதியர் அனைவரையும் கொன்று ரஸ்டம் கான் தலையைத் துணித்துச் சொக்கநாத நாயக்கரை விடுவித்தார். அளவிலா ஆனந்தம் கொண்ட நாயக்கர் கிழவன் சேதுபதிக்கு அநேக ஆபரணங்களும் வெகுமதியுங் கொடுத்து அவரோடுவந்திருந்த மற்ற சைன்யங்களுக்கும் ஆடைகளும் பணமும் கொடுத்து இராமநாதபுரத்துக்கு அனுப்பி வைத்தார்.

மறவர்கள் தஞ்சாவூர் நாட்டிலும் சிலபாகங்களைப் பிடித்துத் தங்கள் நாட்டோடு சேர்த்துக்கொண்டார்கள். மறவர் ராஜ்யத்தில் எல்லாக் கிராமங்களும் நிலங்களும் செல்வவந்தர்கள்கையிலிருந்தன. சேதுபதிக்குச்சேனைகள் தேவையிருக்கும்போது ஒவ்வொரு செல்வவந்தரும் குறிப்பிட்ட அளவு சேனை தயாரித்துச் சேதுபதிக்கு அனுப்ப வேண்டும். இவர்களின் உதவியைக்கொண்டு சேதுபதி 8-நாட்களுக்குள் சுமார் 30,000 முதல் 40,000 சேனைகள்வரை தயாரிக்கமுடியும். இதைக்கண்டு பயந்த தஞ்சாவூர் அரசரும் மதுரை அரசரும் எப்படியாவது சேதுபதியை அடக்கிவிட வேண்டுமென்று எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாய்ப்போய்விட்டன. சேதுபதி மதுரைக்குச் செலுத்தி வந்த கப்பத்தை நிறுத்திவிட்டுத் தம் நாட்டைச் சுயாதீனமாக்கிக் கொண்டார்.

மறவர் ராஜ்யம் கிழவன் சேதுபதியின் கீழ் ஒரு பெரிய சர்வாதிகாரமுள்ள ராஜ்யமாகத் தனக்குக் கீழ் பல சிற்றரசர்களை உடைத்தாயிருந்தது. இந்தச் சிற்றரசர்களைத் தன்னிஷ்டம் போல் நீக்கவும் நியமிக்கவும் அதிகாரம் சேதுபதிக்கு இருந்தது. (Letter of Father Martin to father de Villete) அப்பொழுது புதுக்கோட்டைத்தலைவரும் தனக்குக்கப்பம்கட்டும் சிற்றரசரும் ஆகிய பல்லவராயத் தோண்டைமான் தஞ்சாவூர் அரசனைத் தலைமையாக ஏற்றுக்கொள்ளப் போவதையறிந்த கிழவன் சேதுபதி அவரை நீக்கி அவருடைய மைத்துனர் ரகுநாதனை அவர் ஸ்தானத்தில் நியமித்தார்.

இவருடைய அரசாங்கத்தின் நிர்வாகவன்மையால் மறவர் நாடு உன்னதச் சிறப்பு வாய்ந்ததாய் விளங்கியது.

௳

சொக்கநாத நாயக்கரை ரஸ்டம்கான் கையினின்றும் விடு வித்ததற்காக பரராஜகேசரி (Lion to Foreign Kings) என்ற பட்டமும் இக்கிழவன் சேதுபதிக்கு அளிக்கப் பட்டது. குமாரப்ப பிள்ளையும் சேதுபதிக்கு மந்திரியாகக் கொடுக்கப்பட்டார். சொக்கநாத நாயக்கருக்குப்பின் பட் டத்திற்குவந்த மூன்றும் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருக் கும் கிழவன் சேதுபதிக்கும் சமாதானம் இல்லாமல் பகை வளர்ந்துகொண்டே வந்தது. மதுரை நாயக்கரின் முன் தளகர்த்தரான வெங்கடகிருஷ்ணப்பாவோடும் தஞ்சாவூர் நாயக்கர்வம்சத்தைச்சேர்ந்த செங்கமலதாஸோடும்சேது பதி சேர்ந்துகொண்டு மதுரையைத் தாக்க ஆரம்பித்தார். தஞ்சாவூர்ச் சேனை தனக்கு உதவி செய்வதற்காக மறவர் சீமையில் புதுக்கோட்டைக்கும் பாம்பாற்றுக்கும் மத்தி யிலுள்ள இரு ஜில்லாக்களை தஞ்சாவூர் அரசன் 12 வருஷம் அனுபோகம் பண்ணிக்கொள்ளக் கிழவன் சேது பதி சம்மதித்தார். ஆனால் இப்படை யெடுப்பு மந்திரி குமாரப் பிள்ளையின் சூழ்ச்சியால் நடைபெறாது போயிற்று. சேதுபதியையும் வெங்கடகிருஷ்ணப்பாவை யும் பிடித்து அவர்களைத் துரோகிகளென்று மதுரை நாயக்கரிடம் ஒப்புவிக்கக் குமாரப்பிள்ளை முயன்றார். சேதுபதி இவரது சூழ்ச்சிகளை நிறைவேறவொட்டாது தடுத்து அவரையும் அவர் குடும்பத்தாரையும் குரூர வதை செய்தார். இந்தச் செய்கையானது மதுரை நாயக் கர் மறவர் சீமையைப் படையெடுக்கும்படிச் செய்தது. தஞ்சாவூர் அரசன் தன் சேனையை அனுப்பிச்சேதுபதிக்கு உதவிசெய்தார். நடந்த யுத்தத்தில் மதுரைச் சேனைகள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டன.

இவர்காலத்தில் கிறிஸ்தவர்கள் அதிக துன்பத்தை அடைந்தனர். பிரிட்டோ சாமியார் தம் உபதேசியார் சகிதம் மங்கலம் என்ற ஊர்ப்பக்கத்தில் குமாரப்பிள்ளையின் ஆட்களால் கைது செய்யப்பட்டார். இவர்கள் குமாரப்பிள்ளையால் இந்து மதத்தைத் தழுவும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு ஒப்புக்கொள்ளாததால் அவர்களைக் கழுவில் ஏற்றப்போகும் சமயத்தில் ராஜத்துரோகம் என்னும் குற்றத்திற்குப் பதில் சொல்லும்படி ராமநாதபுரமிருந்து குமாரப்பிள்ளைக்கு உத்திரவு வந்தது. அதனால் சாமியாரும் அவர் சீடர்களும் இதுசமயம் உயிர்தப்பிச் சில வாரங்கள் கழிந்தபின் இராமநாதபுரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். கடைசியாக இவர்கள் மறவர் நாட்டில் இனிப் பிரவேசித்தாக் கிறிஸ்துவ மதத்தைப் பிரசங்கிக்கக் கூடாதென்றும் அப்படிச்செய்தால் மரணதண்டனை விதிக்கப் படுமென்றும் பயமுறுத்தி அனுப்பப் பட்டார்கள்.

சிறிது காலங்கழித்து மங்கம்மாள் அரசாட்சி வந்து சேர்ந்தது. 1702-ல அவள் அரசாட்சியில் தஞ்சாவூரா ரோடு சேர்ந்துகொண்டு தளவாய் நரசப்பய்யர் என்பவரைப் படைத்தலைவராக நியமித்துத் தஞ்சாவூர்ச் சேனையின் உதவியால் சேதுபதியின் மறவர் நாட்டின் மேல் படை எழுந்து வந்தது. சேதுபதி வலிமையைக்கொண்டு மறவர் நாடு அந்தச்சேனையோடு போர்புரிந்து வெற்றி பெற்றது. தளவாய் நரசப்பய்யர் போரில் தமது உயிர் துறந்தார். மதுரைச் சேனையுமுறிந்து ஓடியது. மறவர் சேனை எண்ணிக்கையிலும், பலத்திலும், சூறையாடுவதிலும் ஒப்பற்று விளங்கியது. சுவாதீன அரசாட்சியில்

பேர்பெற்றதாகத் திகழ்ந்தது. இப்படி யிருக்கும் பொழுது கிறிஸ்துமார்க்கப் பாதிரியாராகிய பிரிட்டோ சாமியார் தமது மதத்தை மறவர் சீமையில் பரவச் செய்வதற்காகக் கடும் பிரயத்தனங்களைச் செய்து வந்தார். அச்சாமியார் எவ்வளவு துன்பம் நேர்ந்தாலும் அத்தனையும் அனுபவித்துக் கொண்டு தமது உயிரைத் தியாகஞ் செய்யும் ஊழியத்தினின்று சிறிதும் பின் வாங்காமல் மறவர் நாட்டில் அநேகரைத் தமது மதத்திற்குத்திருப்பினதுமல்லாமல் இராமநாதபுரம் பட்டத்துக்கு வருவதற்குரிய பக்குவத்திலிருந்த தடியத்தேவர் என்பவரையும் கிறிஸ்துவ மதத்திற்குள் இழுத்துக்கொண்டார். தடியத்தேவர் தமது இரண்டாவது மனைவியையுங்களைந்து விட்டார். தனக்கு நேர்ந்த அளவிறந்த துன்பத்துக்கும், தன் கணவன் தன்னை விலக்கியதற்கும் காரணம் பிரிட்டோ சாமியாரல்லாமல் வேறு யாருமில்லை என்பதையுணர்ந்த தடியத்தேவரின் மனைவி தனக்கு நேர்ந்த கதியைக்குறித்து மிகவும் வருந்தி தனது மாமனார் கிழவன் சேதுபதியிடம்போய் நேர்ந்த துன்பங்களைக்குறித்து முறையிட்டாள்.

கிறிஸ்துவர்களால் மறவர் நாடே பாழாய்ப் போகிறதென்றும், அங்குள்ளவர் அனைவரும் கிறிஸ்துவர்களாக மாறிவிடுவார்களானால் கிறிஸ்துவ மதத்தில் ஈடுபட்டுக்கிடக்கும் தடியத்தேவரைச் சிம்மாசனத்தில் வைக்கவேண்டியதாய் வந்துசேருமென்றும் இவற்றால் தங்கட்குப் பெருத்த கெடுதி நேரிடுமென்றுந் தீர்மானித்துக் கிறிஸ்துவ மத விரோதிகளெல்லோரும் ஒன்று சேர்ந்து

கிழவன் சேதுபதியிடம்போய் பிரிட்டோ சாமியாருக்குத் தகுந்த தண்டனை விதிக்கும்படி வேண்டுதலோடு கேட்டுக்கொண்டார்கள். கிழவன் சேதுபதி தடியத்தேவரைக் கிறிஸ்துவ மார்க்கத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு பல முறையும் சொல்லியும் அவர் அதனை அங்கீகரித்தாரில்லை. ஆயினும், உயர்ந்த அந்தஸ்து வாய்ந்தவராகிய தடியத்தேவரைத் தண்டித்தால் எதிர்பாராத சம்பவங்கள் வந்து சேரக்கூடுமென நினைத்து அவரை ஒன்றுஞ் செய்யாது விடுத்து, இவ்விதமான காரணங்கட்கு அடிப்படையாகத் தோன்றிய பிரிட்டோ சாமியாரையே தண்டிப்பதாகத் தீர்மானித்தார். முதன்மையில் மறவர் நாட்டிலுள்ள கிறிஸ்துவ ஆலயங்கள் முழுவதையும் இடித்து நொறுக்கும்படி உத்தரவு கொடுத்தார். அதன் பிறகு பிரிட்டோ சாமியாரையும் அவருடன் கலந்த கூட்டங்களையும் பிடித்துவருமாறு கட்டளை யளித்தார். 8–1–1693-ல் பிரிட்டோ சாமியார் பிடிபட்டு இராமநாதபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தச்சமயம் தடியத்தேவர் இராமநாதபுரத்திலேயே இருந்தனராதலின் அவருக்கு இருந்துவரும் செல்வாக்குக்காகக் கிழவன் சேதுபதி பயந்து பிரிட்டோ சாமியாரை அந்த இடத்தில்வைத்துக் கொல்லுதற்கு இயலாது போனமையால் தமது நாட்டைவிட்டுத் தம்முடைய சகோதரராகிய ஓரியூர் தேவரிருக்குமிடத்திற்குப் போகுமாறு திட்டம்பண்ணி அந்தரங்கத்தில் சாமியாரைக் கொலை செய்துவிடும்படி தமது சகோதரனுக்கு ஞாபகமுறுத்தினர். ஆகவே இராமநாதபுரத்து எல்லையின் கண்ணுள்ள பாம்பாற்றங்கரையிலிருக்கும் ஓரியூருக்குச் சாமியார் அனுப்பப்பட்டார்.

இனி, 3—2—1693ல் சிறைக்கூடத்திலிருந்து சாமியாரால் எழுதி விடுவிக்கப்பட்ட கடிதத்தின் முக்கிய மான சாராம்சங்கள்கீழ்வருமாறு காண்க: கிழவன் சேது பதிஎன்ற ரகுநாதத்தேவரால் ஏனதுநியாயம் விசாரிக் கப்பட்டு கடைசியாக என்னைக் கொல்லும்படி தீர்ப்புச் செய்யப்பட்டது. மற்றக் கிறிஸ்துவர் கூட்டத்தினின்று பிரித்து ஓரியூர்த் தேவரிடம் அனுப்பப்பட்டேன். என் னைக் கொன்றுவிடும்படி ஓரியூர்த் தேவருக்குக் கிழவன் சேதுபதியால் அந்தரங்கக் கடிதம் ஒன்று உத்திரவு முக மாக அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஜனவரி மாதம் 31ல் இங்கே வந்தேன். எனக்கு விதிக்கப்பட்டுள்ள மரணத்தை விரைவில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான் எடுத்த முயற்சிக்கும், நான்பட்ட கஷ்ட நஷ்டங்க ளுக்கும் அம்மரணமே விலைமதிக்கப்பெறாத பிரதியுபகார மெனக் கருதுகின்றேன். என்பேரில் சாட்டப்பட்ட குற் றங்களுள் முதன்மையில், நான் உண்மையான கடவுளின் சட்டங்களைப் போதித்தேன் என்பது ஒன்று: பின்னால் விக்ரக ஆராதனை செய்வோரைத் தடுத்ததுஒன்று: இந்த இரண்டுமேயாம். காவலர்கள் என்னைக் கவனித்துக் கொண்டிருப்பதால் இதற்குமேல் அதிகமாகஎழுதக்கூடா தெனவிடுக்கின்றேன்" என்பதே.

ஓரியூர்த்தேவரின் பிரதானியாகிய முருகப்பிள்ளை கிறிஸ்து மார்க்கத்திற்குப் பெரும் விரோதியாதலின், அவர் பிரிட்டோ சாமியாரைக்குறித்து இவர் நாம் வழி படும் கடவுளை வணங்கவொட்டாமல் தடுக்கின்றார்; அவ ருடைய போதனை சக்தியால் நமது மதத்திற்கே கேடுண்

டாவதுடன் ஜனங்களுடைய மனோநிலையும் மாறுபடுகின்ற தெனக் குற்றஞ்சுமத்திச் சாமியாரின் தலையைத் துணித்து விடும்படி ராஜாவின்பேரால் முருகப்பிள்ளையே உத்தரவு அளித்தார். அதன்படி சாமியாரும் கொல்லப்பட்டார். ஆனால், பிரிட்டோ சாமியாரின் மரணத்திற்குப் பிறகு கிறிஸ்துவசமயத்தின் உண்மையை அறிந்த மக்களனைவரும் அந்தச் சமயத்தை மிகவும் பாராட்டிவந்தார்கள். மறவர் நாட்டிலுள்ள பலவிடங்களிலும் கிறிஸ்துவ சமயமும் பரவியோங்கி வளர்ந்துவந்தது. கடைசியாகப் பிரிட்டோ சாமியாரின் பிராணத்தியாகத்தினால் அவருக்கும் அவர் கடைப்பிடித்து வந்த மதத்துக்கும் தகுந்த பெருமையிருந்து வந்ததேயன்றி அபகீர்த்தி நேர்ந்திருந்ததாகத் தெரியவில்லை.

8-வது அத்தியாயம்.

விஜயரங்கசொக்கநாதநாயக்கர்-மறவர்.

கிழவன் சேதுபதி 1710-ல் இறந்துபோனார். இவர் மிகவும் ஊக்கமுடையவராகவும், பலமுடையவராகவும்இருந்து, அரசியல் நிர்வாகத்தைச் செவ்வியமுறையில் செலுத்தி ஜனங்களின் நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக்கொண்டார். இவருடைய மரணத்திற்கு முன் தமது மறுமனையாட்டியின் மகனாகிய பவானி சங்கரத்தேவரைத் தமக்குப்பின் ஆளுகை செய்யும்படி நியமித்தார். நிய

மித்தாராயினும் விஜயரகுநாதத் தேவர்மீது ஜனங்கள் மிகுந்த பற்றுடையவர்களாயிருந்தார்கள். ஆதலின், அவரையே நியமித்தால் நன்றாயிருக்குமென்பது ஜனங்களின் அபிப்பிராயம். இந்த நிலையில் சிம்மாசன உரிமைக்குப் போதிய இடைஞ்சல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தமையால் நாட்டின் ஒழுங்கு சிறிது மிதமிஞ்சி நின்றது. கடைசியாக ரகுநாதத்தேவரே சிம்மாசனமேறுதற்கு உரிமை வாய்ந்தவரானார். அரந்தாங்கிக் கோட்டையில் சிறிது சேனைகளை வைத்துக்கொண்டு யுத்தம் நடந்தால் அச்சமயம் தாக்குதற்குறிய கவனத்தையுமேற்கொண்டிருந்தார். அவர் தெய்வபக்தியிலும், ஜீவகாருண்யத்திலும், பரம்பரமான போக்கிலும், பிரியமுடையவர். அவருடைய காலத்தில் இந்துக்களையும், கிறிஸ்தவர்களையும், சமநோக்கமாகவே கருதி அவர்கட்கு வேண்டிய வசதிகளைக் கூடியவரையும் செய்துவந்தார். சில நாட்கழித்து இவருடைய குணம் சிறிது மாறுபட்டகாலத்தில் கிறிஸ்தவர்கட்குப் பெருத்த தொந்தரவும் கொடுத்திருக்கின்றனர். 1720-ம் வருஷத்தில் மறவர்நாட்டில் ஏராளமான மழைபெய்து வேளாண்மை விளைச்சல் மிகுந்து பஞ்சம் ஒழிந்து ஜனங்கள் மகிழ்ச்சியோடிருக்கும் சமயத்தில் ஆட்டுக்கடாய்போல் காலைப் பின் வாங்கிக்கொண்டிருந்த பவானிசங்கரர் கபடமாகப் போர்புரியத் தொடங்கினார். அவர் புதுக்கோட்டை அரசரிடத்தும், தஞ்சாவூர் அரசரிடத்தும், சேனைபெற்று அரந்தாங்கிக் கோட்டையைத் தாக்கினார். அந்தக்கோட்டையைப் பாதுகாத்துக்கொண்டிருக்கையில் தேசமுழுவதும் கொள்ளை நோய்பரவப் பட்டு அதனால் ரகுநாதத்தேவர் மரணமடைந்தார். அவ

ருடைய பரோபகாரமான வாழ்க்கையைக் குறித்து மறவர் நாட்டிலுள்ள ஜனங்களனைவரும் வருந்தினர். அவருடைய மரணத்திற்குப்பிறகு யாரைத் தீர்மானிப்பதென்ற சந்தேகம் ஒன்று கிளம்பிப் பாத்யஸ்தர் ஒருவரைத் தெரிந்தெடுப்பதில் சண்டை உண்டாயிற்று. ஆனால் ரகுநாதத் தேவர் சாவதற்குமுன் கிழவன் சேதுபதியின் பெரிய தகப்பனாருடைய மூத்த பேரனாகிய தண்டத்தேவரையே தமக்குப்பின்னால் சேதுபதியாக்கும்படி நியமனஞ் செய்திருந்தார். அந்த ஆதாரவை வைத்துக்கொண்டு தண்டத்தேவர் தமக்கு உரிமை இருக்கிறதாக நினைத்துத் தமது நானாவிதத் தந்திரங்களாலும் எதிர்த்து எதிரிகளைத் தொலைப்பதற்குரிய பிரயத்தனங்களைத் தீவிரமாகச் செய்துவந்தார். காலஞ்சென்ற சேதுபதியின் பிரதானவைப்பினாளும், தமக்குப்பெண்கொடுத்த மாமியுமாகிய ஒருத்தி மூலமாக அளவிறந்த உதவிகளைச் சேகரித்துக்கொண்டு பவானி சங்கரரே விடாமுயற்சியால் சேதுபதியானார். ஆனால், தண்டத்தேவருக்குப் பவானிசங்கரரை ஒருகை பாராமல் தமது உரிமையை இழந்து விடுவதற்கு பிரியமில்லை. புதுக்கோட்டைக்கும் மதுரைக்கும் சென்று அவ்வரசர்களிடத்தில் சிலநாடுகளை விட்டுக்கொடுப்பதாகச்சொல்லி அவரிடம் உதவிச்சேனை பெற்று முதலில் அரந்தாங்கிக் கோட்டையைப்போய் வளைந்தார். இந்த பெரிய சேனைகளைக்கண்ட பவானி சங்கரர் பயந்து தமது கோட்டையை விட்டுத் தஞ்சாவூருக்கு ஓடிப்போய்விட்டார். அங்கே போய்த் தமது எதிரியாகிய தண்டத்தேவருக்கு விரோதமாக உதவிசெய்தால் பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள நாடுகளைத் தஞ்சாவூர் அரசருக்குக் கொடுத்துவிடுவதாக ஒரு

உடன்படிக்கை செய்துகொண்டு இரண்டு மூன்று மாதங் களுக்குள்ளே பவானி சங்காரும், தஞ்சாவூர் சேனையும் கலந்து வந்து இராமநாதபுரத்தை எதிர்க்கும்பொழுது தண்டத்தேவர் மதுரையாரசரையும், புதுக்கோட்டையரச ரையும் அனுகிப் பின்னுங்கொஞ்சம் சேனைகளைத் தயா ரித்துக்கொண்டு வந்தார். தஞ்சாவூர் தளகர்த்தர் புதுக் கோட்டைச் சேனைகளை இலகுவில் தூரத்திவிட்டு மதுரைச் சேனையை எதிர்த்துத் தாக்கினர். புதுக்கோட்டையரசர் மக்களிருவரை கைதியாக்கினர். அதனால் புதுக்கோட் டையரசர் சீக்கிரம் சமாதானத்திற்கு வந்து விட்டார். அதன்பிறகு இராமனாதபுரம் கோட்டை சுரங்கம்வைத்துப் பிடிக்கப்பட்டது. தண்டத்தேவரும் அவரைச் சேர்ந்த சிலரும் கொல்லப்பட்டார்கள். இந்தவிதமான நிலைமையில் கடுமையான யுத்தம்செய்து பவானிசங்கரர் இரண்டாம் தடவை சேதுபதியானர். ஆனபோதிலும் நிர்வகிக்கும் பாங்குதெரியாமல் இவர்ஆண்ட ஆட்சி முறையே இவ ருடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. தமக்குள்ளிருக் கும் பிரபுக்களின் விசுவாசத்தையும், நன்றியையும் அறிந்து அவரைப்பேணி நடந்துகொள்ளத் தெரியாமல் சொல்வன்மையும், மனத்துணிபும் பொருந்திய ஒரு உத் தமமான பிரபுவைப்பகைத்து நீண்டகாலமாக அவரோடு சண்டைபோட்டு அவர் நாட்டை அபகரித்துக்கொண் டார். இந்தப் பிரபு தஞ்சாவூர்க்குப்போய் தமது அரும் பெருஞ் செய்கைகளினால் அவ்வரசரின் தயவைச் சம்பா தித்துக்கொண்டார். இராமனாதபுரம் பிடிபட்ட பிறகு தண்டத்தேவரின் மாமனார் கட்டையத்தேவர் என்பவர் தஞ்சாவூர் சென்று சிவகங்கைப் பாளையக்காராகிய மேற் சொல்லிய பிரபுவுடன்சேர்ந்து தஞ்சாவூர் அரசரைப்

பார்த்து எங்களுக்கு இந்தச்சமயம் நீங்கள் வந்து உதவி செய்வீர்களானால், முன்பு பவானிசங்கரர் வாக்களித்தபடி கொடுபடாமல் நின்றுபோன நாடுகளாகியபாம்பாற்றுக்கு வடக்கின் கண்ணுள்ள இடங்களை நாங்கள் உங்கட்குக் கட்டாயம் தருவோமெனச் சொன்னார். அவர் அதற்கு சம்மதித்தவராய் வந்து மறவர் சீமைமீது மறுபடியும் படையெடுத்து ஓரியூரில் நடந்தபோரில் பவானிசங்கரர் தோல்வியடைந்து கைதியாயினர். இவ்விதமாக அவருடைய ஆளுகை 1729ம் ஆண்டு முடிவடைந்தது.

தஞ்சாவூர்ச் சேனை பவானிசங்கரரை வென்றது மறவர் சீமை பிரிபடுவதற்கு ஏதுவாயிற்று. இராமநாதபுரத்தின் மேற் படையெடுக்கும் முன்னே செய்துகொண்ட உடன்படிக்கையின்படி பாம்பாற்றுக்கு வடபக்கத்திலுள்ள நாடுகளைத் தஞ்சாவூரார் எடுத்துக்கொண்டார்கள். மீதியான இடம் ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டு மூன்றுபாகம் கட்டையத் தேவருக்குரியனவாகிக் குமார முத்து விசயரகுநாத சேதுபதி என்னும் பட்டப்பெயருடன் சேதுபதியானார். இரண்டுபாகம் கட்டையத் தேவருடன் ஆபத்து வேளைகளில் ஆதரவாக நின்று உழைத்துவந்தவரும், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டவருமான சிவகெங்கைப் பாளையக்காரர் எடுத்துக்கொண்டு சிவகங்கைக்கு அரசரானார். ஆகவே மறவர் சீமை 3 பாகஸ்தர்களால் ஆளுகை செய்யப்பட்டு வந்தது. மறவர்நாடு 3 பகுதியாகப் பிரிக்கப்பட்டதிலிருந்து, முன்னைய வன்மையும் அரசியல் மேன்மையும் ஒருவாறு குன்றி, செல்வாக்கும் தளர்ந்து போயிற்று.

அத்தியாயம் 9.

பாளையக்காரர்கள் - தொடர்ச்சி.

ஓர் பாளையம் அல்லது பாலம் ஜமீன்தாரி மாத்திர மன்று, அது அரசனால் ஒருதலைவனுக்குக் கொடுக்கப் பட்ட ஜில்லா. அதைவைத்திருக்கும் பாளையக்காரர் அல்லது பாலிகார்தங்கள் அரசனுக்கு வருஷப் பேஷ்கஷ் அல்லது குத்தகை கொடுப்பது மாத்திரமன்றி ஏற் படும் சண்டைகளில் தாங்கள் அரசனுக்கு உதவிபுரிய வேண்டும். பாளையம் என்பதற்கு ஒரு கேம்ப் என்று அர்த்தம். (கூடாரங்களில் படைகள் தங்கியிருக்கும்) பாளையக்காரன் என்பதற்கு ஓர் படை தங்கியிருக்கும் கூடாரங்களுக்குத் தலைவன் என்று அர்த்தம். தன் அரச னுக்கு எப்பொழுதும் ஊழியஞ்செய்யக் கடமைப் பட்ட வர். யுத்தகாலத்தில் உதவுவதற்காக அரசனால் ஜில்லாவை யளிக்கப்பெற்றவர். தமது நிலத்தை நாடென்று கரு தாமல் பாளையம் அல்லது யுத்தவீரர் தங்கியிருக்கும் இடம் என்று நினைக்கவேண்டியவர். பாளையக்காரரின் பூமியில் நடக்கும் சிவில், கிரிமினல் நடபடிக்கைகளில் அரசன் தலையிடுவதில்லை. கட்டவேண்டிய கப்பமும் யுத் தத்திற்குச் சேனையும் அனுப்பிவிட்டால் அரசன் திருப்தி யடைவான். தென்னிந்தியாவில் மிகுந்த பாகம் அதா வது திருச்சினாப்பள்ளிக்குத் தென்பாகம் முழுவதும் பாளையக்காரர் கைவசமிருந்தது. மதுரையிலும் திண்டுக் கல்லிலும் அரசனின் நேர்முகமான ஆளுகையொன்

றமே இல்லையென்று சொல்லலாம். திருநெல்வேலியில் தாம்பிரவர்ணி நதிக்கு வடபாகம் பூறுவும் பாளையக்காரர் வசமிருந்தது. ஆங்கிலேயர் திருநெல்வேலிக்கு வந்த சமயம் பாளையக்காரர் வசமுள்ளதும் நவாப்பின் நேர் ஆளுகைக்குள்ளடங்கினதுமான பூமி ஒழுங்கான அரசாட்சியில்லாமல் கஷ்ட நிசையை அடைந்திருந்தது. இந்த பரிதாபமான நிலைமைக்குக் காரணம் நவாப்பின் பலஹீன ஆளுகையும், லஞ்சமும், பாளையக்காரரின் வழக்கமான கட்டுப்படாத நடவடிக்கைகளும், அடிக்கடி ஏற்படும் சண்டைகளும், குழப்பங்களுந்தான். நவாப் இங்கிலீஷ்காரரின் உதவியை நாடினபோது திருநெல்வேலியில் 32 பரம்பரைத்தலைவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு தலைவருக்கும் ஒவ்வொரு கோட்டையிருந்தது. யுத்தம் செய்யக்கூடிய ஆயுதம் தரித்த வீரர்களைக்கோட்டைக்குள் வைத்திருந்தார்கள். ஒவ்வொரு தலைவரும் பக்கத்துத் தலைவரின் நிலங்களையும் சென்றல் கவர்ன்மெண்டு நிலங்களையும் அபகரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். பாளையக்காரரின் ஆயுதம் தரித்த யுத்த வீரருக்குக் 'காலரிஸ்' (Colleries) என்று பெயர். இந்த வார்த்தை திருச்சினாப்பள்ளி தஞ்சாவூரில் வாசஞ்செய்யும் (Kallars) கள்ளர் என்ற ஜாதியாரின் பெயரிலிருந்து வந்தது. திருநெல்வேலியிலுள்ள பாளையக்காரரின் சேனைகள் கள்ளர் வகுப்பினரால்ல. மறவர்கள், அல்லது நாயக்கமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்கெங்கு நாயக்கமார் பாளையக்காரராக இருந்தனரோ அங்கே அவருடைய யுத்தவீரரும் அதே வகுப்பினர்தான். எங்கெங்கு மறவர் பாளையக்காரராக இருந்தனரோ அங்கே

யுள்ள அவரின் யுத்தவீரர் மறவர்தான். ஆங்கிலேயர் இந்த வித்தியாசத்தைக் கவனிக்கவில்லை. எல்லாப்பாளைக் காரர் சேனைகளையும் காலரீஸ் என்றே அழைத்தார்கள்.

திருநெல்வேலியில் மேல் பாகத்தில் மலைப்பக்கமா யுள்ள காலரீஸ் (இங்கே முழுதும் மறவர்தான்) களைப் பற்றிபின்வருமாறு மிஸ்டர் ஆர்ம் என்பவர் விவரிக்கிறார்.

திருநெல்வேலிப் பக்கத்தில் வாசஞ்செய்யும் காலரீஸ் பொதுவாக அவலட்சணமும், அங்கவிகாரமுமுள்ள இந் தியாவின் காடுகளிலும் வனங்களிலும் வசிக்கும் ஜாதியா ரைப்போல்பவரல்லர். இவர்கள் உயரமானவராயும், உறுதியான தேகமுடையோராயும், அழகான முகமலர்ச் சித் தோற்றமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர் கட்குரிய ஆயுதங்கள், ஈட்டி, வேல், வில், அகாயப்படை, தீக்குச்சியினால் கொளுத்தும் துப்பாக்கிகள். மற்ற ஆயு தங்கள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; ஒவ் வொரு வீரரும் எப்பொழுதும் வாளும் கேடகமும் தரித் திருப்பார். யுத்தத்தில் ஒவ்வொரு ஆயுதப்படையும் தனித்தனியாகச் செல்லும். ஆனால் ஈட்டிக்காரர்தான் மிகவும் சிறந்தவர்களாக எண்ணப்படுகிறார்கள். இவர் களே யுத்தங்களில் முதன்மையாக நின்று எதிரிகளைத் தாக்குவார்கள். இந்த ஈட்டி 18 அடி நீளமுள்ளது. இதன் நுனியில் சிவப்புக்குதிரை மயிரினால் செய்த குஞ் சம் ஒன்று கட்டிக்கொள்வார்கள். குதிரைப்படையை எதிர்த்துத் தாக்கும்போது ஒரு சிறு மணியையும் அக்குஞ் சத்தோடு சேர்த்துக்கட்டிகொள்வார்கள். நெருங்கி நின்று

அமுத்தமான வரிசைகளாக முன் அப்பியாசமின்றி நீண்ட உறுதியான அடியுடன் முன்னேறிச்சென்று அவர்கள் ஈட்டிகள் எதிர்த்துத் தூக்கிநிற்க ஈட்டியைக்கையாளும் விதமும் வேகமும் மணியோசையின் சத்தமும் பிரகாசமும் குதிரைப்படையை வெருண்டோடும்படி செய்யும். துப்பாக்கிகளின் பழக்கமில்லாத காலாட்படைக்கு அவர்களின் வருகை மிகவும் பயங்கரமாயிருக்கும். 'Lance' (லான்ஸ்) தமிழில் வல்லையம் என்று சொல்லப்படும் பெயர்மாத்திரம் இருக்கிறது. இந்தப் பயங்கரமான ஆயுதத்தின் மாதிரிகூட இப்போது காண்பதரிது.

மதுரை ராஜ்யத்தில் மறவர் பாளையப்பட்டுகள் 18. இராமநாதபுரம் 1 சிவகங்கை 2 சிவகிரி 3 சேத்தூர் 4 கொல்லங்கொண்டான் 5 நெற்கட்டும் செவல் 6 தலைவன் கோட்டை 7 சொக்கன்பட்டி 8 குருக்கள்பட்டி 9 அழகாபுரி 10 நடுவக்குறிச்சி 11 சுரண்டை 12 ஊர்க்காடு 13 சிங்கம்பட்டி 14 ஊத்துமலை 15 மணியாச்சி 16 கடம்பூர் 17 ஏழாயிரம்பண்ணை 18.

அத்தியாயம் 10.

திருவாங்கூர் சரித்திரம் (கி. பி. 1726)

மறவர்.

திருவாங்கூர் மஹாராஜா, எட்டு வீட்டில் பிள்ளைமார் — மாடம்பிமார் முதலியவர்களிடமுள்ள துரோகச் செய்கையையுந் துஷ்ட குணத்தையுங்குறித்து அவர்களைச் சரியானபடி தண்டிப்பதற்காக மதுரையிலிருந்து உதவிச் சேனை ஒன்று வரவழைத்ததோடு, தளகர்த்தன்குமாரசாமிப் பிள்ளையையும் அவர் இரண்டாம் தளகர்த்தன் தாணுப் பிள்ளையையுங்கலந்து மறவர் சேனை ஒன்று தயாரிக்கும்படி கட்டளையிட்டுக் களிமண்ணால் கடற்கரைக்கும், மந்தாரம்புதூருக்கும், ஆராம்புளிக்கும், கன்னியாகுமரிக்கு மிடையில் சுவர்கள் கட்டச்செய்து அவைகளை மறவர் சேனைகளால் பாதுகாக்கும்படிக்கும் உத்தரவு செய்தார். அப்படிச் செய்ததினால் அப்பாதுகாவல் திருவாங்கூரை அயல் நாட்டார் தாக்குதலினின்றும் பாதுகாத்தது. தளகர்த்தன் தளவாய்ப் பிள்ளையைத் திருக்கான்குடிக்கு அனுப்பி அங்கே சிறைப்பட்டிருந்த தளவாயை விடுவித்துவரும்படி சொல்ல, அவர் போய் அப்படியே விடுவித்தார். தம் ராஜ்யத்திலுள்ள பிரபுக்களும், தலைவர்களும் அடிக்கடி கலகம் எழுப்பித் தொந்தரவு கொடுத்தாலும் மஹாராஜா அதைக் கவனியாதவர் போல் பாவனைசெய்து தம்மிடத்தில் உள்ள திருச்சிறைப் பள்ளிச் சேனை ஒன்று மறவர் சேனை ஒன்று ஆகிய இரண்

டும் கைவசத்தில் இருந்தமையால், வேறு முக்யமான விஷயங்களைக் கவனிப்பதில் மனம் செலுத்திக் கொண்டிருந்தார் (History of Travancore p. p. 115 to 118)

காயங்குளம் ராஜா இறந்துபோன போதிலும் காயங்குளம் சேனை தனக்குரியதைரியத்தை விடவில்லை. இறந்துபோன ராஜாவின் இளையசகோதரர் பிடிவாதமும் வீரமுமுள்ளவராதலால், யுத்தம் அதிக மும்மரமாய் நடந்தது. காயங்குளம் சேனையை எதிர்த்துச் சண்டைசெய்ய முடியாதென்று தீர்மானித்து செக்ரட்டெரி ராமையன் திருநெல்வேலிக்குப்போய் பொன்னம் பாண்டியத் தேவர் தலைமையின்கீழ் ஒரு மறவர் சைன்யமும், பாளையக்காரர்கள் அனுப்பிய 1000 குதிரைப் பட்டாளங்களையும் கொண்டுவந்து தான் தளகர்த்தனாக நின்று அடுத்த நாளில் நடந்த சண்டையில் காயங்குளம் சேனையை முதல் தடவையாகத் தோல்வியடையும்படி செய்தார். ராமையன் சேனை காயங்குளம் நாட்டில் நாளுக்குநாள் முன்னேறிக்கொண்டே வந்தது.

அத்தியாயம் 11.

காவல்.

இம்மறவர் சரித்திரத்தின் தொடக்கத்தில இவர்களின் பூர்வீகம் எப்படி யென்பதைப்பற்றி ஆராயப்புகுந்த இடத்தில் இவர்கள் இராமனுல். இராமேஸ்வரங் கோவிலைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டவர்களெனத் தெரிந்தோம். காவல் என்ற பதத்திற்கு ஒருவரிடத்து ஒப்புவித்த பொருளை அவர் எந்தவிதக் கெடுதியும் நேராவண்ணம் காத்துக் கொடுப்பதெனப் பொருள்படும். இந்தக் காவலை மேற்கொள்வோர் தங்கட்கு அதனுல் நேரும் துன்பங்களை ஒரு பொருளாகக் கருதுகிறதில்லை. துன்பம் வரினும் அதனை இன்பமாகவே கருதித் தமது கடமையில் பழுதுறுவண்ணம் செய்துகொள்வதையே முக்கியமாகக் கருதுவார். எத்துணைச் சிறந்த முரடர்களையும் புறமுதுகிட்டோடும்படி செய்யும் பலமும் பார்த்தோர்க்குப் பயங்கர முண்டாகும்படியான தோற்றமும், தங்களின் பொறுப்பைக் கடைசிவரையும் நெகிழவொட்டாமல் நிர்வகித்தற்குரிய தந்திரமும், இந்நிலையில் நாலாவிதச் சிறப்பும் வாய்ந்த ஜாதி மக்களே காவல் தொழிலிலுக்குப் பொருத்தமுடையவராவார். இந்தப் பொருத்தப்பாடமைந்த மறவர் குலத்தார் ஆதியில் இராமனுல் காவல் தொழிலுக்கு நியமிக்கப்பட்டிருப்பாரானுல், அவர் காவல் தொழில் அக்காலத்திலுள்ள அறிஞர்களால் எந்நிலையில் பாராட்டப் பெற்றிருக்கு

மென்பதை நன்கு சிந்தித்தல்வேண்டும். இனி, அக் கரவல், கிராமக்காவல், நாடுகாவல், திசைகாவல், (அறப் புறங்காவல்) தருமஸ்தாபனக் காவல்என பலவகைப்படும். பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டை யாண்டுவந்த தமிழ்ப் பேரரசர்களாகிய சேரசோழ பாண்டியர்களின் கடமை, தத்தமக்குரிய நாட்டையாள்வதும், இம்மறவரின் கடமை, அவர்களின் அரசாட்சிக்கு அடிப்படையாக நின்று அவ ரைக்காப்பதுவே தமது காவலாகவும் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்திருக்கின்றாரெனத் தெரிகின்றது. இக்கருத் துப்பற்றியே தருமபுத்திரக் கவிராயர் என்னும் (சில நூற் றாண்டின் முற்பகுதியிலிருந்த) புலவர் ஒருவர் தாம் இயற் றிய (வாளெழுபது) மறம் பாடலில், "படிகாக்குந் தனிக்கவிகைப் பார்வேந்தர் தங்கள் மணி, முடிகாக்குஞ் செங்கோன்மை முறைகாக்கும்படி பாதிக், குடிகாக்கும் வழுதி தனிக்கொடியை அடல் கெருடனெடா, வடமே ரில் கயல் காக்கு மறவா கையில் வளைதடியே" 'எனவும், 'பூவுலகத்தினில் பாதிகாவல னெனப் புரந்த மறவன்' எனவும், காவலில், "இரும்பூசி போமெனில் பொன்னூசியே கொடுத்தெண்டி சைக்கம்பம் நாட்டி" வருபவர் எனவும் கூறியிருத்தல் காண்க. மேற்கூறிய காவல் தொழில்களைப்பற்றி அரச ருந் தலைவருமாகிய இருதிறத்தாருங் கலந்து ஒரு முடிவு செய்துகொண்டு பிறகு இம்மறவரிடம் அவற்றை ஒப்பு விப்பார்கள். அங்ஙனம் ஒப்புவிக்கப்பட்ட காவல் பிரிவு கள் ஒவ்வொன்றையுமிவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டு தங்களின் கீழ்ப்படிதலுக்கிணைந்த தமது வகுப் பார் வசத்தில் தனித்தனிப்பகுதியாகப்பிரித்துக்கொடுத்

துக் காத்துவருவார். அரசர்களால் வழங்கப்பட்ட இக் காவற்பொறுப்பையும், நன்மதிப்பையும், தாங்கள் அவ் வரசர்கட்கு நன்மைவிளையும் பாங்கிலேயே செலுத்து வார்களேயல்லாமல், தங்கட்கு அதிகாரங் கிடைத்துவிட் டதெனக் கருதி, அதனை முறையல்லாத முறையில் செலுத்தி அவருக்குந் தீங்கிழைக்கும் காரியங்களில் புகவே புகார். இவர்களின் கைக்கீழிருந்து எளிய அலு வல்களைச் செய்யும் சிப்பந்தியாளர்களும் இவர்களுடைய உயரிய நோக்கத்திற்கு மறுதலையாக ஒருக்காலும்நடந்து கொள்ளவே மாட்டார். எழுத்து மூலமில்லாமல் வாய் மொழியாகவே இவர்கள் செய்துவருகின்ற தீர்ப்புக்கும், அமுலுக்கும் கட்டுப்பட்டு யாவரும் அமைதியாக நடந்து வந்தனர். பத்திரம் எழுதிப் பதிவுசெய்து கொடுத்த பிறகும் மீறுகின்ற இக்காலத்தில் மேற்கூறிய செயல் எவ்வளவு வியப்பைத் தருவதாகுமென்பதை அறிஞர் கள் நன்கு சிந்தித்தல் வேண்டும். இவர்களுடைய காவல் முறையிலிருந்து வந்த ஒழுங்கு முதலியவற்றைக் குறித்துப் பண்டைக் காலத்துக் கல்வெட்டுச் சாசனங்கள் மிகவும் பாராட்டிக் கூறுகின்றன. கிராமக் காவலிலும் திசை காவலிலும் இன்னார் இன்னாருக்கு இன்ன இன்ன கிராமங்கள், இன்ன இன்ன திசைகள் என இவர்கட்குப் பங்கிட்டுக்கொடுக்கப் பட்டிருந்தன. அரசனுக்குக் குடி கள் வரி செலுத்திவருவதுபோலவே, ஒவ்வொரு கிராமத் தாரும் இவர்கட்கு ஆண்டுதோறும் வரி செலுத்தி வருவ துண்டு. அங்ஙனம் செலுத்தப்படும் வரி ஒவ்வொரு வரும் தனித்தனியாகவேனும், கிராமத்தாரனைவரும் ஒன்றுசேர்ந்து மொத்தமாகவேனும் செலுத்துவது வழக்

கம். இவ்வுரிமையைப் பெற்றுக்கொள்ளும் தலைமைக் காவலர் தமது காவல் நடைபெறுகின்ற இடங்களில் களவு, கொள்ளை முதலியன நடவாமல் காப்பதென்றால், தாமே நேர்முகமாகச் சென்று காத்து நிற்கும் வழக்கமிருந்த தாகத் தெரியவில்லை. இன்னாருடைய தலைமைக்காவ லுள்ள இடம் என்று தெரிந்தால் போதும்; அந்த வழி யில் திருடர்கள் காலடி எடுத்துவைக்கமாட்டார். ஒரு வேளை களவு நடந்துவிடுமானால், கிராமத்தார் தலைமைக் காவலர்க்குத் தகவல் தெரிவிப்பார். தலைமைக் காவலர் தமது சிப்பந்திகளை யனுப்பிப் பல இடங்களிலுந் துருவி யாராய்ந்து களவுபோன பொருளை எந்த வகையிலாவது மீட்டுக்கொடுப்பார். சிலசந்தர்ப்பங்களில் தலைமைக் காவலர்களே தமது கைப்பொருளைச் செலவிட்டாவது மீட்டிக்கொடுக்கவேண்டியதாக வந்துசேரும். ஆகவே, தாம் சென்று காப்பதுமில்லை; தமது ஆட்களை யனுப்பிக் காப்பதுமில்லை; தமது வலிமையாலும், ஆணையாலுமே பாதுகாக்குஞ் சிறப்பையும் செல்வாக்கையும் பெற்றுத் தலை சிறந்து வாழ்ந்துவந்தனர். இந்தக் காவல் முறை யைப்பற்றி ஆங்கிலேயர்களால் தமது சரித்திரங்களிற் சொல்லியிருக்கும் விவரங்களைக்கீழே குறிப்பிடுகின்றோம். பாளையக்காரர் தங்களதிகாரத்தை அதிகப்படுத்துவதற் காக நாட்டைக் காக்கும் உரிமையைக் கொண்டிருந்தார் கள். ஆதிகாலந் தொடங்கி ஒவ்வொரு கிராமமும் காவற்காரர் கைக்குள்ளிருந்துவந்தன. அவர்களுடைய பாதுகாப்பின்பொருட்டு, சிறிது சம்பளமும் வழங்கப் பட்டு வந்தது. பாளையக்காரரும், அவர்களின் சிப்பந்தி யாட்களும் ஒற்றுமையுடனிருந்து நாட்டைக் காப்பதும்

அது சம்பந்தமாகக் கூலி வசூலிப்பதும், தங்கட்குரிய கடமையாக மதித்து அந்தப் பொறுப்பைப் பேணி நடத்தி வந்தனர். (Mr. Lushington) மிஸ்டர் லஷிங்டன் 1799ல் திருநெல்வேலியிலுள்ள 2113 கிராமங்களில் 1635½ கிராமங்கள் பாளையக்காரர் வசமிருந்து வந்ததாகச் சொல்லுகின்றார். பாளையக்காரர்கள் தங்கள் சொந்த மனிதரை ஓர் கிராமத்தில் நியமிக்க முடியாமல் போனால் மற்றவர்களால் நியமிக்கப்பட்ட காவற்காரரிடமிருந்து வருஷத்துக்கு இவ்வளவு என்று நிர்பந்தப்படுத்தி வசூல் செய்துவந்தார்கள்.

இனி, மற்றொரு காவல் திசைகாவல் என்பது. அதாவது, ஜில்லாக் காவல். அதனை ஐரோப்பியர் தேசக் காவல் என்று தப்பிதமாகச் சொல்லுவார்கள். அந்தத் திசைக் காவலையும் பாளையக்காரர் மேற்கூறிய கிராமக் காவலோடு சேர்த்துவிட்டார்கள். இவர்கட்குக் கொடுக்கப்படும் கூலித்தொகை மிகவுஞ் சொற்பமாக இருந்தபடியால், அதனைக் கிராமக் குடிகள் சிரமமின்றிக் கொடுத்து வந்தார்கள். 1799-ல் மிஸ்டர் லஷிங்டன் சொல்வதாவது:- தமது காலத்தில் வசூல் செய்யப்பட்டுவந்த கூலியில் பத்தில் ஒரு பங்குதான் அதற்கு முன்னே ஏற்பட்டிருந்ததாகவும், ஆனால் 1740-க்கும் 1760-க்கும் இடையில் காவற்கூலி அதிகமாகக் கூடிவிட்டதென்றும் சொல்லியிருக்கின்றார். ஏனென்றால், அந்தக் காலத்தில் திருநெல்வேலியில் சுயகலங்கருத்திய சண்டைகள் பெருவாரியாக நடந்துகொண்டிருந்தன. ஆதலினால் பாளையக்காரர் தற்காப்பில்லாத குடிகளிடமிருந்து அவர்களைக் கொள்ளை

யடிக்காமலிருப்பதற்காகக் கூடிய வசூல் செய்யப்பட்டு வந்தது இந்த நிகழ்ச்சிமுறை பாளையக்காரர் பலத்தி லும், நவாப் அரசாங்கத்தின் பலக்குறைவினலும் வரவர மும்மரமாகிவிட்டது. காவல் தொகையைக் கிராமத்தார் உரிய காலாகாலங்களில் மரியாதையாய்க் கொடாமல் போனல், அவர்கட்குச் சித்ரவதையும், சவுக்கடியுமே கண்டபலன். கிராமவாசிகள் அனைவோரும் சிறைபிடப் படுவதுடன் ஒரு தொழிலுமே நடைபெருது போய்விடும். அவர்களின் ஆடுமாடுகளை அடைத்துப் பலவகையிலும் தொந்தரவு செய்வார்கள். சில சமயங்களில் கிராமத் தாரைக் கொன்றும்விடுவார்கள். தங்கட்குச் சேரவேண் டிய தொகை வசூலாகும் வரையும் கிராம வாசிகளைப் பல வித நிர்ப்பந்தங்கள் செய்வார்கள். குடிகளிடமிருந்து வேட்டையாடுவதற்கென்றும், கலியாணச் செலவுக் கென்றும் கணக்கற்ற வரிகளையும் வசூலிப்பார். சர்க் கார் நிலங்களிலுள்ள விவசாயிகளை இவர்கள் நன்ருக ஆயு தம் தரித்துக்கொண்டு நாலாவிதத்திலும் பயமுறுத்தி வந்தார்கள்.

திருநெல்வேலி மானுவலிலிருந்து மிஸ்டர் ஸ்டுவர்ட் காவலைப்பற்றி எழுதியிருத்தலைக் கீழே குறிப்பிடுகின் ரேம். திருநெல்வேலியிலுள்ள மறவர், அல்லது, வன் னியன் என்ற ஜாதி மிகவும் அதிசயமானது. பாளையக் காரரில் அநேகர் இவ்வகுப்பைச் சார்ந்தவர். 18-ம் நூற் ருண்டினிறுதியிலும் 19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்திலும் இங்கிலீஷ்காரருடன் திருநெல்வேலியில் சண்டைபோட் டார்கள், இவர்களே பாளையத் தலைவர்களாகவும், எண்

ணிக்கையில் அதிகமான ஜாதியின் தலைவர்களாகவும், பலம், உற்சாகம், தந்திரம், வாய்ந்தவர்களாயுமிருந்தார்கள். தேசத்தில் சண்டை நடக்கும்போது விவசாயிகளால், இவர்கள் காவற்காரராக நியமிக்கப்பட்டதுமல்லாமல் திசைகாவல், தலங்காவல், ஆகிய இரண்டு சுதந்திரங்களும் இவர்கட்குக் கிடைத்திருந்தன. கொள்ளைக்காரர்களையும், இரகசியத் திருடர்களையும், அப்போதைக்கப்போது அடக்கி, தங்கள் கோட்டையைச் சுற்றியுள்ள நாட்டை அன்னியர்படையெடுப்பினின்றும் காப்பாற்றித் தக்க வருமானமும் பெற்றுவந்தார்கள். தலைவரின் வேலைக்காரர்கள் கிராமங்களிற்சென்று கிராமவாசிகளிடம் களவிலிருந்து காப்பாற்றுவதற்காகக் காவற்கூலி வாங்கிக் கொண்டு வந்தார்கள். திசைகாவற்கூலியும், கிராமக் காவற்கூலியும் இக்காலத்திலுமிருந்துவருகின்றன. கர்னல்புல்லர்டன் (Colonel Fullerton) திருநெல்வேலியைப் பற்றி எழுதியிருக்கின்ற விவரத்தையும் கீழே குறிப்பிடுகின்றோம்.

அநேக தலைவர்கள் மிகுந்த நிலமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கட்கு ஆயுதந் தரித்த சேனைகள் உண்டு. குழப்பம் உண்டானால் கொடுக்கவேண்டிய குத்தகையை ஒழுங்காகக் கொடுக்கமாட்டார்கள். இந்தத் தலைவர்களும், இவர்களின் ஆட்களும், பாளையக்காரர்களென அழைக்கப்பட்டு வந்தார்கள். தலைவர் 32 பேர்களிருந்தார்கள். அவர்கள் 30000 தைரியசாலிகளை யுத்தகளத்துப் படைகளாகச் சேர்த்துக்கொண்டு தங்கள் கூட்டத்தையும், செல்வாக்கையும், அமுலையும், அதிகப்

படுத்திக்கொண்டார்கள். மலைகளில் தங்கட்குச் சரியான அரண்களையும், பட்டினங்களில் கோட்டைகளையும், தயாரித்து வைத்திருந்தார்கள். யுத்தகாலங்களில் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தளர்ச்சி ஏற்பட்டால் அந்த இடங்களில் புகுந்து இளைப்பாற்றிக்கொண்டு பிறகு எதிரிகளோடு யுத்தம் செய்வார்கள். இவர்கள் தங்களுக்கு மிகுந்த நிலங்களிருந்தபோதிலும் அந்த நிலங்களைப் பாழடையும்படி போட்டுவிட்டு ஒருவருக்கொருவர் படையெடுத்து, தொழில்செய்து ஜீவிக்கும்படியான பக்கத்துக் கிராமவாசிகளைக் கொள்ளையடிப்பார்கள். இவர்களின் பயங்கரமான குணத்தையும், செய்கையையுங்கண்ட ஒவ்வொரு ஜில்லாவாசிகளும் கொள்ளையடிக்காமலிருக்கும் பொருட்டு இவர்கட்குத் தகுந்த (காவல்) வெகுமதிகளைக் கொடுத்து நயந்து கொள்ளுவார்கள் என்று எழுதியிருக்கின்றார்.

அத்தியாயம் 12.

முகம்மதியர் - ஆங்கிலேயர் - மறவர்.

நாயக்கர் பரம்பரையில் கடைசியாகத் தோன்றிய ராணி மீனாட்சி மதுரையில் ஆளுகை செய்யும்பொழுது, அவருக்கும் வங்காரு திருமலை நாயக்கருக்கும் அரசுரிமையைப்பற்றி நேர்ந்த விவகாரத்தில் அந்நியர்களின் உதவியால் தங்கள் தங்கள் உரிமையை நிலைநிறுத்துதற்குப்

பெரும் முயற்சி நடந்தது. அம்முயற்சி பயனடையாமற் போகவே, இருவரும் தங்கள் உரிமையை இழந்தனர். ராஜ்யம் சந்தாசாகிப் கைவசமாயிற்று. மராட்டியர் பாண்டிய நாட்டைப் படையெடுத்துச் சந்தாசாஹிப்பைக் கைதியாக்கினார்கள். 1743-ம் வருஷம் ஐதராபாத் நைஜாம் கர்னுடகத்தில் பிரவேசித்து மதுரை, திருச்சிளுப்பள்ளி முதலிய தேசங்களையும் பிடித்து, அன்வர்த்தீன் என்பவரை ஆர்க்காடுநவாப்பாக நியமித்தார். ஆகவே, 1744-ம் வருஷ முதல் ஆர்க்காடு நவாப்பின் ஆளுகை, கர்த்தாக்கள் ஆண்ட நாடுகளாகிய மதுரை, திருச்சிளுப்பள்ளி, திருநெல்வேலி ஜில்லாக்களில் ஆரம்பிக்கிறது. அன்வர்த்தீன் இறந்த பிறகு அவர் மகனுன முகம்மதலி ஆர்க்காட்டின் நவாப்பானுர். 1748-ம் வருஷம் சந்தாசாஹிப் மராட்டியர் சிறையினின்று விடுதலையாகி ஆர்க்காட்டு நவாப்பின் உரிமையானது தமக்குரியதென்று பாராட்டவே, பிரஞ்சுக்காரர்களும் அதை ஆமோதித்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். ஆங்கிலேயர்கள் முகம்மதலிக்கு உதவியாயிருந்தார்கள். இதனுல் யுத்தமுண்டாயிற்று. இந்த யுத்தத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்விரு கட்சிக்காரர்களாலும் சண்டையும் குழப்பமும் உண்டாயின. கொள்ளிடத்திற்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள தேசங்களின் பாளையக்காரர்கள் முகம்மதலியின் அரசுரிமையை ஒப்புக்கொண்டவராக இருந்தபோதிலும், தங்களாலாகிய உதவியை மனப்பூர்வமாக அவருக்குச் செய்யவில்லை. அதனுல் முகம்மதலி தமது சகோதரரான அப்துல் ரஹிமான் கிழ் 1751-ம் வருஷத்தில் ஒரு சேனை ஒன்றைத் திருநெல்

வேலி நாட்டிற்கு அனுப்பி ராஜ்ய காரியங்களை ஒழுங்கு பண்ணுதற்குரிய திட்டங்களைச் செய்தார். சந்தாசாகிப் அச்சேனையைத் தம்வசப்படுத்த முயன்றும் அது முடியாமற் போயிற்று.

ராணுவத்தில் சேர்ந்து பணத்தைச் சம்பாதிக்க நினைத்த ஆலம்கான் என்பவர் சந்தாசாகிப்பின் கீழ் தளகர்த்தராக அமர்ந்து மதுரைக்குவந்து அதைப்பிடித்துச் சந்தாசாகிப்பின்பேரால் அந்நாட்டை ஆண்டார். மதுரை எதிரிகள் வசமிருந்தால் திருச்சிறாப்பள்ளியிலிருந்து திருநெல்வேலிக்குப்போகும்வழிகள் அடைபட்டுப்போம்; அங்ஙனமாகும்போது முகம்மதலி தமக்குரிய பாதிப்பூமியையுங்கூட இழந்துவிட நேரிடும். இக்காரணத்தால் மதுரையை எவ்விதமும் கைப்பற்றுவது இன்றியமையாதது எனத்தீர்மானித்து நவாப் தமது மூத்த சகோதரன் மாவஸ்கான் வசம் ஐரோப்பியச்சேனை ஒன்றும், சுதேசச்சேனை ஒன்றும் அனுப்பிவைத்தார். ஐரோப்பியசேனைக்கு கர்னல்ஹெறன் (Colonel Heron) தளகர்த்தராகவும், சுதேசச்சேனைக்கு முகம்மதுயூசுப்கான் தளகர்த்தராகவும் நியமிக்கப்பட்டார்கள். 1755-ம் வருஷம் திருநெல்வேலியின் காரியங்களை ஒழுங்குசெய்யவும், தீர்வை, கப்பம் முதலானவைகளை காப்டன் கலியட்டுக்கு (Captain Calliuad) அனுப்புவிக்கவும் முகம்மதுயூசுப்கான் அனுப்பப்பட்டார். கர்னல் ஹெறன் மதுரையைப்பிடித்தார். இது சமயம் சேதுபதி ஸ்தானாதிபதிகளை ஆங்கிலத் தளகர்த்தரிடம் அனுப்பி, தாம் இதுவரையும் மைசூர் ராஜாவோடும் சந்தாசாகிப்போடும் சேர்ந்து ஆங்கிலேயருக்கு

விரோதமாக நடபடிக்கைகள் நடத்தினதைக்குறித்து மிகவும் வருந்துவதாகவும், ஆங்கிலேயர் சிநேகத்தை நாடினவராய், இனிமேல் உண்மையும் விசுவாசமுள்ளவராய் நடந்துகொள்வதாகவும், அவ்விதமான தமது நல்லெண்ணத்திற்கு அறிகுறியாக தமது நாட்டின் கடற்கரையிலுள்ள சில துறைமுகங்களை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுப்பதாகவும் தெரிவித்தார். துறைமுகங்கள் கிடைப்பதால் சேனைகளின் போக்குவரவுக்கு அனுகூலமான காரியமென்பதை புணர்ந்த கர்னல்ஹெரன் கம்பெனியாரின் இஷ்டத்தைத் தெரிந்துகொள்ளாமலே சேதுபதியோடு சமாதான உடன்படிக்கை செய்தார். சேதுபதி, பாளையக்காரர்களை அடக்குவதற்கு உதவிச்சேனை ஒன்று கர்னல்ஹெரன் வசம் அனுப்பினார். கர்னல்ஹெரன் திருநெல்வேலிக்கு வந்து பாளையக்காரர்களில் சிலரையடக்கிக்கொஞ்சம் கப்பமும் வசூல் செய்துகொண்டிருக்கும்போது சேனை திருச்சிறைப்பள்ளிக்குத் திரும்பும்படி உத்தரவு வந்தது. சேனை திருச்சினாப்பள்ளிக்குப்போகவில்லை. ஏனென்றால் ஆவுடையாபுரமென்பதுதான் பூலித்தேவரின் பாளையப்பட்டு. ஆவுடையாபுரம் பாளையக்காரராகிய பூலித்தேவர் முகம்மதலியின் அதிகாரத்தைச் சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை. மேலத் திருநெல்வேலி எல்லையிலுள்ள நாடுகள் முழுவதும் பூலித்தேவரின் சொல்வருதிக்குள்ளிருந்தன. ஆகையால், அவரை அடக்கும்பொருட்டுச்சேனை அவருடைய தலைநகராகிய நெற்கட்டும்செவலை நோக்கிச்சென்றது. சேனைநெற்கட்டும்செவல்போய்ச்சேருமுன்னே கோட்டையைத் தகர்ப்பதற்குரிய பீரங்கிகள் கைவசத்தில் இல்லையென்றும், சேனை நெடுநாள் தங்கி

யிருக்க முடியாதென்றும், கர்னல்ஹெறான் என்பவருடைய துபாஷ் மூலமாயறிந்த பூலித்தேவர் சேனை வருவதைக்குறித்துக் கொஞ்சமேனும் சட்டைபண்ணவில்லை. பீரங்கிக் குண்டுகள் கோட்டைச் சுவர்களின்மேல் எறியப்பட்டபோதிலும் அவர் பயப்படவுமில்லை. ரூ. 20000 கொடுத்தால் கோட்டையைவிட்டுப் போய்விடுவதாகக் கர்னல்ஹெறான் மறுபடியும் பூலித்தேவருக்குச் செய்தியனுப்ப, அவர் ஒரு பைசாக்கூடக் கிடையாதென்று ஏளனமான பதிலளித்துவிட்டார். சேனை ஆகாரமுதலியவை இல்லாததால் மாவஸ்கானோடு மதுரை சென்றது.

சேனை மதுரை சென்ற விபரத்தை யறிந்த பாளையக்காரர்கள் ஒன்றுசேர்ந்து, மாவஸ்கானின் அதிகாரத்தைத் தொலைக்க முயற்சி செய்தார்கள். எப்படி யென்றால், ஆலம்கான் சந்தா சாஹிபுக்கு உதவியாகத் திருச்சினாப்பள்ளிக்குச் செல்லும்பொழுது திருநெல்வேலி, மதுரை நாடுகளை மூன்று பட்டாணி உத்யோகஸ்தர்கள் பார்வையில் ஒப்புவித்துவிட்டுப் போயிருந்தார். இவர்கள் யாரெனில், மியானு, முகையதீன்மீயா, நபிக்கான் கட்டாக் என்பவர்களே. பின்னால் இவர்கள் நவாப் முகம்மதலியின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டபோதிலும் கப்பங்களை மாப்பு, வஜாச் செய்தும், கோட்டைகள் நாடுகளை ரொக்கப் பணத்திற்கு விற்றும் இவ்விதமாய்ப் பணத்தையும் பாளையக்காரர்களின் நட்பையும் சம்பாதித்துக்கொண்டு காரியங்களைத் தங்கள் இஷ்டம்போல் நடத்திவந்தார்கள். இவ்விதமிருக்கையில் கர்னல் ஹெறான் தம்சேனையோடு தென்னாட்டிற்கு வர்வே மதுரையிலிருந்த மீயானு நத்தத்

திற்கும், முகைபதின்மீயா, நபிக்கான் கட்டாக் பூலித் தேவரிடமும் சென்றுவிட்டார்கள். முகியதீன் மீயாவி ஞல் திருவாங்கூர் ராஜாவுக்கு விற்கப்பட்ட களக்காட்டுப் பூமியை மாவஸ்கான் தம் சேனையை அனுப்பித் திரும்பப் பிடித்துக்கொண்டார். சேனை திருச்சிறைப்பள்ளிக்குச் சென்றுவிட்டதையறிந்த முகியதீன்மீயா களக்காட்டு நாட்டைத் திருப்பப் பிடிக்கும்படி திருவாங்கூர் ராஜாவுக்கு யோசனை சொல்லவே பூலித்தேவரும் இந்த யோசனைக்கு உடன்பட்டார். மாவஸ்கான் இதைக் கேள்விப்பட்டுத் திருநெல்வேலிக்குத் திரும்பிவந்து 2500 குதிரைப்படை போடும் 1000 காலாட்படையோடும் எதிரிகள் சேனைகளைக் களக்காட்டில் எதிர்க்க மாவஸ்கான் சேனைகள் முறியடிக் கப்பட்டன. ஓடிப்போன சேனைகள் எறிந்துவிட்டன வாகிய துப்பாக்கிகளைப் பூலித்தேவர் சைன்யங்கள் எடுத் துக்கொண்டார்கள். திருவாங்கூர் சேனை ஏதோ கார ணத்தினுல் திருவாங்கூருக்குத் திரும்பிவிடவே பூலித் தேவர் சைன்யங்கள் கோட்டைக்குள்ளும் வனங்களுக் குள்ளும் போய்விட்டார்கள். மாவஸ்கான் நெற்கட்டும் செவல் கோட்டையை முற்றுகைபோட்டார். இதன் பின் ஞல் நடந்த யுத்தத்திலும் மாவஸ்கான் சேனை தோல்வி யடைந்தது. அப்படியிருந்தும் அவர் நெற்கட்டும் செவல் முற்றுகையை நிறுத்தவில்லை. நவம்பர் மாச மத்திவரை முற்றுகை போட்டும் பிரயோஜனப்படாமல் சேனைகளுக் குச் சம்பளம் கொடுப்பதற்காகப் பணம் வசூல் செய்வ தற்கு திருநெல்வேலிக்குத் திரும்பி வந்தார். பூலித் தேவர், முகியதீன்மீயா, நபிக்கான் கட்டாக் என்பவர்கள் சமீபத்தில் தமக்குக் கிடைத்த ஜெயங்களால் தைரியங்

கொண்டு மீண்டும் பெரிய காரியங்களைச் செய்ய ஆலோசனை செய்தார்கள். சொக்கம்பட்டி முதலிய பாளையங்களடங்கிய மேலத்திருநெல்வேலி முழுவதும் பூலித்தேவரின் சாமர்த்தியத்தினால் அவர் எதுசெய்யவேண்டுமென்று சொன்னாரோ, அதன்படியே எல்லோரும் செய்துவந்தார்கள். ஆனால் கிழத் திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் இவர்களோடு சேர்ந்துகொள்ளவில்லை. நத்தம் பாளையக்காரர்கள் மட்டும் பூலித்தேவரோடு சேரச் சம்மதித்தார்கள். இவர்களின் முக்கிய நோக்கம் மதுரையைப் பிடிக்க வேண்டுமென்பதொன்றேதான். இதை எதிர்க்கவே கம்பேனியார் முகம்மது யூசுப்கான் வசம் ஒரு சேனையை அனுப்பினார்கள்.

இதற்கிடையில் பூலிதத்தேவர், நபிக்கான்கட்டாக், மூடிமியா, என்பவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் சைன்யங்களோடு மதுரைக்கும் நெற்கட்டும்செவலுக்கும் மத்தியிலுள்ள நடுமண்டலத்தில் பிரவேசித்து ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோட்டையைப் பிடித்தார்கள். இந்த வெற்றியான காரியம் மதுரைப் பாளையக்காரர்களையும் பூலித்தேவரோடு சேர்ந்துகொள்ளும்படி தூண்டுதல் செய்தது. இவர்களின் சேனைத்தொகையோ அதிகாலை 1000 குதிரைப் படைகளும், 25000 காலாட்படைகளுமாக நிரம்பப்பட்டிருந்தன. மதுரையைத் தாங்கள் பிடிக்க எத்தனிக்கு முன்னால் திருநெல்வேலியில்வைத்து மாவஸ்கானை அடித்துவிட வேண்டுமென்பதே அவர்கள் எண்ணம். மாவஸ்கானும் சேனைகளைத் தயார்செய்தார். மார்ச்சு மாதம் 21-ம் தேதி இரண்டு சேனைகளுக்கும் திருநெல்வேலியில்

ருந்து ஏழாவது மைலுக்குள் (அதாவது கங்கைகொண்டான் என்ற ஊருக்கருகில்) ஓர் இடத்தில் கடுமையான போர் நடந்தது. மூடெமியா தைரியமாய்க் குதிரைப்படைகளினால் எதிரிகளை எதிர்த்துத் தாக்கியசமயம் வெட்டுண்டு மடிந்தார். பாளையக்காரர்களுடைய சேனைகள் முறிந்தோடின. இந்தத் தோல்வி பாளையக்காரரின் கூட்டுறவை அடியோடு ஒழித்தது. பூலித்தேவரும் மற்றும் பாளையக்காரர்களும் தங்கள் தங்கள் நாட்டிற்குத் தீவிரமாய்ச் சென்றுவிட்டார்கள். இது சமயம் யூசுப்கான் மதுரைக்குவந்து அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்து அக்கோட்டையையும் பிடித்துக் கயத்தாற்றில் வெற்றிபெற்ற மாவஸ்கான் சேனையைச் சந்தித்தார். பின்பு யூசுப்கானும் மாவஸ்கானும் தங்கள் சேனைகளோடு பலபல இடங்களுக்குச்சென்று கப்பங்கொடாத பாளையக்காரர்களுடன் போர்செய்து கப்பத்தைக்கட்டும்படி செய்தார்கள். கொல்லங்கொண்டான் பாளையக்காரர் கப்பங்கொடுக்கமறுத்தார். ஆகையால் அவரினது கோட்டையினின்றும் அவர் துரத்தப்பட்டார். பூலித்தேவர் சமாதானத்திற்கு உடன்படுவதாகத் தெரிவித்தார். யூசுப்கான் ஸ்ரீவில்லிபுத்தூரையும் அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் காக்கும்பொருட்டு ஆறு கம்பெனிச்சிப்பாய்களை மாத்திரம் அங்கே நிறுத்திவிட்டுமாவஸ்கானை ஆர்க்காட்டுக்குப்போகும்படி அனுப்பிவிட்டு தம்முடனிருந்த 2000 சேனைகளோடு ஆகஸ்டுமீ 1-ம்டை திருநெல்வேலி வந்துசேர்ந்தார். மாவஸ்கான் மதுரை வந்து சேர்ந்தவுடன் தம்முடனிருந்த ஜமேதார்களுடன் மதுரையைக் கைவசப்படுத்திக்கொண்டு நவாப்பினால் தென்னாட்டிற்குக் கவர்னராக

நியமிக்கப்பட்டதாகவும், நாட்டிலுள்ள பாளையக்காரர்கள் தம்முடன் சேர்ந்து நடபடிக்கைகள் நடத்தவும், செய்தி யனுப்பினர். மதுரைக்கோட்டையிலிருந்து விரட்டப் பட்ட சிப்பாய்கள் இக்கலகத்தின் விபரத்தை யூசுப் கானுக்குத் தெரிவித்தார்கள். உடனே யூசுப்கான் மதுரைக் குத்தெற்கேயுள்ள சிக்கந்தர் மலையில் (திருப் பரங்குன்றம்) தன் சைன்யங்களுடன் ஆகஸ்டு-மீ 10-உ வந்திறங்கினர். பூலித்தேவரும் மற்றும் பாளையக்காரர் களும் தங்களோடு சேர்வதில் தாமதம் செய்வதைக்கண்ட ஜமேதார்கள் கம்பெனியாரோடு சமாதானம் செய்து கொள்வதற்குண்டான வழியைத்தேடினர்கள். எப்படி யாவது அவர்களோடு சமாதானம்செய்து மதுரையைக் காப்பாற்றும்படிக்கு காப்டன் கலியட்டுக்கு கம்பெனியார் அதிகாரம் கொடுத்தார்கள். சமாதானப்பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தும் மாவஸ்கான், பார்க்கதுல்லா, சியர்கான், முதலியோரின் நயமான பேச்சுகளினுல் ஜமே தார்கள் அவர்கள்வைத்த வலையில் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் போக்குப்படியே காரியங்களை நடத்துவதற் கிசைந்தார்கள். யூசுப்கானுக்கும்திருநெல்வேலிக்குத்தகை தாராகிய முதலியாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு வளர்ந் துவிட்டதால் இது பாளையக்காரர்கள் எதிரிகளுடன் சேர்வதற்கு ஏதுவாயிற்று. இவ்விதமாய்ச் சேர்ந்த எதிரி களின் சேனைத்தொகைஇப்பொழுது 10000 ஆயின. இச் சேனைகள் மதுரைக்குத்தெற்கே கட்டப்பொம்ம நாயக்கர் காடுகளில் புகுந்து இரவில் தந்திரமாய் திருநெல்வேலிக் குள் பிரவேசித்து அங்கே இரண்டு நாட்களாகத் தங்கி யிருந்து நாட்டைக் கொள்ளையடித்தன. யூசுப்கான்

இதைக் கேள்விப்பட்டுத் தம் சேனையுடன் புறப்பட்டு வந்து டிசம்பர்·மீ 16-ந்தேதி கெங்காதரமென்ற வூரில் வைத்து இரண்டு சேனைகளுக்கும் நடந்த சண்டையில் யூசுப்கானே ஜெயம்பெற்ருர். அவர் தாமே நேரில் கொள்ளையடிக்கப்பட்ட நாடுகளுக்குப்போய்க் குடிகளைத் தைரியப்படுத்தினாரதலின், பாளையக்காரர்கள் தங்கள் நாடுகளுக்கும், பர்க்கதுல்லா தமது குதிரைப் பட்டாளங்களோடு மதுரைக்கும் திரும்பிவிட்டார்கள். இவ்வளவு காரியங்கள் நடந்துங்கூட காப்டனகலியட்டுக்கும் ஜமேதார்களுக்கும் சமாதானம் பண்ணிக்கொள்வதிலேயே நோக்கமிருந்தது. ஆனல் பர்க்கதுல்லாவின் சதியாலோசனையே மேற்கொண்டுவிட்டது. மாவஸ்கானுக்கு உதவிசெய்யும் பொருட்டு ஐதர்அலிக்கும், திருவாங்கூர் ராஜாவுக்கும், பாளையக்காரர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. சில நாட்களுக்குப் பிறகு பர்க்கதுல்லாவும் நபிக்கான் கட்டாக்கும் பூலித்தேவரிடம் போனார்கள். இதையறிந்த யூசுப்கான் பாளையக்காரர்கள் எவர்களாவது மதுரையிலுள்ள கலகக்காரர்களோடு சேராதபடி பயமுறுத்துவதற்காகத் தம் சேனைகளோடு ஸ்ரீவில்லிபுத்தூரில் தங்கினர். பூலித்தேவரின் ஆட்களில் ஐந்துபேர் குதிரைகளைக் களவாடிய காரணத்தினிமித்தம் அவர்கள் யூசுப்கான் உத்திரவுப்படி பீரங்கிவாயில் வைத்துக் கொளுத்தப்பட்டார்கள். இந்தக் காரணத்தினுல்தான் பூலித்தேவர் மாவஸ்கானேடு சேரவேண்டியதாயிற்று. ஆனல், மாவஸ்கான் ஸ்திரமான மனத்தையுடையவரல்லராதலின், மதுரையில் அவ ரிருந்துகொண்டிருக்கத் தாம் அவருக்காக நடபடிக்கைகளைநடத்துவது பிரயோஜனமற்றதாக முடியும் என்றும்,

ஆதலின், அவர் தம்முடன் நெற்கட்டும் செவிலிலேயே இருக்க வேண்டுமென்றும் பூலித்தேவர் பார்க்கதுல்லா விடம் சொல்ல அதன்படியே மாவஸ்கான் 500 குதிரைப் பட்டாளங்களோடு டிசம்பர் மாதக் கடைசியில் நெற்கட்டும்செவல் வந்துசேர்ந்தார். திருநெல்வேலி நாட்டில் 1756-ம் வருஷத்தில் நடந்த சம்பவங்கள் இத்துடன் முடிவடைகின்றன.

1757-ம் வருஷம் மார்ச்சு மாசம் காப்டன்கலியட்டு தம் சேனைகளோடு திருச்சிறைப்பள்ளியிலிருந்து புறப்பட்டுச் சிவகங்கைப் பாளையக்காரர் எல்லையில் வந்து இறங்கினர். சிவகங்கைப் பாளையக்காரர் முதலாவது தமது நாட்டின் வழியாகச் சேனைகள் கடந்து செல்லக் கூடாதென்று தடுத்தாராயினும், பின்னால் காப்டன் கலியட் அவரைச் சமாதானப்படுத்தி, அவர் நாட்டின்வழியாகவே சென்று பாளச்சிவரையும் சிவகங்கை ராமனாதபுரம் பாளையக்காரர்கள் தகுந்த ஒத்தாசை செய்யச் சேனைகள் பாளச்சியைவிட்டுப் புறப்பட்டுத் திருநெல்வேலி நோக்கிச் சென்றன. மாவஸ்கான் நெற்கட்டும் செவலுக்கு வந்த உடனே பூலித்தேவரும் அவரோடு சேர்ந்தவர்களும் ஜனவரி மாசம் மத்தியில் யுத்தத்திற்குத் தயாரானார்கள். அவர்கள் சேனை 10000 காலாட் படையும் பார்க்கதுல்லாவின் கீழ் 1000 குதிரைப் படையுமேதான். இந்தச் சேனைத் தலைவர்கள் திருநெல்வேலி நாட்டின் கீழ்பாகத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முகப்பில் வந்திறங்கிக் கட்டபொம்ம நாய்க்கரைத் தங்களோடு சேரும்படி கட்டாயப்படுத்தினார்கள்.

அதற்கிணங்கிக் கட்டபொம்ம நாயக்கர் சேர்ந்துகொண்டாராயினும், எட்டையாபுரம் பாளையக்காரர் இணங்காமல் சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்திவிட்டார். பாளையக்காரரின் சேனைகள் கொள்ளையடித்துக்கொண்டு திருநெல்வேலிக்குப் போயின. அங்கே பூச்சியப்ப நாயக்கரின் தலைமையின்கீழ் கம்பெனிச் சிப்பாய்கள் நின்று பாளையக்காரர்களின் சேனைகளை எதிர்த்தார்கள். அதனால் திருநெல்வேலியைக் கடந்து வடபக்கமாகவந்து எட்டையாபுரத்தார் தங்களுக்கு உதவிசெய்யாததால் அவருடைய நாட்டையும் கொள்ளையிட்டு ஒரு பகுதிச் சேனை அங்கே அகப்பட்ட கொள்ளைப் பொருள்களோடு நெற்கட்டும் செவலுக்கு வந்து சேர்ந்தது. யூசுப்கானும் முதலியாரும் காப்டன் கலியட்டின் வரவை எதிர்பார்த்து ஸ்ரீவில்லிபுத்தூரில் தங்கியிருந்தார்கள். எதிரிகள் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து திருநெல்வேலிக்குத் திரும்பிவருகிறார்களென்று கேள்விப்பட்ட யூசுப்கான் அவர்களை வழியில் மறிக்கும்படி பிரயத்தனம் செய்யுமுன் எதிரிகள் நெற்கட்டுச்செவல் போய்ச்சேர்ந்து விட்டார்கள். ஆதலினால் காப்டன்கலியட்டிடமிருந்து தகவல்கிடைக்கும் வரைக்கும் திருநெல்வேலிக்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் மத்தியிலுள்ள நாடுகளில் தங்கியிருப்பதே பொருத்தமெனக் கண்ட யூசுப்கான் அங்கே தங்கினார். எதிரிகள் யூசுப்கானின் சேனைகள் அதிக தூரத்திலிருக்கும் நிலையறிந்து வெளிக்கிளம்பி ஆழ்வார்குறிச்சியை முற்றுகைபோட்டு அதைப்பிடித்து அங்கிருந்த முதலியார் மருமகனாகிய அழகப்ப முதலியாரைக் கைதியாக்கி நெற்கட்டும் செவலுக்குக் கொண்டுபோனார்கள்.

இது தெரிந்தவுடனே யூசுப்கான் தமது சேனைகளை யும் தம்முடன் சேர்ந்த பாளையக்காரர் சேனைகளையும் ஒரு சேரத் தயாரித்து ஆழ்வார்குறிச்சிக்குப்போய் எதிரிக ளோடு யுத்தஞ்செய்து ஆழ்வார்குறிச்சிக் கோட்டையைத் திரும்பப்பிடித்தார். பின்பு சொக்கன்பட்டிப் பாளையக் காரர்மேல் படையெடுத்து அந்தக் கோட்டையையும் பிடித்து மார்ச்சுமீ 17-ம் தேதி திருநெல்வேலிக்கு வந்து அங்கு வந்திறங்கிய காப்டன்கலியட்டின் சேனையைச் சந் தித்தார். இவ்வளவு சேனைகள் கைவசமிருந்துங்கூட பணக்கஷ்டத்தினால் அடங்காத பாளையக்காரர்கள்மேல் யுத்த நடபடிக்கைகள் எடுத்துக்கொள்ளக்கொஞ்சம் கால தாமதமாயிற்று. பூலித்தேவர் மைசூரோடு ஒரு உடன் படிக்கை செய்யப் பிரயத்தனப்படுவதை காப்டன்கலியட் அறிந்து மதுரையைத் தீவிரமாய்ப் பிடிக்கமுயன்றும் கோட்டைகளைத் தகர்க்கும் பீரங்கிகளில்லாததால் அந்த முயற்சி முடிவடையாமற் போயிற்று. திருச்சினாப்பள் ளிக்கு உடனே புறப்பட்டுவரும்படி காப்டன்கலியட்டுக்கு உத்திரவுவர அவர் திரும்பிப்போய்விட்டார். காப்டன் கலியட் திருச்சினாப்பள்ளிக்கு திரும்பிவிட்டாரென்று தெரிந்தவுடனே பூலித்தேவரும் மாவஸ்கானும் மற்றும் அவர்களோடுசேர்ந்த பாளையக்காரர்களும் 10000 சேனை களைத் திரட்டிக்கொண்டுவந்து திருநெல்வேலியைப்பிடிக்க எத்தனித்தும் அது முடியவில்லை. 1757-ம் வருஷம் மதுரையைக் காப்டன்கலியட் பிடித்துவிட்டார்.

பிரஞ்சுக்காரர்கள் கர்நாடகத்தில் வரவரப் பலத்துக் கொண்டு வருதலைக்கண்டு பாளையக்காரராகிய பூலித்தேவர்

வடகரைப் பாளையக்காரர் முதலியோர்கள் மறுபடியும் ஒன்றுசேர்ந்து சாத்தூரில் தங்கள் பாதுகாப்புச் சேனை ஒன்றை வைத்தார்கள். ஐதர்அலி மதுரையின்மேல் படையெடுப்பதை நிறுத்திவிட்டவுடனே யூசுப்கான் சாத்தூரைப்பிடித்துப்பூலித்தேவர் பாதுகாப்புச் சேனையையும் துரத்திவிட்டார். பூலித்தேவரின் சேனைகள் சாத்தூருக்கும் திருநெல்வேலிக்கும் இடையிலுள்ள இடங்களைப் பிடித்து மற்றப்பாளையக்காரர்களையும் தங்களோடுசேரும்படி பயமுறுத்தினார்கள். ஊத்துமலைப்பாளையக்காரர் அவ்விதம் செய்யச் சம்மதியாதிருந்தனராதலின், அவரையும் துன்புறுத்தினார்கள். திருநெல்வேலி, பாளையங்கோட்டை முதலிய இடங்களையும் பிடித்துவிடுவதாகப் பெருமை பேசினார்கள். யூசுப்கான் தமது சேனைகளுடன் வந்தபோது அவரை எதிர்க்க அவர்களால் முடியவில்லை. வடகரைநாட்டைப் படையெடுத்துப் பட்டணங்களைத் தீக்கொளுத்தி வடகரைக் கோட்டையைப் பிடிக்க எத்தனிக்கும் தருணத்தில் முகம்மது யூசுப்கான் தமது சேனைகளோடு வேறொருமுக்கியமான காரியமாய்ச் செல்லவேண்டியிருக்கின்றதென உத்திரவு வந்தது.

1759-ம்ஹு மார்ச்சுமீ திருநெல்வேலி ஜில்லாவில் குழப்பங்கள் அதிகரிக்கப் பூலித்தேவரும் மாவஸ்கானும் திருநெல்வேலியைப் பிடித்தார்கள். பாளையங்கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. டிசம்பர்மாதத்தில் யூசுப்கான் திரும்பிவந்ததும் பூலித்தேவரும் மற்றைப் பாளையக்காரர்களும் அவரைஎதிர்த்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரும் இவர்களோடு சேர்ந்துகொண்டார்.

யூசுப்கான் மதுரையிலிருந்து ஜூலைமாதம் 2-ம்தேதிபுறப் பட்டுக் கொல்லங்கொண்டான் வந்துசேர்ந்து இதுவரை யும் பூலித்தேவரின் சொல்வருதிக்குள்ளிருந்த இக்கொல் லங்கொண்டானைப் பிடித்து, எட்டையாபுரம் நாடுகளையும் கொள்ளைபடித்துக் கட்டபொம்மநாயக்கரையும் எட்டை யாபுரம் பாளையக்காரரையும் பூலித்தேவருடன் கலந்து கொள்ளாதபடி செய்தார். திருநெல்வேலிக்கு வடக்கே 30 மைல் தூரத்திலுள்ள நாடு பாளையக்காரர்கள் தங்களிஷ் டம்போல் கொள்ளையடிக்ககூடிய இடமாயிருந்தது. யூசுப் கான் ஊத்துமலையையும் பிடித்துச் சுரண்டையில் கொஞ் சம் பாதுகாப்புச் சேனையும் வைத்தார். யூசுப்கான் திரு நெல்வேலிக்குத் திரும்பினவுடனே பூலித்தேவரும் வட கரைப் பாளையக்காரரும் சுரண்டையைப்பிடித்து சிலரைக் கொன்று, மற்றும்சிலரைக் கைதிகளாக்கினார்கள். யூசுப் கான் மறுபடியும் சேனையை அனுப்பிச் சுரண்டையைப் பிடிக்கவேண்டியதாயிற்று. வடகரைப்பாளையக்காரரின்சே னைகள் திருவாங்கூர்நாட்டைக் கொள்ளையடித்த காரணத் தினால் வடகரை பாளையக்காரருக்கும் திருவாங்கூர் ராஜா வுக்கும் விரோதம் இருந்துகொண்டுஇருந்தது. அதனால் யூசுப்கான்திருவாங்கூர் ராஜாவோடு சமாதானம்பேசி அத ன்முடிவாகத் திருவாங்கூர் ராஜா திருநெல்வேலித் தென் பாகத்தை இனிமேல் கொள்ளையடிப்பதில்லையென்றும், யூசுப்கான் வடகரைப் பாளையக்காரருக்கும் பூலித் தேவ ருக்கும் விரோதமாக எடுத்துக்கொள்ளப்போகும் நட படிக்கைகளில் தாம் ஒரு பெரிய உதவிச்சேனை அனுப்பி ஒத்தாசை செய்வதாகவும் வாக்களித்தார். அதன்படியே செப்டம்பர்மீ 30௳ திருவாங்கூர் ராஜாவால் அனுப்பி

வைத்த 1000 பேர் துப்பாக்கி மருந்துகள் சகிதம் யூசுப் கான் சேனையோடு சேர்ந்து வடகரைக்கு விரோதமாய்ப் போனார்கள். போகும் வழியில் மறுபடியும் திருவாங்கூரி லிருந்து அனுப்பிவைத்த 10000 சேனையும் வந்து சேர்ந் தன. எல்லாச் சேனைகளும் கலந்து வடகரையைத் தாக்க வடகரைப் பாளையக்காரர் ஒருநாள் மட்டும் அவர்களு டைய சேனையை எதிர்த்துப் பார்த்தார். முடியாததினால் மறுநாள் இராத்திரியே தம்கோட்டையைவிட்டு அகன்று நெற்கட்டும் செவலுக்குப்போய் பூலித்தேவரோடுசேர்ந்து கொண்டார். காரியம் இவ்விதமாக இருக்கையில் பூலித் தேவர் திருவாங்கூர் ராஜாவை யூசுப்கானை விட்டுப் பிரித் துவிட யோசனைபண்ணி, திருவாங்கூர் ராஜா மாவஸ்கா னோடு சேர்ந்துகொண்டால், திருநெல்வேலியில் சிலபாகங் களைவிட்டுக் கொடுப்பதாகத் தந்திரமான ஒருசெய்தியைத் திருவாங்கூர்ராஜாவுக்கு அனுப்பினார். இந்தச்செய்தியைத் திருவாங்கூர் ராஜா யூசுப்கானுக்குக் காண்பித்துத் தமக் குக் களக்காட்டையும் அதன் பக்கத்திலுள்ள நாடுகளை யும் கொடுக்கும்படி கேட்டார். இதை மறுப்பதானால் திருவாங்கூர் ராஜாவின் உதவியைத்தாம் இழந்துபோக நேரிடுவதையும், தமக்கு அனுப்பப்பட்ட பீரங்கிகள் கட லில் அமிழ்ந்துபோன விவரத்தையும், நாட்டிலுள்ளமற்றப் பாளையக்காரரின்சேனைகள் பூலித்தேவருக்கு உதவிசெய்ய நெற்கட்டும் செவலுக்குக் கூட்டங்கூட்டமாய் போகுந் தடபுடல்களையும், தாம் தனிமையாக நின்று பூலித் தேவரை அடக்க முயற்சிப்பது முற்றுப்பெறாது என்ப தையும் நன்குணர்ந்தவராகிய யூசுப்கான் என்பவர் திரு வாங்கூர் ராஜாவின் எண்ணப்படியே செய்து முடிப்ப

தாக வாக்களித்தார். நவம்பர்-மீ 6உ இரண்டு சேனை களும் எசல்தேவர் கோட்டையை முற்றுகை போட்டார்கள். எதிரிகள் மூன்று நாட்களாய் எதிர்த்து நின்று பிறகு பின்வாங்கி நெற்கட்டும் செவல்போய்ச் சேர்ந்தார்கள். மருந்து முதலான யுத்த தளவாடங்கள் வந்து சேர்வதை யூசுப்கான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். நவம்பர்மீ 20உ கிட்டத்தட்ட 6000 பாளையக்காரர்களின் சேனைகள் திருவாங்கூர் சேனைகளைத் தாக்கினார்கள். யூசுப்கான் அனுப்பிய உதவிச் சேனை வந்துசேருமுன் எதிரிகள் திருவாங்கூர்சேனைகளில் 100 பேரை மடிவித்து விட்டு ஓடிப்போனார்கள். தாம் எதிர்பார்த்த யுத்தத் தளவாடங்கள் வந்துசேர்ந்தவுடனே யூசுப்கான் தம் சேனையோடு பூலித்தேவரின் மற்றொரு கோட்டையாகிய வாசுதேவநல்லூர் வந்திறங்கினார்.

இக்கோட்டை மலையடிவாரத்திலுள்ளது. தென் திசையிலும் மேல் திசையிலும் அடர்ந்த வனங்கள் சூழ்ந்திருந்தன. கிழக்கும் வடக்கும் சமவெளி. அவ்விடத்தில் பயிர்கள் செழிப்பாகவளரும். மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து வாசுதேவநல்லூர் மூன்றுமைல் தூரமிருக்கும். இதில் இரண்டுமைல் தூரம்வரை அடர்ந்தகாடுகள். இக்காடுகள்கோட்டையின்மேல் பக்கத்திலும் தென்பக்கத்திலும் 1300 கெஜத்தூரத்திலும் வடபாகத்தில் இன்னும் அதிக தூரத்திலுமிருந்தன. கோட்டையிலிருந்து 40 கெஜத் தூரத்தில் ஒரு விசாலமான பேட்டை இருந்தது அதில் ஆயிரம்பேர் வசித்தனர். பேட்டையையும் கோட்டையையும் அடர்ந்த முள்வேலி சுற்றியிருந்தது. அக்

கோட்டையின் விஸ்தீர்ணம் 650 × 300 கெஜம் இருக்கும். அது களிமண்ணால் கட்டப்பட்டது. செங்கலைப் போல் கடினமாயிருக்கும். நான்கு பெரிய சதுரக் கோபுரங்கள் நான்கு மூலைகளிலுமிருந்தன. 'வேறு சிறு கோபுரங்களும் சுற்றிலுமிருந்தன. ஒவ்வொரு கோபுரமும் கோட்டைச் சுவருக்கு வெளியே தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தது. அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் சின்னச்சின்னச் சுவர்களிருந்தன. அக்கோபுரங்களின்மேலிருந்து கோட்டையின் உட்பாகத்தையும் காவல்செய்யலாம். கோபுரத்துக்கு வழி சரிவானதாயும் 2 அடி அகலமுள்ளதாகவுமிருந்தது. கைபிடிச் சுவரில் அமைத்திருந்த ஒரு சிறு வாசல் வழியாய்த்தான் கோபுரத்தினுள் நுழையலாம். கோட்டைச்சுவரின் உட்பக்கம் சரிவாக இருந்தது. இது சண்டைக்காலத்தில் கோட்டையிலுள்ளவர்கள் கோட்டைச் சுவறிலேறி எதிரிகளை எதிர்ப்பதற்கு மிகவும் இலகுவாகவிருக்கும். கோபுரங்களின் கைபிடிச்சுவர்களில் சிறு ஆயுதப்பிரயோகங்கள் செய்ய வட்டத் துவாரங்களிடப்பட்டிருந்தன. வாசுதேவநல்லூரைப் பிடிக்கும்படிவந்த சேனை மிகவும் பெரிதானதால் கோட்டையைக் காப்பதற்கு ஆயிரக்கணக்கான (Colleries) பாளையக்காரர்கள் உதவிக்கு வந்தார்கள். கோட்டையைப் பாதுகாப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 800 பேரைத்தவிர மற்றவர்களெல்லோரும் காட்டிலிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு இரவிலும் காட்டிலிருந்து புறப்பட்டுவந்து சண்டை செய்வார்கள். இப்படி இருபது நாட்களாக சண்டை நடந்துகொண்டிருந்தது. முகம்மது யூசுப்கான் கொண்டுவந்த பீரங்கிகளில்

ஒன்றுதான் 18 பவுண்டர் பீரங்கி. மற்றவைமெல்லாம் 6 பவுண்டர்களும் அதற்கு கீழ்ப்பட்டவைகளுமாயிருந்தன. 18 பவுண்டர் பீரங்கி சுடஆரம்பித்த மறுநாளிலே வெடித்துவிட்டது. எல்லா மருந்துகளும் காலியாகிவிட்டன. கோபுரத்தின் கைபிடிச்சுவரில் ஒருபாகம் சுடப்பட்டுஇடிந்துவிழுந்தது. மறுநாளில் கோட்டையைத் தாக்கவேண்டுமென்று யூசுப்கான் தீர்மானித்தார். தெரிந்தெடுக்கப்பட்ட 3000 பேரைப் பூலித்தேவர் நெற்கட்டும்செவலிலிருந்துகொண்டு வந்திருந்தார். காட்டிலிருந்த சேனைகளும் இவர்களோடு சேர்ந்து யூசுப்கானின் சேனைக்குள் புகுந்து காவல்படைகளை வெட்டி நாசம் செய்தார்கள். யூசுப்கான் ஒரு பெரிய சேனையை மறுபடியும் அனுப்பினுர். ஆனல் கோட்டைக்குள்ளிருந்தவர்கள் வெளியே சங்குநாதங்களால் பூலித்தேவரின் வெற்றியை அறிந்து அதிக உற்சாகங்கொண்டு தைரியமாகக் கோட்டையைக் காத்தார்கள். முகம்மதுயூசுப்கான் தான் கொண்டுவந்த மருந்து முதலியவைகளெல்லாம் செலவாகிவிட்டபடியால் இனித்தாக்குவது தப்பிதமென்று பின்வாங்கினுர். அவர் சேனைகளிலும், திருவாங்கூர் சேனைகளிலும், 200 பேர் மாண்டார்கள். எதிரிகளிலும் அநேகர் மாண்டனர். மறுநாள் செங்கோட்டை வழியாய்த் திருவாங்கூர்ச் சேனைகளை அனுப்பிவிட்டுத் தமது சேனையோடும் தொண்டைமான், பெரியமறவர், சின்ன மறவர் சேனைகளோடும் திருநெல்வேலிக்குத் திரும்பிவிட்டார். வாசுதேவநல்லூரிலிருந்து பின்வாங்கியதன் பிறகு பாளையக்காரரின் பலமான கோட்டைகளைப் பிடிக்க யூசுப்கான் சக்தியற்றிருந்தார். மாவஸ்கான் நெற்

கட்டும் செவலை விட்டுப் பிரிந்து ஆர்க்காடு போய், தம்முடைய சகோதரராகிய நவாப் முகம்மதலியுடன் சமாதானமாகிவிட்டார். அதனால் பூலித்தேவர் நவாப்பின் அதிகாரத்தை எதிர்க்கவில்லை. முகம்மது யூசுப்கான் பெரும்பெரும் பாளையக்காரரில் சிலரைத் தம்வசப்படுத்திக்கொண்டதல்லாமலும், சிறுசிறு தலைவர்களின் கீழ்வந்த 2000 பாளையக்காரர்களையும் தமது ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார். பாளையக்காரர்களின் கொள்ளைகள் நடந்துகொண்டே இருந்தன. பூலித்தேவரை அடக்க யூசுப்கான் மறுபடியும் ஒரு சேனை தயார்செய்து நெற்கட்டும் செவலிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள குன்றின் அடிவாரத்தில் வந்து இறங்கினர். அப்போது அவரிடம் அநேகம் 18 பவுண்டர் பீரங்கிகளிருந்தன. ஆனால் குண்டுகளாவது மருந்துகளாவது ஒன்றும் கைவசத்தில்லை. துப்பாக்கி மருந்தும் மிகக் குறைவாக இருந்தது. இந்தச் சாமான்கள் வந்துசேருமுன்னமேயே நெற்கட்டும் செவலைத்தாக்க ஆரம்பித்தார். பூலித்தேவர் சேனைகள் யூசுப்கான் சேனைகளை எதிர்த்தன. பாளையக்காரரில் சுமார் 1000 பேர்கள் கீழே விழுந்தும் சண்டையின் மும்மரம் ஓயவில்லை. யூசுப்கான் சேனைகளிலும் 100 பேர் மாண்டனர். 70 பேர் காயமடைந்தனர்.

அத்தியாயம் 13.

முகம்மதியர்-ஆங்கிலேயர்-மறவர்.

யூசுப்கான் தன் ஆளுகையின் முதல் மூன்று வருஷங்களிலும் பாளையக்காரர்களோடு அடிக்கடி சண்டை பண்ணி பலவிதமான ஜெயங்களை அடையப்பெற்றார். கர்னாடகத்தில் இவருடைய அபூர்வமான யுத்தம் நடந்தும் திறமையை உபயோகிக்க அவசியம் ஏற்பட்டபடியால், திருநெல்வேலி நாட்டைப் பாளையக்காரர் கொள்ளையடிப்பதை யடக்கமுடியாமற் போயிற்று. யூசுப்கான் சென்னை முற்றுகையிலிருந்து திரும்பிவந்தவுடனே திருவாங்கூர் ராஜாவைப்பாளையக்காரரினின்றும் பிரித்ததுமல்லாமல், அவர்களைத் தண்டிக்கவும் வேண்டிய உதவியைத் திருவாங்கூர் ராஜாவிடமிருந்து பெற்றுக்கொண்டார். பாளையக்காரர்களையும் தமது திறமையால் அடக்கிவிட்டார். பூலித் தேவர் கோட்டைகளாகிய பனையூர், வாசுதேவநல்லூர், நெற்கட்டும் செவல் ஆகிய மூன்று இடங்களையும் பிடித்துப் பூலித் தேவரையும் பணியும்படி செய்தார். அவர் காலத்தில் பாளையக்காரர்கள் தங்கள் கப்பங்களை ஒழுங்காய்ச் செலுத்தினார்கள். கொள்ளையடிப்பு நின்றுபோய்விட்டது. சர்க்கார் நிலவருமானமும் அதிகப்பட்டது. இக்காரியங்களின் உண்மையை அவர் 1761-ம்௵ முதல் 1764 ம்௵ வரை நடத்தின ஜமாபந்திகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். புதுச்

சேரியை இங்கிலீஷ்காரர் 1761ல் பிடித்த கோஞ்செய்கை பாளையக்காரர்களை நடுங்கும்படி செய்தது. அதுவுமல்லாமல் மாவூஸ்கான் திருநெல்வேலியைவிட்டு ஆர்க்காடு போய் நவாப்போடு சமாதானமாகிவிட்டதால் பாளையக்காரர்கள் கிழ்ப்படியாமை காண்பிப்பதற்குத் தகுந்த காரணமுமில்லாமற் போயிற்று. அதனால் தேசத்தில் அநேக வருஷங்கள் அமைதி குடிகொண்டிருந்தது. முகம்மது யூசுப்கான் வசம் பலத்த சேனையிருந்ததால் பாளையக்காரர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து வந்தாலும் யூசுப்கானை எதிர்ப்பது அசாத்தியமான காரியமாக இருந்தது. 1761-ம் வருஷ யூசுப்கான் நவாப்புக்கு விரோதமாகக் கலகம்பண்ணி மடிந்தார்.

1766-ஆறு கர்னல் டோனல்டு காம்பல் (Colonel Donald Campbell) மதுரை திருநெல்வேலி நாடுகளுக்கு தளகர்த்தனாகவிருந்தபொழுது காப்டன் பிரிஸ்ச்மான் (Captain Frischman) பாளையங்கோட்டையில் தளகர்த்தனாக இருந்தார். யூசுப்கானின் பலமான ஆளுகையினால் உண்டான நல்லகாரியங்கள் நிலைபெறவில்லை. அதோடு பாளையக்காரர்களை யடக்கி, கிஸ்தி வசூல் செய்வதற்குப் போதுமான சைன்யங்களில்லை. அவைகள் ஐதர் அலியை எதிர்ப்பதற்கு அனுப்பப்பட்டுவிட்டன. காப்டன் பிரிஸ்ச்மான் தம்மோடு இருக்கும் நவாப் சேனைகள் சண்டைசெய்ய அவ்வளவு தகுதி இல்லாதவைகளென்றும், நாட்டைக்கொள்ளையடித்துக்கொண்டு திரியும் 20000 பாளையக்காரர் சேனைகளையடக்கக் கம்பெனியில் சம்பளங் கொடுத்துப் பழக்குவிக்கப்பட்ட 2000 சேனை ஒன்று

இருந்தால் போதுமென்றும், என்சைன்பவுல்சம் (Ensign Foulsom) பாளையக்காரர்களால் முற்றுகை போடப்பட்ட வர்கதேவகல்லூரைக்காப்பாற்ற முயன்றும் அது முடியாமற்போயிற்றென்றும், 12000 பாளையக்காரர்களோடு பவுல்சம் என்பவர் சண்டைபோட்டுப் பின்பு தன் கோட்டைக்குப் பின்வாங்கி விட்டாரென்றும், கம்பெனியாருக்குத் தெரிவித்தார். இதன்பேரில் கம்பெனியார், சேனைகள் திரும்பின சமயங்களிலெல்லாம் பாளையக்காரர்கள் கொள்ளையடிப்பதை விடாமல் நடத்துவதைப்பற்றி வருத்தப்படுவதாகவும், இதுவிஷயமாய் சேனைகளின் சம்பளத்தையும் பயிற்சியையும் தங்கள் வசம் ஒப்பிவிக்கும்படி பலமுறை கேட்டும் நவாப் இன்னும் சம்மதம் கொடுக்கவில்லை யென்றும், அதைப்பற்றித் திரும்ப முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகவும் பதிலனுப்பினார்கள்.

1766-ம்வருஷ கடைசியில் மேஜர் பிளின்ட் (Major Flint) கொல்லங்கொண்டான் கோட்டையைப் பிடிக்க முயன்றும், அந்தக் கோட்டைக்கு எல்லா பாளையக்காரர்களும் உதவிக்குச் சேனையனுப்பிக் கோட்டையைத் தீரத்தோடு காத்ததினால் அதைப்பிடிக்கமுடியாமல் கொஞ்சம் சிரமத்தோடு திரும்பவேண்டியதாயிற்று. இந்தத்தோல்வி பாளையக்காரர்களுக்கு அதிக உற்சாகத்தைக்கொடுக்குமாதலால் பாஞ்சாலங்குறிச்சியைப் படையெடுப்பதில் வேண்டிய யுத்ததளவாடங்களைப் போதுமானபடி அனுப்பிப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முற்றுகை போடப்பட்டது. இதிலும் கம்பெனியார் சேனைகளில்கொஞ்சம் சேதமடைந்தும், எதிரிகள்கோட்டையைவிட்டும் இரவில்

ஓடிப்போய்விட்டார்கள். இந்தச் செய்தி சர்க்காருக்குத் தெரிந்தவுடனே, அடங்காப் பாளையக்காரர்களை அடக்க ஒரு போதுமான சைன்யத்தை மதுரை திருநெல்வேலி நாடுகளுக்கு அனுப்பத் தீர்மானஞ்செய்தார்கள். பாளையக்காரர்களை எளிதில் அடக்கிவிடலாமென்று கம்பெனியார் எதிர்பார்த்தது அவ்வளவு இலேசான காரியமல்லவென்றும், நாட்டின் ஆளுகை இரு திறத்தார் கையில் இருப்பதுதான் இவ்வளவு தீங்குக்கும் காரணமென்றும், ஒழுங்குக்கேடான இவ்வித ஆளுகை ஒழிந்தால்தான் க்ஷேமமுண்டாகுமென்றும் உணர்ந்தார்கள். இதற்காக நாட்டின் சீரை அறிந்த ஒருவரைத் தளகர்த்தராக நியமித்தார்கள். அவர்தான் கர்னல்டோனல்டுகாம்பல். இவர் 1765ல் திருநெல்வேலிக்கு ஒரு சேனையைக் கொண்டுபோனவராகவும் இருந்தார்.

இவர் கருதிய முதல்வேலை கொல்லங்கொண்டானைப் பிடிப்பதென்பதே. 1767ம் ஞு ஏப்ரல்மீ 26-ம் தேதி தம்சேனையோடு கொல்லங்கொண்டான் கோட்டைமுன் வந்து சேர்ந்தார். இரண்டாவதாகக் கோட்டையைப் பாதுகாக்கும் பாளையக்காரர்களைத் தப்பி ஓடமுடியாமல் செய்யவேண்டுமென்பது. இவர் இது விஷயத்தில் வேண்டிய சிரத்தை எடுத்துக்கொண்டபோதிலும், மேமீ 1 தேதியில் அவர் கோட்டையின்மேல் பீரங்கிக்குண்டுகளை எறியும் சமயம் கோட்டைக்குள் ஒருவருமில்லையென்று தெரிந்தார். இது இவருக்கு ஒருபெரிய ஏமாற்றம். ஏனென்றால், தலைவர்களைப் பிடிக்காமல் கோட்டையைப் பிடித்து அழித்தாலும், சேனை அவ்விடம்விட்டு நகர்ந்தவுடனே

மறுபடியும் தலைவர்களால் குறைந்தசெலவு செய்து புதுக் கோட்டைகளை அமைத்துவிடுவார்கள். இதற்கப்பால் 3-ம்உ இவர் கொல்லங்கொண்டானைவிட்டுச் சேத்தூர் வந்துசேர்ந்தார். அங்கே எதிரிகள் கோட்டைக்குவெளி யேநின்று கம்பெனியின் சிப்பாய்களுக்குத் தொந்தரவு கொடுத்தார்கள். அவர்களைக் கோட்டைக்குள் போகும் படியடித்ததில் இருபக்கமும் சேதமுண்டாயிற்று. கர்னல்காம்பல் கோட்டைக்கு வெளியே பீரங்கிகளை ஏற்றிக் கோட்டையைச் சுற்றிலும் காவல்காரர்களை வைத்து மற்றும் எதிரிகளைத் தப்பவிடாதபடி எடுத்துக்கொள்ளப் பட்ட முயற்சிகள் முடிவடையுமுன்னே கோட்டைக்குள் ளிருந்த பாளையக்காரர்கள் இராத்திரியே கோட்டையை விட்டு நழுவிவிட்டார்கள். இதையறிந்த கர்னல்காம்பல் அவர்களைத் தொடரும்படி ஆட்கள் அனுப்பினதில் ஒன் றும் பலிக்கவில்லை. சேத்தூர்க் கோட்டையை இடித்து விட்டுச் சிவகிரியை நோக்கிப்போனார். அங்கும் ஏமாற் றம்தான். 10-ம்தேதி அவர் அங்குவந்து இறங்கினவுடன் கோட்டையிலுள்ளவர்கள் மலைக்கு ஓடிவிட்டதாகத்தெரிந் தது. அவர்களின் கதியை நினைத்து வருந்தி நவாபின் சீர்கெட்ட ஆளுகையும் கொடுமையுமே பாளையக்காரர் களை இவ்விதம் எதிர்க்கும்படி நேர்ந்ததென்பதை உணர்ந் தார். 20000 ஜனங்கள் குடியிருந்த அவ்விடத்தில் ஒரு சிறு குழந்தைகூடக் கிடையாது. இந்தக்கோட்டை சேத்தூரைவிடப் பெரிதாகவுமிருந்தது. அவர் ஐந்தாறு நாட்களாக அங்கே இருந்து அக்கோட்டையை இடித்து விட்டுப் பின்வருமாறு கம்பெனியாருக்கு எழுதினார். "இந்த அழகான நாடு அழியாமல் காக்கப்படுவதற்கு

நவாப் தகுந்த முயற்சிகள் சீக்கிரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எனது விருப்பம். வேண்டிய முயற்சிகள் சீக்கிரம் எடுத்துக்கொள்ளாவிட்டால் நான் பார்த்த பூமிகளிலெல்லாம் செழிப்பும் அழகும்வாய்ந்த இப்பூமி அடுத்த வருஷத்தில் பாழடைந்து போகுமென்பதே".

மேயீ 28௨ அவரின் அடுத்த கடிதம் வாசுதேவநல்லூரிலிருந்து எழுதப்பட்டது. சிவகிரிக் கோட்டையை இடிப்பதற்கு மேஜர் பிளின்ற்றை நிறுத்திவிட்டு வாசுதேவநல்லூருக்கு 13-ம௳ வந்தார். 17-ம௳ மேஜர் பிளின்ற் அவருடன் சேர்ந்துகொண்டார். கோட்டையைக் காத்தவர்கள் தப்பமுயன்றும் திருப்பியடிக்கப்பட்டார்கள். பின்னால் பீரங்கிகளினால் கோட்டை தகர்க்கப்பட்டது. இக் கோட்டைகளின் சுவர்கள் மண் பூசப்பட்ட வெயிலில் காய்ந்த செங்கல்களால் கட்டப்பட்டிருந்ததால் ஏராளமான குண்டுகளைச் சொரிந்தும் பிரயோஜனப்படவில்லை. அதோடு மழையும் ஆரம்பித்தது. இதனால் கோட்டைக்குள்ளிருந்தவர்கள் 20-ம௳ காலை 4 மணிக்குக் கோட்டையைவிட்டு வெளிக்கிளம்பிப் பக்கத்திலுள்ள மலைகளில் புகுந்துகொண்டார்கள். இது மிகவும் பலத்த கோட்டையாயிருந்தபடியால் அதை இடித்துவிட அவருக்கு மனமில்லை. பாளையக்காரர்களின் சேனைகளின் தீரம் மிகவும் புகழத்தக்கதென்றும், மரணத்தைப்பற்றி அவர்கள் கொஞ்சமாவது சட்டைபண்ணாமல் கோட்டைச் சுவர்களில் திறப்பு ஏற்பட்டவுடனே பீரங்கிக் குண்டுகள் சொரிந்துகொண்டிருக்கும் மத்தியில் வெகு அமைதியாய் பனை ஓலைகளையும் வைக்கோலையும்வைத்துக் கோட்டைச்

சவர்களை அடைத்தனர்களென்றும் சொல்லுகிறார். இப்படிப்பட்ட ஜனங்களை நவாப் நியாயமாய் நடத்தவேண்டுமென்றும் தன்சேனையால் செய்யக்கூடிய காரியங்களைத் தான் இஷ்டமாகச் செய்வதாகவும் சொல்கிறார். ஜனங்களைச் சமாதானப்படுத்தி நல்வழிப்படுத்தத் தமக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டார். நவாப் போடு ஒருவிதமான சமாதான ஒழுங்கு செய்யாவிடில் குடிகள் திரும்பிவந்து நிலங்களைச் சாகுபடி செய்யமாட்டார்களென்றும் எழுதினார். வாசுதேவநல்லூர் கோட்டையில் கம்பெனியாரின் சிப்பாய்களை வைத்துவிட்டு, சங்கரன்கோவிலை ராணுவ ஸ்தலமாக்கி, அதில் காப்டன் ஹார்ப்பரை (Captain Harper) நியமித்து ஜனங்களோடு தாட்சண்யத்தோடும் நியாயத்தோடும், நடக்கும்படி உத்திரவிட்டுப் பாளையக்காரரோடு சமாதானம்பண்ணுவதற்கு நவாப்பிடமிருந்து உத்திரவை எதிர்பார்த்தவராக இருந்தார். உத்திரவு வந்தவுடன் எல்லாப்பாளையக்காரர்களையும் வரவழைத்து அவர்கள் கொடுக்கவேண்டிய பாக்கிக் கப்பங்களைக் கொடுக்கும்படிக்கும், இனிமேலும் ஒழுங்காய்க் கப்பம் செலுத்தும்படிக்கும், ஒழுங்கு செய்துவிட்டுப்போய்விட்டார். இவர் போய்விட்ட இரண்டு மாதங்களுக்குள் பாளையக்காரர்கள் பழையபடி கப்பங்களை ஒழுங்காகச் செலுத்தாமல், தொந்தரவு கொடுத்தார்கள். இவர்களில் முக்கியமானவர் சிவகிரிப் பாளையக்காரர். காப்டன் பிரிஸ்ச்மான் எல்லாப் பாளையக்காரர்களையும் வரும்படிசெய்து ஹுக்மத்ராம் என்பவரின் உதவியாலும் வடகரைப்பாளையக்காரரின் உதவியாலும் கப்பங்களை ஒழுங்காய்க்கட்டிவருவதற்கு வேண்டியஒப்பந்தங்களைச்

செய்துவைத்தார். இந்த வடகரைப்பாளையக்காரர் தமது பாளையத்தை முன்னே இழந்துபோனாலும் இப்போதாறுன்பது கிராமங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. சிவகிரிப் பாளையக்காரர் நாட்டுக்கு வெளியே அனுப்பப்பட்டார். அவர் ஸ்தானத்தில் வேறு பாளையக்காரர் நியமிக்கப்பட்டார். ஐதர்அலி பாளையக்காரர்களோடு சேர்ந்துகொண்டு அவர்கள் பழைபசுதந்திரங்களையும் நாடுகளையும் கொடுப்பதாகக் கடிதம் அனுப்பியிருப்பதாக நவாப்புக்கும் பிரிட்டிஷாருக்கும் செப்டம்பர்மீ 2ம் தேதியில் தெரியவந்தது.

1768-ம்௵ ஆகஸ்டு மாதத்தில் பாளையக்காரர்கள் 8000 அல்லது 9000 காலரிஸ்களைச் சேர்த்துக்கொண்டு சர்க்கார் பூமிகளைக் கொள்ளையடிக்க எத்தனிப்பதாகக் காப்டன் பிரௌன் (Captain Browne) தெரிவிக்கிறார். பாளையங்களிலிருந்து அகற்றப்பட்ட சிவகிரிப் பாளையக்காரரும் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரும் நாட்டில் குழப்பங்களை உண்டாக்குவதாகவும், ராமநாதபுரம் ராஜா அதற்கு உதவியாயிருப்பதாகவும், கம்பெனியாருக்கு அறிவிக்க, கவர்ன்மெண்டாரால் ராமநாதபுரம் ராஜா அவ்விதம் உதவிசெய்யாதபடி எச்சரிக்கப்பட்டார். காப்டன் பிரௌன்பாளையக்காரர்களை ஐதர்அலிக்கு விரோதமாய்ச் சேரும்படி ஒழுங்குசெய்தபோதிலும் அவர்கள் வெளிக்கு உண்மையுள்ளவர்கள்போல் காண்பித்து பின்னால் ஐதர் அலிக்கு உதவிசெய்தார்கள். 1792-ம் ௵த்தில் சிவகங்கைப் பாளையக்காரரையும் பொதுவாய்த் தென்திசைப் பாளையக்காரர்களையும் அடக்குவதற்குக் கர்னல் பிரெய்த்

வைட் (Colonel Braithwaite) அனுப்பப்பட்டார். ஆனால் அவர்சேனை வடநாடு அவசியம் போகநேர்ந்ததால் ஒன்றும் நடைபெறவில்லை.

1777 பெப்ருவரிமீ 16-ம்தேதியில் கப்பங்கொடாத பாளையக்காரர்களையும் விசேஷமாய்ச் சிவகிரிப் பாளையக்காரரையும் தண்டிப்பதற்கு காப்டன்பிக்கார்டுஎன்பவரின் கீழ் ஒரு சேனை அனுப்பப்பட்டதாகவும், அவர்கள் சிவகிரிக் கோட்டையை முற்றுகை போட்டதாகவும் காப்டன் ஆப்கின்ஸ் எழுதுகிறார். அதன் முடிவு எப்படி என்று சொல்லப்படவில்லை. ஏப்ரல்மீ 6-ம் தேதியில் காப்டன் பாரிங்டனுக்கு நவாப்பின் மானேஜர் பணத்தை வசூல் செய்வதற்கு 6 பட்டாளங்களை அனுப்பும்படிக்கும், பாளையக்காரர்கள் கப்பங்கொடுக்க மறுத்தால் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்காமல் சேனையை உபயோகப்படுத்தக் கூடாதென்றும் உத்தரவுவந்தது.

யூசுப்கான் காலத்திற்குப் பின் நாட்டின் வருமானம் குறைய ஆரம்பித்தது. நவாப்பின் ஆளுகையில் காணப்பட்ட பலக்குறைவும், அவர் அமில்களின் லஞ்சம் வாங்கும் குணமும், பாளையக்காரர்கள் தங்கள் செயல்களை அதிகமாய் நடத்துவதற்குரிய ஊக்கத்தைக் கொடுத்தன. பாளையக்காரர்கள் தங்கள் பழையநடபடிக்கைகளை நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் 1781ம் ஞு நவாப் வரிவசூல் செய்வதைக்][கம்பெனியாருக்கு ஒப்படைத்துவிட்டார்.

1782 சிவராமத்தலைவர் என்றபாளையக்காரர் திருக்கரன்குடியில் கோட்டை கட்டினதாகவும், பக்கத்துக்கிரா

மங்கலைக் கொல்லையடித்தாகவும், அதன்பேரில் கம்பெனியார் சேனைகள் அனுப்பி அக்கோட்டையைப் பிடித்து அதை அழித்துப் போட்டதாகவும் தெரிகிறது. திருக்கரன்குடியில் ஒரு பலமுள்ள மறவர் குடும்பத்தின் தலைவரின் வம்ச பரம்பரைப் பெயரே சிவராமத்தலைவர் என்பது.

தென்திசைப் பாளையக்காரர்களைப்பற்றி கர்னல்புல்லர்ட்டன் சொல்லும் விவரம்.

மதுரை, திருநெல்வேலிப்பாளையக்காரர்கள் நாடெங்கும் திரிந்து கம்பெனியார் சேனைகளை எதிர்த்துக் குடிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். டச்சுக்காரரின் உதவியாலும் மாப்பிள்ளைத்தேவர் உதவியாலும் நாடுகளைப் பிடித்துக்கொள்ள எத்தனிக்கிறார்கள். ஏறக்குறைய 100000 பாளையக்காரர்சேனைகள் ஆயுதமணிந்து கவர்ன்மெண்டாரை எதிர்த்து எதிரிகளாவதால் நாட்டில்உண்டாகும் குழப்பமே தங்களுக்குச் சரியான பாதுகாப்பென்று எதிர்பார்த்தவர்களாயிருக்கிறார்கள். தென்னாட்டில் இப்போதிருக்கும் கம்பெனியார் சேனைகள் பாளையக்காரர்கள்செய்யும் அக்கிரமங்களை அடக்கிக் காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்குப் போதாது. கஜானாவில் பணமில்லை, நாட்டில் குடிகள் குறைந்துவிட்டார்கள். எதிரிகள் வரி வசூல் செய்கிறார்கள். சிப்பாய்களுக்குச் சரியான சம்பளமும் சாப்பாடும் கிடையாது. பாளையக்காரர்கள் (காலரீஸ்) மற்றும்கப்பங்கட்டுவோர் ராஜாங்கத்தின் அதிகாரத்தை எதிர்க்கிறார்கள். ஒரு பெரியசேனை வந்து அவர்

களை ஒடுக்கினாலொழிய பணம் வசூல்செய்து வேலை செய்யும் கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமும் கொடுக்கமுடியாது. பாக்கிக் கப்பங்களை வசூல் செய்யவாவது யுத்தம் ஆரம்பித்தால் அதற்கானவைகளைத் தயார் செய்யவாவது முடியாது. இந்த நிலைமையில் பெரிய சேனையனுப்பி நடபடிக்கைகள் நடத்தித் தேசத்தில் அமைதியை உண்டுபண்ணினால் தான் நாட்டின் வருமானத்தை ஒழுங்காக வசூல்செய்ய முடியுமென்பதே. அதே மாதிரியில் மேஜர் சிவகங்கைப் பாளையக்காரர்களைப் பணியும்படிசெய்து, கர்னல்புல்லர்ட்டன் தென்திசைவந்து மதுரையிலிருந்து கன்னியாகுமரிவரை கொள்ளையடித்துக்கொண்டிருந்த பாளையக்காரர்களை அடக்கமுயன்றார். திடீரென்று அவர்களையடித்து மிரளும்படி செய்து அவர்களையொடுக்க வேண்டுமென்பது அவர் நோக்கம். இந்தச் சமயத்தில் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் சொக்கன் பட்டியை முற்றுகைபோட்டுத் தாமே யுத்தத்தை நேரில் நடத்திக்கொண்டிருந்தார். கம்பெனியாரின் அதிகாரத்தை எதிர்ப்பதில் முக்கியமான பாளையக்காரர் இவரே. மற்றும் பாளையக்காரர்கள் இவர் சிவகங்கைக்குப் போனவுடன் மதுரை வழியாய்த் திரும்பிவருவாரென்று அவ்வழியே எதிர்பார்த்தார்கள். கர்னல்புல்லர்ட்டன் அவ்வழியைவிட்டு பள்ளிமடை, பந்தல்குடி, நாகலாபுரம் வழியாகப் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று அதனைத் தகர்க்க அக்கோட்டையிலுள்ளவர்கள் கோட்டையைவிட்டு ஓடிவிட்டார்கள். அங்கே பாதுகாப்புச் சேனைகள் வைத்துவிட்டுப் பாளையங்கோட்டை வந்து சங்கரன்கோவில் வழியாய்க் கம்பெனியாரை எதிர்த்தவர்களில் முக்கியமான

மற்ெறாரு பாளையக்காரரின் கோட்டையாகிய சிவகிரியைத் தாக்கினர். இப்பாளையக்காரர் கம்பெனியார் மிகுந்தவருத் தமடையும்படியான செயல்களைச் செய்திருந்தார். அவர் டச்சுக்காரரோடு சேர்ந்துகொண்டு கம்பெனியாரை எதிர்ப் பதற்குவேண்டிய தளவாடங்களோ, முற்றுகைநேர்ந்தால் வேண்டிய ஆகாரங்களோ, ஏராளமாய்ச் சேகரித்துவைத் திருந்தார். கர்னல்புல்லர்ட்டன் சேனை கோட்டைமுன் சென்றவுடனே தாம் அமைத்திருந்த மலையரணுக்குள் (கோம்பை) சென்றுவிட்டார். நாட்டிற்கும் இவ்வரணுக்கு மிடையில் ஒரு பெரியகரைபோடப்பட்டிருந்தது. கட்ட பொம்மநாயக்கரும் மற்றும் பாளையக்காரர்களும் 8000 அல்லது 9000 சேனைகள் கொண்டுவந்து உதவி செய்தார் கள். இச்சமயம் இப்புகல்தானோடு சண்டைதொடங்கும் சமயமாயிருந்ததால் இப்பாளையக்காரர் சண்டையைச் சீக் கிரம்ஒழித்துவிட்டுப் புறப்படவேண்டுமென்று தீர்மானித் தார். அதனால் திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் 32 பேர்களும், பாக்கிக் கப்பங்களையும், கொள்ளைபடித்த பொ ருள்களையும்ஒழுங்காய்க்கொடுத்துவிடவேண்டுமென்றும் இல்லாவிடில்தான் அரணை உடனே தாக்கப்போவதாக வும் சிவகிரிப்பாளையக்காரருக்குத் தெரிவித்தார். அது வுமல்லாமல் பாளையக்காரர்கள் 120000 ரூபாய்கொடுத்து விட்டால் அவர்களுடைய எல்லா பாக்கிகளும் தீர்ந்து போனதாகக் கருதப்படுமென்றும், அவர்கள்செய்த தவ றுகளை மன்னிக்கும்படி கம்பெனியாருக்குச் சிபார்சு செய்வதாகவும் வாக்களித்தார். அவர்கள் இவர்இருக்குமி டத்திற்கு வரப்பயந்ததினால் கர்னல்புல்லர்ட்டனே அவர் கள் கரைபோட்டிருந்த இடத்தில் அவர்களைச்சந்தித்துத்

தான் கோரியபடி அவர்களை இணங்கும்படி கேட்டு மறு நாள் வரைக்கும் வாயிதாவும் கொடுத்தார். ஆனால் அவர்களோ காலத்தைக்கடத்தும் வழியைத் தேடினார்களே யொழிய, இவர் சொல்லியனுப்பிய ஆலோசனைக்கு இணங்கவில்லை. உடனே அரணை ந்தாக்கும்படி உத்தரவுகொடுக்கப்பட்டது. பாளையக்காரரின் முரண்டான குணத்தாலும் எதிரியின் சேனைமிகுதியானபடியாலும், அரணை ஒருவராலும் பிடிக்கமுடியாததென்றெண்ணப் பட்டதாலும் எதிர்ப்பு மிகவும் கடுமையாகவிருந்தது. ஐரோப்பியரும் நாலுபட்டாளங்களும் கரைக்கு நேராகப்போகவே பாளையக்காரர்களுடைய சேனைகளால் அவர்கள் எதிர்க்கப்பட்டார்கள். கம்பெனியின் சேனைகள் குண்டுகள்சொரியும் மத்தியில் ஒன்றும் செய்யாமல் தங்கள் துப்பாக்கிகளைத் தோள்களில் போட்டுக்கொண்டவராய்க் கரையை அடைந்து, எல்லாரும் ஏகமாய்த் துப்பாக்கிப்பிரயோகம் செய்து எதிரிகளின் மேல் பாய்ந்தார்கள். இதனால் கரையின் உச்சியை அடைந்தார்கள். இவர்கள் முன்னேறும் ஒவ்வொரு அடியையும் பாளையக்காரர்கள் மும்மரமாய் எதிர்க்கவே, இருபக்கங்களிலும் மிகுந்த சேதமுண்டாயிற்று. சுற்றிப் பார்த்து முன் பக்கமாகப் போவது அசாத்தியமெனக் கண்டு கோட்டையின் மேல்பக்கத்திலுள்ள மலையின் அடிவாரத்துக்கு, செடிகளடர்ந்த வனத்தின் வழியாய் மூன்று மைல்களுக்கு ரோடு வெட்டப்பட்டது. குண்டுகளைப் பாளையக்காரர்கள் சொரிந்தபோதிலும், நாலாப்பக்கங்களிலும் சேனைகளை நிறுத்தி விடா முயற்சியினால் அரண்பிடிக்கப்பட்டது.

அத்தியாயம் 14.

முகம்மதியர்-ஆங்கிலேயர்-மறவர்.

[தொடர்ச்சி.]

வரி ஒப்படைப்புக் கமிட்டியார் தங்கள் அலுவலை ராஜினாமாச் செய்யும்போது டிசம்பர்-மீ 31-ம் டயில் கவர்ன்மெண்டுக்கு ஓர் அறிக்கை செய்தார்கள். அதில் அவர்கள் தங்கள் நடபடிக்கைகளைக் குறித்து விவரிக்கும் போது: திருநெல்வேலிப் பாளையக்காரரின் நிலைமையையும் நவாப் அதிகாரிகளின் ஒழுங்கற்ற விதத்தையும், அவர்கள் அனுசரித்த முறைகளையும் பற்றிச் சொல்லியிருக்கிற விவரங்கள் என்னவென்றால், முதன்மையில் திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் 32 பேர்களென்றும், ஈட்டியும் துப்பாக்கியுமணிந்த 30000 படையாட்கள் உடையவராய், பலத்த அரண்களை உரியவர்களாய் இருந்ததினால், நவாப்பின் சேனைகள் அவ்வரண்களைப் பிடிக்க அடிக்கடி சிரமப்பட்டனவென்றும், ஒரு சமயம் அப்படிப் பிடிபட்டாலும் பாளையக்காரர் வனங்களில் புகுந்து மறைந்துகொள்ளும் சூழ்ச்சியுடையவர்களா யிருந்தார்களென்றும், நவாப்பின் பலம் மிகுந்திருந்தபோது பாளையக்காரரிடமிருந்து எவ்வளவு வசூலிக்க முடியுமோ அவ்வளவு வசூல் செய்ய முடிந்ததென்றும், நவாப்பின் கைதாழும்போது பாளையக்காரர்கள் கொடுப்பதையே பெற்றுக்கொண்டு மீதியை வசூல் செய்யச் சமயம் பார்த்திருக்க வேண்டியதாகவும் வந்து சேர்ந்ததெனவும் விவரிக்கப்பட்டிருந்தது. இரண்

டாவதாக இதனால் வருமானம் மிகவும் குறைந்து லட்சத்திற்கு மேற்பட்ட சக்கரங்கள் வரவேண்டிய இடத்தில் அவை 40000 சக்கரங்களுக்குள் வந்துவிட்டன. இந்தச் சீர்கேடான நிலையில் இத்தொகையை வசூல் செய்வதற்காகப் பட்டாளங்களை யனுப்புவதற்கான செலவுகளையும் கொள்ளையடிப்பினால் உண்டான நஷ்டத்தையும் பார்த்தால், பாளையக்காரர்கள் சம்பந்தமான நடபடிக்கைகளில் நவாப்புக்கு அநேக லட்சக்கணக்கான பொருள் நஷ்டம். ஆகவே வரி ஒப்படைப்பினால் நேர்ந்த கெடுதிகள் இவை மாத்திரமல்ல; சண்டைக் காலத்தில் சிறந்த யுத்தவீரர்களாகவும் சமாதான காலத்தில் நல்ல குடிகளாகவும் இருந்து வாழ்ந்துவர வேண்டியதிருக்க, இவர்கள் அவற்றைவிட்டு ஒருவரின்மேல் ஒருவர் நம்பிக்கை இல்லாமல் அடிக்கடி சண்டையும் சச்சரவும் செய்துகொண்டேயிருந்தனர். இக்காரணங்களினால்தான் ஐதர்அலி 1780-ல் கர்னாடகத்தைப் படையெடுத்தபொழுது இதுவேநல்ல சமயமென்று பாளையக்காரர்கள் கப்பங்கட்டுவதையும் மறுத்து, நாட்டைக்கொள்ளையடித்து, அளவிறந்த கொடூரமான செயல்களையும் செய்து வந்தார்கள். அதனால் கம்பெனியார் யுத்தத்தின் மத்தியில் ஒரு சேனையைப் பாளையக்காரர்களுக்கு விரோதமாகக் கர்னல் புல்லர்ட்டன் வசம் அனுப்ப வேண்டியதாயிற்று. அவர் பாளையக்காரர்களில் முக்கியமானவர் இருவரை அடக்கிவிட்டதால் மற்றப் பாளையக்காரர்களையும் பணியும்படி செய்தார். அதன் பின்னால் நடந்த நியாயமான ஒழுங்கு பாளையக்காரர்களை இன்னும் அதிகமாய்க் கீழ்படியும்படி செய்தது முதலிய என்பனவாம்.

1786-ல் ரெவினியூபோர்டு ஸ்தாபனமாயிற்று. 1790-ம்ளுல ஆகஸ்டு-மீ 7-உ கம்பெனியார் நாட்டின் ஆளுகையின் பொறுப்பை யெடுத்துக்கொண்டு பெஞ்சமின் டோரின் [Torin] என்பவர் திருநெல்வேலிக் கலெக்டராகவும் பாளையக்காரர்களை மேல் விசாரணைசெய்யவும் நியமிக்கப்பட்டார். அவர் அக்டோபர்மீ 11உ கவர்னர் ஜெனரலாகிய கார்ன்வாலிஸ் பிரபுவுக்கு அனுப்பிய அறிக்கையில் பாளையக்காரர்களைப்பற்றிய விவரம் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. "கர்னல் புல்லர்ட்டன் கலகக்குணமுள்ள சிவகிரி, பாஞ்சாலங்குரிச்சிப் பாளையக்காரர்களிருவர்களுக்கும் தாட்சண்யம் காண்பித்தது, அவர்கள் கலகக் குணத்தை அதிகப்படுத்திற்றேயல்லாமல் வேறில்லை. அதனால் விசேஷமாகப் பாஞ்சாலங்குரிச்சிப் பாளையக்காரருக்கு விரோதமாகக் கண்டிப்பான நடபடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். பூலித்தேவர் கோட்டையைக் கைப்பற்றப்போன சிப்பாய்களையும் அவர்கள் ஆயுதங்களோடு தூக்கிக்கொண்டு வந்துவெளியேவிட்டுவிட்டார்கள். இப்படிச்செய்த செய்கையானது அவர்கள் அடங்காமையையும் ஆங்கிலேயரைப்பற்றிய பயத்தையும் காண்பிக்கிறது." இவருடைய வேண்டுகோளுக்கிணங்கக் கர்னல்மாக்ஸ்வெல் அனுப்பப்பட்டார். நவாப், கம்பெனியார் இவ்விருதிறத்தாரின் இரட்டை ஆட்சி ஒழியுமட்டும் தயவுகாண்பித்தாவது கண்டிப்பான நடபடிக்கைகள் எடுத்தாவது, தேசத்தில் சமாதானத்தை நிலைநிறுத்த முடியாதென்பது நன்றாய்த் தெரிந்தது. பாளையக்காரர்கள் இரண்டு எஜமான்களைச் சேவிப்பதால் இரண்டுபேரையும் அசட்டை செய்தார்கள்.

1792-ம் வருஷத்து உடன்படிக்கையின்படி மதுரை திருநெல்வேலிநாடுகளிலுள்ள பாளையக்காரர்களிடமிருந்து கப்பங்களைக் கம்பெனியார் வசூல் செய்துகொள்ளவும், செல்லவேண்டிய பாக்கியான தொகைகள் வசூலாகித் தீரு மட்டும் இவ்வொப்பந்தம் நடந்துவர வேண்டுமென்றும், இப்படியாக 9 வருஷங்களுக்கு நடந்தேறவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. வசூலாகும் தொகைகளிலுள்ள லாப நஷ்டம் நவாப்புக்குச் சம்பந்தமில்லை. இதை அமுலுக்குக்கொண்டுவர ஒருசேனை கர்னல்மாக்ஸ்வெலின் கீழ் அனுப்பப்பட்டது. சிவகிரிப் பாளையக்காரர் தம் சேனையைத் திரட்டிச் சேத்தூர்ப் பாளையக்காரரோடு சண்டைசெய்து அவரையும் அவர்குடும்பத்தாரையும் கொன்று போட்டார். இதைத் தண்டிப்பதற்காகக் கர்னல் மாக்ஸ்வெல் அனுப்பப்பட்டு மலையரணைப் (கோம்பை) பிடித்தார். மற்றப் பாளையக்காரர்களோடும் சமாதானம் பேசினார். போர்டு உத்திரவுப்படி செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்தார். சொக்கன்பட்டிப் பாளையக்காரர் அவர் சொன்னபடி சம்மதிக்காததால் பாளையத்தை இழந்தார்.

சேத்தூரில்கலக்டெரால் நியமிக்கப்பட்டமானேஜரை மற்றொருவர் தள்ளிப்போட்டு அவ்வதிகாரத்தைத் தாம் வகித்துக்கொண்டார். அதைக் கண்டிக்க முயன்றதில் ஊத்துமலை, ஆவுடையாபுரம் பாளையச்சேனைகள் இடைஞ்சல்கள் செய்தன. இன்னும் மற்றும் பாளையக்காரர்களு கும்பெனியின் ராஜாங்கத்திற்கு அவ்வளவாய்ப் பயப்படவில்லை. பாளையக்காரர்கள் வர வரப் பலத்துக்கொண்டு வந்ததைப்பார்த்து ரெவினியூ போர்டு திருநெல்வேலியில்

பாளையக்காரர்களை யொடுக்குவதற்குப்பற்பல இடங்களில் காவல்செய்யும்படி திட்டம்செய்ய வேண்டுமென்று அனுப்பிய ஆலோசனையின்படி நடத்தப்படவில்லை.

சிவகிரிப் பாளையக்காரர் மகன், மாப்பிள்ளை வன்னியனோடும், சங்கரலிங்கம்பிள்ளையோடும் சேர்ந்து செய்த கலகத்தில், ஊத்துமலைப் பாளையக்காரர் சம்மந்தப்பட்டதாகத் தெரிந்து விசாரணைசெய்யப்பட்டது. பாளையக்காரரை அடக்கி ஆளவேண்டிய ஆளுகை இருதிறத்தார் கைகளிலிருந்தபடியால் நாட்டைக்கம்பெனியாருக்கு விட்டுக்கொடுத்தாலொழிய, சமாதானமும் செழிப்பும் நாட்டில் உண்டாவது கடினம்; பாளையக்காரர்களையும் அடக்கமுடியாதென்றும் தெரிந்தது. அதனால் 1797-ம்வருஷத்தில் பாளையக்காரரை யடக்குவதற்கு ஒரு சேனை மேஜர் பானர்மென் வசம் அனுப்பப்பட்டது. அக்டோபர் மாதத்தில் பாஞ்சாலங்குறிச்சியைப் பிடித்து அதன் பாளையக்காரரான கட்டபொம்ம நாயக்கர் மற்றெல்லாப் பாளையக்காரர்களும்ஆச்சர்யத்தோடும் திகிலோடும் பார்த்துக்கொண்டிருக்க கயத்தாற்றில்வைத்து தூக்கிவிடப்பட்டார். பின்னால் மேஜர்பானர்மென் பின்வருமாறு விளம்பரஞ்செய்தார். அவ்விளம்பரத்தில் கலகம் செய்த பாளையக்காரர்களின் பாளையங்கள்கவர்ன்மெண்டால்எடுத்துக் கொள்ளப்பட்டனவென்றும், பாளையக்காரர்களின் கோட்டைகள் இடித்துப் போடப்பட வேண்டுமென்றும், துப்பாக்கி, ஈட்டி, வல்லயம் முதலான ஆயுதங்கள் ஒருவரும் வைத்திருக்கக்கூடாதென்றும், அப்படி ஆயுதமணிந்தவர்களாகக் கண்டுபிடிக்கப்படுபவர்கள் மரண தண்டனை

படைவார்களென்றும் கண்டிருந்தன. பாளையக்காரர்களின் 42 கோட்டைகளும் நகர்க்கப்பட்டன.

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரின் சகோதரரான கட்டபொம்மநாயக்கரும் அவர் தம்பி ஊமையானவரும் இன்னும் அவர்கள் ஆட்களும்பாளயங்கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

1801-ம்ளு அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பாஞ்சாலங்குறிச்சிக்குவந்து கோட்டையைத் திரும்பவும் கட்டமறுபடியும் இங்கிலீஷ்காரர் அவர்களை அடக்கவேண்டியதாயிற்று. கர்னல்அக்னியு மறுபடியும் கோட்டையைப் பிடித்துவிடவே, கட்டபொம்மநாயக்கரும், அவர் தம்பி ஊமையானவரும், சிவகங்கைக்கு ஓடிப்போய்விட்டார்கள். சிவகங்கைப் பாளையக்காரரும் அவர்களைப் பிரியத்தோடு ஏற்றுக்கொண்டார்.

சிவகங்கைப்பாளையம் முதலில் ராமனாதபுரம் ராஜ்யத்தின் ஓர் பாகமாகவே இருந்தது. பவானிசங்கரால் உண்டான சண்டையின் முடிவில் ராமனாதபுரம் ராஜ்யம் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று பாகம் ராமனாதபுரம் பாளையமும் இரண்டுபாகம் சிவகங்கைப் பாளை

குறிப்பு:— பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரருள் பட்டத்துக்குவரும் ஒவ்வொருவருக்கும் கட்டபொம்மநாயக்கரென்ற பெயர் வழங்கப்பட்டு வந்திருக்குமெனத்தெரிகின்றது.

யமுமாயினவென்பதைப் பற்றி முன்னே கூறியிருக்கின்றோம். இச்சிவகங்கைப் பாளையத்திற்கு ஆதிகர்த்தா சேஷவர்ணத்தேவர். இப்பாளையக்காரருக்கு உடையாத்தேவர் என்ற பட்டமும் இருந்துவந்ததோடு நாலு கோட்டைப் பாளையக்காரர் என்றும் அழைக்கப்பட்டார். இந்நாடு கிழக்கே கடலாலும், மேற்கே மேலூர் நாட்டாலும், வடக்கே தொண்டைமான் நத்தம் காலரிஸ் நாடுகளாலும் தெற்கே ராமனுதபுரம் சீமையாலும் சூழப்பட்டு நடுவே திகழ்ந்தது. பயிர் சாகுபடிக்குப் போதுமான நிலங்கள் இல்லை. அங்கங்கே சில கிணறுகளும் குளங்களும் உண்டு. எங்கே பார்த்தாலும் காடுகள் வளர்ந்திருக்கும். காளையார் கோவிலைச் சுற்றியுள்ள காடுகளின் சுற்றளவு நாற்பது மைல் தூரம் இருக்கும். இக்காடுகளின் நடுமத்தியில் கட்டப்பட்டிருந்த காளையார்கோவிற் கோட்டையானது துன்பங்கள்நேரும்போது தங்கும் உறைவிடமாயும், நாலு பக்கங்களிலும் பாதுகாப்புக்குவேண்டிய தடுப்புகளையுடையதாகவும், அமையப்பெற்றிருந்தது. இந்நாட்டில் ஆடுமாடுகள் நிறைந்திருந்தன. இங்கு ஜனங்களின் தொகை ஏராளம். ஆனதினுல் ஆயுதம் தரித்த 12000 போர்வீரர்களை யுத்தகாலத்தில் சிரமமின்றித் தயார்செய்யமுடியும். பின்னுல் இந்நாட்டின் ஆட்சியை மருதுகள் கைப்பற்றிக்கொண்டார்கள். 1783-ல் கர்னல்புல்லர்ட்டன் இந்நாட்டைப் படையெடுத்தார். ராஜாவும் மருதுகளும் காளையார்கோவிலுக்கு ஓடிப்போய்விட்டார்கள். கர்னல் துரை 40000 ரூபாய் வசூல் செய்துகொண்டு அவர்களை மட்டும் விட்டுவிட்டுப் போய்விட்டார். மருதுகள் பின்னும் கலகஞ்செய்ய 1789ல் கர்னல்ஸ்டுவர்ட் என்பவரால்

(Colonel Stuart) காளையார்கோவில், கடுமையாக எதிரிகள் எதிர்த்தபோதிலும் பிடிக்கப்பட்டது.

மருதுகள் இவர்கள் சகோதரர்கள். மூத்தவரான வெள்ளைமருது என்பவர் பெரியமருது என்றும், இளையவர் சின்னமருது என்றும் அழைக்கப்பட்டார். இவர்கள் பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குச் சேர்வைக்காரர் என்பது குடிப்பட்டம். மூத்தவர் வேட்டையாடுவதிலேயே தம் காலத்தைக்கழித்தார். நாட்டை ஆண்டவர் சின்னமருதென்பவரே. பெரிய மருது உருவத்திலும் பெரியவர். பலமும் மிகுந்தவர். அர்க்காப் ரூபாயைக் கூடவளைத்துவிடுவாராம். சின்ன மருது தம் சொந்த இடமாகிய சிறுவயல்என்ற ஊரிலேயே குடியிருந்தார். அவர் கருப்பு நிறமுடையைவராலும் கம்பீரப் பார்வையும், அழகும் உடையவர். தம்மிடத்தில் வந்து யாரும் சுலபமாய் நெருங்கக்கூடிய நற்குண நற்செய்கை வாய்ந்தவர். அவர் பாதுகாப்பில்லாத வெளியான இடத்தில் வசித்தார். ஆனதினால் யாரும் அவரைத் தாராளமாய்ப் போய்ப்பார்க்கலாம். வளைதடியை உபயோகிப்பதில் அவர் பெரிய நிபுணர்.

பாஞ்சாலங்குரிச்சிப் பாளையக்காரர்கள் சிவகங்கைக்கு ஓடிவருவதின் காரணம் என்னவென்றால், தொண்டைமான் ராஜாவும் ராமனாதபுரம் சேதுபதியும் ஆங்கிலேயர்களுக்குச் சிநேகிதர். பாஞ்சாலங்குரிச்சிச் சண்டையும் மருதுகளின் ஏவுதலால் நடத்தப்பட்டதென்று மிஸ்டர் லஷிங்டனுக்குச் சிலகடிதப் போக்கு வரவுகளிலிருந்து தெரிந்தது. இவர் கலெக்டராக அதிகாரம்

வகித்தவுடனே, மருதுகள் சசிவர்ணத் தேவரின் வாரீஸ்கள் என்பதைக்காட்டும் ஆதாரங்களைக் காண்பிக்கும்படி உத்தரவு அனுப்பினுர். இவர்கள் பழைய பாளையக்காரரின் வம்சத்தாரல்லரென்பது யாருக்குந் தெரிந்தவிஷயம். ஆனதினுல், ஆதாரங்கள் எப்படி கிடைக்கும்? இதனுல் மருதுகள் தாங்கள் கீழ் படிந்து நடப்பதினுலாவது, வேறெந்த விதத்திலாவது சிவகங்கையில் தங்கள் பாத்யதையை நிலைநிறுத்த முடியாதெனத் தெரிந்து என்ன ஆனுலுஞ்சரி, இனிமேல் சண்டைசெய்து பார்க்கவேண்டியதுதான் என்ற ஒரே நோக்கத்துடனிருந்தார்கள். இதுவே அவர்களைக் கடைசிவரைக்கும் தீரமாய் யுத்தம் செய்யும்படிக்கும் ஏவினது.

பாஞ்சாலங்குறிச்சி பிடிபட்ட ஐந்துநாட்களுக்குப்பிறகு மேமீ 28வ கம்பெனியாரின் சேனை நாகலாபுரத்தில் தங்கி, கலகக்காரர்களால் முற்றுகை போடப்பட்ட கமுதிக்கு உதவிச் சேனை அனுப்பி அக்கோட்டையைக் காப்பாற்றி, கொஞ்சம் சேனையை அங்கு பாதுகாப்பின் பொருட்டு நிறுத்திவிட்டு, ஜுன்-மீ 2-ம்வ திருப்பூவனம் வந்து, அங்கு எதிரிகளைக் கண்டார்கள். இது முதல் ஜுலை-மீ 14-ம்வ வரை சேனை ராமனுதபுரம் போகும்வரையும் எதிரிகள் இடைவிடாமல் இடைஞ்சல் செய்தார்கள். இதில் சேனைகளுக்குக் கொஞ்சம் சேதம் நேர்ந்தது. மருதுகள் கடைசியாக உபயோகிக்கும் அரணுகிய காளையார்கோவில் மிகவும் பலத்த அரண். கீழ்பக்கமாகப்போனுல் அந்த அரணைப் பிடிப்பது பெருங் கஷ்டமென்று முன் நடந்த சம்பவங்களால் தெரிந்து, அந்த அரணின்மேல்

பாகத்தைத்தான் தாக்கும்படி யோசித்து, வடமேற்காகத்
திருக்கடையூர் சென்றார்கள். இங்கே கம்பெனியாரின்
இன்னொரு பட்டாளம் ஒன்று சேரவே, இப்பொழுது
7000 சேனையோடு சிறுவயலைத் தாக்குதற்காக அதனை
நோக்கிச் சென்றார்கள். மருதுகள் தோணிகளை யமர்த்
திக்கொண்டு வங்காள விரிகுடாவில் அரிசி ஏற்றிப்போகும்
தோணிகளைப் பிடித்து அவற்றிலுள்ள அரிசியைத் தம்
கோட்டைகளைப் பாதுகாக்க வேண்டியவர்கட்கு ஆகாராதி
களுக்காக உபயோகப்படுத்தினார்கள். மிஸ்டர் லஷிங்
டன் வேறு தோணிகளை யமர்த்தி அத்தோணிகளைப்
பிடித்து கடற்கொள்ளையை அடக்கிவிட்டார்.

சிறுவயலென்னு மூரை நோக்கிச் சென்றதும் எதிரி
கள் எதிர்த்துப் பின்பு பின்வாங்கிவிட்டார்கள். சிறுவய
லைத் தீக்கொளுத்திவிட்டு ஓடிவிட்டார்கள். இதிலிருந்து
சேனை காளையார் கோவில் போய்ச் சேரும்படி வனங்
களுக்கு ஊடே ரோடு வெட்ட ஆரம்பித்தார்கள். இது
சமயத்தில் எதிரிகள் நடுநடுவே இடையூறுகளைச் செய்து,
கொடுந்துன்பம் விளைவித்தார்கள். இதில் மிகுந்த சேதம்
ஏற்பட்டதால் ரோடு உண்டாக்குவதை நிறுத்திவிட்டார்
கள். சிறுவயல் வழியாகக் காளையார் கோவிலுக்குப்
போகும் எண்ணத்தைவிட்டு, அதன் மேல்பக்கமும் வட
பக்கமுமாக நோக்கிச் சேனைகளை நடத்தினார்கள்.

இன்னும் ஒரு முக்கிய சம்பவம் இதோடு நடந்தது.
மருதுகள் சிவகங்கையின் அதிகாரத்தை வஞ்சமாகக்
கவர்ந்தவர்கள். ஆதலின் அப்பாளையத்திற்கு உரிமையான

வாரீஸ்தார்களை மிஸ்டர் லஷிங்டன் கண்டுபிடிக்க ஆரம்பித்ததில், அவ்வாரீஸ்தார் பெருமாத்தூர் உடையாத்தேவர் என்பதறிந்து, அவரே சிவகங்கை ஜமீன்தாரெனத் தெரிந்தெடுக்கப்பட்டார். இது ஜனங்களுக்கு அதிகஉற்சாகத்தைக் கொடுத்தது. கலெக்டர் இந்தவிதம் செய்தது அநேகரை மருதுகளினின்றும் பிரித்துவிட்டது.

மூன்றுபிரிவாகச் சேனைகளைப் பிரித்து மூன்று பக்கங்களின் வழியாகச் சேனைகள் சென்றன. முன் வெட்டப்பட்ட ரோட்டின் வழியாகவும் ஒரு சிறு சேனை அனுப்பப்பட்டது. இதை எதிரிகள் எதிர்பார்க்கவில்லை. இச்சேனை இவ்வழியாய்ச் செல்வதை அந்தரங்கமாக வைத்திருந்தார்கள். எதிர்பாராத இவ்வழியாய் வந்த கம்பெனியாருடைய சேனையைக்கண்ட எதிரிகள் திகிலடைந்து உடனே காளையார் கோவிலைவிட்டுக் காட்டுக்குள் புகுந்துவிட்டார்கள். கர்னல்அக்னியு வரும் வழியில் எதிரிகள் அநேக தடுப்புகளை உபயோகித்தாலும் முதல் தடுப்பைப் பிடித்தவுடனே எதிரிகள் ஓடிப்போய்விட்டார்கள். 1801-ம௵ அக்டோபர் மீ 1-ம் தேதியில் காளையார்கோவில் பிடிபட்டது. 3. 10. 1801-ல் மேஜர்ஷெப்பர்டுவசம் அனுப்பப்பட்ட ஒரு சேனை காளையார்கோவில் வழியாய் மங்கலத்துக்குப்போய் அங்கு எதிரிகளைச் சந்திக்கலாமென்ற எண்ணத்துடன் சென்றது. ஆனால் எதிர்ப்பார் ஒருவருமில்லை. கிராமக்காரர்கள் கம்பெனியாரின் சேனையைக் கண்டவுடன்வந்து, மருதுகள், 2000 சேனையோடு அங்கு இருந்ததாகவும், இப்போது காட்டுக்குள் போய் விட்டதாகவும், சொன்னார்கள். கடைசியில் மருதுகள்

200 பேரோடு சங்கரப்பாய்க் காட்டிலிருப்பதாகச் செய்தி வந்தது. சில நாட்களுக்குப்பிறகு மருதுகள், அவர்கள் குடும்பத்தார், கட்டபொம்மநாயக்கர், தளவாய்ப்பிள்ளை, ஊமைத்துரை ஆகிய இவரனைவரும் பிடிபட்டார். தளவாய்ப்பிள்ளை, சின்ன மருது மகன் துரைசாமி இவர்கள் இருவர்தவிர மற்றவர்கள் தூக்கிலிடப்பட்டார். இன்னும் சிலர் திவாந்தரம் அனுப்பப்பட்டார்கள். நாங்குனேரி மறவர் தளவாய்ப்பிள்ளைக்கு அடைக்கலம்கொடுத்துக் கலகம் செய்ததால் சிலரைக் கழுநிக்கோட்டையிலும் சிலரை மதராஸிலும் காவலில் வைத்தார்கள். அவர்கள் காவலும் எடுபட்டு நாடார்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. துரோகம்செய்த பாளையக்காரர்கள் இவ்விதம் நிலைகுலைந்துபோகவே, கம்பேனியாருக்கு உதவியாயிருந்த பாளையக்காரர்களுக்கு அதிக நாடுகள் அளிக்கப்பட்டன.

1801-ம் டிசம்பர்மீ 1-ம் தேதி சென்னை கவர்ன்மெண்டார் பிரஸ்தாபித்த விளம்பரத்தின் சுருக்கம்.

கலகம் செய்வதால் விளையும்பயனைப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரின் கதியிலிருந்து அறிந்துகொள்ள வேண்டியது.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தை எதிர்க்க எவராலும்முடியாதென்றும், கலகம் செய்தவர்கள் தண்டனையடைவார்களென்றும், ராஜவிசுவாசமுள்ளவர்களே மேன்மையடைவாரென்றும், நாடுகளை எடுத்துக்கொள்வது பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் நோக்கமல்லவென்றும், ஆயுதங்கள் ஜனங்களின் பாதுகாப்புக்கு அவசியமல்லவென்றும், ஆதலால்

அவைகளைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், பெருங் குற்றஞ் செய்த சிலரைத்தவிர மற்றவர்கள் குற்றமெல்லாம் மன்னிக்கப்பட்டதென்றும், ஜமீன்தார்கள் என்ற முறையில் அவர்கள் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் வகைக்கு என்றும் நிச்சயமாகிய ஒரு தொகை ஏற்படுத்தப்படுமென்றும் கண்டிருந்தது. இவ்விளம்பரத்திலிருந்து திருநெல்வேலியில் ஒருபுதிய யுகம் ஆரம்பமாயிற்று. மறவர் தங்கள் பழையசெயல்களை மறந்து நற்செய்கைகளிலேயே தங்கள் காலத்தைக்கழிக்க ஏதுவாயினர். இதே வருஷத்தில் மதுரை, திருநெல்வேலி, முதலிய எல்லா நாடுகளும் கம்பெனியாரின் முழு ஆளுகைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் ஈடுபட்டன.

1814-ம் வருஷத்தில் மிஸ்டர் டர்ண்புல் (Mr. Turnbull) ரிப்போர்ட்டில் தேசத்தில் உண்டான பயங்கரமான நெருக்கடியில் 1810-ம் வருஷம்போல் 150000 பேர் ராமநாதபுரம் சிவகங்கை முதலிய நாட்டைவிட்டு அயல் நாட்டுக்குக் குடியேறிப் போய்விட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

வாளெழுபதிலும் மறவர்கள் கிழுவை நாட்டிலிருந்து புறப்பட்டுத்திருநெல்வேலி நாட்டுக்குவந்து குடியேறினதாகச் சொல்லப்படுகிறது. கிழுவைநாடு என்பது கீழ்கரை நாடு; அதாவது சிவகங்கை, ராமநாதபுரம் அடங்கிய மறவர்சீமையே. எவ்வித காரணத்தாலானாலும் சரி! மறவரின் தொகை அநியாயமாய்க் குறைந்துவிட்டது உண்மையென்பதைப்பற்றிச் சந்தேகமேயில்லை. முன்னதாக என்

ணிக்கையில் ஏராளமாயிருந்தபழங்குடிமறவராகிய இவர்கள் இப்பொழுது மிகச்சுருக்கமான தொகையாளராயினர். இவர்களின் பழக்கவழக்கங்களும் வரவர அதிகமாய் மாறிவிட்டன. எப்பொழுதும் இவர்கள் மற்றவர்களிடத் தைரியத்திற் சிறந்தவர்களாயும், சிலர் சட்டவரம்பை மீறிநடக்கும் சுபாவம் குடிகொண்டவர்களாகவுமிருப்பார்கள். இருந்தபோதிலும் இப்பொழுது அநேகமாய் மற்ற ஜாதியினரைப்போலவே தாமும் விவசாயத்தொழிலில் ஈடுபட்டுத்தகுந்த சரீரப்பிரயாசையோடு உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பிடத்தக்க தொழில் உலகத்தில் யாதொன்றுமில்லையென்ற உண்மையக் கடைப்பிடித்துத் தமது குடும்பவாழ்க்கையை நல்வழியில் நடத்தி வருகின்றார்கள்.

அத்தியாயம் 15.

வடகரை யாதிக்கத்தமைச்சர்.

பொன்னம்பலம்பிள்ளை

இவர், சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். வாசுதேவநல்லூர் தலபுராணமும், வேறு பல தனி பாடல்களையும் இயற்றியிருக்கின்றார். இவர் சைவவேளாளர் மரபில் வாசுதேவநல்லூரில் பிறந்து வளர்ந்தவர். இவரிடத்தில் பொருந்தியிருந்த பேராற்றலையும், அரசியலை

ஒழுங்காக நடத்தும் மதி யூகத்தையும், கண்டறிந்தவரா கிய வடகரையாதிக்கமென்ற சொக்கன்பட்டி ஜமீன்தார் சின்னணைஞ்சித் தேவர் என்பவர் இப்பொன்னம்பலம் பிள்ளையைத் தமக்குச் சிறந்த அமைச்சராக நியமித்துக் கொண்டாராம். சின்னணைஞ்சித் தேவர் என்பவர் வஞ் சினமான வார்த்தைகள் ஏதாவது சொல்ல நேர்ந்தபொழு தெல்லாம் இன்னதுசெய்த இவனை இத்தனை நாளில் இன்னது செய்யாது போவேனானால், யான் புலவர் பாடும் புகழை யிழந்தவன் ஆவேன்; எனச் சபதங் கூறுவது அவருடைய வழக்கமாம். ஆகவே, இதிலிருந்து அவ ருக்கிருந்த கல்விகேள்விகளின் ஆர்வமும் அன்பும் நன்கு விளங்கும். ஆதிகாலத்தில் நமது தமிழ் நாட்டில் இவரு டைய அரசாங்கம் ஒரு பெரிய அரசாங்கத்தோடு ஒப் பிடத்தக்க நிலையில் விளங்கியதாம். பெரிய அரசாங்க மாக விளங்குதற்குக்காரணம் பொன்னம்பலம்பிள்ளை என் பவருடைய நுட்பமான அறிவுவன்மையே அல்லாமல் வேறில்லையாம்.

பிள்ளையினது அறிவின் திறத்தில் ஈடுபட்ட சின் னணைஞ்சித் தேவர் தமது அமைச்சராகிய அவர் யாது கூறினும் அதனைப் புறக்கணியாது நடந்துவந்தாராம். வேறு சமஸ்தானங்களிலுள்ள ஜமீன்தார் அனைவரும் பிள்ளையினுடைய சாதுரியமான மொழிகளையும், சிறந்த தமிழ்ப் புலமையையும், அரசியல் தந்திரங்களையும் யாவ ரையும் வணங்கச்செய்யும்படியான மதிவன்மையுங்கண்டு, இத்தகைய அமைச்சர் ஒருவரை நாம் அடையுந் தகுதி யில்லாதவராயினோமே என்று பன்முறையுஞ் சிந்தித்துச்

சிந்தித்து வருந்துவாராம். இப்படியிருக்கையில் முன்னிருந்த சேதுபதி அரசர் பொன்னம்பலம் பிள்ளையின் பெருமை முதலியவற்றைக் குறித்து அவரை அடிக்கடி தம்மிடத்துக்கு வரவழைத்து அளவளாவிப் பேசிக்கொள்வதில் உயர்ந்த மகிழ்ச்சியுடையவராயிருந்தாராம். சேதுகாவலர் பலமுறை விரும்பினுல் பொன்னம்பலம் பிள்ளை தமக்கு வசதிநேர்ந்தபொழுது ஒருமுறை அங்கேசென்று சிலநாள் தங்கியிருந்து பின்பு வடகரைக்குத் திரும்புவதுண்டாம். இதற்கு இடையே மற்றொருமுறை சேதுகாவலரிடம் சென்றிருந்தபொழுது அவர் பொன்னம்பலம்பிள்ளையைப் பார்த்துத் தங்கள் சமஸ்தானத்தில் தங்களுடைய உடன்பாடில்லாமல் ஒரு காரியமும் நடைபெறுகிறதில்லையாமே; அது உண்மைதானு? எப்படி? என்றுகேட்டாராம். அதற்கு அவர் உண்மைதான்; ஆனுல், எனது அதிகாரத்தினுல் அல்லஎனவும், சமஸ்தானத்தில் நான் எந்தக்காரியத்தைச் செய்வதானுலும் சரி, அது சமஸ்தானத்தின் நன்மையைக் கருதியதாகவே இருக்குமென்பதில் என்பால் நம்பிக்கையுண்டெனவும், நாடுங்குடிகளும் நன்மைபெறவேண்டுமென்பது சமஸ்தானத்தின் பிரதான நோக்கமெனவும், நேரில் அதிகாரஞ் செலுத்தவேண்டுமென்ற விருப்பம் ஒன்றனையே எமது அரசர் கருதுகிற வழக்கம் இல்லையெனவும், பொன்னம்பலம் பிள்ளை நுட்பமாகப் பதிலிறுத்தாராம். மீண்டும் சேதுகாவலர்: அப்படியானுல் தங்களுடைய ஜமீன்தார் தங்களைக் கலந்து கேட்டுத்தான் எந்தக்காரியங்களையும் செய்வாரோ? என்று அழுத்திக் கேட்கும்பொழுது பொன்னம்பலம்பிள்ளை கூடியமட்டிலும் எனது அபிப்பிராயத்தை அனுசரித்துத்

தான் செய்வது வழக்கமெனவும், வடகரை யாதிக்கத்தில் வெறும் சம்பளம் வாங்கும் மந்திரிப்பதவியாளர் என்றபட்டத்து அளவிலுள்ள கூட்டத்தில் யானுமொருவனல்லன் எனவும், என்னை அவர்கள் உயிர்த்தோழனுகவே கருது வதன்றி, நான் வேறு அவர்கள் வேறு என்ற பாகுபாடு எங்களுக்குள் எப்பொழுதுக்கிடையாதெனவும், என்பால் இவ்வளவு சிறந்த அன்புவைத்து என்னைக் கௌரவப்படுத்தி வரும் அவர்களின் நன்மையையே என்னுடைய நன்மையைப் பார்க்கினும் பன்மடங்கு சிறந்ததாகக் கருதவேண்டுவது எனது கடமை யாகுமெனவும் தமது அமைச்சியல் துறைக்குத் தகுந்த எதிர்கால உணர்ச்சியோடு மறுமொழி கூறினாராம். இங்ஙனம் நெடுநேரம் வரை இருவரும் பேசிக்கொண்டு வருகையில் சேதுகாவலர் பொன்னம்பலம்பிள்ளையிடம் தங்களுடைய ஜமீன்தாரை ஒருமுறை பார்க்க வேண்டுமென்ற விருப்பமெனக்கு இருப்பதால் தாங்கள் இங்கு வந்திருக்கும் இந்தச் சமயத்திலேயே அவர்களுக்குத் தாங்களே ஒரு திருமுகம் அனுப்பி வரவழைக்கமுடியுமா? என்று கேட்டாராம். பொன்னம்பலம்பிள்ளை அவர்களை இங்கே அழைப்பதற்கு இது தக்கசமயம் அல்லவெனவும், மேலும் நான் வடகரைக்குச்சென்று அவர்களை வரச்சொன்னால்தான் வருவார்களே அல்லாமல் தனியாகவரமாட்டார்கள் எனவும், நான் இங்கே வந்திருந்துகொண்டு அவர்கட்குத் திருமுகம் அனுப்பும்படியான உரிமையை மேற்கொள்ளவேனுனல், எனது அரசர் அவர்கள் என்மீதுள்ள கருணை மிகுதியினல் எனக்குக்கொடுத்த அதிகாரத்தைத் தவறானவழியில் செலுத்தினவன் ஆவேன் எனவும், அந்தத்

தவருன நிலையை அவர்கள் ஒரு பொருட்படுத்தாமல் இணங்கிவந்தாலும், அவர்களோ அரசர்; நான் அவர்களின் கீழ்ப்படிதலுக்குரியவோர் ஊழியன்; ஆதலால், எனது தகுதிக்கு மிஞ்சியமுறையில் அவர்களை இங்கே வரும்படி நான் எழுதுவது பொருத்தமல்லவெனவும், பேணற்பாட்டுடன் ஞாபகமாய்ப்பதில் தெரிவித்தாராம். கடைசியாகச் சேதுபதி மன்னர்—அப்படியானல் உங்களுக்குத் தெரியாமல் நானே திருமுகம் விடுத்து அவரை இங்கே வருவித்து விடுகின்றேன் பார்ப்போமா? என்று பொன்னம்பலம்பிள்ளையிடம் வீரம்பேசி, மறுநாள் பொன்னம்பலம்பிள்ளை எழுதியதைப்போலவே ஒரு திருமுகம் எழுதி ஓர் ஆள்மூலம் சொக்கன்பட்டி ஜமீன்தாருக்கு அனுப்பிவிட்டுத் தமது அதிகாரிகட்குச் சொக்கன்பட்டியிலிருந்து ஜமீன்தார் இங்கே பல்லக்கில் வருவாரென்றும், வந்தவுடன் இன்ன இடத்தை வசதிசெய்து கொடுத்து உபசரித்து அதன்பிறகு தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தாராம். இனி, திருமுகத்தைக் கண்ட சின்னணைஞ்சித்தேவர் இதுவரையும் சேதுபதியை நாம் பார்த்து நேரில் பழகிக்கொண்டதில்லையே! அங்ஙனமிருக்க எப்படிச் செல்லுகிறது? என்று சிறிதுமயங்கி நமது அமைச்சர் அங்கேபோய் இருந்துகொண்டு இங்ஙனம் எழுதுவதற்கு என்னகாரணம் தெரியவில்லையே! ஆயினும் அவர் நமது நன்மையைக் கருதியே எந்தக்காரியமும் செய்வார் என்று ஒருவாறு துணிந்து, ஆடம்பரம் இல்லாமல் செல்வதுதான் இந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாகுமெனச் சில வேலைக்காரர்களைமட்டும் அழைத்துக்கொண்டு இடையில் தாமதியாமல் புறப்பட்டு

வர்து *த்தக்கென அமைத்திருந்த விடுதியில் தங்கிக் கொண்டு, பொன்னம்பலம்பிள்ளையை எதிர்பார்த்து அவருடைய விருப்பத்தின்படி சேதுபதிமன்னரைப் பார்ப்பதுவே தமது கௌரவத்திற்குப் பொருத்தமானது என்று தீர்மானித்துப் பொன்னம்பலம்பிள்ளையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாராம். தமது ஜமீன்தாருக்குத் தாமே திருமுகம் விடுத்ததாகச் சேதுபதி மன்னர் திருமுகமனுப்பித் தந்திரமாக அழைக்கப்பட்டிருந்ததை அப்பொன்னம்பலம் பிள்ளை தெரிந்துகொள்ளவில்லையாதலின், அவரைவியப்படையும்படி செய்யவேண்டுமென்று நினைத்தசேதுபதி அவரையுங்கூட்டிக்கொண்டு சின்னணைஞ்சித்தேவர் தங்கியிருந்த விடுதியைநோக்கி நெடுந்தூரத்தில் வரும்போதே தமதுஜமீன்தார் அங்குவந்திருத்தலைக்கண்டு கொண்ட பொன்னம்பலம் பிள்ளை, ஏதோ ஒருவிதமான சூழ்ச்சி நடந்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டு நம்மை ஏமாற்றஎண்ணிய இச்சேதுபதியை நாம் ஏமாற்றுதல் கடினமா? என்று தமக்குள்தாமே தீர்மானித்துச் சம்பிரதாயமாக நோக்கி ஏனடா சின்னணைஞ்சித்தேவா! நமது ஜமீன்தாரவர்கள் சௌக்கியமா என்று கேட்டாராம். ஜமீன்தார் தன்னை மரியாதைக் குறைவாக அழைத்த காரணம் பற்றிப் பொன்னம்பலம் பிள்ளையைக் கோபித்துக்கொள்ளாமல், தான் முன்னே சந்தேகித்தபடி ஏதோ ஒரு சூதாகச் சேதுபதிதான் பொய்த் திருமுகம் அனுப்பித் தன்னை வரவழைத்திருக்கிறாரென்ற உண்மை தெரிந்து, தனது அமைச்சர் பேசியதை இழிவாகக் கருதாமல், சந்தர்ப்பத்துக் கேற்ற காரணங்கொண்டு பேசுகிறார் என்பதைக் குறிப்பாக அப்பொழுதே உணர்ந்து

கொண்டாராம். உடனே பிள்ளையைப் பார்த்து எஜமானே! சமூகத்தில் சௌக்கியந்தான்; ஆனால், உங்களைப் பிரிந்திருக்கிறதுதான் கவலையாக இருக்கிறதாம்; என்று களிப்புடன் அவர் விடை அளிக்க, இதனைக்கண்ட சேதுபதி மன்னர் ஒன்றும் விளங்காதவராய், இங்கே வந்தவர் உண்மையில் வடகரை ஜமீன்தாராகிய சின்னணைஞ்சித் தேவர் தானே? அல்லது அவரின் பெயருடைய அதிகாரிகளில் ஒருவராக இருக்கலாமோ? என்று சந்தேகித்து, உண்மையில் இவர் ஜமீன்தாராகிய சின்னணைஞ்சித் தேவராக இருப்பாரானால், நமது முன்னிலையில் வைத்து இந்த அமைச்சர் அவரை இப்படிப் பேசி இருப்பாரா? இவர் சமஸ்தானத்தைச் சார்ந்த ஒரு அதிகாரியாகவே இருக்க வேண்டும்; இதிலிருந்து அரசர் இவ்வமைச்சரைக் காட்டிலும் அறிவாளி என்று தெரிகிறது; இல்லாவிட்டால் இவ்வளவு சிறந்தவராகிய பொன்னம்பலம்பிள்ளைக்கு அவரிடத்தில் மிகுந்த அன்பு இருப்பதற்கு நியாயமில்லையே என்று தீர்மானித்துக்கொண்டு இருவர்களும் அரண்மனைக்குச் சென்றார்களாம். சிறிதுநேரம் கழித்துப் பொன்னம்பலம்பிள்ளை தனியே வந்து தமது ஜமீன்தாரைப்பார்த்து ஐயனே! நான் செய்த அடாதசெய்கையை மன்னிக்கவேண்டுமெனவும், சமூகத்தின் உயர்ந்த கௌரவத்திற்கு இந்தஇடத்திற்கெல்லாம் இவ்வளவு சர்வசாதாரணமாகவருவது ஏற்றதாகுமாவெனவும்,சேதுபதிபோய்த் திருமுகம் எழுதுவதற்கு காரணமின்னதென்வும், தமக்கும் சேதுபதிக்கும் வாக்குவாதம் வந்த விவரத்தையும், தமது அரசர்க்கு விளங்கும்படி சொல்லி, அதன்பிறகு நம்திருவருக்குமுள்ள அன்புரிமையைக்கொண்டுஇப்படிச்

சொல்ல நேர்ந்தது எனவும், வேறு வழியில்லாமையால் மன்னிக்கவேண்டுமெனவும், தமது அரசரை வேண்டிக் கேட்டுக்கொண்டதோடு தாம் தமது அருமையரசரை இங்ஙனம் பேசும்படி நேர்ந்தது குறித்துப் பலமுறையும் நினைந்து நினைந்து வருந்தினாராம்.

ஆண்டாலும் அறிவாலும் சிறந்த கருணையாளராகிய சின்னணைஞ்சித்தேவர் சிறிதும் மனம் வருந்தாமல் தமது அமைச்சரைநோக்கி அன்புடையீர்! நீர் நம்முடைய மானத்தைக் காப்பாற்றி, நாம் தெரியாமல் செய்த பிழையைநீர் உமது வாக்குச் சாதுர்யத்தால் மாற்றி, நம்மைக் கௌரவிக்கும்பொருட்டு, அந்தரங்கப்பூர்வமாகச் செய்த இதன் உண்மையை நாம் அறிந்தோம்; ஆதலின், தாம் அதுகருதி வருந்தவேண்டாமெனத் தேற்றினாராம். அதன்பிறகு பொன்னம்பலம் பிள்ளை சேதுபதியிடம் தமது அரசர், தம்மைவரும்படியாக இப்பொழுது வந்த அதிகாரிவசம் சொல்லியிருக்கிறாரென்றுகூறி விடைபெற்றுக்கொண்டு வடகரையாதிக்கத்து அதிகாரியாகப் பாவனைகாட்டிய சின்னணைஞ்சித்தேவருடன் சொக்கன்பட்டி போய்ச் சேர்ந்தாராம்.

குறிப்பு:— இவ்வரலாற்றை நமது மகாமகோபாத்தியாயாகிய, உ. வே. சாமிநாத ஐயரவர்களின் வாயிலாகவும், செங்கோட்டை உயர்திரு பெரியசாமித் தேவரவர்களின் வாயிலாகவும் கேட்டுத்தெரிந்தோம்.

அத்தியாயம் 16.

மறவர் குல முறையும், பழக்கவொழுக்கங்களும், பிரிவுகள்.

மறவர்குலப் பழம்பிரிவு, புதுப் பிரிவுகளை ஆராய்தற்குரிய ஆதாரவு, பழைய நூல்களிலாவது சாசனங்களிலாவது கிடையாது. கண்ணுற்கண்டதும், காதாற் கேட்டதுமான சில பிரமாணங்களைக்கொண்டுதான் ஒருவாறு இவர்களின் குலப்பிரிவினையைத் தெரியவேண்டியதிருக்கிறது. இவர் செம்பிய நாட்டு மறவர், குண்டையன் கோட்டை மறவர், அணில் ஏறுக் கோட்டை மறவர், கொற்றவாட் கோட்டை மறவர், செவ்வேற் கோட்டை மறவர், நல்ல மங்கல மறவர், சிறுதாலிகட்டி மறவர், வன்னிய மறவர், வன்னிக்கொத்து மறவர், கொரண்டி மறவர், செகமறவர், அம்பொன்னேறி மறவர், பம்பை மறவர், கார்ண மறவர், அகத்தா மறவர், பண்டாற மறவர், உப்புக்கோட்டை மறவர், கார்குறிச்சி மறவர் எனப் பலதிறப்பட்டவராவர். இவருள்:—

செம்பியன் கோட்டையார்க்கு இப்பெயர்வந்ததின் காரணம் — மறவர் சீமை என்ற அதிகாரத்தில் கூறியுள்ளோம். இவர்கட்கும் 7 பிரிவான கிளைகள் உண்டெனத் தெரிகின்றது. குண்டையன் கோட்டையார்—இவர் ஆதியில் தமது வெற்றிக்கு அடையாளமாக இடபம் உயர்த்திய கோட்டையை உடையவர் எனவும், இனி, கொண்டை

யங்கோட்டையர் என்ற சொல்லுக்கு ஓர் காலத்தில் இவர் தேவாசுர யுத்தத்திற்குப் படைத் துணைவராய்ப் போயிருந்ததாயும் போன இடத்தில் தாங்களே வெற்றிபெற்றதாயும் தோல்வியடைந்தோரின் தலைகளைத் தமது வெற்றிக்கடையாளமாகத் தங்கள் கோட்டையில் கட்டித் தூக்கினார்களெனவும், காரணங்காட்டுவார் ஒரு சாரார். இவர்கள் தாய் வழிக்கிளையையே பிள்ளைகட்கும் வழங்கிவரும் வழக்கமுடையவர். இவரில் தமது கொத்துக்குரிய கிளைகளில் தமது கிளையைத் தள்ளி அடுத்த கிளையில் தான் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமாம். தாகசாந்தி செய்துகொள்ள விரும்புகின்றவர் தமது கிளையாளர் இருக்குமிடத்தையே விசாரித்துப் போக வேண்டுமாம். இவர்களில் சிலர் முன்னைய அரசர்பால் பல்லக்கு முதலிய செய விருதுகள் பெற்றிருக்கின்றார் எனவும், பலகுடும்பங்களில் ஆண் பெண் இருதிறத்தாரும் பல்லக்குகளில் செல்லும் வழக்கம் உடையாரயிருந்திருக்கின்றாரெனவும், இவர் மிகுந்து குடியிருந்துவரும் ஊர்களிலெல்லாம் வேறு எவ்வகுப்பினரும் இவர்களில் தலைவராயுள்ளாரிடத்துத் தங்கள் விவகாரங்களைச் சொல்லித் தீர்த்துக்கொள்ளுதல்வழக்கமாகவுள்ளதெனவும், தம்மிடத்து அடைக்கலமடைந்தோரைப் பாதுகாப்பதில் சிறிதும் பின்வாங்காத தகுதிவாய்ந்தவரெனவும் யாம் கேட்டறிந்தது மல்லாமல் நேரில் எனது அனுபவத்தில் வெளிப்படையாகக் கண்டறிந்தவுண்மை நிகழ்ச்சியுமாம். இனி, அணில் ஏறுக்கோட்டை மறவர் என்ற பெயர்வரக் காரணம் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளத்தக்கதே; ஆதலின், அதனை விரிப்பது மிகையாகும். கொற்றவாட் கோட்டை

யர்:— இவர் வெற்றிபொருந்திய தமது வாளாயுதங்களையே கோட்டையாக வளைந்து குடியிருந்துவந்த காரணத்தால் வந்த பெயரினர் எனவும், செவ்வற்கோட்டையர்:—இவர் தமது பகைவருடலில்பட்டு இரத்தந் தோயப்பெற்ற செம்மை நிறமான வேலாயுதங்களையே தமது வெற்றிக் கடையாளமாகக் கோட்டைபோட்டுக் குடியிருந்துவந்த காரணத்தால் வந்தபெயரினர் எனவும், தெரிகின்றோம். ஆகவே, இம்மறவர் 5 கோட்டையாளராக ஆதியில் கிழுவை நாட்டில் வசித்துவந்தனரெனவும், பிறகு அந்நாட்டைவிட்டுத் தங்கள் தங்கட்கேற்ற பல இடங்களிலுஞ்சென்று பலபிரிவினராக, தேவர், சேர்வை, கரையாளர், ராயர், தலைவர் முதலிய பலபல பட்டப்பெயரினராக வசித்து வருகிறார்கள் எனக் காண்கின்றோம்.

கிளையும் கோத்தும்.

1. மருதீசர் கிளை, அகத்தீசர் கிளை — கற்பகக்கொத்து.
2. வெட்டுவான் கிளை, அழகுபாண்டியன்கிளை — மூர்த்திரியக்கொத்து.
3. வீணையன் கிளை, பேர்பெற்றோன் கிளை — கமுகங்கொத்து.

4. சேதரு கிளை
வாள்வீமன் கிளை } மல்லிகைக்கொத்து.

5. கொடையன் கிளை
அரசன் கிளை } ஏலக்கொத்து.

6. ஜெயங்கொண்டார் கிளை
வீரமுடிதாங்கினார் கிளை } மிளகுக்கொத்து.

7. சங்கரன் கிளை
சாத்தாவின் கிளை } தக்காளிக்கொத்து.

8. ஔவையார் கிளை
சாம்புவன் கிளை } தென்னங்கொத்து.

9. நாட்டைவென்றார் கிளை
தருமர் கிளை } சீரகக்கொத்து.

இனி மற்றொருவகை.

---

1. வீரமுடிதாங்கினான், சேதர், ஜெயங்கொண்டார்—3-ம் மிளகுக்கொத்து.

2. அகஸ்தியர், மருவீடு, அழகுபாண்டியன்—3ம்-வெற்றிலைக்கொத்து

3. வன்னியன், வெட்டுவான், நாட்டைவென்றான்—3-ம் தென்னங்கொத்து

4. செல்லநம்பி, அம்புதரன், கௌதமர்—3-ம் கமுகுக் கொத்து.

5. சடைச்சி, சங்கரன், பிச்சிப்பிள்ளை—3-ம் ஈச்சங் கொத்து.

6. அகலிகை, லோகமூர்த்தி, சாம்புவன்—3-ம் பனங் கொத்து.

இக்கிளை கொத்துகளை இவ்வாறு இரண்டுபடியாகச் சொல்லுகிறார்கள். இவை பெரும்பாலும் குண்டையன் கோட்டை மறவர்க்கே உரியவென்பதும், கிளை 18-க்குக் கொத்து 9 எனவும், கிளை 18-க்குக் கொத்து 6 எனவும் சிலர் 12 கிளையும் 6 கொத்து எனவும், அவரவர்க்குத் தோன்றியவாறு சொல்லுகின்றார்கள். எமது அனுபவத்திலும், விசாரணையிலும் கண்டறிந்த அளவில் கிளை 18-ம் கொத்து 9-ம் என்பதேயாம்.

செம்புநாட்டு மறவர் கிளை:— (1) மரிக்கா கிளை (2) பிச்சகிளை (3) தொண்டைமான்கிளை (4) சித்தர்மாக் கிளை (5) தனிச்சகிளை (6) கரும்புதர்கிளை (7) கதராகிளை.

கார்குறிச்சி மறவர்:— இவர்கட்கும் கிளைகளுண்டு. ஆதியில் 7 கிளையிருந்ததாகவும், 7வது கிளையிலுள்ள வம்மிசத்தார் பாஞ்சாலங்குறிச்சிக் கலகநாட்களில் தமது சொந்த நாட்டைவிட்டு ஓடிப் போய்விட்டபடியால் இப்

பொழுது அறுவகைக் கிளைமட்டும் இவர்களுக்குண்டெனத் தெரிகின்றது.

கல்யாணச் சடங்குமுறை.

முதன்மையில் கலியாண மாப்பிள்ளைக்கு நெருங்கிய சுற்றத்தாராகிய பெண்கள் தாங்கள் சம்பந்தம் செய்து கொள்வதாகக் கருதும் பெண் வீட்டுக்குட்போய் அப்பெண்ணைப்பார்த்து, சில லக்ஷணங்கள் கவனிப்பதுண்டு. அதாவது:—சப்பைக்கால் ஆகாது, கெண்டைக்கால் பெரிதாக இராமல் ஒடுங்கியிருக்கவேண்டும். கழுத்திலுள்ள தோலில் இரண்டு மடிப்புக்கு மேல் இருக்கக்கூடாது. பொருத்துவாயில் உரோமங்கள் குறுக்கே வளர்ந்திருக்க வேண்டும். நெற்றியில் பாம்புத்தலைபோல் சுழியிருக்கக் கூடாது, இவை முதலியன பெண்பார்த்தற்குரிய இலக்கணங்களாம். இவற்றுள் தள்ளத்தக்க அவலக்ஷணங்களைத் தள்ளி, கொள்ளத் தக்க சுபலக்ஷணங்களைக் கொண்டு நிறுத்துணர்ந்ததன் பிறகு மாப்பிள்ளை வீட்டாரும் பெண்வீட்டாரும் கலந்து, குறிப்பிட்டவோர் நல்ல நாளில் 5 தேங்காயும், 5 குலைவாழைப்பழமும், 5 மஞ்சள் துண்டும், வெற்றிலைக்கட்டு, பூமாலை, சந்தனங் குங்குமம், முதலானவைகளுடன் மஞ்சள் கயிற்றில் கோர்வைசெய்யப்பட்ட பொன்தாலியுங்கொண்டு மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டுக்கு வருவார்கள். மணமக்களுக்கென்று அமைத்திருக்கும் பலகையில் சுபவேளை பார்த்துப் பெண்ணை உட்காரும்படி செய்வார்கள். மாப்பிள்ளையின் சகோதரி பெண்ணின் கழுத்தில் முன்னதாக அணிந்திருந்த

கருகுமணியைக் கழற்றிவிட்டுத் தாலியைக் கட்டுவாள். சங்குஊதிக் குரவையிடுவார்கள் பெண்கள். அதன்பிறகு பெண்ணை மாப்பிள்ளையின் வீட்டுக்கு அழைத்துச்செல்வார்கள். அங்கே இருவரையும் ஒரே பலகையில் உட்காரும்படி செய்து கண்திஷ்டிப் பரிகாரமுதலிய சடங்குகளை முடித்து, மணமக்களுக்குப் பால்பழம்வழங்கி, கைமாற்றித் தரும் விருந்து நடப்பதுடன் இந்திரன் தலைவடிவத்தை தாலிக்குப்பதிலாக மயிற்கொடியில் தொங்கவிட்டு வைத்தல் முதலிய சடங்குகளும் நடைபெறும். இது ஒருமுறை.

இனி 2-வதாக இன்னொருமுறை.

பனைநாரால் செய்த பலவித வருணப்பெட்டியில் 5 கட்டுவெற்றிலையும், 21 படி அரிசியும், 7 தேங்காயும், 70 வாழைப்பழமும், 5 வட்டுக் கருப்புக்கட்டியும், 21 மஞ்சள் துண்டும், பூ, சந்தனம், முதலியவும்வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார் தமது பந்துஜனங்களோடு பெண்வீட்டுக்குப்போய் அங்கே கூடியிருக்கும் ஜனங்களிடத்தில் கொடுக்க, அவர்கள் அந்த வெகுமதிகளைத் தொட்டுக் கொடுத்து, அதன்பிறகு பெண்ணின் தகப்பனாரிடம் ஒப்புவிப்பார்கள். நான்கு தினங்கட்குப்பின்பு கல்யாணத்தன்று அதிகாலையில் தமது குலதேவதைக்குப் பொங்கல்முதலிய படைப்புக்களிடுப் பின்னால்மாப்பிள்ளையை பெண் வீட்டுக்குப் பல்லாக்கு முதலிய வாகனங்களில் ஏற்றி அனுப்புவார்கள். பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணின் சகோதரர் மாப்பிள்ளையை எதிர்சென்றழைத்துத்தாம்பூலம் வழங்கித் தாலிகட்டும் வரை வீட்டுக்குள்

ளேயே இருந்துகொண்டிருந்த பெண்ணைக் கண்களைப் பொத்தி அவளுடைய தாய்மாமன் தூக்கிக்கொண்டுவந்து மாப்பிள்ளையின் பக்கவில் வைப்பார். அந்தச்சமயம் ஏனைய பெண்கள் மணமக்களிருவரையும் வளைந்துநின்று தோசையும் தேங்காய்முறியும் நிறைந்துவைத்த ஒரு தட்டைக் கையில் எடுத்து மூன்று தடவை சுற்றுவார்கள். தாய்மாமன் இருவர்களையும் ஒன்றாய்ச்சேர்த்து அங்கே வந்திருக்கும் பெரியோர்களின் சம்மதிகேட்டு, மாப்பிள்ளையின் உடன்பிறந்தாள் ஒருத்தியை அழைத்து, அவள் கையில் தாலியைக்கொடுத்துப் பெண்ணின் கழுத்தில் கட்டும்படிசெய்வார். பின்னால் மணமகன்மணமகள் ஆகியஇருவர்க்கும் பெரியோர்கள் விபூதிக்காப்பிடுவார்கள். சூழ்ந்து நிற்கும் பெண்கள் வெற்றிலையைப் பாலில் நனைத்து மணமக்களின் முட்டு, தோள், தலை, முதுகு, முதலிய இடங்களில் தடவித்தம்பதிகளை, ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி, மூங்கில்போல் ஓங்கி மக்கட் பவிசுடன் பெருகி வாழ்வீர்களாக! என்றும் மங்கள ஆர்ப்பாட்டத்துடன் வாழ்த்துவார்கள்.

3-வதாக மற்றொரு முறை.

பிரமஞானம் அமையப்பெற்ற குருக்கள் ஒருவரைக் கொண்டுவந்து அவர் தமது கையால் மாப்பிள்ளையின் உடன் பிறந்தவளிடம் தாலிகோர்த்த கயிற்றைக்கொடுத்து அவள் மாப்பிள்ளையை ஒரு முடிப்புப் போடும்படிசெய்து வாங்கி, அதன் பிறகு தான் 2 முடிப்புப்போட்டு அதனைப் பெண்ணின் கழுத்தில் பூட்டி முடிந்தபின் குருக்களையர்

மணமக்களிருவரையும் உட்காரச்செய்து இருவருடைய வலது கைகளின் சிறுவிரல்களைப் பட்டு நூலினால் ஒன்று சேர்த்துக்கட்டி. அதன்பிறகு தம்பதிகள் எழுந்து மண மேடையை மூன்று தடவை சுற்றிவந்து வீட்டினுள்ளே போய், புதியவிரிப்பில் உட்கார்ந்துகொண்டு கட்டவிழ்க் கப்பட்டு மஞ்சள் காப்பணிந்த கையால் மணமகன் தனக் குப் பெண்கொடுத்த மாமனிடம் வெகுமதிகள் அடை யப்பெறுவான்.

மாப்பிள்ளை தமது கைத்தடி (குறட்டுக்கம்பு) யைப் பெண் வீட்டுக்கு அனுப்பி அக்கம்புக்குத் தாலி கட்டு கிறது என்ற வழக்கமொன்றும் இருந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் செம்பிய நாட்டு மறவர்களில் புரு ஷனை யிழந்து தாலிகளைந்த கைம்பெண்கள் மீண்டும் ஓர் புருஷனுக்கு வாழ்க்கைப்படுகிறது என்றவழக்கம் அறவே இல்லையாம். மற்றப் பிரிவினரில் சிறுபான்மையோர் காலக்கிரமத்தில் இளம்பருவப் பெண்கள் விதவையாகும் படி நேர்ந்தால், தனது புருஷனின் அண்ணனை மணந்து கொள்வதன்றித் தம்பியை மணந்துகொள்ளக்கூடாதாம்.

இறந்தாரை அடக்கம்செய்யும் முறை

உயிர்விட்டோரைச் சமாதிவைத்தல், சுடுதல் ஆகிய இவ்விருவகை வழக்கங்களும் உண்டாம். இராமநாதபுரஞ் சீமையிலுள்ள குண்டையன்கோட்டை மறவர் தங்களில் இறந்தாரைச் சுடுகிறதென்ற ஒரே வழக்கந்தானும். பிரே தம்பல்லக்கில் வைத்துக்கொண்டு போகப்படுமாம். போகி

றவழியில் தூக்கிச்செல்லுமிடத்திலிருந்துகொண்டுபோய் அடக்கம்பண்ணுகிற இடம்வரை, இடைவிடாமல் வஸ்திரம் விரித்திருக்குமாம். அவ்வஸ்திரத்தின் வாயிலாகவே நடந்துசென்று மயானத்தில் பிணத்தைவைத்துக் கட்டைகளடுக்கிக் கருமத்துக்குரிய தலைமகன் தலையில் ஓர் புதிய மண்குடத்து நிறையத்தண்ணீர் நிரப்பித் தூக்கிவைத்து, குடத்து நீர் கீழே சிந்தும்படி ஒரு சுற்றுக்கு ஒருமுறை ஓட்டைபோட்டு அத்துவாரங்களின் வழியாகச்சிந்துகிற நீரைப் பிணத்தின்மேல் படும்படி வாரித்தெளித்துக் கொண்டு மூன்றுதடவை சுற்றிவந்து, குடம் உடைத்த பிறகு கருமத்துக்குரிய தலைமகன் பிணத்தைப்பாராமல் விலகி மயிர்களைந்து கொள்வானும். பின்னல் நாவிதனல் பிணம் சுட்டெரிக்கப் படுமாம். அதன்பிறகு கருமத்துக் குரியதலைமகன் வீட்டுக்குவந்து எரிகிற விளக்குமுன்னே வீழ்ந்து வணங்கி அன்றிரவில் அன்னமுண்ணுமல், ஏதாவது பழம், பனைவெல்லம் முதலிய விரதவுணவுகளைமட்டும் உட்கொள்வதுண்டாம். பிறகு மூன்றும்நாளில் சுட்ட இடம்சென்று சிறிது சாம்பலை அதிலிருந்து எடுத்துக் கொண்டுவந்து அதனைப் பிண்டவடிவமாக அமைத்து, சிறந்த புண்யஸ்தலங்களுக்குக் கொண்டுபோய், அங்குள்ள நதி, குளங்களில், அவ்வங்கச் சாம்பலைக் கரைத்து இறந்துபோன உயிர் வீரசுவர்க்கம் புகவேண்டுமென ஸ்தோத்திரம்பண்ணி ஏழைகட்கும் காகம் முதலிய பறவைகட்கும் போதிய அளவு அன்னமளிப்பதுண்டாம். இனி சவத்தைச்சுட்ட இடத்தில் 16-ம் நாளில் சுற்றத்தாரனைவரும்போய் எரிந்துகிடக்குஞ் சாம்பலைக் கூட்டிக்குவித்து, நீர்விட்டுக் குழைத்துமெழுகி, அதின் உச்சியில்

ஒன்பதுவகைத் தானியங்களை விதைப்பதுண்டாம். கருமஞ்செய்த நிலைமகனை ஒருபுதிய வஸ்திரத்தில் உட்காரச் செய்து, அவனுக்குப் பெண்கொடுத்த மாமன் புதிய வஸ்திரங்களையும், சுருட்பணம் என்ற வெகுமதிகளையும் வழங்கி அவ்விசேடத்தைப் பூர்த்திசெய்து, அதன்பிறகு இரண்டு மூன்று மாதங்கள்வரை பண்டாரம் முதலியோரைக்கொண்டு ஐந்து பித்தளைக்கலசங்கள் வைத்துப் பிணத்தை அடக்கஞ்செய்த இடத்தில் பூசை நடைபெறுமாறு செய்விப்பார்களாம். இந்த முறை குண்டையன் கோட்டை மறவர்க்குள்ளதென்பதாக Mr. பாசட் சொல்லுகிறார். இதே குண்டையன்கோட்டை மறவரின் கருமாந்திரச் சடங்கில் யாரிடத்தும் நிகழப்பெறாத சில அபூர்வ சம்பவங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. அவற்றுள் அடியிற் காண்பதொன்று. அதாவது:— மரணமடைந்தானொருவன் மண்டை ஓடொன்றனை எடுத்துச்சுத்தமான நீரில்கழுவித் தூய்மைசெய்து கற்பூரப்புகை காட்டிச் சிலமாதங்கள் கழிந்தபிறகு அவ்வோட்டை எடுத்துக் கிராமத்தின் பக்கத்திலுள்ள வெளிவீதிகளில் வைத்து, மதுபானம்படைத்து, ஓட்டைச்சுற்றி ஆடிப்பாடி மூன்று நாள் முடிந்தபிறகுதான் கருமாந்திரச் சடங்கு நடைபெறுமாம்.

ஜல்லிக்கட்டு அல்லது தொழுமாடு பிடித்தல்.

இதனை, ஏறுதழுவல், தொழூமாடு பிடித்தல், மஞ்சிவிரட்டு, எருது தோட்டம் முதலிய பல பெயர் சொல்லுவார்கள். இச்செய்தி பண்டைத் தமிழர்களில் சிறந்த

மரபினர்களிலொருவராகிய முல்லை நிலமக்களின் [ஆயர்] விவாகத்தேர்தலுக்காகச் சங்ககால இலக்கியங்களில் ஒன்றாகிய முல்லைக்கலியில் தெய்வத் தன்மைவாய்ந்தமுறையில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்த முறை வேறு; இந்தமுறைவேறு; அதனைக் 'கொல்லேறு தழுவல்' எனக் கூறுவர். இங்கே காணும் சல்லிக்கட்டு வீரஞ் செறிந்த விடலைகள் விளையாடத் தகுந்த ஓர் வகை விளையாட்டு.

இளங்காளைகளை நன்றாய்ப் பேணித் தம் மூட்டாகத் தோட்டங்களிலே மேயவிட்டு, உடற் கொழுப்புடைய தாகவும், கண்டார்க்குப் பயங்காம் உண்டாகக் கூடியதாகவும் வளர்த்து, தைப் பொங்கல் முதலிய வருஷப் பிறப்புக் காலங்களில் இம்மறவர் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்கட்கும் அறிக்கை செய்து, அங்கங்கே அவரவர்கள் வளர்த்திருக்கும் காளைகளையும் பிடித்துக்கொண்டுவந்து, எல்லோரும் ஓரிடத்தில் கூடுவார்கள். கூடிய கூட்டத்தில் மாடு கொண்டு வந்திருப்போரும், மாட்டைப் பிடிப்பதற்காக வந்திருப்போரும், வேடிக்கை பார்க்க வந்திருப்போருமாகிய பலருங்கலந்துகொள்ளுவார். மாட்டின் கொம்பில் பட்டுத்துண்டு கட்டி உயர்ந்த சரிகைக் குஞ்சரமணிந்து அவரவர் தகுதிக்கேற்ற முறையில் 2, 1 ரூபாவும் முடிந்து, புதிய வஸ்திரங்களைக் கழுத்தில் இறுக்கக்கட்டித் தொங்கவிட்டு, அலங்காரப்படுத்தி, கிலப்பரப் பமைந்த மைதானம் ஒன்றில் அமைத்திருக்கும் தொழுக் கூடத்தில் திறந்துவிடவேண்டிய மாடுகளை அடைத்துக் கொள்வார்கள், இவற்றைப் பிடிக்கவேண்டுமென்ற

நோக்கத்துடன் வந்திருக்கும் இளைஞர்கள் ஒவ்வொரு வரும் மனத்துணிவுடன் ஆடைகளை இறுக்கிக் கட்டிக் கொண்டு, நெஞ்சுதட்டி வீரகர்ச்சனைகாட்டிப் பந்திபந்தி யாய் நின்றுகொண்டிருப்பார்கள். அங்கே நிகழும் சம்ப வத்தைக் கண்டுகளிக்கிறதற்காகமட்டும் வந்திருக்கும் பல ஊராரும், பல ஜாதியாரும் உயர்ந்த மரம் முதலிய இடங் களில் ஏறி நின்று வேடிக்கையான இந்தக் காட்சியின் மேலேயே கண்ணுங் கருத்தும் செலுத்தி எதிர் பார்த்து நிற்பார்கள். அதன் பிறகு தொழுவிலிருந்து மாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் திறந்துவிடப்படும்; திறந்து விடக் கப்பட்ட மாடுகள் நீளமான ஒடுக்கத்தின் இட்டறை வழியே சென்று பிறகு நாலாபக்கமும் கலைந்து ஜனங்கள் போடும் பேரிரைச்சலினாலும், பிடிப்பதற்கு எதிர் பார்த் துப் பதுங்குகின்ற வாலிபரின் தோற்றத்தினாலும், மிரண்டுமிரண்டு வேகமாகப் பாய்ந்து பாய்ந்து கும்மாளம் போட்டுக்கொண்டு செங்குத்தான மலையினின்றும் குதித்து வீழ்கின்ற நீர் அரிவிபோல் தாவி ஓடிவரும்.

எதிர்சென்று பிடிப்போனைக் குத்திக் கொல்லும் நோக்கத்துடன் விரைந்துவரும்; அதன் நோக்கங்கண்டு விரைவில் செத்தவனைப்போல, பாசாங்கு செய்து கீழே படுத்துக்கொள்வான். அங்ஙனம் கீழே படுத்தவனை அது பாய்கிறதில்லை. இந்த முறையில் எதிரில் அகப் படும் ஒவ்வொரு வாலிபர்களையுந் தனித்தனிதாக்கி, குத்தித்தள்ளிவிட்டு, குறிப்பிட்ட எல்லையைக் கடந்து சொந்தக்காரனுடைய வீடுபோய்ச்சேர்ந்துவிடும்சிலமாடு கள். சிலமாடுகள் அகப்பட்டுக்கொள்ளும். அகப்பட்ட

மாட்டின் கழுத்திலும், கொம்பிலும் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைப் பிடித்தவன் அவிழ்த்துக்கொண்டு மாட்டை விட்டுவிடுவான். அந்த மாடும் தனக்குரிய சொந்தவீடு போய்ச் சேரும். ஆகவே, இந்த மாதிரியில் ஒரு நாளில் 300, 400 மாடுகட்குக்குறையாமல் அவிழ்த்து விடப்படும். சாயந்திரமாக வாலிபர்கள் வீட்டுக்குத்திரும்பும்போது பார்த்தால், சிலருக்கு வெட்டுகள், சிலருக்குக் குத்துகள், சிலருக்குச் சிறுசிறுகாயங்கள் நேராமற்போவதில்லை. ஆனால், அவர்கள் இத்துன்பங்களைக் குறித்து வருத்தப்படுகிறதுமில்லை. இங்ஙனம் நேர்ந்ததே என்றெண்ணி அடுத்த முறையாவது அவ்விளையாட்டில் தலையிடாமல் நிறுத்துவார்களோவென்றால் அங்ஙனம் நிறுத்துவதுமில்லை. மாட்டைப் பிடித்தால் கிடைக்கும் வெகுமதியோவென்றால், மிகவுஞ்சிறிது. அதனால்நேரும் துன்பமோவென்றால், அளவிறந்தன. இத்துடனில்லாமல், பார்க்கவந்திருக்கும் ஜனங்களையும் பாய்ந்துதள்ளி அவர்களும் தப்பிப்பிழைத்தோமென அரட்டையடித்துக் கொண்டு வருவார்கள்.

அத்தியாயம் 17.

மறவர் ஜாதி வருணனம்.

[Madras Journal of Literature and Science Page 351 by Rev. Wm. Taylor.]

---

*　　*　　*　　*　　*　　*

கீழேசொல்லப்படும் கையெழுத்துப் பிரதிகள் நாடு, மகம்மதியர் ஆளுகைக் குள்பட்டிருந்த போதாவது, அல்லது அதற்குப் பின்னால் ஆர்க்காட்டு நவாபின் கீழிருந்த போதாவது, எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால், அமில்தார்கள் கப்பம் விதித்து வசூல் செய்ததாக அதில் சொல்லுகிறது. இந்தக் கையெழுத்துப்பிரதி யெழுதியவர் அசல் ஆரிய வம்சத்தினர். இம்மறவர் பழக்க வழக்கங்கள் ஆரியர் பழக்க வழக்கங்களுக்கு எந்தவிடத்தில் மாறுபடுகின்றனவோ, அந்தவிடத்தில் அவைகளை நன்றாய்க் கவனித்து அவைகளைப்பற்றி விரிவாய் வரைந்திருக்கிறார். ஆரிபர்கள் இவர்கள் நாட்டைப் பிடித்து ஆண்டபோதிலும் இவர்கள் இன்னும் தங்கள் பழக்க வழக்கங்களில் தனிப்பட்ட ஜாதியினராகவே காணப்படுகிறார்கள். ஆகவே, இங்கிலீஷ் ஜாதியார் நிலைமைக்கு வெல்ஷ் ஜாதியார் நிலைமை எவ்வளவு மாறுபட்டிருக்குமோ; அவ்வளவு மாறுதல் ஆரியருக்கும் இச்சாதியா

ருக்கும் உண்டெனத் தெரிகின்றது. பாஷை விஷயத்தில் தங்கள் பாஷையிலுள்ள மிகுதியான வார்த்தைகளை இங்கிலீஷில் சேர்த்துப் பேசிப் பழக ஆரம்பித்த நார்மன் ஜாதியாரைச் சமஸ்கிருத பதங்களைக்கலந்து தமிழ் பேசிப் பழகியிருக்கும் ஆரியரோடு ஒப்பிடுதல் ஒருவாறு பொருந்தும். ஆனால், தென்கோடியிலுள்ள ஜனங்கள் பேசும் சாதாரணத் தமிழிலாவது, அவரால் எழுதப்பட்டிருக்கும் ஆதாரங்களிலாவது சமஸ்கிருத பதங்கள் அதிகமாய் காண்பதற்கில்லை.

இராமநாதபுரம், சிவகங்கை நாடுகளில் வசிக்கும் மறவர்களின் விபரம்.

மறவர் செம்பிய நாட்டார், கொண்டையங்கோட்டையார், ஆப்பனூரார், அகத்தார், ஆறு நாட்டார், உப்புக் கட்டியார், குரிச்சிக் காட்டார் என எழு பிரிவினராவர். இவ்வெழுவரில் செம்பிய நாட்டார் முக்கியமானவர். சிவகங்கை உடையாத் தேவர், கைமுத்தி உடையாத் தேவர், ஒரூர் உடையாத் தேவர், பாப்பனம் பந்தல் உடையாத் தேவர் இந்நால்வரும் சேதுபதியின் உறவினர். இந்நால்வர் கூட்டத்துள் பிச்சகிளை, மரிக்காகிளை, சித்தர்மாக் கிளை யென்று மூன்று கிளைகளுண்டு. இந்நான்கு வழியாருள் தாய் வழிக்கிளையில் சம்பந்தம் செய்வதுகூடாது. (சொக்காரரோடு) அதாவது: சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகளோடு கல்யாணம் செய்து கொள்ளலாம். இந்த வழக்கம் இதர இந்து ஜாதிகளிலில்லை. செம்பிய நாட்டு மறவரில் சேதுபதியின் குடும்பத்திலும் புருஷன் இறந்து

போனால் மனைவி உடன்கட்டை யேறுவது வழக்கம். அபூர்வமாகச் சில சமயங்களில் பெண் உடன்கட்டையே றாதுபோனால், அவள் தன் வாழ்நாள் முழுவதும் விதவை யாயிருக்கவேண்டியதுதான். என்றாலும், சேதுபதியின் பெண்களுக்கும், உடையாத் தேவர் குடும்பப் பெண் களுக்கும்மாத்திரம் புருஷன் இறந்துபோனாலும் அல்லது புருஷன் மனைவி இவ்விருவருக்குள் பிடித்தமில்லாமற் போனாலும், இவ்விருவரின் உறவின் முறையாரும் சிநே கிதர்களும் கூட்டங்கூடிப் பெண்ணுக்கு இஷ்டமான மாப் பிள்ளையைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி அவளுக்கு அனுமதிகொடுப்பார்கள். ஆனால், அபூர்வமாகப் புரு ஷனை இழந்த பெண் உடன்கட்டை ஏறவோ; அல்லது; அவள் இஷ்டம்போல் வாழ்நாள் முழுவதும் விதவையா யிருக்கவோ; விரும்பினால் அப்படியே நடந்துகொள்ளு மாறு அவளிஷ்டத்திற்கு விட்டுவிடுவார்கள்.

சிவகங்கை உடையாத்தேவர், கட்டனூர் தினுகா ரூட்டுத்தேவர், அரளிக்கோட்டை நல்லன்தேவர், செவர்க் கோட்டை பெரியஉடையாத்தேவர், கார்க்குடி கட்டனு தத்தேவர், செம்பனூர் ராஜத்தேவர் ஓலக்குடி முத்துக் கருப்பத்தேவர், கோவனூர் பூலோகத்தேவர் இவர்கள் சிவகங்கை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். இம்மறவரும் ராமனாதபுரத்து மறவரும் சிவனை வணங்குபவர்களாயிருந் தாலும், கருப்பணன், பத்ரகாளி. சந்தனக்கருப்பன், வீரபத்ரன், சங்கிலிக்கருப்பன், மாரியம்மன், அய்யனர், அரியூரான், சாமையன், குருநாதன், பதினெட்டாம்படிக் கருப்பன், மதுரைவீரன், முதலியதேவதைகளை வணங்கு

வதிலும், வெறுப்பில்லாதவர்கள். தங்கள் எண்ணப்படி நினைத்த காரியங்கள் பலிக்கும்படி தேவதைகட்கு மது, மாமிசம், பழம், முதலியன படைப்பார்கள். சாமியாடு கின்றவர்மேல் ஆவேசம் வந்து கும்பிடுவோர் நினைத்த காரியங்களில்சில அனுகூலமடையுமென்றும் சில அனு கூலமடையாதென்றும் குறி சொல்லுவார். இம்மறவரில் அநேகர் தங்கள் ஜாதி வழக்கப்படி அடிக்கடி மதுவை உபயோகித்தும் சிலர் மதுவை விலக்கியும் வைப்பார்கள். சாதாரண வகுப்பினரில் சில மனிதர்கள் ஒரு விரல்நீளம் நீளும்படி காதுவளர்த்துக் கடுக்கன்கள் (நாராங்கிபோல்) அணிந்துகொள்வார்கள். தலைவர்கள் அவ்விதம் செய்வ தில்லை. சிலர் காதை வளர்க்காமல் கடுக்கன் அணிந்து கொள்வார்கள். மறப்பெண்கள் காதை ஆறேழு அங்குல நீளத்திற்கு வளர்த்துத் தங்கள் ஜாதியினர்க்குரிய தடை யங்களை அணிந்துகொள்வார்கள். 25 அல்லது 30 முளச் சேலைகளை மடிப்புகளாக மடித்துப் பின் கொசுவம் வைத் துக்கட்டுவார்கள். ஆண்களில் சிலர் சிறு இலேஞ்சிக ளைத் தலைக்குட்டையாகவும் மற்றவர்கள் வெள்ளை அல் லது பலநிறமுள்ள 7 முள இலேஞ்சிகளைத் தலைக்குட்டை களாகவும் உபயோகிப்பார்கள். தங்கள் ஜாதிவழக்கப் படி அவர்கள் மற்ற இந்துக்களைப்போல் தலைப்பாகைக ளாவது, அங்கிகளாவது, ஆபரணங்களாவது, அணிந்து கொள்வதில்லை.

மறவரின் தலைவர்களும் சிறு ஜில்லாக்களின் தலைவர் களும் முற்காலங்களில் கிராமங்களின் சொந்தக்காரர்களா கவும், குடிகளிடம் மேல்வாரம் வாங்குபவர்களாகவும்,

இருந்துவந்ததும்மல்லாமல், கிராமக்காவல் ஒன்றே உடையவராகவும் இருந்தார்கள். நாளடைவில் முக்கிய அரசர்களாகவும், ஜில்லாக்களின் தலைவர்களாகவும், விளங்கினார்கள். அவர்கள் சகல சம்பத்துடையவர்களாயிருந்தபோதினும், கவிவாணர்கள் அவர்களின் புகழை வர்ணித்துப் பாடும்பொழுது ஒவ்வொரு தலைவரின் முன்னோர்கள் எந்தெந்த கிராமங்களின் அதிபதியோ; அல்லது காவலரோ; அந்த வரலாற்றையே சிறப்பித்துக் கூறுவது வழக்கம். இத்தலைவர்களின் அதிகாரத்தின் கீழ்ப்படாத சாதாரண மறவர்களில் சிலர் நிலச்சுவான்களாகவும், சிலர் காவலர்களாகவும், சிலர் சாகுபடிசெய்யும் தொழிலையுடையவர்களாகவுமிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பாகத்தைத் தங்கள் கோவில்கட்கு நன்கொடையாகக் கொடுத்து மற்றொருபாகத்தை வீடுகளைப்புதுப்பிப்பதற்கு வைத்துக்கொள்வார்கள். அமில்தார்களாலும் ரெவினியூ அதிகாரிகளாலும், விதிக்கப்பட்ட வரியைச்செலுத்துவார்கள்.

அவர்கள் கல்யாணமுறை பின்வருமாறு:— மாப்பிள்ளை, பெண், இருதிறத்தாரின் இருப்பிடங்கள் ஒரே கிராமமாயிருந்தாலும் சரி; வெவ்வேறு கிராமமானாலும் சரி; கல்யாணமான பெண்பிள்ளைகள் பெண்ணின் வீட்டுக்குப் போய் சங்கோசை முழங்கப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவார்கள். அதன்பிறகு பெண்ணை மாப்பிள்ளை இல்லத்துக்கு அழைத்துக்கொண்டு வருவார்கள் மாப்பிள்ளையைப் பெண்ணின் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போவதில்லை, இந்தச் சடங்கை

நடத்துவது மாப்பிள்ளை சகோதரி அல்லது பெரியதாய், சிறியதாய், முதலியவர்களைப் பொறுத்ததே. இவர்கள் தங்கள் உறவின்முறையார் சிலருடன் இச்சடங்கை நிறைவேற்றி வைப்பார்கள். பெண் மாப்பிள்ளையின் வீட்டுக்கு வந்தவுடனே, மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நெருங்கிய இனத்தவர்கள் கூடிவந்து மாப்பிள்ளையின் தகுதிக்குத்தக்கதாக இரண்டு அல்லது மூன்றுநாட்கள் மாம்சம் முதலிய உணவுப்பொருள்களால் விருந்து நடத்துவார்கள். அதன்பிறகு விருந்தினரெல்லோரும் அவரவர் இருப்பிடங்களுக்குத் திரும்பிவிடுவார்கள். பெரிய தலைவர்களின் குடும்பத்திலாவது, அல்லது ஏழைக்குடும்பத்திலாவது, ஒரு கல்யாணம் சாஸ்திர முறைப்படியும், தங்கள் ஜாதியாசாரப்படியும் நடைபெறுதபடி அதற்கு ஏதாவது தடையேற்பட்டால், தாலி மாத்திரம் பெண் வீட்டிற்கு அனுப்பப்படும். உடனே பெண்ணைப் புருஷன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். பின்னால் இரண்டுமூன்று பிள்ளைகள் பிறந்தபிறகும்கூடக் கல்யாணத்திற்குப் பாக்கு வெற்றிலை முதலானவை வைத்து உறவினர் அழைக்கப்படுவார்கள். எல்லோரும் கூடியிருக்க, மணமகனும், மணமகளும், கல்யாணப்பந்தலின் கீழ் உட்கார்ந்து நிறைவேறுதிருந்த சடங்குகளையெல்லாம் நிறைவேற்றி ஊர்வலம்வந்து கணேசர்கோவிலில் தேங்காயுடைத்து மாப்பிள்ளை தகுதிக்குத்தக்கதாக 1 முதல் 4 நாட்கள்வரை கல்யாணக்கொண்டாட்டம் நடைபெறும் இந்தமாதிரிக் கல்யாணத்தில் முதலாவது கட்டியது கட்டு தாலியென்றும், இரண்டாவது நிறைவேற்றப்பட்ட சடங்குகள் அவர்கள் நன்மதிப்புக்குரியதென்றும் சொல்லப்ப

டும். முதல் சடங்கு நிறைவேறி இரண்டாம் சடங்கு நிறைவேருமற் போனகுடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் மறவருக்குள் கேவலமானவர்களாக மதிக்கப்படுவார்கள். முதல்சடங்கு நிறைவேறி இரண்டாம்சடங்கு நிறைவேறு முன்னே புருஷன் இறந்துபோனுல், இறந்த புருஷ னின் பிரேதமும் பெண்ணும் மணமேடையில் வைக்கப் பட்டு ஜாதியாசாரப்படி செய்யவேண்டிய சடங்குகள்செய் துமுடித்துத்தான் தாலி வாங்கப்பட்டு விதவையாகின் ருள். அதன்பிறகு அவள் யாரையும் மணந்துகொள்ள லாம். இவ்விரு வழக்கங்களும் எல்லா மறவர் பிரிவுகளி லும் உண்டு.

இதே மாதிரி வழக்கங்கள் அகம்படிய ஜாதியாருக் கும் உண்டு. தொண்டைமான் நாட்டுக் கள்ளரைத்தவிர விசங்க ஜில்லாக் கள்ளர்களும் தஞ்சாவூர் ராஜ்யத்தைச் சேர்ந்த பதினெட்டுப் பாளையப்பட்டுக் கள்ளர்களும் மதுரை ஜில்லா எங்கும் குடியிருக்கும் கள்ளர்களும் முன் சொன்ன இரண்டு கல்யாணச் சடங்குகளையும் அனுசரிப் பார்கள். மறவர் அரசர்களும் ஜில்லாக்களின் தலைவர் களும், இன்னும் முக்யஸ்தர்களும் அகம்படியப் பெண் களைத் தாலிகட்டிக் கல்யாணம் செய்துகொள்வார்கள். அவ்விதக் கல்யாணத்தினுல் பிறந்த பெண்கள் மறவரைக் கல்யாணம்செய்துகொள்ளலாம். அகம்படியரோடுகூடாது. ஆண் பிள்ளைகள் தாய்வழி இனத்தைச் சேர்ந்தவர்களாக எண்ணப்படுவதால், அகம்படியரோடு சம்பந்தம் கலந்து கொள்ளலாம். மறவரோடுகூடாது. மறவருக்குண்டான பட்டம் தேவர். அகம்படியருக்குண்டான பட்டம்

சேர்வைக்காரர். கள்ளருக்கு அம்பலகாரர் என்பது பட்டம். தஞ்சாவூர் ராஜ்யத்தின் 18 தலைவர்களும் சிவகங்கை உடையாத் தேவரும், புதுக்கோட்டைத் தொண்டைமானும், சேதுபதியை வணங்கி மரியாதை செய்ய வேண்டும். ஏனென்றால், மதுரை திருச்சிறாப்பள்ளி முதலிய நாடுகட்குக் கர்த்தாவாகிய திருமலை நாயக்கர் சேதுபதிக்குத் 'திருமலை சேதுபதி' என்று பெயரிட்டு, ராஜரீகத்திற்குரிய ராஜசின்னங்களுமளித்து, தான் ஏறிப்போகும் சிங்கமுகப் பல்லக்கும் கொடுத்து, சுவீகாரமகனைப் பாவித்துச் 'சேதுபதி' என்ற பட்டமும் கொடுத்தார். இக்காரணங்களினால்தான் அந்தக் காலந்தொடங்கிமேலே சொல்லப்பட்டவர்கள் தங்களுக்கு மேலானவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் சேதுபதிக்கும் செய்து வந்தார்கள். [அதாவது கைகுவிந்துக்கொண்டே முன்னிற்றல்] 72 பாளையக்காரருள் பாஞ்சாலங் குரிச்சிக் கட்டபொம்ம நாயக்கர், காடல்குடிச் சிறுமலை நாயக்கர் [தோக்கல்வார்] சேதுபதிக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்திருந்து கைகூப்பினபடியே முன்னிற்க வேண்டும். ஆசனத்தில் அமர்ந்திருக்கக் கூடாது. எட்டையாபுரம் சில்லவார் வகுப்பார். வடகரை, சொக்கன் பட்டி, ஊத்துமலை, சேத்தூர், சுரண்டை மற்றும் மறவர் தலைவர்களும் 7000 வயல்களையுடைய சிவகிரித் தலைவராகிய வன்னியனும், தலைவன் கோட்டை மற்றும் வன்னியத் தலைவர்கள் சேதுபதிக்கு வெளிப்படையான மரியாதைகள் ஒன்றும் செய்வதில்லை. அவர்கள் பார்க்க வந்தால் சேதுபதி மரியாதைக் கடையாளமாக எழுந்திருந்து வரவேற்பார். அவர்வெளியில் புறப்படும்பொழுது

கட்டியக்காரர்கள் 'சேதுபதி' திருமலை நாயக்கரின் செல்வாக்குடையவரென்றும், 72 பாளையக்காரர்களாலும் வெல்லப்படாதவரென்றும்கட்டியம்கூறிக்கொண்டுபோவார்கள். இவ்வளவே சேதுபதிகளின் விருத்தாந்தம். திருநெல்வேலி ஜில்லாவின் கொண்டையன்கோட்டை உப்புக்கட்டி மறவர்களின் தலைவர்கள் தான் பின்னால்வருபவர்களே. உப்புக்கோட்டை மறவரில் வடகரை சின்னணைஞ்சித் தேவர், கொண்டையன்கோட்டை மறவரில் சொக்கம்பட்டி பெரியசாமித்தேவர், சுரண்டை மருதப்பத் தேவர், சிங்கம்பட்டி நல்லகுட்டித் தேவர், ஊர்க்காடு சேதுராமத் தேவர், பெற்கட்டுஞ்செவல் பூலித்தேவர், குருக்கள்பட்டி அருகுத் தேவர், கொடிக்குளம் மூவரையன், கடம்பூர் தடியத் தலைவர், மணியாச்சி இந்திரத் தலைவர், நடுவக்குரிச்சித் தலைவர்; இவர்களில் முதலிலுள்ளவரைத் தவிர மற்றும் பன்னிருவரும் கொண்டையங்கோட்டையார். கொண்டையன் கோட்டையாரின் பழக்கவழக்கங்கள் யாதெனில், மாம்ச உணவை அருந்துவார்களாயினும் கள் சாராயம் உபயோகிப்பதில்லை. தினம் ஸ்நானம் செய்து பட்டு வஸ்திரம் தரித்து சிவனைத் தொழுவார்கள். தர்ம காரியங்களுக்கும் கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் தானம் கொடுப்பார்கள். ஆளும் தலைவர்களின் மனை மக்களையன்றி மற்ற இனத்தாரில் ஒரு வாலிபப் பெண், பிள்ளையில்லாமல் விதவையாகிவிட்டால், அவளுடைய பெற்றோரும் உறவின் முறையாரில் முக்யஸ்தர்களும்கூடியிருந்து அவள் இளம் பிராயத்தினிமித்தம் மறுபடியும் ஒரு கணவனை மணந்துகொள்ள இஷ்டமா இல்லையா வென்று கேட்பார்கள். அவள் சம்மதித்தால் மறு விவா

கத்திற்கு ஒழுங்கு செய்யப்படும். சம்மதமில்லையானால், அவள் விதவையாகவே இருந்து வரலாம். இந்த விஷயங்களில் உப்புக்கோட்டை, கொண்டையன்கோட்டை இரண்டு மறவர் வழக்கங்களும் ஒத்திருக்கின்றன. மேலே சொல்லப்பட்ட தலைவர்களெல்லோரும் எழெட்டு முழமுள்ள வெள்ளையான அல்லது பலவர்ணத் தலைக்குட்டைகளைத் தலையில் கட்டிக்கொள்வார்கள். தலைப்பாகை அணிந்துகொள்வதில்லை தினசரி சலவை செய்ததும் நீர்க்காவியுள்ளதுமான வஸ்திரம் உடுத்திக் கொள்வார்கள். அது எட்டுமுழ நீளமுள்ளது. சட்டைகளாவது, குடுத்துணிகளாவது, வெஸ்ட்டுகளாவது, அணிந்துகொள்வதில்லை. மேலே சொன்ன 12 கொண்டையன்கோட்டைத் தலைவர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் தவிர, இச் சாதியாரில் மற்றப்பேர் சேதுபதியின் அதிகாரத்துக்குள்ளடங்கிய ராமனாதபுரம் சீமையில் வசிக்கிறார்கள். அவர்களில் சிலர் கிராமக்காரர்களாகவும் சிலர் குத்தகைதாரிகளாகவு மிருக்கின்றார்கள். அவர்களும் சேதுபதிக்கு ஏற்பட்ட வரிகளைக் கொடுக்கின்றார்கள். அவர்கள் தங்களிஷ்டப்படி சொந்த மனிதர்களை நிலங்கள் சாகுபடிக்காக ஏற்படுத்திக்கொண்டு சேதுபதியின் கீழ் ரெவினியூ உத்யோகங்களும் வகித்திருக்கின்றார்கள். அவ்விதம் வேலையில் அமராத மற்றவர்கள் சொந்த நிலங்களைப் பயிர் செய்து, வருமானத்திலிருந்து மாமூல்ப்படி மேல்வாரவரியைக் கொடுப்பார்கள்.

விவாக விஷயத்தில் ஆப்பநாட்டு மறவரும் கொண்டையன் கோட்டையார் வழங்கும் வழக்கங்களையே பின்

பற்றுகிறார்கள். அவர்களில் சிலர் கிராமக்காரர்களாயும், குத்தகைதாரிகளாயும் மற்றும் பாதிப்பேர் கூலிவேலை செய்பவராகவும் இருந்து இராஜங்கத்துக்கு வரியைச் செலுத்துவோராய் இருந்து வருகிறார்கள்.

அகத்தா மறவரைப்பற்றிய விவரம் :— * * இவர்கள் சிவப்புப் பாசி அணிந்து கொள்வார்கள். அவர்கள் காது நகைகள் தொட்டியரின் ஆபரணங்கள் போன்றவை. ** அகத்தா மறவர்பாசியணிந்துகொள்ளும்ஜாதியாரெனச் சாதாரணமாய் அழைக்கப்படுகிறார்கள். புருஷன் இறந்துபோனால் பெண் திரும்பவிவாகம் செய்துகொள்ளலாம். யார் யார் தனக்கு இஷ்டமோ அவர்களை மணந்துகொள்ளலாம்.

குறிச்சிக்காட்டு மறவரைப்பற்றிய விவரங்கள்:- இவர்கள் பழக்கவழக்கங்கள் செம்பு நாட்டு மறவரின் பழக்க வழக்கங்களைப் போலவேதான். குரிச்சிக்காட்டு மறப் பெண்கள் செம்புநாட்டு மறவரோடு விவாகம் செய்து கொள்ளலாம். என்றாலும் செம்புநாட்டு மறப்பெண்கள் குரிச்சிக்காட்டு மறவரோடு சம்பந்தம் செய்தல் கூடாது. இவ்வித விவாகத்தில் பிறந்த ஆண்பிள்ளைகள் செம்பு நாட்டு மறப் பெண்களைத்தான் மணந்துகொள்ளலாம். குறிச்சிக்காட்டுமறவர் சிவனடியார்களாயிருந்தபோதிலும் மேலே சொன்ன தேவதைகளையும் வணங்குவார்கள். இம் மறவர் சேதுபதியின் கீழ் வேலைக்காரர்களாகவும் கூலி வேலைக்காரராகவும் பயிரிடும் குடிகளாகவும் இருக்கிறார்கள். மற்றவர்கள் செம்பு நாட்டாரைப்போல் அந்தஸ்

துடையவர்களாய் மற்றவர்களைப் போல் வரி செலுத்து வார்கள்.

ஆறுநாட்டு வட்டகை மறவரைப்பற்றிய விவரம்:— இவர்களும் சிவனடியார்தான், மற்றத் தேவதைகளையும் வணங்குவார்கள். இவர்கள் மதுவை உபயோகிப்பார்கள். இவர்களும் மற்ற மறவரைப்போல் கல்யாணப் பெண்ணுக்கு 30 பணம் பரிசம்கொடுப்பார்கள். அப்பரிசத்தைப் பெண்ணின் பெற்றோர்கள் வாங்கிக்கொள்வார்கள். மாப்பிள்ளையின் மூத்த சகோதரி, அல்லது இளையசகோதரி, பெண்ணின் வீட்டுக்குப்போவாள். சங்குச்சத்தம் தொனிக்கத் தாலியைக்கட்டுவாள். அடுத்த நாள் அதிகாலையில் பெண், மாப்பிள்ளையின் வீட்டிற்குக் கொண்டு வரப்படுகிறாள். கொஞ்சக்காலம் கழித்து 3 அல்லது 4 வருஷமானாலும் சரி, பெண் கர்ப்பந்தரித்திருக்கிறாளென்று தெரிந்தவுடன், கர்ப்பந்தரித்த நாலாவது ஐந்தாவது மாதத்தில் மாப்பிள்ளை, பெண் இருவர்களின் இனத்தார்கூடி அவர்களின் முன்பாக மாப்பிள்ளையையும், பெண்ணையும் மணமேடையில் வைத்து அக்கினிக்குண்டம் இன்னும் அதோடு சேர்ந்தமற்றும் சடங்குகளையும், புரோகிதனைக்கொண்டு செய்வித்து முடிந்தபிறகு பந்துக்கள் மஞ்சள் அரிசியைத் (சேஷைஅரிசி) தம்பதிகளின் தலைமேல்த்தூவி, இவ்விதமாக நிறைவேறாதிருந்த சடங்குகளை நிறைவேற்றுவார்கள். அதன் பிறகு இனத்தாருக்கு விருந்தளிக்கப்படும். அவர்கள் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஒரு பணமுதல் ஒரு வராகன்வரை இறைவளிப்பார்கள். இந்த முறையில் கல்யாணம் முடிவடையும்.

சிலவேளைகளில்பணமில்லாமையால், கல்யாணச்சடங்குகள் இரண்டுமூன்று பிள்ளைகள் பிறந்தபிறகும்கூட நிறைவேற் றப்படும். முதல் புருஷன் இறந்துபோனால், மறுவிவா கம் சர்வசாதாரணமாக நடப்பதுண்டு. தாலிகட்டின பிறகு புருஷனுக்குப் பெண்ணின்பேரில் விருப்பமில்லா விட்டால், இனத்தாரெல்லாம் ஒன்றுகூடிப் பெண்ணை அவள் கொண்டுவந்த சாமான்களோடு தாய் வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். கட்டின தாலியும் தீர்க்கப்பட்டு உடைத்து எரியப்படுகிறது. பெண் மாப்பிள்ளையை விரும்பாவிட்டால், கல்யாணத்திற்கு மாப்பிள்ளை செலவ ழித்த செலவும், அவன் கட்டின தாலியும் திரும்பக்கொ டுக்கப்படும். பெண் தான் கொண்டுவந்தவைகளை எடுத் துக்கொண்டு தாய்வீடு சென்று தனக்கிஷ்டமானவர் களை விவாகம் செய்துகொள்ளலாம். சிவகங்கை நாட் டில்வசிக்கும் இம்மறவர், சிவகங்கை உடையாத்தேவரின் போர்வீரர்களாகவும், ராமனாதபுரம் நாட்டில் வசிக்கும் இவர்கள் சேதுபதியின் போர்வீரர்களாகவுமிருக்கிறார்கள். ஈட்டியும், வாளும், உடையவர்களுக்கு 5 கலம்நெல் விளை யும் பூமியும், இரண்டு வீரர்களின் துப்பாக்கியைச் சுமப் போருக்கு 14 கலம் நெல்விளையும் பூமியும் கொடுக்கப் படும். ஐம்பது மனிதரைக் கீழாகக்கொண்ட சர்தாருக்கு 25 கலம் நெல்விளையும் பூமியும், நூறுமனிதரைக்கீழாகக் கொண்ட சர்தாருக்கு 50 கலம் நெல்விளையும் பூமியும் உண்டு. பலபல கிராமங்களிலும், பட்டினங்களிலும், இங்கிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தவிதத்தில் வருகின்ற அவர்கள் வருமானத்தில் ஒவ்வொருகலம் நெல் லுக்கும் ½ பணம் வரியுண்டு. இவ்விதமாய்ச் சாகுபடி

நடத்தப்பட்டு வந்தது. ஆறுநாட்டு மறவர்களின் விருத்தாந்தமும் இதேமாதிரிதான். ராணுவ ஊழியத்திற்காக அமைக்கப்பட்ட இந்தத்திட்டம் மற்றப்பிரிவினராகிய மறவருக்கும் உண்டு.

Marava jathi Varunanam from the unpublished Mackenzie manuscripts in the possession of the Asiatic Department of the Madras Literary society:

அத்தியாயம் 18.

மறவர் குல மாணிக்கங்கள்.

இம்மறவர்குலத்தவருள், பக்தர்களும், ஞானிகளும், குறுநிலமன்னர்களும், தமிழ்ப்புலவர்களும், வள்ளல்களும் பல்கிப் பெருகி இருந்திருக்கின்றனர். திருத்தொண்டர் தொகைக் குறிப்பின் விரிவாகிய பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட அடியார்களில், கூற்றுவர், நரசிங்கமுனையரையர், ஐயடிகள், காடவர்கோன், கழற்சிங்கர், மெய்ப்பொருளார் முதலியோர் இக்குலத்துக் குறுநில மன்னரே அல்லவா? இனி, சிறியமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி „யென்னும்

ஆறு பிரபந்தங்களை இயற்றியவரும் நம்மாழ்வார் இயற்றிய நான்கு திருப்பாடல் தொகையாகிய நான் மறைக்கும் ஆறு அங்கமாக வைணவர்கள் கருதுமாறு வைத்தவரும், நான்கு கவிப் பெருமாள் என்ற பட்டம் பெற்றவரும், திருவரங்கத்தில் பலதிருப்பணிகள் இயற்றியவருமான திருமங்கை மன்னரும் இக்குலத்தவரே. இவர் திருமங்கை நாட்டிலே தோன்றிய குறுநில மன்னர் ஆதலின், திருமங்கை மன்னன் எனவும், திருமங்கையாழ்வார் எனவும் கூறப்படுவர். இவருடைய பாசுரங்களினால் இவருக்குரியவாகக் காணப்படுகின்ற பரகாலன், கலிகன்றி முதலிய பெயர்களிலிருந்து இவருடைய வீரமும், நேர்மையும் நன்கு புலனாகும். இப்பெரியாரின் திருமணம், போர் முறை முதலியவற்றைக் குறித்துத் திருமலைமான்மியத்தில் விரிவாகக் காணலாம். 'மூவரையர் வண்ணம்' என்றோர் மறவர் குலப் பிரபந்தம் ஒன்றுண்டு, அதிலுமிவர் வரலாறு விசேடமாகக் கூறப்பட்டுள்ளது.

இனி, இராமநாதபுரம், அரசர் மறவர் குலதிலகமென்பதை அறியாதார் யார்? எந்நாட்டினும் பொன்னொடெனப் பாராட்டத்தகும் சேதுநாட்டு அரசராகிய இவர், மறவர்குலப் பெருக்கென்னும் சமுத்திரத்தை அளந்தறிய வல்ல கலங்கரை விளக்கமன்றோ? ரகுநாத சேதுபதியைக் குறித்து அமுதகவிராயரால் பாடிய ஒருதுறைக் கோவையில்,

" மகக்கண்ணிற் சிலமறையோரை வாழ்வித்து
வான்கொணர்ந்து, சகக்கண்ணிற் சேர்த்தவன்" எனவும்,

"நாவசைந்து கறங்காமணி முன்றிலான்" எனவும்,
"கலைவாணர் சங்கத்தமிழுக் குருகிச் சித்தங்களிப்பவன்" எனவும்,
"பாவுக் கிசையும் பெயரே புனைந்து மெய்ப் பாவலர் தம் நாவுக்கிசையும் பெரும் புகழான்" எனவும்,
"கலைக்கே நெடுங்கடலன்னான் அடைக்கலங் காத்தவன்" எனவும்,
"ஒரு காலத்தும் பொய்யுரையான்" எனவும்,
"கடைகற்றவன்றே கொடுப்பதுங் கற்றவன்" எனவும்,
"காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வும் கவிமதுர,
வாக்குந் தழைத்தவன்" எனவும்,
"பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின்.முத்தும்
பொன்னும் சொரியும் ரகுநாதன்" எனவும்,
"சொற்பாவலர் தங்கிளை வாழச் செம்பொன்மாரி
சொரியும் வண்மையன்" எனவும்,
"நாலாம் பனுவல் நவரசச் சொற்றமிழ் நாவலர்க்கு
மேலாம் பரிசருள் மால்" எனவும்,
"குஞ்சரத்தை வெள்ளைக் குடையைத் தமிழ்க்குலவுசப்ர,
மஞ்சத்தை யீயுங் கொடை ரகுநாதன்" எனவும்,
"கோவைத் துறைக்குங் பதினாயிரம் பொன் கொடுத்
திசைகொள், தேவைத் துறைக்குத் துரை" என்வும்,
புகழ்பட்டிருத்தலே இவர் பெருமையை விளக்கப் போதிய தாகும். இனி, மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவி ராயர் தாம்பாடிய தளசிங்க மாலையில் சேதுபதியை,
"அடுத்தார்க் கென்தநாளும் வளர்ந்த செல்வந்தருவான்" எனவும்,
"இராமேசனுக்கு முன் மண்டபஞ் செய்தான்" எனவும்,

திருப்புல்லாணிக் கோபுரங்கட்டுவித்த தனத னெனவும், சேதுவில் சோடசதானஞ் செய்புண்யன் எனவும், "புன்மை செய்தார்க்கும் நன்மைசெய்து புரக்கும் தன்மையன்" எனவும், "மதுரையுங் காத்துவளருந் தெய்வத்தனுக் கோடி காத்தவன்" எனவும், கூறியுள்ளார். இவற்றால் நமது சேது காவலரின் அறிவும், நீதியும், புலவர்க்கீயும் வண்மையும், தமிழபிமானமும் விளங்கும். இச் சமஸ்தானத்தில் இருந்துவந்த தமிழ்ப் புலவர் தொகையை விரிக்கிற் வளரும். இப்பொழுது அண்ணாமலை பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சியாளர் தொகுதியில் ஒருவராய, ரா. இராகவையங்கார் அவர்களும், அவர்களின் அம்மான் சேயும், தமிழ் விரிவுரையாளரும் ஆகிய, மு. இராகவையங்காரவர்களும் இவ்விராமநாதபுரத்து அரசர் பெருமகனால் ஆதரிக்கப்பட்ட வித்துவ பரம்பரையினராயிருந்து வருதல் யாவரும் அறிந்ததாகும். சேது முதல் சென்னைவரை ஆங்கு ஆங்குள்ள பல பிரபுக்களால் கொண்டாடப் பட்டவராகிய, பெரிய சரவணக் கவிராயர் அவர்களும் இச் சமஸ்தான வித்துவான் தான். இவர் நமது சேதுபதியைக் குறித்துப் பாடிய பாடல் பலவற்றுள் ஒன்று குறிப்பிடுகின்றோம்.

"அரசரில் உயர்ந்த துரையாரெனில், சேதுபதி
யாகும் அவன் மணிவாயலில்
அகத்திய முனிக்கும் அதிகங்கற்ற பேர்கள்காண்
ஆயிரங்கவி வாணருண்(டு)
அவரில் ஒருசிறுவன் யான்பாட வறியேனென்(று)
அகற்றிவிட்டார்கள் என்னை.

ஆதலால், பூமியில் சஞ்சரித்தேனின் அகந்தனில் மகிழ்ந்
தருள்வையே"

இனி வடமொழி, தென்மொழி, இரண்டினும்சிறந்த வல்லுநரும், சேதுபதி மந்திரிகளில் ஒருவருமான பொன்னுச்சாமித்தேவர் அவர்களும், மதுரை நான்காந் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கிநடத்திய பெரிய தமிழபிமானியாகிய பாண்டித்துரைத்தேவர் அவர்களும், இச்சேது காவலர் கைவண்மைக்குப் பாத்திரரான சிறப்புத்தொன்று தொட்டு அனைவரும் அறிந்ததே. நமது பாண்டித்துரைத் தேவரவர்கள் அவர்களின் வாழ்நாளில் தமிழுக்குச் சிறந்த தொண்டுபுரிந்து வந்திருக்கின்றார்கள். தமது சமூகத்தில் தளர்ந்த குடிகட்கு வேண்டும்உதவி செய்து வந்திருக்கின்றார்கள். மறவர் சாதியார் நிறைந்த கிராமங்களில் எளியமக்கட்கு இலவசக்கலாசாலைகள் ஏற்படுத்தி, அக்கிராமங்கட்குத் தாம் பலதடவையும் போய்ப்போய் அவர்கட்கு ஆவனசெய்து கல்விகற்கும்படி விளக்கமான உபதேசங்களைப் புகட்டி முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். பொருள் உதவி செய்யவேண்டுவோர்க்குப் பொருளுதவியும், வாக்குச் சகாயம் செய்ய வேண்டுவோர்க்கு வாக்குச் சகாயமுஞ்செய்து தளரவொட்டாமல் பேணிவந்த அப்பெரியார் இன்னுஞ் சில காலமிருப்பார்களானால் இம்மறக்குலம் மிகவும்முன்னேற்றமடைந்து இருக்குமென்று சொல்லவேண்டுமோ? இவர்கள் பாலவனத்தம் ஜமீன்தாரென்பதும், பன்னூல்திரட்டுஎன்னும் அரியநூலைத் தொகுத்து அறிவுடையார்க்கு உதவியுள்ளதைக் கற்றோர் அறிவார்.

ஊற்றுமலைச் சமஸ்தானம்.

இவ்வூற்றுமலை திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த தென்காசித் தாலுகாவிலுள்ளது. சின்னாட்களுக்குமுன் இதனையாண்டு வந்த குறுநில மன்னர்பெயர் ஹிருதயாலயமருதப்பத்தேவர். இவர் தமதுசமஸ்தானத்தில் தமிழ் வித்துவான்கள் பலரை வைத்துத் தமிழைவளர்த்து வருதலிலேயே பொழுதுபோக்கி வந்தவர். அவ்வித்துவான்களில் முதன்மைவாய்ந்தோருள் ஒருவராகிய சங்கரநமச்சிவாயப் புலவரை நன்னூலுக்குச் சிறந்தவோர் உரைஎழுதச் சொன்னவர் என்பதை அவர் தாம் எழுதிய உரைச் சிறப்புப்பாயிரத்தில்,

"பொன்மலை எனவிப்புவி புகழ்பெருமை
மன்னியவூற்றுமலை மருதப்பன்
முத்தமிழ்ப்புலமையும் முறையரசுரிமையும்
இத்தலத்தெய்திய இறைமகனுதலின்
நன்னூற்குறை நீ நவையறச்செய்து
பன்னூற் புலவர்முன் பகர்கியென்றியம்பலின்
நன்னாவலர்முக நகை நாணுமே
என்னாசியன்றவை இயற்று மின்னூலுள்"

எனக்கூறியிருத்தலால் அறிகிறோம்.

இனி, சங்கரநமச்சிவாயரைப் புகழும் மற்றொருவரால் கூறிய செய்யுளில்:—

"நன்னூலுட் கருத்துலகோர் அறியவுரைசெய்க
வெனா நரேந்திரசிங்கம்,
தென்னூற்றுமலை மருதப்பன் புகலப்பொருள்
விளங்கச் செய்தான்பாரில்
என்னூற்கு மெழுத்தோடு சொற்பொருள் அரிசங்கர
நமச்சிவாயனென்னும்
பன்னூற் செந்தமிழ்ப் புலவன் சைவசிகாமணி நெல்
லைப்பதியுளானே."

எனவும் பாராட்டப்படுதலானும், இவரிடத்திலுண்டான தமிழபிமானம், நன்கு விளங்கும்.

சங்கரநமச்சிவாயருடைய ஊர் திருநெல்வேலி. அங்கேஇவர் வாழ்ந்த இடம்தடிவீரையன் கோவில்தெரு. குலம் வேளாளர் குலம்; சமயம் சைவம். இவருடைய புதல்வர் வேலாயுதம்பிள்ளை என்பவர் ஒருவர் தென்காசி முதலியஇடங்களில் தாலுகாக்குமாஸ்தாவாக இருந்துவந்தனர். இச்சங்கரநமச்சிவாயபிள்ளை நெல்லை ஈசானமடத்திலிருந்த இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சாமிநாததேசிகரிடத்தில் தொல்காப்பிய முதலிய இலக்கணங்களையும், சங்க இலக்கியங்களையும், முறையே கற்றுத்தேர்ந்தவர். இவரைக்கொண்டு நமது மருதப்பத்தேவரவர்கள் நன்னூலுக்கு உரைஎழுதச் சொல்லும்பொழுது மாதம் ஒன்றுக்கு நான்கு கோட்டை நெல்லும், தினந்தோறும் ஒருப்டிப்பாலும் அவருக்கு அரண்மனையிலிருந்துகொடுத்துவந்தனர். உரையை அரங்கேற்றியபிறகு தக்கவெகுமதியும் நன்மதிப்பும்பெற்றுத் திருநெல்வேலிக்குச் சென்றார் என்பது கர்ண பரம்பரைச்செய்தி

"நன்னூலுக்குச் சிறந்ததோர் உரைநீர் செய்திடுக" என்றதேவரவர்களின் கட்டளையால் அவருக்குள்ள கல்வி கேள்விகளின் சிறப்பையும் ஆர்வத்தையுங்குறித்து என்னெச்சொல்வது! மருதப்பத்தேவர் விரும்பியது இங்கே எதுவென்று அறிவுடையோர் நன்கு ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்; நன்னூல் உட்கருத்து உலகோர் அறியவுரை செய்கவென்பதொன்றே. ஆகவே நன்னூல் என்னும் சிரிய இலக்கணத்துக்குத் தேவர் அவர்களுடைய வேண்டுகோளால் மிக அழகுவாய்ந்த ஓர் புத்தம் புத்துரையை நாம் பெற்றோம்.

இனி, தேவர் அவர்களின் ஆஸ்தான வித்துவான்களில் முதன்மை வரிசையாளரும், புதியபுதிய சிலேடைகளை அமைத்துச் செய்யுள்செய்யும் வன்மை படைத்தவரும், தாம் சொல்லும் சொற்களைப் பிறர்மறுத்து வெல்லுஞ்சொற்களுக்குச் சிறிதுமிடந்தாராமல், சொல்லும் மதிநுட்பம் வாய்ந்தவரும், எளியசொற்களைச் சொல்லி வலிய பொருள்படுத்திக் காட்டி, கேட்போர் மனத்தை வியப்படையும்படி செய்வதில் வல்லுநருமாகிய, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் கல்வி நிலையைப்பற்றி நாம் ஆராயப்புகுவோமானால், அவரது வாழ்வில் கற்கவேண்டிய கலைகள் இல்லாதகுறைவன்றி, அவர் கல்லாதகலைகளில்லை எனச்சொல்லுதல் இழுக்காகாது என்பதே எமது துணிபாம்.

இவர்நமது தேவரவர்களின் மனத்தைக் களிப்படையும்படி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாகக்கொண்டு

அவரின் போன்புக்குப் பாத்திரராக விளங்கிவந்தார். சில சமயங்களில் இவர், தேவர் அவர்களோடு மகிழ்ச்சியாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் 2 வகைப்பொருள் படும்படி பேசுவதுண்டாம்; யாம் கேட்டறிந்த அவற்றுள் ஞாபகத்துக்கு வருகிற 2 வகைப் பொருட்சொற்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றோம்.

அண்மையில் நின்ற ஆட்டுக்கடாய் ஒன்றனைச்சுட்டி இக்கடாய்க் கொம்பில் முத்திருக்கு எனவும், ஆட்டுக்கடாய் ஒன்று, வேட்டி ஒன்று, ஆகிய 2 வெகுமானமும் தரவேண்டுமென ஒருவர் ஒரு கவிபாடிக்கொண்டு வந்து தேவரவர்களிடங் கொடுத்தாராம்; அதனை இவர் வாங்கிப் பார்த்தவுடன் 'இரண்டில்ஒன்று தான்நடக்கும்' எனவும், ஒரு விசேடதினத்தன்று இருவரும் ஓரிடத்திலிருந்து உணவு அருந்தும்பொழுது தேவரவர்களின் மனவியாரே அமுது படைக்கநேர்ந்ததாம். அதுகாலை இவர் அவ்வம்மையார் தலைமுடியில் அலங்கரித்திருந்த சிவந்தி மலரைநோக்கி 'தங்கச்சிவந்தியா' எனவும் இருபொருள் தொனிக்குமாறு கூறியிருத்தல் காண்க. இவைபோல்வனவாய அளவிறந்த சிலேடைகளையமைத்துப் பேசுவதில் நமது ரெட்டியார் தழும்பேறிய வாக்குவன்மையும், சந்தர்ப்ப சாதுரியமும், வாய்ந்தவர். இவரை நமது தேவரவர்கள் நாளடைவில் பெயர்சொல்லிக் கூப்பிடுதல் தவறெனநினைத்து, ஆண்டால் சிறியராயினும், அறிவால் பெரியராகலின், 'மாமா' என்றழைக்கு முறையை மேற்கொண்டு பொன்போல் பொதிந்து பேணி வந்தனராம். தமிழுலகில் காவடிச்சிந்து என்னும் ஓர்நூலை முதன்முதலில் பாடி

யவர் நமது ரெட்டியார் அல்லவா? காவடிச்சிந்தைப் படித்துப்பார்த்துச் சித்தங்களிப்படையாத் தமிழர் இங்கிலவுலகத்து எவர்தானுளர்? தேவரவர்களைக்குறித்துப்பல புலவர்களரனும் பாடித் தொகுக்கப்பெற்ற ஊற்றுமலைப் பன்னூல்திரட்டு என்னும்நூலில் ரெட்டியார் அவர்கள் பாடிய பாடல்கள் கடல்மடை திறந்த வெள்ளப் பெருக்குபோல் காணப்படுகின்றன. இவை நிற்க; குண்டையன்கோட்டைமறவர் குலக்கொழுந்தாகிய மருதப்பத்தேவரவர்கள் இறைவன் திருவடி நீழலடைந்ததன்பிறகு அச்சமஸ்தானத்தில் வேறுவிசேட நிகழ்ச்சிக்குக் காரணமானவர் ஒருவரும் இருந்துவந்ததாகத் தெரியவில்லை.

சேற்றூர்.

இது இராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவிலுள்ளது. இதனை இப்பொழுது ஆண்டு வருகின்ற குறுநில மன்னர் பெயர் சேவகப்பாண்டியத் தேவர். இவர், வணங்காமுடிப் பண்டார மறவர் என்னும் பகுப்பைச் சார்ந்தவர். அரசிலக்கணத்திற் கேற்ற தகுதியும், தமது பெரியோர் சென்ற நல்வழியாகிய அறநெறியின்படியே அரசாளு மேன்மையும், சங்கீதக் கலையில் சிறந்த பயிற்சியும், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய இந்நான்கினும் குறைவுபடாத நீர்மையும், குடிகளைத் தமது அடிதழுவி நிற்குமாறு ஆதரித்துவருங் கருணையும் வாய்க்கப்பெற்றவர் என்பது உலகப்பிரசித்தம்.

இவர் புதுக்கோட்டை மாமுண்டியாபிள்ளை என்பவ ரிடம் முறையே கஞ்சிரா வாசிக்கப் பழகிக்கொண்டவர்; அதிலிருந்து அதனோடு தொடர்புடைய பிடில், தம்புரு, வீணை, டோலக், மிருதங்கம், சலதரங்கம், புல்லாங்குழல் முதலிய பலவாத்தியங்களில் கைதேர்ந்த வித்துவான்களை அடுத்து அடுத்துப் பன்முறையும் தமது அரண்மனைக் கும், ஆலயங்களில் நடைபெறும் விழாவிற்கும் வரவ ழைத்து அவ்வாத்தியங்களைக் கேட்டுச்செவிமடுப்பதையே சிறந்த அலுவலாகக் கொண்டவர். சிலசமயங்களில் அவர் களோடு கலந்து தாமும் அவ்வாத்தியங்களை வாங்கிக் கொண்டு வெகு வினயமாய் அனுபவித்து வாசித்துக் காட்டுவார். இனி, உயர்ந்த நாதசுரக்காரர்களைத் திரண்ட பொருள் கொடுத்து வரவழைப்பதுண்டு; வரவழைத்தால், அவர்கள் எந்த விதத்திலும் சமாளித்து மிரட்டிவிட்டுப் போய்விடலர்மென நினைப்பார்களானல் அந்நினைப்புப் பயன்படாது போய்விடும். ஆனதினுல் இவரது முன் னிலையில் நின்று தொழில் செய்யும் எத்துணைச் சிறந்த சங்கீத வித்துவான்களும் பேணற் பாடமைந்த ஞாபகத் தோடு தங்கட்குத் தெரிந்த வித்தைகளை வெளிப்படுத் தித் தகுந்த பரிசும், நன்மதிப்பும், விடையும் பெற்றுச் செல்லுவார்கள். இவருடைய அரண்மனையில் தமது முன்னோர்களைப் போலவே இன்றும் இரண்டு தமிழ்ப் புல வர்களை ஆஸ்தான வித்துவான்களாக வைத்துத் தமிழை யாதரித்து வருகின்முர். இவரது முன்னோர் காலத்தில் முகவூர் சே.ரா. அருணசலக் கவிராயர், மு.ரா. கந்தசாமிக் கவிராயர் முதலியோர் சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான் களாக இருந்து வந்திருந்தாரென்பது அறிஞர் யாவரும்

அறிந்ததே. இத்துணைச் சிறந்த தயாநிதியாகிய குரு நில மன்னர் சேவகப்பாண்டியத் தேவர் அவர்களின் வாழ்நாள் சால நீடித்திருக்கவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை மனம், மொழி, மெய்களால் வழுத்துகின்றோம்.

அத்தியாயம் 19.

சமூகச் சீர்திருத்தம்.

முன்னுரை.

"குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்."

என்பதற்கேற்ப நாட்டையும், நகரத்தையும் ஆண்டு, பலவித வாத்தியங்கள்முழங்கப் பல்லக்கிலும்யானையிலும் ஏறிப்பவனிவந்த அரசர் பெருமக்களும் ஒரு காலத்தில் பிறரைப்போய்த் துதித்துக் குறையிரந்து நிற்கும் தன்மைக்கு வந்துவிடுதல் உலக இயற்கையே! எனினும் "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மைதரும்" என்று நம் நரைமூதாட்டி கூறியபடி கெட்டாலும் மேன்மக்கள் தங்கள் மரியாதையைப் பறிகொடுப்பதில்லை. மானம் ஒருவனுக்கு உயிரினும்

சிறந்தது, தானும் தனதுஇனத்தாரும்முன்பெய்தியிருந்த நிலைமையினின்றும் தாழாதிருத்தலும் விதிவலியால் தாழ்வு நேர்ந்த இடத்து உயிர்வைத்து வாழாதிருத்தலும் தான் மானமாகும். ஆதலின் அறிவுடைமக்கள் மானத்தைப்பெரிதும் விரதமாகக்கொண்டு வாழ்ந்துவருவர். தொன்றுதொட்டு உயிர்நலம் படைக்கப்பெற்று வாழ்ந்து வந்தநாம் இன்று நிலைகுலைந்து கண்டோர். நகைக்கும்படி இழிவடைந்து நிற்பதற்குரிய காரணங்கள் பலவுண்டு. இன்று நமதுஉருவம் முழுவதும் நசுங்கி நிழல்மாத்திரம் தான் சிறிது தோன்றுகின்றதென்று சொல்லலாம். மறவர் குலமாகிய மலர்மிகு மரங்களின் அடிப்பாகங்களில் இருந்து வேர் முழுவதையும் அறுத்துக்கொண்டு வருகின்ற வேர்ப்புழுக்களை அறவே களைந்தாலல்லது மரங்கள் தளிர்விட்டுச் செழித்து வளரமாட்டா என்பது யாவரும் அறிந்ததே. இனி இவ்வேர்ப் புழுக்கள் யாவை என ஆராயப் புகுவோமானால் களவு, காவல், கடாய்வெட்டல், பிறர் சண்டைகளில் தலையிடுதல் முதலியனவாம். இவைகளைப்பற்றி விரிவாக ஆராய்ந்து நாம் செய்யவேண்டுவதென்ன என்று கீழே குறிப்பிட நினைக்கின்றோம்.

(1) களவு:— நமது மறவர் குலத்திற்குறிய கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளுந் தீய செய்கையாகிய களவு நம்மைவிட்டு நீங்கினபாடில்லை. அது குறித்து வருந்தாதிருக்க முடியவில்லை. "குற்ற மரபினர் என்ற சட்டம்" இந்தக் குலத்தைத்தவிர வேறு எந்தக்குலத்தாருக்கும் விதிக்கவில்லை. பழையன கழிதலும், புதியன புகுதலும், ஆகிய செய்கைகளில் மக்கள் கால மாறுதலுக் கேற்பச்

சீர்திருத்தம் பெற்றுவரும் இந்நாளில் அது நம்மைவிட்டு விலகாதிருக்குமானால், நமது அறிவின்மையைக் குறித்து நாமே இரங்கவேண்டியதாயிருக்கிறது. தீயகாரியங்களைச் செய்து அவற்றால் கிடைக்கும் பொருளைக்கொண்டு உயிர் வாழ்தலைப் பார்க்கினும் அழிந்துபோதலே மிகவும் நன்று. இது வீண் வார்த்தை என நினைக்கவேண்டாம். நமது சரீரத்தில் ஒருகட்டியுண்டாயிருந்தால் நாம் களைய முயல வேண்டுவதல்லது பிறர் எதற்காக முயலப் போகின்றனர். "நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்தும்மந்திரமும்விரைந்து நாடாத்தெஞ்சினர் தங்களைப் போல" ல்லவோ இருக்கின்றோம். நாம்பிறந்த குடியிலுள்ள தீயகாரியங்களை நம்மவர்களே ஆராய்ந்து இடித்துக்கூறி போக்கிக்கொள்ளாமற் போவோமானால், வேறுயார் அத்தீமைகளை எடுத்துச் சொல்லவோ போக்கவோ சுதந்திரமுடையவர் ஆவார்? அவரவர் பிறந்த குடியை அவரவரே நல்வழிப்படுத்துங் கடைமையுடையவர். கொடுஞ்செய்கை நம்மைவிட்டு ஒழியாமையினால் அல்லவா; அரசாங்கத்தார் நம்மைக் கல்வித் துறையிலும் பிற்போக்காளர் தொகுதியில் சேர்த்திருக்கின்றனர். இவற்றை யெல்லாம் சிந்தியாமல் மனம் போனபோக்கில் நடந்துகொள்வதென்பது உசிதமன்று. நம்மவரிற் சிலர், நமக்காகத்தானே பெருந்தொகை செலவிட்டு, அரசாங்கத்தார்சிறைச்சாலை அமைத்துவைத்திருக்கின்றனர் என்று கூறுவது மனித உணர்ச்சியுடையார் வாயிலிருந்து வரத்தக்கதன்று. தொன்றுதொட்டு இன்றுவரை இக்குற்றங்கட்குப்பிறர் அனைவரும் பங்காளிகளாக இருந்து வருகின்றனர் என்பதை யாவரும் அறிவர். ஆயினும், இப்பாப மூட்டையைக் கட்டித் தூக்குவதில் நம்ம

வரே முன்னணியில் நிற்பது வருந்தத்தக்க செயலேயாம். மேலும், பன்றி வேட்டையில் நிகழ்ந்த பயம் கரிப்பானை யைக் காணும் பொழுதும் நேர்வது இயற்கைதான். ஆன றல், நீண்டகாலமாகத் தழும்பேறிய அவ்வொச்சத்தை நாம் செய்கைமுறையில் அடியோடு ஒழித்துக் குற்றமற்ற நல்லவழியில் நமது நடை, பழக்கவழக்கங்கள் முதலிய அமையப்பெறல் வேண்டும். அங்ஙனம் அமையப் பெறு வோமானல், குற்றவாளிகளைத் தண்டிப்பதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை யெனவும், ஒரு ஜாதியைமட்டும் குற் றம் செய்யும் ஜாதியெனக்கொள்வது பொருத்தமற்ற தாகுமென்றும் நமது தேசியத் தலைவர்கள் வழக்காடி நம் மைக் குற்ற மரபினர் என்ற சட்டத்தினின்றும் நீக்கி நல் வழிப்படுத்துவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

(2) காவல்:— முன்னேற்றத்திற்குறிய வழியைத் தடை செய்வதாகிய இன்னொரு முட்டுக்கட்டை ஒன்று உண்டு. அது காவல்என்கின்ற மகுடப்பெயருடன்நம்மவர் கள் அனுட்டித்துவரும்ஒரு கெட்டபழக்கம். இந்தக் காவ லைக்குறித்து மகிழாதார் இந்நிலவுலகத்தில் யார்தானிருக் கின்றார்? ஆனல் கேவலத்திலும் கேவலம் இதைப்பார்க் கிலும் வேறென்று இருக்குமாவென்பதுதான் எமது சந் தேகம். இந்தக்காவல் முதலில் கானத்தேநீர் நிறைந்த தடாகங்களாகத்தோன்றுங் கானலைப்போல் மறவர்களைத் தனது வலைக்குளிழுத்து, அதன்பிறகு அக்கானலைப் பின் தொடர்வோர் கதி எப்படி முடிகின்றதோ அப்படியே இவர்களைத் தீராப்பசிப்பிணிக்குள் ஆழ்த்தித் தலை நிமிர்வ தற்குக் கூடாதநிலைமைக்குக் கொண்டுவந்து விடுகின்

றது. அதனால் கிடைக்கும் கூலியைப்பார்த்தால் மிகச் சிறிது; உண்டாகும் கேடுகளைக் கவனித்தால் மலையினும் பெரிது. காவல்த்தொழிலுக்குக் கிடைக்கும் சிறு கூலி யைக்கொண்டு ஒரு குடும்பம் வருஷமுழுவதும் எப்படி ஜீவிக்கமுடியும்? இந்த நிலைமையில் தங்கள் காவலிடங் களில் களவுபோனால் அந்தக்களவு முதலை நிலச்சுவா னுக்கு அல்லது கிராமத்தாருக்கு எந்தவழியில் கட்டமுடி யும்? தாங்களும் எங்கேயாவது பலிக்குமிடம் பார்த்துக் களவுக்குச் செல்லவேண்டுவதல்லது களவு முதலுக்கு எங்க உத்தமரை எதிர்பார்க்கமுடியும்? களவுசெய்தாயி னும் கொண்டுவந்து தொகையைக்கட்டிக் காவலைப் பழைய படி ஒப்புக்கொள்ளலாமெனக் கருதும்கருத்து இடையூ றின்றி நிறைவேறுலாயிற்று; ஒருவேளை அங்கேசிக்கிக் கொண்டால் கிடைக்கும் பலாபலன்களைத் தாங்களேயனு பவித்து நிற்பதல்லது இந்த உத்தமச் செய்கையில் வேறு எந்தப் பெரியார் வந்து தலையிட்டுக்கொள்ளமுடி யும்? இறுதியாகச் சாப்பாட்டிற்கே பெருந்திண்டாட்டத் தில்வந்து சேர்ந்துவிடுகிறது. இனி இயற்கையில் தங்கள் முன்னோரால் சம்பாதித்திருந்த நிலங்கள் சிறிதுசிறிது இருக்கின்றவர்களும் அவற்றைப் பாழடையும்படிப்போட் டுவிட்டு நிமிர்ந்த போக்கமைந்த காவலைச் சிறந்தொழி லெனக்கருதிக் கூடிய விரைவில் தாங்களும் "பொதியை வைத்துவிட்டுப் பிச்சைக்குச் சென்றாலும், அதனையும் விட்டுச் செத்துக்கிடந்தாலும்" என்றபழமொழிக்குஇலக் காகி இவ்விழி தொழிலில் ஈடுபட்டுக் கெட்டொழிந்தோ ரின்னுரையும் சந்ததிகளையும் இங்கே குறிப்பிடுவதென்று நினைத்தாலுங்கூட எமது நெஞ்சங் கொதிக்கின்றது. நீதி

மன்றங்களில் கிரிமினல் வழக்காகக் கொண்டுவரப்படும் வழக்குகளுள் நூற்றுக்கு 90,95-க்கு மேல் காவல்சம்பந் தமான வழக்குகளாகவே வந்துகொண்டிருக்கின்றன. குற்றம் சாட்டப்பட்டு ஒருவர்க்கொருவர் மோதி அடித் துப்-புரண்டுகொண்டு நீதிமன்றங்களில் வந்து கூண்டில் ஏறிநிற்கும்போது வழக்கறிஞர்கள் உமக்கு எழுதப்படிக் கத் தெரியுமாவோய்! தேவரே! என்றுகேட்டால், எனக்கு எழுதவுந்தெரியாது; படிக்கவுந்தெரியாது; வேறென்ன தெரியும்? காவல்த் தொழில்தான் தெரியும் என்று ஒரு சிறிதும் வெட்கமின்றி மறுமொழி கூறுகின்றனர். இவர் களின் அறியாமையைக்குறித்து என்னெனச் சொல்வது! இறைவனது படைப்பிலடங்கிய எல்லா மக்களிடத்துங் குணமுங்குற்றமுங் கலந்து காணப்படுவதியற்கைதான்; ஆனல், இவர்களிடத்தில்மட்டும் குற்றமொன்றே மிகுந்தி ருக்கும்படி அவ்விறைவன் படைத்திருப்பானு என்ற ஆசங்கை நம்மைவிட்டு நீங்கினபாடில்லை. ஆகவே, காவல் மிகவும் இழிந்ததொழில். ஒருபங்கு நன்மையை முன்பு கொடுத்துப் பின்னுல் நூறுபங்கு கெடுதியைத்தருவது. அந்த ஒருபங்கு நன்மையுங்கூடத் தூண்டியிரும்பில் விடு பட்டுத்தொங்கிய இரையைப்போல்வது. அதனைத் தாங் கள் அத்தொழில்மீது ஆசை கொள்ளும்படி பிறர் இட்ட தோர்தளை எனக்கருதல்வேண்டும். களங்களில்ப்போய் முந்தியேந்திக் களப்பிச்சை வாங்கல், வெற்றிலைபாக்கு, வாங்கவேண்டிய வகைக்குப் பிச்சைவாங்கல், குடிகளிடத் தில் வீடுவீடாகச்சென்று புதியல் தானியங்கள் வாங்கல், அவரை, துவரை, பயறு, பச்சை, உப்புப்புளி, முதலிய பிச்சைவாங்கல், விறகு, வெங்களிநாறு நரம்பு, முதலிய

பிச்சைவாங்கல் ஆகிய இவற்றையெல்லாம் இன்னுரினியார் என்றவித்தியாசமின்றிச் சகட்டுக்கணக்கில் வாங்கி ஜீவிப்பதென்றால் இச்செயல்களிலுமிழிந்த தொழில் என்ன உண்டு? இன்னோரன்ன விபரீதங்களைத் தரும் காவல்த் தொழிலை அறவேதொலைத்து நமது குலத்துக்குரிய கௌரவம்படைத்த விவசாயம், கைத்தொழில்களில் அவரவர்தகுதிக்கேற்ற துறைகளைப்பெற்று முன்னேறுவதற்குரிய நன்முயற்சியைக் கடைப்பிடிப்பீர்களாக.

(3) சிறுதெய்வ வழிபாடும்—கடாவெட்டுதலும்.

சாதாரணமாக உயிர்வதை செய்வதே அடாத செய்கைகளிலொன்று. அந்தமாகிரியான அடாத செய்கையை ஆலயங்களில் வைத்துச்செய்வதென்றால் அதைப்பார்க்கினும் பெரிய அக்கிரமச்செய்கை வேறு ஒன்றுமே கிடையாது. இவ்வடாத செய்கை நிகழ்தற்குக் காரணமான இடத்தைக்கோவில் என்றுசொல்வதா? அல்லது, கொலைக்களம் என்று சொல்வதா? பரிதாபம்! உயிர்வதை செய்தலை மனம் உவந்து ஏற்றுக்கொண்டு அதற்காகத்தனது திருவருளை அடியவர்கட்கு வாரிவாரியிறைக்கும்படியான தெய்வமும் இருக்குமா? இருக்குமாயின், 'அதனை ஒரு வகை அம்மிக்குளவி என்று சொல்லலாமேயன்றி, உண்மைத்தெய்வமெனச் சொல்வதற்கில்லை. மேலும், பலி தேவதைகளை வணங்கும் வழக்கமுடையார் யாராயினும் சரி; அவரிடத்து வணங்கிய நடை முதலிய பழக்கவழக்கங்கள் ஏற்படுவதுங் கடினந்தான். ஆண்மையிற்சிறந்த ஆண்மகன் ஒருவன் அந்த ஆண்மையை எவ்விடத்து,

எதன்பொருட்டு, எடுத்தாளவேண்டும்? முரண்பட்டு எழுந்த எதிரிகளிடத்தும் முன்வைத்த காலைப் பின்வாங் காத வீரர்களிடத்தும் அல்லவோ அவ்வாண்மையை உப யோகிக்கவேண்டும். அங்ஙனமின்றி, வாய்பேசாப் பிராணி களில் ஒரு வகுப்பாகிய ஆடு, கோழி, முதலியவற்றை முன்பின் யோசனையின்றி வெட்டி வீழ்த்துதல்தான் பெரிய சூரத்தனமோ? இந்த அரும்பெரும் செய்கையைச் செய்துமுடிக்க ஆண்மை படைத்தான் ஒருவன் வேண்டு வதும் அவசியமோ? சாதாரணமாக வயதுமுதிர்ந்த கிழப் பெண்களாலு முடியும். இவ்வக்கிரமமான காரியத்தைத் தங்களால் கும்பிடப்படுங் குலதேவதைகளின் ஆலயங்க ளில் செய்யும் அளவில் நில்லாமல், அன்னியர் கும்பிடுங் கோவில்களில்நடக்கும் பலிகட்குத்தாங்களே கடமைப்பட் டவரென ஒப்பந்தஞ்செய்து கொள்ளுகின்றார்கள். அன் னியர் கும்பிடுங் கோவில்களில் ஆடு கோழிகளை, வெட்டு வதற்காக வந்திருப்போர்களுள் பெரும்பாலோர் மறவர் இளைஞர்களாகத்தானிருப்பார்கள். ஏனென்றால், மற்றை யோர் இந்தக்கொலையால் வரும் பாவங்கட்கு அஞ்சிப் பின்வாங்கிவிடுவார்கள். மேலும் அதனை ஏற்றுக்கொள் வதற்குரியஉரிமையும்ஒப்பந்தமும்மறவர்களுக்குள்ளேயே இருக்கவேண்டுமேயல்லாமல் பிறருக்குக் கொடுத்துவிட் டால் தங்களை வீரப்புலிகள் என்று சொல்வதற்கு என்ன நியாயம் இருக்கிறது? ஆதலால் கொலைக்குங் கடமைப் பட்டவர்களாகிய காவல்க்காரரைக் கூப்பிட்டு வெட்டச் சொல்வதே பொருத்தமெனக்கொண்டு அன்னியர்கள் இவர்களை வாளுருவி விட்டுவிடுவார்கள். இவர்கள் அத னைக்காதில் வாங்கினவுடனே உடல்முழுதும் குளிரப்

பெற்றவராய் வேஷ்டியை இறுகவுடுத்திக்கொண்டு தயாரில் நிற்பார்கள். என்ன அறிவில் செய்கை! பலிதேவதையின்பூசாரி ஒரு தேங்காய்மூரியும், பழமும், கொண்டு வந்து கொடுத்து, வெட்டுவோன் கழுத்தில் ஓர் வெள்ளதளி மாலையையும் போடுவான், போட்ட அளவில் கண்கொண்டு பார்க்கமுடியுமா அந்தப் பரிதாபத்தை! மாலை சூட்டப்பெற்ற மகிழ்ச்சியால் கண் மூக்குத் தெரியாமல் வீராவேசம் கிளம்பி ஒருவருக்கு முன் ஒருவர் முனைந்து வேலைசெய்வதையும் அப்பலி பீடங்கள் அவர்கட்கு அருள் சுரக்கு முகமாகத் திருக்கண்களைத்திறந்து பார்த்துக்கொண்டிருக்குந் திருக்கோலக் காட்சியையுங்கண்டு களியாதார் எவரே. ஆடுவெட்டுமிடங்களில் சில சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்து விபரமாக இங்கே எழுதுவோமா என்று நினைத்தால் உடல் நாணுகின்றது. எழுதுவதற்குக்கூட நாணமுண்டாகக்கூடிய இழிந்த செய்கையை எவ்விதத்தில் துணிந்து செய்கிறதற்கு அவர்கள் மனம் ஈடுபடுமோ தெரியவில்லை. அதனால் வரும் ஊதியம் ஏதாவது உண்டாவென்று பார்த்தால் பழியையும், பாவத்தையும், தேடிக்கொள்வதல்லாமல் மற்றொன்றும் கிடைப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் பிறந்தகுடிக்கும், அதில்வரும் இழிவு முதலியன பங்குண்டு. (இனி) எனதுகடாயை முன்னதாக வெட்ட வேண்டும்; உனது கடாயை முன்னதாக வெட்டவேண்டுமெனத்தகராறு வந்துவிடும். அப்படித் தகராறுநிகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது ஒருவர்க்கொருவர் நிதானமின்றிச் சொல்விளம்பிகள்மாதிரி வாய்ச்சண்டை தொடர்ந்து ஆங்காங்கு சிட்டைசேர்ந்துகொண்டு இழுவைபறியல்களை

வளர்த்து முடியில் கடாயை வெட்டுதலை நிறுத்திவிட்டுத் தாங்களே ஒருவரையொருவர்வெட்டிக்கொண்டுபலிபீடத்தில் தங்களையேபலியிட்டு நிற்பார். ஆகவே, இவ்வறிவில் செய்கைக்கு அன்னியர் யார்வந்து தலையிடப்போகின்றார்? இந்த நிகழ்ச்சிகளை விரித்துப் பேசப்புகின் வெட்கமும் இழிவும்அன்றி வேறில்லை. காலமாகிய சக்கரம் சுழன்று கொண்டுவருகின்ற நிலையும் ஒவ்வொரு சமூகத்தினருந் தங்கள் தங்களிடமுண்டாகிய தீய பழக்கவழக்கங்களை ஒழித்துவிட்டு முன்னேறி நிற்றலையுங்கண்டு தெளிவடையாமல் இன்னும் மயங்கி நிற்பதானல் மறவர் சமூகஞ் செய்த துர்ப்பாக்கியமென்றே சொல்லவேண்டும்,

(4) பிறர் காரியங்களில் தலையிடுதல்:— இனி, இச்சாதியினரிடம் பெருங்கேடு விளைவிக்கும்வழக்கம் ஒன்று; அது எதுவென்றால், அடுத்த ஜாதியார்கட்கிடையிலுண்டாகுஞ் சச்சரவுகளில் தாங்கள் முன்னேறிப்போய்த் தலையிடுவது. ஒரு பக்கத்தில் அண்ணன்; மற்றொரு பக்கத்தில் அவன் தம்பி; சச்சரவு இருதிறத்தார்க்கும் நாளடைவில் முதிர்ந்து ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மோதிக்கொள்ளவேண்டியதாய்நேரும். அப்பொழுது கலகத்திற்கு மூலகாரணர்களாகிய இருதிறத்தாரும் இவர்களைமோதும்படியாக விட்டுவிட்டு அவர்கள் தந்திரமாகக் கலகத்தினின்றும் நழுவிக் கொள்வார்கள். இவர்களில் அண்ணனுக்குப் பெண் கொடுத்தோரும் அவரைச் சார்ந்தோருமாக ஒரு பக்கம்; தம்பிக்குப் பெண் கொடுத்தோரும் அவரைச் சார்ந்தோரும் ஒருபக்கம்; ஆக இருவகுப்பாகப் பிரிந்துநின்று அவரவர் கைக்குக் கிடைத்த தடிக்கம்பு

களோ, அரிவாள்களோ, கோடாரிகளோ ஆகிய இவற்றால் ஒருவர்க்கொருவர் கண்முழுக்குத் தெரியாமல் சின்னபின்னமாக அடித்து வெட்டிக் குத்தி ரணகளங்கண்டு பிறர் பார்த்து நகைக்கும்படியான ஸ்திதியில் அவதிப்படுவதைச் சர்வசாதாரணமாக நாம் காண்கின்றோம். இந்த அறியாமையையும், அக்கிரமத்தையும் போல வேறு கேவலமான செய்கை ஏதாவதுண்டா? இதனால் இவர்கள் அடையப்போகும் லாபம் என்னவென்று பார்த்தால் 'பட்டைச் சோற்றுக்குப் பழி கொடுப்பான் மறவன்' என்னும் பழமொழியாகிய வஞ்சப் புகழ்ச்சிக்கு ஆளாவதல்லாமல் வேறு இல்லை. இதுவேயுமன்றி ஒரு கட்சியிலுள்ள மறவனொருவன் கொலையுண்ணப்படுதலும், மறு கட்சியிலுள்ள மறவனொருவனே அக்கொலைக்குப் பாத்திரவாளுவதும் என்றால் அந்த குலம் செய்த பாவந்தான் என்னே! இந்த மடமைக் குணத்தாலல்லவா அரசாங்கத்தார் நம்மவர்களில் அநேகரைக் குற்றவாளிகளெனத் தேர்ந்தெடுத்துச் சிறைப்படுத்தி நிற்பந்தமுஞ் செய்து நன்மதிப்பு வாய்ந்த கருணையாளர்பிறந்த மறவர் குடிக்குப் பழுதுண்டாக்கிக் காணுக்குறைக்குக் குற்றமரபினர் என்ற ஜாபிதாவிலும் சேர்த்திருக்கின்றனர்! இப்பழக்கம் என்றைக்கு ஒழியுமோ, அந்நாளே மறவர் விடுதலையடைதற்குரிய நன்னாளாம்.

(5) மற்ற கெட்ட பழக்கவழங்கங்கள்:— மதுபானஞ் செய்யும் கெட்ட பழக்கம் நம்மில் இருந்து வருகின்றது. மதுபானத்தின் கெடுதியைப்பற்றி இக்காலத்தில் விரிவாகக் கூறவேண்டியதில்லை. "உருவழிக்கும், மானம் டீயர்

வழிக்கும், உண்மைத் திருவழிக்கும் செல்வம் சிதைக்கும்'' என்று ஒரு கவிஞர் கூறுகின்றார். யாது குற்றஞ் செய்யினும் அருவருப்புக்கொள்ளாத அன்னையும் கண்டு அருவருக்கத்தக்க இக்குடிப் பழக்கம் நம்மவரைவிட்டு அறவே ஒழியவேண்டும். அரசாங்கத்தார்கூட மதுவிலக்குச் செய்யும் இக்காலத்தில் நம்மக்கள் மதுவிலக்குச் செய்ய வேண்டுவது அவசியமென்பதைப் பல சொற்களால் சொல்லவேண்டாம்.

இனி நம்மவர்கள் வீட்டில் நடக்கும் கல்யாணம் சடங்கு முதலிய விசேடங்களில், பலர் வீண் பெருமைக்காகக் கடன் வாங்கி, இப்படி ஆடம்பரமாகச்செய்து நாம் அடைந்த பலன் என்ன — பின்னர் நம் வீடு வாசல் நிலபுலங்களை விற்றுக் கடன்காரர்களுக்கு அழுது தொலைத்துவிட்டு 'குந்தினையோ குரங்கே உன் சந்ததியடங்க' என்றபடி — நம்பெருமை யெலாமிழந்து வறியவர்களாய்த் தெருவில் நிற்கிறோம். ஆடம்பரமான செலவுகளைவிட்டு வரவுக்குத் தகுந்த செலவு செய்து அதனால் ஏதோ க்ஷேமித்துவைத்து நமது சந்ததிகளும் அதனால் பலன் பெரும்படி செய்தலே — நலமுடையதாகும்.

இனி நம் ஆண்மக்களேயன்றிப் பெண் மக்களும் நாகரீக உலகத்தில் காணப்படும் நங்கையர்களாய் இருக்கும்படி செய்யவேண்டுவது அவசியம். பெண் குழந்தைகளின் காதை அறுத்து தக்கையைத் திணித்து 5, 6, பலமுள்ள ஈயக் குணுக்கைப் போட்டு நாகரீக உலகு கண்டு நகைக்கும்படி செய்யாமல் — பிற ஜாதியாரைப்

போல் கம்மல் தோடு முதலியன அணிவித்து அழகுள்ள பெண் தெய்வங்களாக வளரும்படி செய்யவேண்டுவதும் நம்முடைய பொருப்பேயாகும்.

இப்படிநான் நம்மிடம் உள்ள குறைபாடுகளை மட்டும் சொல்லிக்கொண்டே போவதை நிறுத்தி நம்மக்கள், இன்று பிற ஜாதிகளுக்கு எவ்வளவிலும் குறையில்லாத வர்களாய், அவர்களுக்கு ஒத்தநிலையில் ஒற்றுமை, கல்வி யறிவு, ஒழுக்கம் நிறம்பப்பெற்றவர்களாய் இருப்பதற்கு நாம் செய்யவேண்டுவதென்ன என்றுகூற விரும்புகிறேன். சமூக முன்னேற்றத்திற்கு வேண்டும் வசதிகள் எல்லாம் அரசாங்கத்தார் அளிக்கத்தயாரா யிருக்கிறார்கள். நம்ம வர்கள் பிள்ளைகளை யெல்லாம் கல்வியறிவு, ஒழுக்கம் உடைய பிள்ளைகளாக்க அவர்களுக்கும் போதிய கல்வி யளிக்கவேண்டும். அரசாங்கத்தாரும் மிஷன் பாதிரி யார்களும் இதற்காக எண்ணிறந்த பள்ளிக்கூடங்கள் கிரா மங்களிலெல்லாம் திறந்து வைத்திருக்கிறார்கள். நாம் நம் வீட்டுப் பையனை மாடு மேய்க்கச் சொல்லாமலும் பெண்ணைச் சாணி சேகரிக்கச் சொல்லாமலும் மேற் சொன்ன பள்ளிக்கூடங்களுக்கு மட்டும் அனுப்பி வரு வோமேயானால் சில நாட்களில் நம்பிள்ளைகள் திருந்தி விடும். பிள்ளைகளே! நமது வருங்கால மக்கள் என்பதை ஞாபகத்தில் வைத்து இந்தக் கல்வியறிவை நம்மக்கள் அடையும்படி செய்யவேண்டும். கல்வியறிவில்லாத பெரியவர்களுங்கூட இராப் பள்ளிக்கூடங்கள் அமைத்து அங்கு வேலையில்லாத இராக்காலத்தில் சில மணி நேரங் கள் தங்கி தமிழ் வாசிக்க எழுதக் கற்றுக்கொள்ளவேண்

டும். இத்துடன் மறவர் ஜாதியார் வசிக்கும் கிராமங் களிலுள்ள வாலிபர் அனைவரும் மெம்பர்களாகச் சேர்ந்த சபையொன்று எல்லாக்கிராமங்களிலும் தனித்தனி அமைக்க வேண்டும். கிராமங்களின் தகுதிக்கேற்ற முறையில் நபர் ஒன்றுக்கு மாதந்தோறும் 1 அணா முதல் 4 அணா வரை யுஞ் சந்தா ஏற்படுத்தி அங்ஙனம் வசூலாகும் தொகை களிலிருந்து ஒவ்வொரு கிராமங்களிலும் வாசகசாலை அமைத்து அவ்வாசகசாலையில் தேச நிகழ்ச்சிகளை எளி தில் உணர்த்தக் கூடிய உண்மைப் பத்திரிகைகள், அறி வைப் பெருக்குதற்குரிய உண்மை நூல்கள் முதலிய வற்றை வரவழைத்து அனைவரும் வாசித்து வரும்படி செய்தல் வேண்டும். இனி, கிராமங்களில் இவர்கள் நடத் தும் வரம்புமீறிய செய்கைகளைப் போதனையினாலும், நயத் தினாலும், பயத்தினாலும் அந்தந்தக் கிராமத் தலைவர்களே கண்டித்து அப்பொழுதைக்கப்பொழுதே தக்கவேற்பாடு களைச் செய்து நல்வழிப் படுத்தவேண்டும். இந்த நிலை மையில் சீர்திருத்தம்பெற்ற பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாடாகவேண்டும். கிராமங்கள் தோறும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்த ஒரு நாடு கூடி அந்நாட்டின் சீர்திருத் தத்திற்கு வேண்டிய காரியங்களைப்பற்றி யாலோசித்து அவ்வாலோசனையினால் ஒரு முடிவுக்கு வந்த நடபடிக்கைகளையோ அல்லது, திட்டங்களையோ; நாட்டின் முழுப்பாகத்திலும் பரவும்படி செய்தல்வேண் டும். இத்தனைச் சீர்திருத்தப் பாடமைந்த பல நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு மகாநாடு ஆதல்வேண்டும். அந்த மகாநாட்டில் பலநாட்டின் பிரதிநிதிகளையுங் கூட்டித்தங்

கள் ஜாதியின் முன்னேற்றத்துக்குரிய பொதுவான காரி யங்களை ஆராய்ந்து முடிவுகட்டி அதன்படி ஒழுகி வர வேண்டும். மேற்கூறிய அஸ்திபாரப் பலமில்லாத முறை யில் கூட்டப்படும் மகாநாடுகள், மணல் மேடுகளில் கட் டிய கட்டிடங்களை ஒக்கும் என்பது நமது துணிபு. மேலும், ஒரு சமூகம் முன்னேற்றமடைவதற்கு இன்றி யமையாதது ஒற்றுமையல்லவா? அவ்வொற்றுமையின்றி எந்த பார்த்தாலும் ஒவ்வொரு கிராமங்களிலும், இடை விடாத கச்சிகளும், வீண்விவாதங்களும், ஆகிய அறியா மைக்குணங்களே பொதிந்து முதிர்ந்து கிடக்கின்றன. இவைகளை அடியோடு களைந்தெறிவதுதான் உங்கள் பொறுப்பமைந்த முதல்வேலையாகக் கருதல்வேண்டும்.

இவ்வாறு மறவர்குல முன்னேற்றச் சங்கங்களும் மகாநாடுகளும் கூட்டினால்தான் நம்மக்களை ஒற்றுமைப் படுத்த இயலும். ஆனால் இவ்வளவு வேலையையும், நமது மறவர்குல மக்களில் முதியவர்செய்தல் இயலாது. அவர் கள் அனைவரும் பழைய கெட்ட பழக்கவழக்கங்களை விட்டு விட்டுச்சும்மா இருந்தாலே போதும்; அவர்கள் புதியமுறை யில் மக்கள் வாழ்வை அமைக்க உதவிபுரிவார்கள் என்று எதிர்பார்க்கவேவேண்டாம். மறவர்குல முன்னேற்றமெல் லாம் — இனிமேல் அக்குல இளைஞர்களையே சார்ந்தது. இளைஞர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு, ஒற்றுமையாய் உழைத்தால்தான், நம்குலம் முன்னேற்றமடையும். மற வர் சமூகத்திடையே இன்று ஒரு விழிப்பு ஏற்பட்டிருக் கிறது. அதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுவது நம் இளைஞர் கடமை "இளைஞரே! குலப்பெருமையென்னும்

கதிரவன் கீழ்கடலில் தோன்றுகின்றான் — எழுங்கள்— விழியுங்கள். இளைஞர் சங்கங்கள் கிராமந்தோறும் ஏற்படுத்துங்கள். உங்கள் மக்களைத் தட்டியெழுப்பிக் குலப் பெருமையை நிலைநாட்ட வீறுகொண்டு வேலைசெய்யுங்கள்" என்பதுதான் எமது கடைசி வார்த்தை.

முற்றிற்று.

A

மெக்கன்ஸி கையெழுத்துப்பிரதி

சாலிவாகன சகாறதம் — ௲௪௱௮௰௨ :— அவருக்குப் பிற்காலம் அவர்தமையனார்குமாரர் கிஷ்டடிணப்பனாயக்கர் குமாரன முத்துக்கிஷ்டடிணப்பனாயக்கருக்குப் பட்டங்கட்டி அவர் ராச்சியமாளேயில் அநேக கோவிலகள, தடாகஙகள அக்கிறாரங களமதுரைக் குணசிக்கநதாமலைக்கு மததியில் முததுக்கிஷ்டடிணபுறமெனறு படடணமுங்கட்டிவைத்து சயத்தாததில் முத்துக்கிஷ்டடி ணெசுரனென்று சிவனகோவில கட்டிவைதது அவர் நாளேயிலச சேதுபதிக்கு ராசசியங கொடுததவயணமாவது ஆதியில உடையான சேதுபதிக்கிச சீமையும் துரைததனமுமுண்டு பண்ணிக்குடுதது அப்போது ராமனாதபுரஞ சீமையெலலாந தன்னரசு நாடாய ஊருக்கூர் கோட்டை உண்டு. ...னகு வாரவரிசையுஙகொடாமல யெஙகே பாறதாலுங ...டுவளததுக் கொண்டு சீமை கொளளேயிடுகிறதுஞ செதுமா... ...தில ராமேசுரததுக்குப் போறபரிசுகளேச சிலலரைபணணி வெட்டிக்குததி பறிததுக்கொணடு போறதுமாகயிருந்தது. அப்போது கறததாகளாகிய முததுக்கிஷ்டடிணப்பனாயக்கருடைய குருக்கள ராமேசுரததுக்குப்போனார். அப்போது பொகலூரிலிருநது உடையான சேதுபதியாகிறவர் குருக்களுக்குக் காவலாக ராமேசுரம் வரைக்கும்போய வளிப்பாதையில சலலியமிலலாமல பததிரமாயக்காததுக்கொணடு குருக்கள ராமேசுரததுக்குப்போய மதுரைக்கு வருகிறவரைக்குங கூடவே வநதார். அப்போது குருக்கள வெகுசநதோஷப்பட்டு ராசா முததுகிஷ்டடிணப்பனாயகரிடததிலக் கூட்டிக்கொணடுபோயப் பேட்டிபணணி விசசுசெது

மாறக்கததுக்கு இவர் கெட்டிக்காரனென்று இவர் செயதி தத
தியப்படுதது விச்சு சிறுது சனததையும் சேவுகம் வைததுக்
கொணடு தனனரசுநாடாயிருநத சீமையெலலாம் அடிததுககட்டி
தன்னுக்குள்ளேச்சு பாதீனப்படுததி விச்சுககொணடு அநதச்சீமை
யில வெகுபணம் வரைக்கும் அறுவுபணணி ராசாமுததுககிஷட்
டிணப்பநாயககருககுக கொணடுவநது கொடுததார் ரெம்பவுஞ
சநதோசப்பட்டு இனனமுனககுத தேவையான சனம் எவ்வளவு
சனம் வைககவேணுமோ அநதமட்டும் வைததுககொணடு அரம
னைககிப் பணங்கொடாத சீமையெலலாம் நீர் வெட்டிககட்டிக
கொளளச்சொலலி கிருபங்குடுதது உததாரம் பணணினார்கள்.
அநதப்படிககுவநது சனமும் வைததுக்கொணடு சீமையெலலாங
கட்டி சுபாதீனப்படுததி விச்சுக்கொணடு அதிலுளள பணமெல
லாமறுவிட்டு தம்மிட சனததுக்கும், தம்மிட சிலவுக்கும்
வைததுக்கொணடு மநதப்பணததை இராசாவுக்குக் கொடுத
தனுப்புவிச்சார். அப்போது இராசா வெகு சநதோசப்பட்டு
அவரை வரவழைதது உடையான சேதுபதியெனகிற பேருங
கொடுதது ஆனை குதிரையளுங்குடுதது வஷததிர பூசணுதிய
ளுங்குடுததுச் சிறிது விருதுகளுங்குடுதது அநதசசீமைக்கிப் பட
டாபிசேகமுங்கூட்டி விச்சு அனுப்பிவிச்சார். அப்போது அநத
உடையான சேதுபதியாகிறவர் இராமனுதபுரததில் மண்கோட்
டையும்போட்டு இராசதானி பணணிக்கொணடிருநதார் அவ
ருக்குப்பிறகாலம் அவர் குமாரன கூததனசெதுபதி பட்டங்கட்
டிக்கொணடு வடக்கு வட்டகை காளையார் கோவிலில பட்ட
மங்கலநாடு முதலக்கொணடு அநதச் சீமையெலலாம் சுபாதீனப்
படுததி விச்சுக்கொணடு அரமனைக்குத தோப்பாப் பணமும்
கொடுததுக்கொணடு இருநதார்ப்படி இருக்கையில ரவுத்திரி—
ஹூ முதல விரோதிகிருது—ஹூ—வரைக்கும் ஹூ ௩௰—சாலி
வாகனசகாறதம் — ௲௫௱௰௨ — அவருக்கு மூனு குமாரர்
முததுவீரப்பநாயக்கர் திருமலைநாயக்கர் குமார் முத்து

நாயக்கர் இரண்டுமூன்று பேர் குமாரராகப் பிறந்து முத்துவீரப் பனாயக்கருக்குப் பட்டமுங்கட்டி அவர்பெரியதுரையும் திருமலை நாயக்கர் சின்னத்துரையுமாக இருந்து விகுறுதி—ஹு முதல துன்மதி—ஹு—வரைக்கும்—ஹுகூயிஉ இராச்சியம் ஆண்டார். அப்போது சாலிவாகன சகாறதம்—கூருாசாயிசா அவருக்குப் பிறகாலம் இராசா திருமலைனாயக்கர் மதுரையில பட்டங்கட்டிக் கொண்டு அவர்தம்பி குமார் முத்துநாயக்கர் சின்னத்துரையுமாக இராச்சியம் ஆளையில் சீரங்கம் மதுரை முதலக்கொண்டு விஷ்டு ணுதலங்கள சிவதலங்களுக்கெலலாம் தொண்ணூத்தி ஆறு கோபுரம் ராயர் கோபுரமென்று கோபுரம்எலலாம் பெரிசாய ஒரு முகிறததில் அடிப்போட்டு சிறிது வேலையளமுடிததார். மதுரை யிலத தெறபக்குளமும் புதுமண்டபமும் அரமனையுங கட்டிவைச் சார் அப்போது கூத்தன செதுபதி குமாரன தளவாய செதுபதி சடைக்கததேவனென்றும் அவருக்கு இரண்டு நாமகரணம் அக தச்சடைக்கததேவனென்கிறவர் அரமனைக்கிப் பணமுங்குடாமல நிகாரிதது ரெம்பத துற்மாற்கங்களாய நடப்பிததுக்கொண்டு வநதார்கள அதுசமாசாரம் இராசா திருமலைநாயக்கர்கேட்டு அவ ருக்குத தாகிதையாய திருபம்யெழுதி அனுப்பிவிச்சார்கள அநத திருபததையுநதளளிப்போன மனுசரையுமடிததுக் கோபம்வைத துததளவாய இராமப்பயயரையும் சகல தளமும் யெளுபத்தி ரெண்டு பாளையகாரரையுமனுப்பி இராமனூதபுரதது வரைக்கு ஞசண்டைபண்ணிக் கோட்டையை விட்டுப்போட்டு சடைக் கததேவர் ராமேசபரததிலப்போயிருநதார் தளவாயிராமப்பயயன வர்கள பாம்பநாததுக்கு குருக்கை அணைகட்டி அதினபேரில தளததை நடததி இராமீசுரததுக்குப்போய சண்டை பண்ணி சடைக்கததேவனையும் பிடிததுக்கொண்டு வநது மதுரையில் நிகள பநதனம்பண்ணி இருநததிலச்சிறுது நாளைக்கிப் பிற்கு ராமேசுபரம்பாதை மாறகங்களிலச் சிலலறையாளாயிருந்தது. அப்படியிருக்கையில வயிராகியளலாட சனஞசியன வடக்கே

யிருநது இராமேசுரயாததிரைக்கு வநது இராசா அரமனை வாச லில வெகுநாளவரைக்கும் காததிருநது பிரருதுபணணி விச்சுச் செதுபதியை விடச்சொலலி ரெமப வேணடிக்கொணடார்கள். ராசாவுக்கு ரெமபத தயவுவநது சணடைக்கன செதுபதியைவிடடு இனிமேல புததியாய நடநதுக்கோவெனறு வஸததிரபூசணாதிய ளும் வெகுமதி கொடுதது சீமையும் கொடுதது அனுப்பிவிச்சார் கள அவருக்குப்பிளளைகள இலலாததினாலே அவ ருக்குப் பிறகாலம் அவர் மருமகனான ரெகுநாததேவரைப் பட டங்கட்டி அவர் படடுக்கோடடை மனனார்கோவில வரைக்குஞ சீமையாக இராச்சியமாணடு கொணடிருக்கையில மயூரார் வெகு குதிரைத தளஞசேகரிததுக்கொணடு வநது மதுரையின பேரில வநது இறஙகி சீமையெலலாம் அவர்கள யாபிச்சுக்கொணடார் கள அப்போது ராசா திருமலை நாயக்கர் சேதுபதிக்குச் சீடடெ ழுதியனுப்பிவிச்சார் அநதச்சீடடை வாசிததுக்கொணட நாளிய லுக்கு செதுபதி அறுபதினாயிரஞ சனததுடனே சேகரஞசெய்து கொணடுவநது மயூர்பாளையததை மடிததுக்கணவாயவரைக்கும் விரட்டிச் செயம்பணணிக்கொணடு இராசாயிடததுக்கு வநதா ரப்போ இராசா ரெம்பசநதோசமாகி அரமனையில விருநது பணணி ஆனை குதிரை அநேக வஸததிரபூசணாதிகளுங கொடுதது திருமலைச் செதுபதியெனறு பேருஙகொடுதது தாமேறுகிற சிஙகமுகப் பலலக்குஙகொடுதது குடைமேல சலலி முதலாகிய விருதுகளுஙகொடுதது தமக்குக குமாரவறக்மெனறு தோப்பாப்பணமும் வேணடாமெனறு சறுபமானியமாகத தன ளிக்குடுதது அது முதலக்கொணடு தோப்பாப்பணஙகொடாமல் சீமையாணடுகொணடு இராமனாதபுரங கோடடையுங கலக் கோடடையாகக் கடடிக்கொணடிருநதார் துனமதி௲—முத லக்கொணடு பிலபவ—௲—வரைக்கும் ௲ சஎ—வரைக்குஞ சீமையாணடார் சகாறதம் ௲௫௱அம்சு—அவருக்குப் பிறகாலம் அவர் குமாரன முததுவீரப்பனாயக்கருக்குப் படடமும் திருமலை

ஞயக்கர் தம்பிகுமார் முத்துநாயக்கர் குமாரன குமார் ரெங்கப்ப ஞயக்கருக்குச சின்னததுரைப்படடமாக சுபகிறுது ௲-முதல் விரோதகிறுது வரிசம் வரைக்கும்-௲-ய௯வரைக்கும் சகாறதம் ௲௫௱௬௰௪—இராசசியமாணடார்கள அவருககுப் பிறகாலம் அவர் குமாரன சொக்கனாதநாயககரவர்களுக்குப்படடமும்குமார ரெஙகப்பநாயக்கர் கு மா ர் ன குமாரு திருமலேநாயக்கருக்குச் சின்னததுரைப்படடமுமாக இருநது பதினாறுவரிசம் பரிதாவி ௲—முதல பிரபவ—௲—வரைக்கும் சகாறதம்—௲௫௱௯௰ இராச்சியம் ஆணடுயிருக்கையில ருததுமுக்காலனச் சொக்கனாத நாயக்கர் பிளளையாக வளத்து அவருக்கு அதிகாரஙகொடுததுதில அவர்கள சாதியார் துலுககரைப் பிரபலப்படுத்திக் கோட்டை கொததளஞ்சகலமும் அவர்கள பாரிசம் பண்ணிக்கொண்டு இரா சாவை அரமனேவிடடு வெளியிலவராதபடிக்கு வாசலிலே பாரா வைத்துச் சீமையெல்லாம் வியாபிச்சுக்கொணடிருநதார் அப் போது இராசா சொக்கனாதநாயக்கர் கிளவன செதுபதிக்கிச் சீட்டெழுதி அனுப்பிவிச்சார் அந்தச சீட்டுக்கொணடு வநத வுடனே செதுபதி இருபதினாயிரஞ்சனத்துடனெ வாநது ருததுமுகானேயும் வெடடித தலையறுததுக்கொணடு அவனுடனசேநத துலுக்கரையெலலாம் வெடடி ருசதுமுகான் தலையை இராசா விடததுக்குக் கொடுததனுப்பிவிச்சார் உடனே இராசாவெளியே வநது கிளவன செதுபதிக்கிச் சகல வெகுமதியும்பணணி இராம னாதபுரததுக்கு அனுப்பிவிச்சார் பின்னேயுஞ் சிறிதுநாளிருநது சொக்கனாதநாயக்கருககுக காலஞ்சென்றுபோய அவர் குமாரன ரெஙகிஷ்டிணமுததுவீரப்ப நாயககருக்குப் பட்டமும் குமாருதிருமலேநாயக்கர் குமாரன பங்காரு திருமலேநாயககருக்கு சின்னததுரைப்படடமுமாக எழுவருசம் இராச்சியமாணடார்கள

B.

பிரோன் சாமியார் திருச்சிநிக்கல் சாமியாருக்கு எழுதிய கடிதம் 1659:

மைசூர் அரசர், திருமலைநாயக்கர் தமக்குப்பெருந் துரோகம் செய்ததாக நினைத்து அவரோடு சண்டை தொடர்ந்து சத்தியமங்கலத்தைப்பிடித்து மதுரையும் பிடிக்கவந்தார். மைசூர்சேனை திடீரென்று மதுரைப்பக்கம் வந்ததைத் திருமலைநாயக்கர்கண்டு எதிர்பாராமல் இப்படிவந்து நிகழ்ந்ததே இதற்குஎன்ன உபாயந் தேடிக்கொள்வது என்ற விபரம் ஒன்றும் விளங்காதவராய்த் திகைத்துக் கடைசியில் எங்கேயாவது ஓடிஒளிந்து கொள்வதே தகுதியெனக் கருதினார். அது காலை, எதிர்பாராத முறையில் ஆபத்து நேரத்தில் வந்துசேர்ந்த மறவரின் பேருதவியைக்கண்டு மைசூர் சேனையைத்தடுத்து மதுரையைப் பாதுகாத்தார். கடற்கரையிலுள்ள ஐரோப்பியர்களோடு அநேகந்தடவைகளில் சண்டைசெய்து பேர்பெற்ற இந்த யுத்தவீரர்களாகிய சாதியார் குடியிருந்த நாட்டிற்குத் தங்களின் பெயராலேயே வழங்கிவரும்படி மறவர்சீமை எனப்பேர் கொடுத்திருந்தனர். மறவர்களின் அரசரும் திருமலைநாயக்கரின் சிற்றரசரும்ஆகிய சேதுபதி, நாயக்கருக்கு நேர்ந்த ஆபத்தையுணர்ந்து ஒரே நாளில் 25000 சேனையைத்திரட்டிக்கொண்டு வந்து மதுரைக் கோட்டைச்சுவருக்கும் முற்றுகைபோடும் மைசூர் சேனைக்கும் நடுவில் தமது சேனையை நிறுத்திவிட்டார். சரியான சமயத்தில் இச்சேனைவந்து சேர்ந்ததைக்கண்ட நாயக்கர் தைரியங்கொண்டு 35000 சேனைகள் சேர்த்து எதிரிகளின் சேனையைவிடத் தமது சேனை அதிகமாய் விட்டதைக் கண்டார். மைசூர் தளகர்த்தன் சேனை நாயக்கர் சேனையை எதிர்க்கப் போதுமான பலம் காணாதென்று தனது

அரசன் தனக்கு உதவியாயனுப்பியிருக்கும் சேனைகள் வந்து சேரும்வரையும் தனது வெகுமதிகளால் மதுரைச் சேனைத்தள கர்த்தனாகிய பிராமணன் ஒருவனைத் தன்னுடைய கைக்குள்ளே போட்டுக்கொண்டான். அந்தக் கொடுந்துரோகி தன் சேனையின் உற்சாகங் குன்றிப்போகும்படி செய்து எதிரிகளைத் தாக்குவதற்கு இன்று, நாளை, என்று கடத்திக்கொண்டு மழுப்பிவிட்டான். ஆனால், மறவர் அனைவரும் அவன் தாமதஞ்செய்து மழுப்பிக்கொண்டு வருகிற கெட்ட நோக்கத்தைக்கண்டு சந்தேகங்கொண்டு அந்தப் பாவியைப்பிடித்து அடைத்து வைத்துவிட்டு எதிரிகளின் மேல்பாய்ந்து விழுந்து அவர்களைத் துண்டந்துண்டமாக வெட்டி வீழ்த்தினார்கள். தோல்வியடைந்த மைசூர்ச் சேனையில் தப்பியவர்கள் பக்கத்திலுள்ள ஒரு கோட்டைக்குட் புகுந்து சிறிது நாட்கழிந்தபிறகு, தாங்கள் எதிர்பார்த்த உதவிச் சேனைகள் 20000 வரையும் வந்துசேர்ந்தன. மறுபடியும் பலமான சண்டை ஆரம்பமாயிற்று. இருபக்கத்திலும் சமமாக 12000 பேர்கள் மடிந்தார்கள். ஆயினும்வெற்றி நாயக்கருக்குத் தான் இருந்துவந்தது. அதிகமான சேனையைக் கொண்டுவந்து மைசூரார் இங்குள்ளவர்களின் மூக்குகளையறுத்த காரணத்தால் அவர்களின் சேனைகளையும் மதுரையிலுள்ளார் அனைவரும் பின் தொடர்ந்து மைசூர்சென்று எதிரிகளின் மூக்கையும் அறுத்தார்கள். ஆகவே இந்தச்சண்டை மூக்கு வேட்டையாடல் என்று பெயர் வழங்கிவரலாயிற்று.

Bibliography.

Ayyanarethanar — Purapporul

Narkavirajanambi — Ahapporul

ANANTHARAMIER E. V.	...	Kalithogai I Palai
RAGHAVAIYENGAR R.	...	Sethu Nad and Tamil
MACKENZIE	...	Manuscripts
PATE H. R.	...	The Tinnevelly District Gazeteer
SMITH V. A.	...	The Early History of India
SEWELL R.	...	List of Antiquities
WILLIAM TAYLOR (Rev)	...	Pandiyan Chronicle
SATHIANATHA IYER R.	...	A History of the Naicks of Madura
EDGAR THURSTON	...	Castes and Tribes of Southern India
ORME R.	...	A history of the Military Transactions of the British nation In indostan
NELSON	...	Madura Manual
BISHOP CALDWELL	...	The history of Tinnevelly
STUART	...	Tinnevelly Manual
HILL H. C.	...	Yusuf Khan the Rebel Commandant
DHARMAPUTHIRA KAVIRAYAR	...	Valelupathu (Marampadal)

திருத்தத்தின் தலைக்குறிப்பு:—

1. இந்நூலில் பாஞ்சாலங்குரிச்சி, குரிச்சிக்காடு, கார்குரிச்சி, நடுவக்குரிச்சி, என்றுபல இடத்திலுங் காணப்படும் ஊர்ப்பெயர்களில், 'குரிச்சி' எனவரும் ஒவ்வொன்றையும் 'குறிச்சி' எனவும், 'ராமனுதபுரம்' எனவரும் ஒவ்வொன்றையும் 'இராமநாதபுரம்' எனவும் வைத்துக்கொள்ளவேண்டும். 157—158 முதலிய பக்கங்களில் அடிமயக்கிக்காணப்படும் செய்யுட்களில் முன்னது 'அகவற்பாவும்' பின்னது 'அறுசீர்விருத்தமும்' ஆம்.

இன்றியமையாத சில இடங்கட்கு மாத்திரம் பிழை திருத்தங் கீழே குறிப்பிட்டிருக்கின்றோம்.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
17	1	முருக்கமைந்த	முறுக்கமைந்த
24	6	வேறிவ்லை	வேறில்லை
28	43	கரத்திலேயே	காலத்திலேயே
29	3	பாண்டியா	பாண்டியர்
47	5	செல்வவந்தர்	செல்வந்தர்
48	24	படிச்செய்தது	படிசெய்தது
49	10	இதுசமயம்	அதுசமயம
,,	18	ஏன்பவரை	என்பவரை
52	4	ஏனது நியாயம்	எனது நியாயம்
54	5	இடஞ்சல்	இடைஞ்சல்
,,	10	தாக்ருதற்குறிய	தாக்குதற்குரிய
56	19	நடந்துகொள்ள	நடத்திக்கொள்ள
57	7	படையைடுத்து	படையெடுத்து
58	3	அதை	அதனை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
59	2	பூறாவும்	பூராவும்
64	18	தொழிலிலுக்கு	தொழிலுக்கு
66	9	ஒருக்காலும்	ஒருகாலும்
,,	23	கி[illegible]மத்தார்	கிராமத்தார்
79	16	பே[illegible]சுகளினால்	பேச்சுக்களினால்
83	15	கேரட்டை	கோட்டை
84	15	பட்டணங்களை	பட்டினங்களை
88	15	சுவறிலேறி	சுவரில் ஏறி
91	4	கர்னாடகத்தில்	கர்நாடகத்தில்
92	1	கொஞ்செய்கை	கொடுஞ்செய்கை
94	3	ஒருபோதுமான	போதுமான
95	3	சேத்தூர்	சேற்றூர்
,,	15	ஷை	ஷை
,,	24	ஷை	ஷை
100	1	கொள்ளையடித்தாகவும்	கொள்ளையடித்ததாகவும்
,,	11	துன்புருத்தி	துன்புறுத்தி
101	24	அக்கோட்ட	அக்கோட்டை
103	7	அரணை	அரண்
,,	25	நாலாப்பக்கம்	நாலாபக்கம்
107	11	சேத்தூர்	சேற்றூர்
,,	19	ஷை	ஷை
,,	23	பாளையக்காரர்களு	பாளையக்காரர்களும்
,,	15	தங்கும் உறைவிடம்	உறைவிடம்
111	13	நிறமுடையைவர்	நிறமுடையவர்
117	14	தனிபாடல்	தனிப்பாடல்
120	11	துரைக்கு	துறைக்கு
125	5	குலப்பிரிவினையை	குலப்பிரிவுகளை
,,	12	பண்டாற	பண்டார
126	23	எனது	எமது
131	5	திஷ்டிப்பரிகாரம்	திஷ்டிபரிகாரம்
,	21	பல்லாக்கு	பல்லக்கு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	23	ஏதிர்சென்று	எதிர்சென்று
132	5	நிறைந்துவைத்த	நிறைத்துவைத்த
,,	17	என்றும்	என்று
137	17	நீர்அரிவி	நீர் அருவி
138	8	சிலறுக்கு	சிலருக்கு
139	2	உள்பட்டிருந்த	உட்பட்டிருந்த
140	4	தமிழ்பேசி	தமிழ்ப்பேசி
141	21	ஜீல்லாவை	ஜில்லாவை
,,	20	கருப்ப	கறுப்ப
,,	23	கருப்பணன்	கறுப்பணன்
,,	26	கருப்பன்	கறுப்பன்
144	25	கட்டுதாலி	கட்டுத்தாலி
147	5	ஜீல்லாவின்	ஜில்லாவில்
149	3	இராஜங்கத்துக்கு	இராஜாங்கத்துக்கு
150	22	மேல்த்தாலி	மேலேதாலி
152	12	மன்னரே அல்லவா?	மன்னரல்லவா?
153	13	குரித்து	குறித்து
154	18	துறைக்கும் பதிறையிரம்	துறைக்குப்பதிறையிரம்
,,	19	தேவைத்துறைக்குத்	தேவைத் துறைக்குந்
,,	20	புகழ்பட்டிருத்தலே	புகழப்பட்டிருத்தலே
155	9	விரிக்கிற் வளரும்	விரிப்பின்வளரும்
156	26	உதவியுள்ளதை	உதவியுள்ளாரென்பதையும்
158	5	எழுத்தோடு	எழுத்தொடு
,,	23	ஒரு படிப்பாலும்	ஒருபடிபாலும்
159	4	என்னெச்சொல்வது	என்னெனச்சொல்வது
,,	20	வாழில்	வாழ்நாளில்
160	14	மனவியாரே	மனைவியாரே
161	2	இங்நிலவுலத்து	இந்நிலவுலகத்து
,,	6	பெருக்குபோல்	பெருக்குப் போல்
163	1	குருநிலமன்னர்	குறுநிலமன்னர்
164	6	உயிர்நலம்	உயர்நலம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	20	குலத்திற்குறிய	குலத்திற்குரிய
,,	21	குரைத்து	குறைத்து
165	10	நாடா,த்தெஞ்சினர்	நாடா(-து)எஞ்சினர்
166	9	ஆட்சேபனை	ஆக்ஷேபணை
,,	14	முன்னேற்றக்திற் குறிய	முன்னேற்றத்திற்குரிய
,,	18	இங்கிலவுலத்தில்	இங்கிலவுலகத்தில்
167	3	காவல்த்தொழில்	காவல்தொழில்
,,	20	படிப்போட்டு	படிபோட்டு
168	9	காவல்த்தொழில்	காவல்தொழில்
,,	22	களங்களில்ப்போய்	களங்களில்போய்
,,	27	விரகு	விறகு
,,	,,	வெங்களிநாறு	வெங்கழி, நார்
169	4	காவல்த்தொழில்	காவல் தொழில்
170	13	பலிகட்குத்	பலிகட்குந்
,,	24	காவல்க்காரரை	காவற்காரரை
171	3	தேங்காய்முரி	தேங்காய்முறி
173	11-13	கட்சியில்	கச்சியில்
,,	14	அந்தகுலம்	அந்தக்குலம்
,,	23	மற்ற கெட்ட	மற்றும், கெட்ட
174	3	அறுவறுப்பு	அருவருப்பு
175	3	பொருப்பே	பொறுப்பே
,,	8	நிறம்பப்	நிரம்பப்
,,	15	கிறுமங்களில்	கிராமங்களில்
,,	21	பிள்ளைகளே!	பிள்ளைகள், தான்
176	5	மாதந்தோரும்	மாதந்தோறும்
,,	10	பெருக்குதற்குறிய	பெருக்குதற்குரிய